பாவலரேறு

# பெருஞ்சித்திரனார் பாடல்கள்

## கனிச்சாறு



2

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்

(கனிச்சாறு)

படையல்

எதிர்காலத் தமிழின
மீட்பர்களுக்கு.

— இரண்டாம் தொகுதி

| | | |
|---|---|---|
| முதல் பதிப்பு | : | தி.பி. உ010. மேழம் 1 (14-4-1979) |
| மறுபதிப்பு | : | தி.பி. 2030, ஆடவை 6 (20-6-1999) |
| நூல் தலைப்பு | : | **பாவலரேறு**<br>**பெருஞ்சித்திரனார் பாடல்கள்**<br>(கனிச்சாறு — இரண்டாம் தொகுதி |
| ஆசிரியர் | : | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| வெளியீடு | : | **தென்மொழி நூல்வெளியீட்டு**<br>**விற்பனையகம்,**<br>செந்தமிழ் அடுக்ககம்,<br>(சி.கே. அடுக்ககம்)<br>மேடவாக்கம் கூட்டுச்சாலை,<br>மேடவாக்கம்,<br>சென்னை - 601 302. |
| அச்சாக்கம் | : | தென்மொழி அச்சகம்,<br>சென்னை - 601 302. |
| உரிமை | : | தாமரை பெருஞ்சித்திரனார் |
| பக்கங்கள் | : | 40+248 |
| தாள் | : | படத்தாள் (மேப் லித்தோ 18.2) |
| அளவு | : | தெம்மி (1/8) |
| படிகள் | : | 1200 |
| விலை | : | உரு. 90.00 |

## பொது முன்னுரை

இயற்கை ஓர் ஒழுங்குடையது. நிலம் நெறியான ஓர் இயல்போட்டத்தை உடையது. கதிரவனும் விண்மீனும் ஓர் ஒழுங்கான அசைவை உடையன. புடவியும் பேரண்டமும் அவற்றுள் இயங்கும் பல்லாயிரங்கோடி இயற்கைக் கோளங்களும் சுடர்த் தொகுதிகளும் சிறிதே ஒழுங்கின்றி இயங்கத் தொடங்கினும் உடனே பேரழிவு நேரும்.

இவ்வியற்கை நிலையினைப்போல், இயற்கையுட்பட்ட அனைத்து நிலைகளிலும் அதனதற்குப் பொருந்திய ஓர் ஒழுங்கு கடைப்பிடிக்கப் பெறுதல் வேண்டும். இயற்கை அறிவிக்கும் இவ்வொழுங்கு சிதைவுறின், அச்சிதைவுக்கேற்ப, படிப்படியான அழிவு நிலைகளே நேரும் என்பதில் துளியும் ஐயமின்று.

உயிர்கள் அனைத்தினும் மேம்பட்டு விளங்கும் மாந்த இயக்கமும் அதன் பரும, நுண்ம நிலைகளுக்கு ஏற்ப, ஒழுங்குற இயங்குதல் வேண்டும் என்பதே இயற்கையின் உட்கோளாதல் வேண்டும். ஒழுங்கற்ற பரும இயக்கத்தால் உடல் சிதைவுறுதல் போல் ஒழுங்கற்ற உணர்வியக்கத்தால் உள்ளமும் சிதைவுறும். உள்ளச் சிதைவு மாந்தப் பேரழிவையே தோற்றுவிக்கும்.

உணர்வியக்கத்தின் தலைமைக்கூறு மொழி. மொழியின் படிநிலையுற்ற ஒழுங்கியக்கம் இலக்கணம். எனவே, இலக்கணச் சிதைவு மொழியைச் சிதைப்பதும், மொழிச் சிதைவு கருத்தைச் சிதைப்பதும், கருத்துச் சிதைவு உணர்வைச் சிதைப்பதும், உணர்வுச் சிதைவு உளத்தைச் சிதைப்பதும், உளச்சிதைவு உலகியலைச் சிதைப்பதும் ஒன்றினின்று ஒன்றெழும் தொடர் விளைவுகளாகும்.

*மொழியின் மலர்ச்சியே பாட்டு. பாட்டுணர்வால்தான் மாந்தன் மீமிசை உயிருணர்வை எட்டுகின்றான். மற்ற உணர்வுகள் மாந்த உணர்வுகளிலேயே அவனைத் தேக்கி வைத்திருக்கையில், பாடல் உணர்வே புறவுணர்வுத் தளைகளைக் கட்டறுத்து, உலகியல் கூறுகளினின்றும் விடுவித்து, அவனை மீமிசை மாந்த நிலைக்கு உயர்த்து கிறது. பாட்டுணர்வு தாழ்ச்சியுறுதலால் அவன் உணர்வுயர்ச்சிக்குச் சறுக்கல் ஏற்படுகின்றது; உயிர்மைக்கு அயர்வு ஏற்படுகின்றது. இதனால் இயற்கைத் துய்ப்பு கெடுகிறது. உயிர்மை குன்றுகிறது; உலகியல் உணர்விருள் அவனைப் பற்றி அலைக்கழிக்கின்றது. இவ் வியற்கைப் பொது நிலைகளை யொட்டி, ஒவ்வொருவரும் சில இன்றியமையாக் கலை, இலக்கியக் கூறுகளை உணர்ந்திருத்தல் வேண்டும். இவற்றுள் கலை புறமும் இலக்கியம் அகமும் ஆகும். இலக்கியத்தின் கொடுமுடி பாடல்! பிற அவற்றினின்று விரிந்து படரும் கொடிகளையும் கிளைகளையும் போன்றவை.*

*ஒழுங்கற்ற ஓசையைவிட ஒழுங்கான ஒலி உயிர்க்கவர்ச்சி உடையது. ஒலியொழுங்கோடு உணர்வும் சேருமாயின் உயிர்க் கவர்ச்சியுடன் உளக்கவர்ச்சியையும் அஃது உண்டாக்கி, அறிவுணர்வு உயர்ச்சியுடைய மாந்தனை அது தன்வயப் படுத்துகிறது. இனி, உணர்வு சேர்ந்த ஒலியொழுங்குடன் ஏற்ற இறக்க அலைவொலிகள் அளவொத்து இணைதலும், பின் அவற்றுடன் ஏதாமொரு மொழி சேர்தலும், அவற்றைப்* **பண்** *என்றும்* **பா***வென்றும் உயர் நிலைப்படுத்துவிக்கும். இப்பண்ணொடு தாளம் சேர்ந்து* **இசை***யென்றும், பாவொடு கருத்துச் சேர்ந்து* **பாடல்** *என்றும் தமிழில் வழங்கும். இனி, பண்ணும் பாடலும் சேர்ந்து நடக்கும் இசைத்தமிழ் என்னும் ஒரு மொழியியல் மரபையே பண்டைத் தமிழ்மொழி முனைவோர் உலகோர் உணர்ந்துய்ய உண்டாக்கித் தந்துள்ளனர். வேற்றுமொழிகளில் இம் மொழியியல் கூறு தோன்றியிருப்பினும் தமிழ்மொழியில் உள்ளதுபோல், அஃது அத்துணையளவு தனித்தோ, சிறந்தோ இயங்க வில்லை யென்பதை அறிவினார் உணர்வர்.*

*இனி, பாடல் என்பது* **பா தழுவிய கருத்துமொழி** *என்று*

பொதுவில் பொருள் தரினும், அதற்கெனப் பல தனிக்கூறுகள் உண்டு. பாடல் இயற்கையாக வெளிப்படுதல் வேண்டும். மனமும் அறிவும் வயப்பட, உணர்வும் எழுச்சியும் மேம்பட்டுப் புறநிலையழுத்தத்தால் பீறிக் கொண்டு வெளியேறும் பாடலிலேயே இயற்கைச் சாயல் படிந் திருக்கும். **மொத்தத்தில் அஃது ஒரு வெளிப்பாடாக இருத்தல் வேண்டுமேயன்றி, வெளிப் படுத்துதலாக இருத்தல் கூடாது.** அவ்வாறு உள்ள நிலையில் அது சிறவாது; நிலைத்து நிற்காது; அதுவன்றிக் காலத்தில் கரைந்து போகும் தன்மையுடையதாக அஃது இருக்கும்.

ஓர் உணர்வு சான்ற இயற்கைப்பாடல் உணர்வுள்ள உள்ளங்களை மட்டுமேயல்லாது, உணர்வற்ற உள்ளங்களையும் அவையளவில் தொடுதல் வேண்டும். அப்பொழுதுதான் அதால் உயிர்க்கூறு படிப்படியாக மலர்ச்சி எய்துதல் முடியும். பிற உள்ளங்களை ஆட்கொள்ளும் நிலையில் அஃது ஒரு மண்வெட்டியைப்போல் பயன்படுதல் வேண்டும். மண்வெட்டி பள்ளம் மேடுகள் நிறைந்த நிலத்திற்கே மிகுதியும் பயன்படுவதாகும். சமமான தரையில் அதன் பயன்பாடு மிகவும் குறைவே. வெறும் சுவைக்காக மட்டுமே வெளிப்படும் பாடல்கள் மாந்த உள்ளுணர்வுகளை வளர்த்து வாழ்விக்காமல் அவற்றை மழுங்கடித்துவிடும்.

பாட்டுணர்வு இயற்கையேயாயினும், அதன் புறக்கூறுகள் உலகியல் சான்றனவே. அப் புறக்கூறுகள் அசை படிந்த சொற்களாலும், சொற்களமைந்த சீர்களாலும், சீர்கள் இணைந்தியங்கும் யாப்பாலும், யாப்புடன் கூடிய அணியாலும், அணிபெற்றியங்கும் கருத்தாலும் விளங்கித் தோன்றுவனவாகும். அவையே பாடலுக்குரிய தகுதிகளும் ஆகும். அவை பதினான்கு இன்றியமையாக் கூறுகளைக் கொண்டவை. அவை இவை:

**அ. சொற்கள்:**

1. கருத்தாழம் நிரம்பிய தேர்ந்த சொற்கள்.
2. சுற்றி வளைக்காத சொல்லாட்சி.
3. வளங்கொழுவிய பொருத்தமான சொற்கள்.
4. குறைவான இடைச் சொற்கள்.

ஆ. சீர் அமைப்பு:

1. ஒலிநயத்தால் இணைகின்ற சீர் அமைப்பு.
2. கருத்தின் உணர்வுக்கேற்ற சீர் நீளம்.
3. வகையுளி அல்லது சொற்பிரிப்பால் பாட்டின் ஓட்டத்தையும் அழகையும் குறைக்காமல், முழுச் சொல்லால் அல்லது சொற்களால் அமைந்த சீர்கள்.

**இ. யாப்பு.**

1. பிழையற்ற யாப்பு.
2. கூறப்போகும் கருத்தின் உணர்வை மழுங்கடிக்காத யாப்பு வகை.
3. உணர்வுயர்ச்சிக்கும் கருத்தகலத்திற்கும் ஏற்பத் தெரிந்தெடுக்கப் பெற்ற யாப்பு.

**ஈ. அணிகள்.**

1. எளிதே விளங்கிப் பாடற் கருத்துடன் உடனே பொருந்துமாறு இருக்கும் உவமைகளும் உருவகங்களும்.
2. பாட்டின் பெருமையைக் குறைக்கும் பிற ஆரவார அணிகள் பெரிதும் தவிர்க்கப் பெறுதல்.

**உ. கருத்து.**

1. மயக்கம் தராது உடனே புலப்படும் தெளிவு நிறைந்த கருத்து.
2. பொது மனத்திற்குப் புலப்படாத உயர்ந்த கருத்து.

இனி, முன்னைக் காலத்து, இயற்கை உணர்வின் ஒலியொழுங்குக் கொத்த மரபு தழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பிய ஓரிளம் பெண் பெற்றெடுக்கும், நல்ல அழகிய அறிவறிந்த நிறைமாதக் குழந்தைகள் போன்றவை. சோம்பலாலும் அறிவுக் குறுக்கத்தாலும் மன இழிவாலும் பிதுக்கப்பெறும் இக்காலத்து மரபு நழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பாத பெண்ணுரு சான்ற ஒருத்தி, அரைகுறை முதிர்ச்சியோடு பெற்றெடுக்கும், உறுப்புகள் குறைவுற்று அழகும் அறிவும் குறைந்த, குறைமாதக் குழந்தைகள் போன்றவை. நன்கு வளர்ச்சியுறாத உறுப்பு நிலைகளும், உணர்வு நிலைகளும், அக்குழந்தைகளைக்

கவர்ச்சியற்றனவாகவும் நீடிய காலத் தக்குதலற்றனவாகவும் ஆக்கிவிடுகின்றன.

ஒழுங்கற்ற ஓசை இசையாகாததுபோல், ஒழுங்கான கட்டுக் கோப்பற்ற கருத்து வெளிப்பாடும் பாடலாகாது.

பாடல் உள்ளத்தின் மலர்; உணர்வின் மணம்; உயிரின் ஒலி யொழுங்கு.

பாடல் மலரிலிருந்தே உரைநடையென்னும் காய் தோன்றிக் கதையாகக் கனிகிறது.

பாடல் உணர்வு சிதைவுறுமானால் உரைநடையாக அது தத்துகிறது. உரைநடையில் பாடல் உண்டு. பாடலில் உரைநடை இல்லை. பாடல் உரைநடையாவது, மலர் தன் மென்மையையும் மணத்தையும் இழந்து பருமையும் வெறுமையும் உறுவது போன்றதே. அத்தகைய பாடற் போலிகள் தேங்காய் மட்டையின் ஊறலினின்று அடித்தெடுக்கும் நார் போன்றவை.

இனி, உண்மையான பாடலை வெளிப்படுத்துபவனே உயர்ந்த பாவலன். **பாவலன் பிறக்கிறான்; பாடல் தோன்றுகிறது.** பாவலன் படைப்பாளன். அவன் உண்டாக்கித்தரும் உணர்வுருவாய கற்பனை மாந்தர்களையே இயற்கை பருவுருவாக உலகுக்குப் படைத்துத் தருகிறது. எனவே உலகின் இயற்கைப் படைப்புக்கே அவன் உணர்வுக் கருவைத் தருபவனாகிறான்.

உயர்ந்த உண்மைப் பாவலனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பத்து. அவை, நுண்ணோக்கு, இயற்கையீடுபாடு, சொல்வன்மை, பாத்திறன், யாப்பறிவு, மொழியறிவு, கற்பனையாற்றல், மனவியல், நடுநிலைமை, துணிவு என்பனவாகும். இவை ஒன்றின் ஒன்று சிறந்து விளங்கிப் பாவலன் ஆற்றலைப் படிப்படியாக மிகுவிக்கின்றன. இத்தகுதிகளின் பொருத்தத்திற்கேற்பவே ஒவ்வொருவனின் பாடலும் ஒளிர்ந்து சுடரும்; காலத்தை வெல்லும்; மக்கள் கருத்தினை ஆட்கொள்ளும்; அறிஞர் மதிப்பினைப் பெறும்.

**கனிச்சாறு** என்னும் இப்பாடல் தொகுதி பல நூறு கற்பனைத் தோற்றங்களை உங்கட்குக் காட்டுவதாகும். பல

வாழ்வியல் கூறுகள் இதில் சொல்லப் பெறுகின்றன. அறிவுநிலை விளக்கங்கள், உரிமை உணர்வுகள், மாந்த நிலை உயிரெழுச்சிக் கூறுகள், உள்ளுணர்வெழுப்பும் மெய்யறிவு நிலைகள், மொழியியல், இனவியல், நாட்டியல் புரட்சிக்கு வித்தூன்றும் அடிப்படை வரலாறுகள் முதலியன இப்பிழிவில் கலந்திருப்பதை நீங்கள் சுவைத்து உணரலாம்.

**கனியைப் பிழிந்திட்ட சாறு — எம்**
**கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!**

என்றும்,

**கனிச்சாறு போல்பல நூலெல்லாம் கண்டு**
**காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு!**

என்றும் பாவேந்தர் பாரதிதாசன் தமிழையும் தமிழ்ப் பனுவலின் இனிமையையும் உணர்த்தக் கனிச்சாற்றை உவமை பேசுவார்.

எனவே தமிழும் தமிழுணர்வும் செறிந்து விளங்கும் இப்பாடல் தொகுதிக்குக் கனிச்சாறு என்று பெயர் தரப்பெற்றது.

மிக அரும்பாடுபட்டு இத்தொகுதித் தொடர்கள் வெளியிடப் பெறுகின்றன.

தமிழினம் தன் நிலைப்பாட்டு மேன்மைக்கு இத் தொகுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாக.

**சென்னை–5**
**14–4–1979**

அன்பன்,

## முதல் பதிப்பு – பதிப்புரை

உலக வரலாற்றிலேயே தலைசிறந்தது மாந்த வரலாறாகும். அதனுள்ளும், நம் முதுபழங் குமரித் தமிழிய வரலாறோ, மூல முதன்மையும், உயர் மாந்தத் தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும்

அத் தென்குமரித் தலைக்கழக(சங்க)க் காலத்து முத்தமிழ் மீமிசை மாந்த வாழ்வியலின் ஏந்திய பண்பு நலன்கள் யாவும், அடுத்து வந்த இடைக்கழகக் காலந்தொட்டே, (பிற்காலக் கீழை) வேத ஆரியத்தின் நுழைவால் தாக்குண்டு சீர்குலையத் தொடங்கின. அதுமுதலே, ஆரிய எதிர்ப்பியக்கங்களும், தொடர்ந்து, பரவல் சிதறலாகத் தமிழகத்தில் தோன்றி வரவே செய்தன. ஆனால், அவை எவற்றுக்கும் ஆரியத்தை அடிதுமித்துச் சாய்த்துத் தமிழ் மீட்பினை நிலைநாட்டித் தரும் மொய்ம்புரம் வாய்க்கவில்லை.

இறுதியாக, சென்ற நூற்றாண்டில், மேலைநாட்டு நல்லறிஞரால் விழிப்புறுத்தப் பெற்றும், **மறைமலையடிகளாரின்** தனித்தமிழ்த் தொண்டினாலும், **பெரியாரின்** இனமானத் தொண்டினாலும் இந் நூற்றாண்டில் புத்துரமூட்டப் பெற்றும், பல மறுமலர்ச்சி இயக்கங்கள் தமிழகத்தில் தோன்றலாயின. அவற்றின் ஒட்டுமொத்த முயற்சிகளின் மெய்வருத்தக் கூலியாக, இன்று **மொழிஞாயிறு பாவாணர்** அவர்களின் மொழிமுதற் புலத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் உரன்வல அறிவாண்மைப் படை கொண்டு முனைந்துழுது, ‘தென்மொழி’ என்னும் இதழ்வாயிலாக, தேடரிய தெளிவியக்கம் ஒன்று புரட்சிக்கால் ஊன்றி, ஆள்வினையும் ஏற்றுள்ளது.

அத் 'தென்மொழி இயக்கத்தின், வினை வேளாண்மைக்கென மொழி – இன – நாடு தழுவிய பல்வேறு துறைகளிலும், **பாவலரேறு** அவர்கள், முப்பது ஆண்டுகட்கும் மேலாக, பன்னூற்றுக் கணக்கில் பாடிக் குவித்துள்ள அரும்பாடற் கனிகளையே இங்ஙனம் தொகுத்து, **'கனிச்சாறு'** ஆகப் படைத்துள்ளோம். அவ்வமிழ்தச் சாற்றினை ஆரப் பருகும் எவரும், தமிழியக் குடிசெயலுக்கு வேண்டிய 'வீறெய்தி மாண்ட' வினைத் திட்பம் பெற்று, தொண்டாற்ற முன்வர வேண்டுதலே எமது பெருநோக்கம் ஆகும்.

இப்பாடற் களஞ்சிய வெளியீட்டுத் திட்டம், கோவை மாவட்டத் தமிழன்பர்களின் அருமுயற்சியால் இயல்வதாகி, தி.பி. 2006-இல் அறிவிக்கப் பெற்று, தி.பி. 2008 முதல் செயலாக்கங் கொண்டு, இக்கால் முழுமையாக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்தை வினைப் படுத்திய **தென்மொழி ந. முத்துக்குமரனார்,** அவர் துணைவர் **தென்மொழி மறை. நித்தலின்பனார்,** ஊக்கப்படுத்திய **திரு. க. ஆகுன்றன்,** கொடை நல்கி வலந்தந்த புரவலன்மார் ஆகிய அனைவரும் தமிழின மீட்பு வரலாற்றில் என்றும் நீங்கா இடம்பெறும் சிறப்புடையர். வெல்க எம் தமிழம்! மலர்க நல்லுலகம்!

பணிவுடன்,
'கனிச்சாறு வெளியீட்டுக் குழு'
*(14.4.1979)*

# முதல் பதிப்பு - சிறப்பு முன்னுரை

**கனிச்சாறு—முதல் தொகுதி** இது. இதில் **தமிழ், இந்தி எதிர்ப்பு, இன எழுச்சி** பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

சில பாடல்கள் பகுப்பு மாறியும் சேர்க்கப் பெற்றிருக்கலாம். விரைந்து அச்சேறியதால் ஏற்பட்ட விளைவு இது. ஒவ்வொரு தொகுதியிலும் பாடல் விளக்கக் குறிப்புகள் என்று ஒரு பகுதியும் சேர்க்கப் பெற்றுள்ளது. புதிய முறை இது. பாடல்கள் சில விடுபட்டுள்ளன. அவை அடுத்த பதிப்பில் சேர்க்கப்பெறும்.

இத்தொகுப்பு வரிசையில் **தென்மொழி** முதல் இதழிலிருந்து சுவடி 14 ஓலை 12 முடியவும், **தமிழ்ச்சிட்டு** முதல் இதழிலிருந்து குரல் 9 இசை 12 வரை வெளிவந்த பாடல்களுள், பள்ளிப் பறவைகள் முதல் தொகுப்பில் சேர்க்கப்பெற்றன தவிர, பெரியோர்களுக்கானவும், பிற தமிழ் வெளியீடுகளான **பகுத்தறிவு, தென்றல், முல்லை, வானம்பாடி, தமிழ்நாடு, செந்தமிழ்ச்செல்வி, விடுதலை, உரிமை முழக்கம், தேனமுதம், சனநாயகம், குயில்** முதலியவற்றுள் வந்தனவும் ஒரு சேரத் தொகுத்துச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இத் தொகுப்புகளில் உள்ள பழம்பாடல்கள் சில தனித்தமிழ்ப்படுத்தப் பெற்றுள்ளன. சில ஆங்காங்குத் திருத்தம் பெற்றுள்ளன.

என் நெடும் பாடல் நூல்கள் சில தனியாக முன்பே வெளியிடப் பெற்றிருந்தும், தனிச் சிறுபாடல்கள் அனைத்தும் சேர்த்துத் தொகுதிகளாக வெளியிடப் பெறாமலிருந்தமைக்குக் கரணியம் பொருள் முட்டுப்பாடே.

இவற்றின் இக்காலத் தேவையை உணர்ந்து கட்டாயம் இத்தொகுதி வரிசையைக் கொணர்ந்துவிடவேண்டும் என்று அருமுயற்சி செய்தவர்களுள் தலையாயவர்கள் **தென்மொழி மறை. நித்தலின்பனார்** அவர்களும் **தென்மொழி ந. முத்துக்குமரன்** அவர்களுமே ஆவர். **திரு. க. ஆகுன்றன்** அம்முயற்சிக்குப் பெரிதும் தூண்டுகோலாய் இருந்தார். வெளியீட்டுக் குழுவினர் பிறரும் என் நன்றிக்கும் பாராட்டிற்கும் உரியவர்கள்.

இத்தொகுதி வரிசைத் தொடர்பாகப் பாடலைப் படியெடுத்துதவிய தென்மொழி மாணவர் சிலர்க்கும், அவர்களின் அன்புப் பணியை அமைத்துக் கொடுத்த **தென்மொழி ந. முத்துக்குமரன்** அவர்களுக்கும், அவற்றை ஒழுங்குபடுத்திய **தென்மொழி மறை. நித்தலின்பனார்க்கும்,** அவற்றைச் சரிபார்த்துதவிய, **ப. அருளி** அவர்களுக்கும், அச்சிட உதவிய என் மகன் **மா. பூங்குன்றனுக்கும்,** அலுவலகப் பொறுப்பாளர் **இளமுருகன்** அவர்களுக்கும், பிழைதிருத்தப்பட்டி எடுத்துதவிய **பேரா. மு.ச. சிவம்** அவர்களுக்கும், பொருளடக்கம், பாட்டு முதற்குறிப்பு அகர வரிசை தொகுத்துதவிய **செம்பியன் வல்லத்தரசு** அவர்களுக்கும், மற்றும் தென்மொழி அச்சகப் பணியாளர்க்கும், அழகிய முகப்போவியம் வரைந்த ஓவியர் **அமுதோன்** அவர்களுக்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றியும் பாராட்டும் உரியவாகுக.

— **(ஒப்பம்) பெருஞ்சித்திரன்**

# இரண்டாம் பதிப்பு – வெளியீட்டுரை

கனிச்சாறு (பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்) முதற்பதிப்பு வெளிவந்து இருபதுஆண்டுகளுக்குப் பின், அதன் இரண்டாம் பதிப்பு இப்போது வெளிவருகிறது.

முதற்பதிப்பின் முத்தொகுதிகளும் தென்மொழியில் சுவடி : 14; ஓலை : 12 வரையிலும் மற்றுத் தமிழ்ச்சிட்டில் குரல் : 9; இசை : 12 வரையிலும் வெளிவந்த பாடல்கள் அளவிலேயே அமைந்தன. அதன்பின் தொடர்ந்து வந்த இதழ்களின் பாடல்கள் அனைத்தும் துறைவாரியாகப் பிரிக்கப்பெற்று எண்தொகுதிகளாக இப் பதிப்பு நிறைவு செய்யப்பெற்றுள்ளது. மேலும், ஐயா அவர்கள் தம் இளமைக் காலத்தில் எழுதியனவும் இதுகாறும் அச்சுக்கு வராதனவுமான பாடல்கள் சில, பழைய குறிப்புச் சுவடிகளினின்றும் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன; அன்றியும் ஐயா அவர்கள் அன்பர்கள் பலருக்குப் பல்வேறு நிகழ்வுகளையொட்டி எழுதியனுப்பிய பாடல்கள் பல, அவ் அன்பர்களிடமிருந்து பெறப்பட்டும், சில ஐயா அவர்களின் சுவடிகளிலிருந்து எடுத்தும் இணைக்கப் பட்டுள்ளன. (பழைய பாடல்களில் ஒரோவழி இடம் பெற்றிருந்த அயன்மொழிச்சொற்கள் வரிவடிவில் வேறுபடுத்திக் காட்டப் பெற்றுள்ளன.)

மொத்தத்தில், ஐயா அவர்களின் தனி இலக்கியங்களான கொய்யாக்கனி, ஐயை, பாவியக்கொத்து, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, நூறாசிரியம், உலகியல் நூறு, கழுதை அழுத கதை, அறுபருவத் திருக்கூத்து ஆகியன அல்லாத பிற பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பெற்று **'பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனிப்பாடல்கள் — அடங்கல்'** என்னுமாறு

இப் பதிப்பு முழுமையான பதிப்பாக வெளிவருகிறது. அவ் வகையில் இதுவே முதற் பதிப்பு எனலாம்.

பாடல்கள் அனைத்திற்கும் முன்னைப் பதிப்பின் போக்கிலேயே தொடர்ந்து பாடல் விளக்கக் குறிப்புகள் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இயற்றப்பெற்ற அல்லது வெளிவந்த காலத்தையொட்டி ஆண்டு, மாத முறைப்படி பாடல்கள் வரிசைப்படுத்தப் பட்டிருப்பது இப்பதிப்பின் தனிச்சிறப்பாகும்.

பழைய பாடல்கள் சில எழுதப்பெற்ற காலம் தெளிவாகத் தெரியாமையால், அப்பாடற்குரிய ஆண்டையொட்டி வினாக்குறி யிடப்பட்டுள்ளது.

இக் கனிச்சாற்றில், தமிழ் மற்றும் இந்தி யெதிர்ப்புப் பற்றிய பாடல்கள் முதல் தொகுதியாகவும், இன எழுச்சிப் பாடல்கள் இரண்டாந் தொகுதியாகவும் அமைந்துள்ளன; நாட்டுரிமை பற்றிய மூன்றாந் தொகுதியில் தமிழகம், தமிழீழம், இயக்கம் என்னும் பிரிவுகளிலான பாடல்கள் இடம்பெற்றுள்ளன; பொதுமை, இளைய தலைமுறை ஆகியன பற்றிய பாடல்கள் நான்காந் தொகுதியாகவும், குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழி மாலை என்னுந் தலைப்புகளில் அமைந்த பாடல்கள் ஐந்தாந் தொகுதியாகவும் கொள்ளப்பெற்றுள்ளன; ஆறாந் தொகுதியாவது காதல், இயற்கை, இறைமை என்னும் பிரிவுகளைக் கொண்ட பாடல்கள்; தன்னிலை விளக்கம், பெருமக்கள் சிறப்பு — கையறு நிலை, திருநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, மதிப்புரைகள் முதலியனவாகிய பாடல்கள் ஏழாந் தொகுதியில் வைக்கப் பெற்றுள்ளன. பாட்டரங்கப் பாடல்கள் எட்டாந் தொகுதி.

திருவாளர்கள் மறை. நித்தலின்பனார், ந. முத்துக்குமரனார், க. ஆகுன்றன் (கோவிந்தசாமி) தென்மொழி ப. துரையரசன், கோ. ப. சீரங்கசாமி, இரா. கந்தசாமி, மா. ஆறுமுகம், தமிழ்மகன், பேரா. வீ. இராசமாணிக்கனார், கு. வெ. கி. ஆசான் ஆகியோரான முதற் பதிப்பு வெளியீட்டுக் குழுவினர் பத்துப் பேரும், பங்குத் தொகை உரு. 1000/= மேனி அரைப் பங்கு, ஒரு பங்கு, இரு பங்கு என்னும் அடிப்படையில் தொகுக்கப்பெற்ற

தொகையைக் கொண்டு கனிச்சாறு (முத்தொகுதிகளும்) முதற் பதிப்பு அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நூல் அச்சீட்டின் முடிவிலும் அதன் பின்னருமாகத் திரு. மறை. நித்தலின்பனார், பேரா. வீ. இராசமாணிக்கனார், திரு. தமிழ்மகன், பேரா. கு.வெ.கி. ஆசான் ஆகியோர்க்கு நூலாகவும் தொகையாகவும் அப்பங்குகள் திருப்பப்பெற்றன. ஏனையோர் தம் பங்குத் தொகை அவர்கள் சொற்படி நன்கொடையாக ஏற்கப் பெற்றன.

இனி, தமிழ்மக்கள் தம் மொழிநலத்தையும் வாழ்வியற் சிறப்புகள் சீரழிவுகள் ஆகியவற்றையும் உணர்ந்து, அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்து, எழுச்சிபெற்று, இனநலம் பேணி, நாட்டுரிமை பெற்று வாழ்வாங்கு வாழ வகைசெய்யும் கருத்துத் தெளிவும் உணர்வுச் செழுமையும் வாய்ந்த பாடல் திரட்டான இக் கனிச்சாறு — தொகுதிகளைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்றுப் பயன்கொண்டு சிறக்கும் என்று நம்புகின்றோம்.

— தென்மொழி நூல் வெளியீட்டகத்தினர்

# கனிச்சாறு இரண்டாம் தொகுதி
## பாடல் விளக்கக் குறிப்புகள்

— இன எழுச்சி—

1. தமிழ்நிலத்தை மீட்கப் பெரும்படை நடப்பதாகக் கற்பனை செய்துகொண்டு எழுதப்பெற்ற போர்ப்பாட்டு இது.
2. ஆசிரியரின் மூச்சு, வீச்சு, ஆவல், ஏவல் — இவையென்பது.
3. பாவலர் தாம் எழுதும் பாக்களில் பழைய முறைக் கருத்துகளையே பின்பற்றாமல், மக்களுக்கு நலம் சேர்க்கும் கருத்துகளையே எடுத்தாளுதல் வேண்டும் என்றது.
4. தமிழ்ப் போருக்குத் தமிழ்க்குலத்திற்கு விடுத்த அழைப்பிது.
5. குயிலைப் பார்த்துக் கூறியனவாக எழுதப்பெற்ற கொள்கைப் பாக்கள்.
6. 1953-ஆம் ஆண்டின் இடையில் அன்றைய சென்னை முதலமைச்சர் திரு. இராசகோபாலாச்சாரியார், தொடக்கப்பள்ளிப் பிள்ளைகளைத் தம்தம் குலத்தொழில்களைப் பாதிநேரமும், கல்வியைப் பாதிநேரமும் கற்கச் செய்யச் சட்டம் கொண்டு வந்தார். அதை மக்கள் எதிர்த்தனர். அவர்களைச் சிறை செய்தும், சுட்டும் வந்தனர். அக்கால் **'பகுத்தறிவில்'** எழுதி வெளிவந்த பாடல்.
7. தமிழின் பெருமையும், தமிழர் சிறப்பும் இக்கால் நலிவுறுதல் கண்டு அதன் எழுச்சிக்கு என ஆர்ப்பரிக்கத் தமிழ்ப்புலவர், மாணவர், வல்லுணர்வினர், அன்னையர், ஆடவர் அனைவரையும் அழைக்கிறார் பாவலரேறு.
8. கழகப் பேரிலக்கியங்களின் சிறப்புக் கூறி அவற்றை மறத்தலியலாதெனக் கூறும் பாடல்.
9. இயற்கைச் சிறப்புடைய இத் தமிழ்த்திருநாடு சிறக்க உழைத்திடல் வேண்டும். நாடுய்ய நினைப்போர் இதை மறப்பரோ ? — என வினவுகிறார் பாவலரேறு.
10. தமிழகத்தின் ஆட்சி சீர்கேடாக அமையும் என்றால் தமிழர்கள் என்றென்றைக்கும் தில்லியருக்கு அடிமையாக இருக்க வேண்டியதுதான். பாட்டைப் படித்துப் பாருங்கள்.
11. தமிழர் பெறவேண்டிய ஐந்துறை முன்னேற்றங்கள் இதில் நிரல்படக் கூறப் பெறுகின்றன. **'வானம்பாடி'** என்னும் பாட்டிதழ்க்காக எழுதப்பெற்று அதில் வெளிவந்த பாடல் இது.
12. எங்கும் எதிலும் தமிழே வேண்டும் என்பது.
13. தமிழரைத் துயிலெழுப்பும் அழகிய பத்துப் பாடல்கள் இவை.

14. ஆரங்கே? அற்றைத் தமிழ் மகனா நீ என்று கேட்டுப் பழம்பெருமைகளை நினைவூட்டுவது.

15. 'தமிழர்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் உரிமையாகவும் வாழ்ந்து கொண்டிருந்த அக்காலத்தில் கடலே நீ அவர்களையும் அவர்கள் நிலத்தையும் விழுங்கினாய்; இன்றைக்கு அவர்கள் அடிமைகளாக இருக்கின்ற இந்நிலையில் எழுந்து சீறி இந்நிலத்தை விழுங்கி உனக்குக் கழுவாயைத் தேடிக்கொள்' என்று ஆசிரியர் கடலை வேண்டுகிறார்.

16. தமிழ் மொழியைத் தவிர்த்து இந்தி படிப்பது கனியை விட்டுவிட்டுக் கல்லைக் கடிப்பதுபோலும் செய்கை என்று கடிவது.

17. குனிந்து வாழும் தமிழரைப் பற்றிய இரக்கம்.

18. தமிழர்கள் இனங்கொல்லிகள் என்று ஏசுகிறது இது.

19. தமிழர் யார்? விளக்கம் இதில்.

20. இன்றைய தமிழகத்தின் தெளிவான படப்பிடிப்பு இது.

21. நினைவுகள் அழுந்தும் துயரச் சுழற்சிகள் இவை.

22. தமிழுரிமை காத்தற்குத் தமிழரை ஆர்த்து எழுங்கள் என்றது. **1965** மொழிப்போருக்கு வித்திட்ட பாடல்களில் இதுவும் ஒன்று.

23. இந்திப் போராட்டத்தில் ஈடுபட விரும்பாத கோழையர்கள் விலகி நில்லுங்கள் என்பது.

24. தமிழர் விழிப்புற வேண்டும் என்பது.

25. அயர்வுற்ற நெஞ்சை அயர்வு நீக்கக் கூறுகின்ற அருமையான பத்துப் பாடல்கள். படித்துச் சுவைத்துப் பின்பற்றக் கூடியவை.

26. தில்லியாட்சியினருக்கு விட்ட குரங்குத் தூது.

27. தமிழ்மொழி தாழ்ந்தது என்றுரைக்கும் தருக்கரிடம் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது.

28. தமிழர்கள் தங்களுக்குள் ஒன்றாக இணையவில்லையாயின், தமிழ்மொழி தாழ்ந்து, இழிந்து போய்விடும், இந்தி படிக்க வேண்டியிருக்கும், இனமும் வீழ்ச்சியுறும் என எச்சரித்துக் கூறிய பாடல் இது.

29. தமிழனை நினைந்து விடுத்த கண்ணீர் வரிகள் இவை. தமிழா! மிகப் பழமையான காலத்திலிருந்து உன் தமிழ்மொழியை ஆவியெனக் காத்து வந்தனையே, அவ்வாறு காத்ததெல்லாம், இந்தி யென்னும் புலைமொழிக்கு ஏவல் செய்யும் இழிதகைக்கோ என்பது போல் வினாவகையில் கேட்ட உருக்கமான பதினைந்து பாடல்கள்.

30. தமிழுருவில் தமிழ்ப் பகைவர்கள் இன்னும் இருக்கிறார்கள்; என்றும் இருப்பார்கள்.

31. எத்தனை எத்தனைத் துன்பங்கள்தாம் அடுக்கடுக்காக வந்தாலும், கொள்கையில் வலிவானவர்கள் மாறிவிடப் போகிறார்களா என்ன ?

32. தமிழர் எழுச்சியுற்றனர், பகையே, நீ விலகு என்பது இது.

33. தமிழ் மக்கள்தாம் அடிமைகள் என்றில்லை; தமிழ் மக்களை ஆள்பவர்களும் அடிமைகளாகவே இருக்கின்றார்கள்.

34. தமிழை வளர்ப்பவர்கள் என்று கூறிக்கொண்டு சிலர் எத்தனை அழிவுகள் செய்கின்றனர்!

35. இழிவாக எழுதிப் பிழைத்திடும் இடக்கரும், அவற்றைப் பதித்திடும் புல்லியரும் தொலைந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இத்தமிழகம் எழில் வீசித் திகழும்.

36. உண்மையான தமிழன் இறந்து போய்விட்டான் என்று கருதி அவனுக்கு ஒப்பாரியாகப் பாடிய பாடல் இது.

37. இங்குள்ள மூடர்கள் உண்மையான தொண்டர்களுக்குப் பல வகையான இடர்ப்பாடுகளைச் செய்யத் துணிந்துவிட்டனர். பொய் புளுகு கூறிக் கயமையைக் கூறிக் கவிழ்த்துவிடுகின்றனர். அவற்றுக்கெல்லாம் மெய்த் தொண்டர்கள் கவலை கொள்ள வேண்டா என்பது இது.

38. மெய்ம்மையில் மிளிர்ந்தவர்கள் பொய்க்கு வளைந்து கொடுக்க மாட்டார்கள் என்பது இது.

39. இந்தப் பாடலுக்காக ஒரு தமிழர் ஆசிரியர்மேல் வழக்குப் போடுவேன் என்று மிரட்டினார். அதில் ஒன்றுமில்லை. தமிழனுடைய இன்றைய இழிநிலைகள் சுருக்கமாகச் சுட்டப்பெற்றிருக்கின்றன, அவ்வளவுதான்.

40. பொதுத்தொண்டர்களில் போலியானவர்கள் எப்படியிருப்பார்கள்? பத்துப் பாடல்களில் அடையாளங் காட்டப்படுகிறது.

41. ஆசிரியரின் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட வேண்டும் என வேண்டிப் பிரிவினை இயல்வதொன்றா என்று ஐயம் எழுப்பின ஓர் அன்பர் மடலுக்கு விடையாக எழுதப் பெற்றது இப்பாட்டு.

42. தமிழர் உள்ளம் பூத்துப் பொலியட்டும் என்று வாழ்த்துக் கூறுகிறது இப்பாடல்.

43. ஒரு முரசு முழக்கு.

44. மானத்தை இலச்சினையாகப் பொறித்த தமிழ்க்கொடியை ஊன்றுங்கள் என்றது.

45. என்றைக்கு உண்மைத் தமிழர் அரசேற்றுச் செய்தக்க வினைகள் செய்து நாட்டைச் செழுமைக்குக் கொணர்வர் என்று ஏங்குகிறது நெஞ்சம்.

46. அரசியலாளர்களுடைய குழப்ப நிலைகளைப் பற்றிய ஒரு படப்பிடிப்பு.

47. சாதியின்மேல் அடித்த சம்மட்டியடிகள்.

48. தமிழர்களைப் பிற இனத்தவர் எவரும் அவ்வளவாகத் தாழ்த்தி விடவில்லை. தமிழனைத் தமிழனேதான் தாழ்த்துகின்றான்; சுரண்டுகின்றான்; அடிமைப்படுத்துகிறான். இந்த நிலையை எண்ணி மனம் கசிந்து எழுதிய பாடல் இது.

49. தமிழரில் சிலர் எவ்வாறு முன்பின்னாக நடந்துகொள்கின்றனர் என்று சுவையுற விளக்குகிறது இந்தப் பாட்டு.

50. மறைந்துபோன பாவேந்தர் பாரதிதாசனுக்கு இங்குள்ள தமிழர் நிலைகளையும், தமிழ்நாட்டு நிலையினையம் விளக்கிக் கூறுவதாகக் கற்பனை செய்து எழுதிய ஒரு பா மடல் இது. காலத்தின் தெள்ளிய உருவெளிப்பாடு.

51. இந்திய அரசு ஒற்றுமை ஒருமைப்பாடு என்றெல்லாம் வெற்றுரை கூறித் தமிழ்மக்களை ஏமாற்றுகின்றனர். சாதி மத முக்காடும், ஒருகுலத்துக்கு ஒரு நெறி கூறும் மனுநூல் முதலியனவும் அழியும்வரை ஒற்றுமையும் பூக்காது; ஒருமைப்பாடும் கனியாது என்பது இப்பாடல்.

52. ஊன்கெட்ட தமிழரிடை உணர்வுண்டோ, குருதியுண்டோ என்று குட்டிக் கேட்கிறது இது.

53. எத்தனை ஆயிரம் ஆண்டுகள் தமிழின்னலைப் பொறுப்பது என்பது.

54. திரைப்படக்காரர் செய்யும் தமிழ்கெடுப்பு, மக்கள் மனநலங் கெடுப்பு முதலியவற்றை விளக்கமாகக் கூறி அவர்கள் தங்கள் போக்குகளில் மாறுதலுற வேண்டுமெனக் கூறும் நீண்ட நெடிய பாடல்.

55. திருக்குறளைப் படிக்காமலும் அது கூறிய பொதுநலக் கருத்துகளை நிறைவேற்றாமலும், வெறும் ஆரவாரத்திற்காகத் திருவள்ளுவர் விழாக் கொண்டாடும் முறைகளைக் கடிந்தது.

56. தமிழ்ப் பகையை நெடுங்காலமாகப் போராடியும் வெல்ல முடியவில்லையே; தமிழா, முழு முனைப்பாக எழுச்சிக் கொள்; ஒரேயடியாக அப் பகையைத் தொலை என்பது.

57. எத்தனையாண்டுகள் நீ உணர்வற்றிருப்பது; உடனே எழுந்திரு என்பது.

58. உரிமையெனும் மெய்க்கொள்கை தமிழர்க்கென்றும் உயிர்க்கொள்கை; உயிரைவிட உயர்ந்த கொள்கை என்பது.

59. அடிமைப் பிறவியாகிய அன்புத் தமிழனுக்கு என்பு நெகிழ உரைக்கும் இனிய அறிவுரை.

60. விடுதலை தோன்றும் அறிகுறி இது.

61. தமிழனைப் பார்த்து நீ எந்தெந்த வழிகளில் இழிந்துபோனாய் என்பது.

62. ஆரியப் பார்ப்பனர்கள் இனிமேலாகிலும் தமிழினத்தை ஏமாற்றுவதை விட்டு விட்டு இணைந்து வாழவேண்டும் என்று அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது இப்பாடல்.

63. பெரியார் ஈ. வே. இரா. நடத்திய கருவறைப் போராட்டத்தின்பொழுது பாடியது இது.

64. அலங்கோல எழுத்தாளர்களும் வீணுரை மேடைப் பேச்சாளர்களும் தமிழகத்தில் நிறைந்துவிட்டனர். அவருள் உண்மையானவர்களைக் காண்பதரிது. ஏக்கம் பாட்டில் ஊடுருவி நிற்கிறது.

65. பொய் எவ்வளவில் ஆரவாரம்கொண்டு அரசோச்சினாலும் அஃது அழியவே அழியும் என்றும், மெய் எவ்வளவில் அமைவாக இருந்தாலும் அது வாழவே வாழும் என்றும் இப்பாடலில் உணர்த்தப் பெறுகிறது.

66. காலம் எவ்வளவோ முன்னேறிவிட்டது. தமிழர்கள் இலக்கிய ஆட்சியிலும் பிற உரைநூல்கள் எழுதுவதிலும் மிகவும் பின்தங்கிக் கிடக்கின்றனர். அவர்களை ஊக்குவிக்க ஒரு பாட்டு.

67. தலைவர்கள் மக்களின் உயர்வுக்காக எத்தனையோ வகைகளில் பாடுபடுகின்றனர்; கூக்குரலிடுகின்றனர். ஆனால் நாட்டில் தாம் எத்தனை கயமை நிலைகள், ஏமாற்றுப் பேச்சுகள், குல சமயப் பூசல்கள்?

68. அயல்நாட்டில் வாழ்கின்ற தமிழர்களுக்கு இந்நாட்டிலிருக்கும் இழிவு நிலைகளைக் கூறி, அவர்களாவது தமிழ்மொழியையும் தமிழ் இன நலத்தையும், தமிழ்ப் பண்பாட்டையும் காத்துக் கொண்டு வாழவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றது இப்பாடல். சிங்கப்பூரில் நடக்கும் 'உரிமை முழக்கம்' என்னும் தாளிகையில் வெளிவந்தது.

69. வெறும் வியப்புக் குறிகளையும் கேள்விக் குறிகளையும் தலைப்பாகக் கொண்ட பாட்டு இது. தமிழகத்தில் காணப்படும் நேர் முரணான சில நிலைகளை எடுத்துக் கூறி வியப்பும், இனி என்ன ஆகுமோ என்று வினாவும் எழுப்புகிற வகையில் அமைந்த பாடல்.

70. தமிழகம் ஒருநாள் கட்டாயம் தனித்தமிழரசை அமைத்தே தீரும்; அதற்குரிய முரசொலிப்பு இது.

71. ஏழு கோடித் தமிழர்களிடையே எண்பது கோடிப்போக்குகள் இருக்கின்றன. அனைவரும் அறிஞர்கள் என்கின்றனர்; தங்களைத் தலைவர்கள் என்று கூறிப் பெருமிதப்பட்டுக் கொள்கின்றனர். இவர்களுள் யார்தாம் தொண்டர்களோ தெரியவில்லை. இதை விளக்குகின்றது இப்பாட்டு.

72. **1972**-இல் நடந்த பொதுத்தேர்தலில் அக்கால் தமிழர் நலன்களுக்குச் சார்பாகவிருந்த அருட்செல்வர்(கருணாநிதி) ஆட்சியைக் காக்குமாறு எழுதிய பாடல் இது.

73. தமிழ் இனத்திற்கு நீண்ட வேண்டுகோள். இக்காலத் தமிழர்களிடையே ஏற்பட்ட பலவகைச் சறுக்கல்களையும் இழிவுகளையும் எடுத்துக்கூறி அவர்கள் மொழி நலத்தை முதலாவதாகக் கருதுதல் வேண்டும். அப்பொழுதுதான் மொழிவழி இனமும், இனவழி நாடும் முழுவுரிமை பெற்று உய்யமுடியும் என்று உணர்த்துகிறது இது.

74. இப்பொழுதே எழாமற் போனால் எப்பொழுது நீ எழுவது என்று கேட்பது.

75. வெறும் பொய், புளுகு இலக்கியங்களில் மனத்தைப் பறி கொடுக்காமல் செயல்படவேண்டும் என்று தமிழர்களை அழைப்பது.

76. தமிழனைத் தமிழனே அழிக்க முற்பட்டாலும் இன நலம் கருதிப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பது.

77. தமிழ்த்தொண்டர் பின்பற்றற்குரிய தகவுரைகள்.

78. ஆரியப் பார்ப்பனர் தம் இனத்தை முன்னேற்றுவதற்கு ஒருவர்க்கொருவர் எவ்வளவோ விட்டுக்கொடுத்துப் போகின்றனர். தமிழர்களுள் அவ்வாறில்லையே. அந்த நிலை மாறினாலன்றோ தமிழர்க்கு உய்வு!

79. கட்சி நிலைகளில் தமிழன் எங்கிருந்தாலும் தன் இன நலத்தை மறந்துவிடக் கூடாது என்று அறிவுறுத்துகின்றது இப்பாட்டு.

80. இப்பாடல் 1973 மதுரையில் நடைபெற இருந்த தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு தமிழக விடுதலை மாநாட்டிற்கு முன்பாக, ஆசிரியர் ஐயா அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த **'தீச்சுடர்'** எனும் இதழில் எழுதப்பெற்றது. தமிழின உணர்வையும், விடுதலைத் தேவையையும் உள்ளடக்கி எழுதப் பெற்ற இசைப்பாடல் இது.

81. இற்றை நாள் இளைஞர்கள் தமிழுணர்வு கொள்ளவேண்டும் என்பது.

82. சிங்கை மலேசியா சுற்றுச் செலவு சென்றிருந்தபொழுது எழுதி விடுத்தது? தமிழர் எந்த நாட்டிற்குச் சென்றாலும் தம் சாதி மத இழிவுகளைக் கைவிடாமல் பற்றியிருப்பதை வருந்திக் கூறியது இது.

83. இதுவும் சிங்கை மலேசியா சுற்றுச் செலவின்பொழுது எழுதி விடுத்தது. உலகெங்கும் உள்ள தமிழர்கள் ஒன்றாய் இணைந்து தமிழர் விடுதலைக்கு உழைக்க வேண்டும் என்பது.

84. தமிழர் சிலைகளை ஊருக்கொன்றாய் ஊன்றுவதில் பயனில்லை. அடிப்படை விளைவுகளை விளைவிப்பதே பயன் தருவதாகும் என்று அறிவிப்பது.

85. **1975**-இல் சென்னைச் சிறையில் இருந்த விடுதலை மறவரில் **தென்மொழி மறை நித்தலின்பனாரும்** ஒருவர். (மொழி 45-ஆம் பாடற்குறிப்பைப் பார்க்க.) அவர் சிறையிலிருந்த பொழுது அவர் தாய் கடுமையான ஒரு நோயால் பற்றப்பெற்றுச் சாப்படுக்கையில் கிடக்கின்றார் என்ற செய்தி வந்தது. அச்செய்தியுடன் அவர் துணைவியாரின் தலைப்பேற்றுக்கு நாள் அண்மி

வந்ததால், அவரும் தம் கணவர் அருகிருக்க விரும்புகின்றார் எனும் செய்தியும் வந்தது. தம் பொறுப்பில் நித்தலின்பனார் விடுதலையாகலாம் எனினும் அவர் வெளியேற மறுத்துச் சிறையிருந்தார். ஆயினும் இரு செய்திகளாலும் இரவு நேரங்களில் அவர் மனம் சிறிது துயரங்கொண்டு வருந்தியது. அக்கால் அவருடனிருந்த ஆசிரியர் அவரைத் தேற்றுமுகத்தான் எழுதிய இரு பாடல்களுள் இதுவும் ஒன்று. மற்றது அடுத்துள்ள பாடல்.

86. 85-ஆம் பாடல் குறிப்புரையைப் பார்க்க.

87. தொண்டு செய்யப் புகுகின்றவர்கள் எந்த வகைத் துன்பத்திற்கும் ஈடுகொடுப்பவர்களாக இருத்தல் வேண்டும். இழிவையோ, பழியையோ பொருட்படுத்தக் கூடாது. கொண்ட கொள்கையில் நெகிழ்ச்சியில்லாமல் ஈடுபடுவோனே இறுதியில் முயற்சியில் வெற்றி பெறுகிறான்.

88. ‘எனக்கென எதுவுமில்லை இந்த இனங்கெட்ட தமிழனின் நிலை தவிர’ என்று கசிந்துருகுகிறார் ஆசிரியர்.

89. என்ன சொன்னாலும் எவர் சொன்னாலும் இந்தத் தமிழன் என்றைக்கும் உண்மை உணர்ந்து உருப்படமாட்டான் என்பது தெரியும். ஆனாலும் இவனை இப்படியே விட்டுவிடக்கூடாது. ஏதாவது முயற்சி செய்தே ஆகல் வேண்டும் என்று உறுதிப்படுத்துகிறார் ஆசிரியர்.

90. தமிழர்களே என்னைத் தாழ்த்தினும் தமிழர்களுக்கே உழைப்பது என் பெரும் கொள்கை என்கின்றார் ஆசிரியர். தமிழர்கள் நோயாளிகளாம்; அவர்களுக்குத் தொண்டுசெய்யப் புகுவோர் மருத்துவராக இருந்து பணி செய்ய வேண்டும்; நோயாளிகளை மருத்துவர் வெறுக்கலாமா ? என்று கேட்கிறது இப்பாட்டு.

91. தமிழினத்தை மாற்றியமைக்க ஓர் ஆயிரம்பேர் இருந்தால் போதும் என்று அறைகூவல் விடுக்கிறது இப்பாடல்.

92. பொதுத்தொண்டு செய்ய எல்லாரும் முன்வருகின்றார்கள், இக் காலத்தில். ஆனால் உண்மையான பொதுத்தொண்டர்கள் மிகவும் குறைவு. இக்கருத்தை உணர்த்துகிறது இப்பாடல்.

93. தலைவர்கள் எல்லாம் தவறு செய்துகொண்டு அத்தவற்றுக்குக் கரணியமாக மக்களைச் சுட்டி உரைக்கின்றது எவ்வளவு பேதைமை என்கிறது இப்பாட்டு.

94. இன்றைய தமிழனின் இழிந்த நிலையைத் தெள்ளத்தெளிவாகப் பிடித்த படப்பிடிப்பு இது.

95. இன்றைய தமிழ்நாட்டின் சொல்லோவியம் இது.

96. தம்மினத்தாரே தம்மை அழிக்கினும் தம்கொள்கை என்றும் மாறாது என்கின்றார் ஆசிரியர்.

97. தமிழர் உலக நலங் கருதுவது இருக்கட்டும்; முதற்கண் தம் இனநலத்தைத் தாமே காத்துக்கொள்ளட்டும் என்கிறது இது.

98. ஆசிரியர் **1976**-ஆம் ஆண்டு முழுவதும் நெருக்கடி நிலைக் காலத்தில் சிறையிலிருந்துவிட்டு **1977** தொடக்கத்தில் வெளிவந்தபின் எழுதிய முதல் பாடல் இது. சிறைக்கதவு திறந்ததை, மீண்டும் தம் தொண்டு தொடர்ந்ததாக, இதில் உறுதிப்படுத்துகிறார், ஆசிரியர்.

99. பழந்தமிழினம் இன்னும் மறந்துவிடாத சில இழிவுகள் இந்தப் பாட்டில் பட்டியலிட்டுக் காட்டப் பெறுகின்றன.

100. சோற்றுக்காக வாழும் அடிமை வாழ்க்கையைத் தவிர்த்துவிட்டு உரிமை வாழ்க்கைக்கு வரும்படி இளைஞர்களுக்கும், புலவர்களுக்கும் அழைப்பு விடுகிறது இப்பாட்டு.

101. எல்லாரும் மக்களுக்கு உழைக்கிறோம் என்கின்றார். எல்லாரும் தாம் நடப்பதே சரி என்று கூறுகின்றார். எல்லாக் கட்சிகளும் தம் கட்சியே உண்மைக்கட்சி என்று விளம்பரம் செய்கின்றன. இவற்றுள் எ்து உண்மை என்பதை எவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது?

102. தமிழன் தன் இனக் கவலையற்று இழிந்திருக்கும் நிலைகண்டு வருந்தி எழுதியது.

103. ஆசிரியரவர்கள் இலங்கை சென்று வந்தபின், தமிழகத் தமிழர்களின் ஏமாளித்தனத்தை எண்ணி இடித்துரைத்துப் பாடியது இப் பாடல்.

104. சொன்ன சொற்களைச் செய்திடாதவர் எனினும், நன்றி கொன்றவர் எனினும் என்ன செய்குவது தமிழ்நல உண்மையால் இவர்களைத் தேர்வீரே! என்று 1979-ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.க.வினரைத் தேர்வு செய்யச் சொல்லிய பாடல் இது.

105. தமிழர்தம் பண்டைய சிறப்புகளையும், இக்கால இழிவுகளையும் எடுத்துரைத்து நல்வாழ்வு பெற்று உயர்வாயோ—எனக் கேள்வி யெழுப்புகிறது இப்பாடல்.

106. தமிழர்களின் அடிமை நிலையை வெளிப்படுத்திச் செயற்பட வேண்டிய செய்தித்தாள், அரசியற்காரர்களின் ஆளுமைப் போக்குகளால் எவ்வகைத் தொண்டும் பயனளிக்காது போய்விடும் என்பதைச் சுட்டிய பாடல் இது.

107. அரசியற்காரர்களும், பேச்சாளர்களும் தமிழினத்தையும், தமிழையும் எந்த அளவு நலிவுபடுத்துகிறார்கள் என்பதை விளக்குவதோடு, அதை மறுத்துத் தமிழர் நலங்காக்கச் செயற்பட வேண்டியதையும் வலியுறுத்துகிற பாடல்.

108. **'தினமணிக் கதிர்'**— இதழின் அன்றைய **ஆசிரியர் பார்த்தசாரதி** அவ்விதழை ஒவ்வொரு சாதிக்குமான சிறப்பிதழாகத் தொடர்ந்து கொண்டுவந்ததைக் கண்டித்தும், அடிமைத் தமிழர்க்கு அதை உணர்த்திப் புரட்சிக்கு வித்திட அழைப்பு விடுத்தும் இப்பாடல் அமைந்துள்ளது.

109. சாதிப் பகைமைகளை முற்றும் தவிர்ப்பதுதான் வேதப் பார்ப்பனியத்தை வேரறுக்கும் முறை எனச் சுட்டுகிறார் ஆசிரியர்.

110. சாதிச் சிக்கல்களும் அவற்றால் மதமாற்றங்களும் நடந்துவந்த சூழலில் சாதிநிலை வேரறுத்துச் சமயநிலை சீர்த்திருத்தித் தமிழராய்க் கூட அழைப்பு விடுக்கிறது இப்பாடல்.

111. தென்மாவட்டங்களில் சாதிக் கொடுமையால் மதமாற்றம் நடந்தபொழுது இந்துமதப் பார்ப்பனர்கள் அலறத் தொடங்கி இந்து மதச் சிறப்புக் குறித்துக் கதறலாயினர். அக்கால் அம்மத இழிவு குறித்தும், அது ஒழிந்திடல் வேண்டுவது குறித்தும் ஆசிரியரின் பாடல் இது.

112. திராவிடர் கழகம் **1981**-இல் அறிவித்திருந்த மநு நூல் எரிப்புப் போராட்டத்தில் நம் ஐயா அவர்கள் கலந்துகொண்டு தளைப்பட்டுக் கோவையில் சிறைப்படுத்தப்பட்டிருக்கையில் எழுதியது இப்பாடல். தமிழர் மீதான இழிவு இருள் நீங்கிச் சமன்மை உணர்வும் பொதுமை உணர்வும் ஓங்க வேண்டுமாயின் மநுநூலும், வேதமும், புராணமும் அழிதல் வேண்டும்.

113. பாடல் எண் : 112 எழுதப்பெற்ற சூழலிலேயே இப்பாடலும் எழுதப் பெற்றது. மக்கள் விடுதலை பெற்றுய்யச் செய்ய வேண்டிய பணிகளை விளக்குகிறார் பாவலரேறு.

114. இப்பாடலும் முந்தைய பாடல் எழுதப்பட்ட சூழலில் எழுதப் பெற்றதே. தமிழின அடிமைத்தனம் வீழ்ந்திடுமா எனும் கருத்தைக் கருவாய்க் கொண்டது இப்பாடல்.

115. இப்பாடலும் முந்தைய பாடலின் காலத்திலேயே எழுதப் பெற்றது. எரித்துச் சாம்பலாக்கப்பட வேண்டிய பார்ப்பனிய நஞ்சு பரப்பிய இழி நூல்களினால் தமிழினம் எவ்வகையில் சிதைவுற்றது என்றும் அதனால் அவற்றின்மீது பற்றி எரியட்டும் தீ என்றும் சொல்கிறது இப்பாடல்.

116. மொழி, இன, நாட்டின் இற்றை நிலை எண்ணி இறுதிச் செயல் நிலை இதுதான் எனச் செயற்பட அழைக்கிறார் ஆசிரியர்.

117. மொழி, இன, நாட்டு முன்னேற்றம் தேட எவை எவற்றையெல்லாம் செய்தல் வேண்டுமெனக் கூறப்பெற்றிருக்கிறது இப்பாடலில்.

118. ‘பெரியார், அண்ணாவின் பேச்சுகள்—எழுத்துகள் நச்சுவிதைகள்’— எனச் சங்கரப் பார்ப்பான் பேசியதற்குக் கொதிப்புற்று ஆசிரியர் அவர்கள் எழுதிய விளக்கப்பாடல்.

119. ம. கோ. இரா. அமைச்சரவையில் இந்துமத அறநிலையத் துறை அமைச்சராய் இருந்த வீரப்பன் தான் ஒரு பார்ப்பன அடிமையாய் இந்துமதத்தைப் போற்றிப் பேசுகையில் எட்டப்பப் பிறவி வாயடங்க வேண்டும் என விளக்கி எழுதியதிப் பாடல்.

120. தமிழினம் காக்கச் செய்யப்பெற வேண்டிய பெரும்பணிகள் நிறைய இருக்கையில் அனைவரும் கூடிவந்து செய்வரோ என நெஞ்சம் வருந்தி எழுதப்பெற்றது இப்பாடல்.

121. கட்சிகள், மதங்கள், சாதிகள் கழன்று தமிழராய் மேன்மையடைவதே மெச்சும் பெரும்பணி என்கிறது பாடல்.

122. உலகத் தமிழின முன்னேற்றம் குறித்துச் செயல்படுவதே தம் உயிர்மூச்சு என்கிறார் ஆசிரியர்.

123. மொழிநலம், இனநலம் கருதாத உலுத்தர்களாய்த் தமிழர்கள் இருப்பது குறித்துக் கவலுற்றுப் பாடியது.

124. அசாமில், பஞ்சாபில் பெரியார்போல், பாவேந்தர்போல் யாரும் பிறந்திடா விடினும் அங்கெலாம் எழுச்சி நேர்ந்திட இங்கு மட்டும் இல்லாமல் போனதை இடித்துக் காட்டுகிறார் பாவலரேறு அவர்கள்.

125. தமிழர்தம் பழம்பெருமைகளை யெல்லாம் சிறப்புற விரித்து, இருப்பினும் என்ன இன்று இவர்கள் அடிமைகள் என உளம் வருந்திச் சொல்லும் பாடல் — அழகிய வெளிப்பாட்டில்.

126. இனநலம் பேணி உழைத்திடல் ஒன்றே நன்று என்றுரைக் கிறார் ஆசிரியர்.

127. தீவிரப் பொதுவுடைமைத் தோழர்களான புலவர் கலியபெருமாள், தமிழரசன் மாற்றும் மார்க்கசிய சிந்தனையாளர் பலரும் தமிழ்த்தேசிய மீட்பில் கருத்துச் செலுத்தி நம் ஆசிரியர் அவர்களொடு தொடர்புகொண்ட காலம் அது. அக்கால் ஐந்து இயக்கங்கள் இணைந்து 'தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி'– அமைத்து அதன் நெறியாளராய் ஐயா அவர்களைத் தேர்வு செய்தன. எனவே அச்சூழலின் வெளிப்பாடாய் இவ் வெழுச்சிப்பாடல் அமைந்தது. பகைவரைத் தேடித் தீக்குள் வீசச்சொல்லும் நெருப்பு வரிகள் உணர்வின் பிழம்பு...

128. பொதுமை உணர்வில்லாமல், தொண்டுணர்வில்லாமல் அழிகின்ற தமிழர் கூட்டத்தை எண்ணித் தனியாய்த் தொண்டாற்றுகிற தமிழ நெஞ்சத்திற்குத் தேறுதலாய் அமைந்தது இப்பாடல்.

129. 'சிட்டு'களுக்கும், அடிப்படையிலேயே தமிழ்மக்களின் அடிமை உணர்வினை உணர்த்தி, இன உணர்வால் எழுச்சி கொள்ள வைக்கும் பாடல்.

130. தமிழினத்தார் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் அடிமையுணர்வொடு பிழைத்துக் கொண்டிருக்கையில் நல்விளைவு எவ்வாறு தழைக்கும் என வருந்திப் பாடியது.

131. தமிழினத்தை ஒருங்கிணைக்க இருக்கும் தடைகளையெல்லாம் தவிர்த்து விட்டுச் சோர்வின்றி உழைத்திட விரைந்து வர அழைக்கிறார் நம் ஐயா அவர்கள்.

132. வெற்றிக்குப் பலகோணம் உண்டு என்பதை பாவலரேறு ஐயா அவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

133. தமிழுக்கும், தமிழருக்கும் உழைப்பாரே தம் நண்பர் என்றும், அதற்கு மாறானவர் எந்நிலையர் ஆயினும் அவர் பகைவரே என்றும் அறைந்துரைக்கிறார் ஆசிரியர்.

134. பேரா(சை)சிரியர் ஒருவர் ஐயா அவர்கள்மீது காழ்ப்புக் கொண்டு எட்டப்பராகித் தென்மொழி, தமிழ்நிலம் இதழ்களில் வெளிவந்த தமிழ்நாட்டு விடுதலை தொடர்பான செய்திகளை யெல்லாம் நடுவணரசுக்குக் காட்டி எழுதிட, ஆசிரியர்மீது பன்னிரண்டு குற்றச் சாட்டினைச் சுமத்தி 'இந்திய அரசின் செய்தித்தாள் பேரவை' 17.1.1986—அன்று மடல்வழி விடைகேட்டு எச்சரித்தது.

அதற்கு, "எங்களின் தமிழ் மொழி, பண்பாட்டு, இலக்கியங்களைக் கட்டிக் காக்கவே கட்டுரைகளையும் கருத்துகளையும் வெளியிடுகிறோம். அந்நிலையில் தமிழரல்லாத பிறர் உணர்வுகளைப் புண்படுத்த வேண்டுமென்பது எங்களின் நோக்கமன்று" —என்பதாக ஆசிரியர் அவர்களால் நடுவணரசுக்கு விடை எழுதப்பெற்றது.

இச் சூழல்நிலை விளக்கி, தமிழினம் காக்கத் தடையெது வரினும் தயங்கேன் யான் என வீறுரைக்கிறார் நம் பாவலரேறு.

135. வீதிப் போராட்டத்திற்கு வருவோர் எண்ணிக்கை ஒரு விழுக்காட்டையும் கடந்து மிக மிகத்தான் இனம் நாடு உய்யும் என விளக்குகிறார் பாவலரேறு.

136. அக்கால் எழுந்த பல்வேறு தமிழ் இளைஞர் அமைப்புகளையும் கண்டு அவர்க்கு அறிவூட்டலாய்—எங்ஙன் பாடாற்றுவது எனப் படிப்பிக்கும் பாடல்.

137. வலிவில்லாப் பகைவர்க்கு எதிராய் வகைசெய்து போரிட்டால் வருங்காலம் தமிழர்க்குத் தானே...

138. மக்கள் எழுச்சிக்கான காரணம் கண்டு அதை நீக்க முயலாமல் அவற்றை வன்முறை எனும் அரசுக்கு உணர்த்தலாய் அமைந்தது இப்பாடல்.

139. ஊக்கம் இழக்காமல் செயலாற்றிடவும், மக்களுக்கு ஓதி உணர்த்திடவும் வேண்டுமென்று உரைக்கின்றார் ஆசிரியர்.

140. தமிழக மக்கள் விடுதலைக்காகப் பல்வகையில் இயங்கிச் செயற்பட்டுச் சிறை சென்ற இளைஞர்களும், அவர்களைத் தொடர்ந்து மக்களும் ஆற்ற வேண்டிய பணிகளைக் குறிப்பாய் உணர்த்தியது இப்பாடல்.

141. இழிவுணர்வும், கதையுணர்வும், பொழுதுபோக்குணர்வும் இனவுணர்வைச் சிதைக்கவே செய்யும் — மொழியுணர்வு தோன்றிடாமல் பகை எவ்வாறு வெல்லப்படும் என்கிறார் பாவலரேறு.

142. 139-ஆம் பாடலின் சூழலில் வெளிப்பட்ட பிறிதொரு பாடல். ஒன்றிணைந்து அழிம்புகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தி வெற்றிகாண அழைக்கிறார் ஆசிரியர்.

143. சோற்றில் நனைந்தவராயும், 'துட்டுக்கு' அலைபவராயும், பல நிற மாறும் ஓந்தியராயும் தமிழ் மக்கள் மாறிப் போயுள்ளனரே எனக் கவலையுற்றுப் பாடியது இப்பாடல்.

144. மா. கோ. இரா. ஆட்சிக்குப்பின் நடந்த் தேர்தலில் யாரைத் தேர்வு செய்வது என்பதற்கான பாடல் இது. இருக்கின்ற அரசியல் அரம்பர்களில் தமிழின உணர்வை அறிந்த கலைஞர் எரிகின்ற கொள்ளியில் எதிரிக்கு நெருப்பு! — என்பதாய் அரணிடும் பாடல் இது.

145. தேர்தலில் தி.மு.க. அரசு வெற்றி கொண்டதையடுத்து, திரவிட முரசொலி தமிழாய் முழங்கக் கூறிக் கலைஞர் அரசுக்குக் கருத்துரைக்கிறது இப்பாடல்.

146. தமிழ் உணர்வில்லாத பிண்டங்களாய் — உருவங்களாய்த் தமிழர்கள் உள்ளதை எள்ளி—இடித்துரைக்கிறார் பாவலரேறு அவர்கள்.

147. இழிவுகள் வரினும், தொல்லைகள் நேரினும் புறந்தள்ளிப் பொது உணர்வொடு வீரராய் நிமிர்ந்து நிகழ்த்துவீர் இனப் போர்—என ஊற்றம் கொடுக்கிறார் ஆசிரியர்.

148. சட்டமன்றத்துள் நாய்ச் சண்டை போல் அரசியலாளர்கள் சண்டையிட்டுக் கொண்ட காட்சி கண்டு ஒழுக்கமிலா இத்தகையோர் இருக்குமட்டும் தேர்தலைத் தவிர்க்க வேண்டுமாய் அழைப்பு விடுக்கிறார் நம் ஐயா!

149. அரசியலாளர்களும், வணிகரும் பிறர் எவரும் தூயதமிழ்க்குத் தொண்டாற்றத் தூண் நிகராய் வரவில்லையே அவ்வகைத் தொண்டாற்றிடும் அன்பரெவர் என வினவுகிறது இப்பாடல்.

150. அமைந்து பெற்றிடலாம் விடுதலை என்று ஊமையராய் அசைவற்றிருப்பதை யொழித்து விசையெழுந்து பாய்ந்ததுபோல் வீறுற்றெழ அழைக்கிறார் பாவலரேறு.

151. தமிழினத்தைத் தூங்கவைத்துத் தொடையினிலே கயிறு திரிக்கின்ற தலைவர்களால் தமிழர்களின் நலிவைக் கண்டு நெஞ்சு புண்ணாகிப் போனதாய்க் கவலுறுகிறார் ஆசிரியர்.

152. பாவேந்தர் பாரதிதாசனாரின் நூற்றாண்டு நினைவையொட்டி இக்கால் தமிழரின் இழிநிலை உணர்த்திப் பாவேந்தர்க்கு மடலாய் எழுதப்பெற்ற பாடல் இது.

153. வருந்தாத் வருத்தங்கள் வந்தாலும், நம் இனம் மீட்கத் தொண்டர்கள் புறப்படல் வேண்டும்; பொருந்தாதார் புறம் பெயரல் வேண்டும் என விளக்குகிறார் பாவலரேறு.

154. இந்தியா என்பதும் பார்ப்பனியம் என்பதும் ஒன்றுதான். அவர்களின் செயல்களனைத்தும் தமிழினத்தைச் சீரழிப்பனவே — இவற்றைக் கூர்மையொடு பார்ப்பாரே உணர்வர்; மற்றவர் உணரார் என எச்சரிக்கிறார் ஆசிரியர்.

155. 8.9.1991 – அன்று சென்னையில் 'தலைநகர்த் தமிழ்ச்சங்கம்' நடத்திய 'தமிழர் பாதுகாப்பு மாநாட்'டில் தமிழின உரிமையை வலியுறுத்தியும், இராசீவ் கொலைகுறித்துத் தணுவைப் புகழ்ந்தும் பேசியதற்காகச் செயலலிதா அரசால் சிறைவைக்கப்பட்டார் நம் ஐயா அவர்கள். அப்போது அரசுக்கு அறிவுறுத்தியது இப் பாடல்.

156. உழைப்பிலும் செயலிலும் தமிழினம் உய்தலே குறியென வாழ வழி கூறி, ஊக்கம் இழக்கச் செய்தல் வேண்டாமென்று உரைக்கிறார் பாவலரேறு.

157. நாற்பதாண்டுகளாய் நோற்பார் போல் நொடிப்பொழுதும் தளர்வின்றி உழைத்துக் கொண்டிருந்தும், நுடங்கிப் போகும் மூடனாய் இருக்கும் தமிழனையே அடிமை மீட்குவோம் — என்றுரைக்கிறார் பாவலரேறு.

158. எட்டிக் கொட்டையில் இனிப்பைச் சுவைத்திடும் தமிழின நிலை விளக்கம். 91-ஆம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் செயலலிதா தமிழக ஆட்சியைப் பிடித்ததைக் குறிப்பால் உணர்த்தியது.

159. செயலலிதாவின் அழிம்பு ஆட்சியில் தமிழர்படும் பேரின்னல்களைத் தாங்க இயலாமல் செயலலிதாவின் முழக்கம் நிற்கும் காலமே தமிழினம் உயிர்பிழைக்கும் காலமென்று உரைக்கின்றார் பாவலரேறு.

160. செயலலிதா ஆண்ட சூழலில் தமிழ் நாட்டாட்சி இழிவுற்றிருந்த நிலையை அப்படியே காட்சியாக்குகிறது பாடல்.

161. மக்களெல்லாம் பார்ப்பனர்க்கே அடிமை எனும் பழிமை நீக்கி தமிழோடு தமிழராய் 'நேர்மையாய் நெறிவாழ்வீர்' என்று அறிவுறுத்துகிறார் பாவலரேறு.

[இப்பாடல் **ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே!** — என்றே ஐயா அவர்களால் தலைப்பிடப் பெற்றிருந்தது. முன்னரே (இத்தொகுப்பில் 62-ஆம் பாடல்) ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே!—என வேறொரு பாடலுக்குத் தலைப்பிட்டிருப்பதால் இப்பாடலின் தலைப்பு இன்னபடி மாற்றப் பெற்றிருக்கிறது.]

162. மாபெரும் தமிழ்ப் பேரினம் அழிந்து கொண்டுள்ளதே, இளைஞர்களே இழிவாய்ப் போகாதீர், குன்று மண் ஆனதாய்க் குன்றி போதல் வேண்டாம்! கேடுகள் சாய்க்க, பைந்தமிழ் நாடு மீட்க வாருங்கள் என அழைக்கிறார் ஆசிரியர்.

163. 'தடா'க் கொடுஞ்சட்டத்தின் கீழ் நம் பாவலரேறு ஐயா அவர்கள் சிறைப் படுத்தப்பட்டபோது எழுதியது இப்பாடல்.

தமிழினத்தின் அடிமை நிலையினை விளக்கியதோடு, தம்மின் உறுதிநிலைபோல் ஆயிரம் பேரேனும் இருப்பாராயின் தமிழினம் விழித்தெழுமே என்கிறார் பாவலரேறு.

164. இப்பாடலும் 'தடா'ச் சட்டத்தின்கீழ்ச் சிறைப்படுத்தப்பட்டபோது எழுதப் பெற்றதே.

சுரண்டிக் கொழுக்கும் உடம்பொடும், 'சொகுசு' வாழ்வொடும் மக்களை வாட்டி வதைக்கும் செயலலிதா தமிழினத்தை அழிக்கின்ற கொடுமையை விளக்குகிறது இப்பாடல். 'தடா'க் கொடுஞ்சிறையில் தாம் அடைக்கப் பட்டாலும் அது தம்மை எதுவும் செய்திட இயலாது என்று சூளுரைக்கிறார் பாவலரேறு.

165. எதையும் பெரிதாய் எழுதிடாமல், ஈகம் செய்திடாமல், சில நூல்கள் எழுதிப் பேரறிஞரெனச் சிலுப்பிக் கொண்டிருக்கும் நாம், உள்ளுக்குள் நாறுகின்றோம்; பொய்ம்மையாய்ப் பெருமை கொள்ளத் துடிக்கின்றோம். நிலைப்பதற்கென்ன செய்துவிட்டோம் — என வினாவெழுப்புகிறார் பாவலரேறு.

166. 'திராவிடர்' என மயங்கித் தமிழர் தம்மை இழந்த வரலாற்றை விளக்குகிறது இப்பாடல்.

167. இந்தித்திணிப்பு, இந்தியர் ஆளுமை, ஆட்சியர் போலிமை — இவற்றின் கொடுமைகளை விளக்கித் தமிழ இளைஞர்கள் விழிப்படைய வேண்டிய கடமைகளை விரித்துரைக்கிறார் பாவலரேறு. சாகவே எனினும் ஒழுங்குறச் சாவோம் — எனத் தமிழினத்தை ஒழுங்குப்படுத்தும் இறுதி எச்சரிக்கை இது.

168. செயலலிதா ஆட்சியில், ஆட்சியர் செய்யும் அட்டூழியங்களுக்கிடையில் உய்யுமோ நாடு என்று கவலை கொள்கிறார் ஆசிரியர்.

169. நம் ஐயா பாவலரேறு அவர்களால் கொண்டுவரப் பெற்ற தென்மொழி கடைசி இதழில் (சுவடி : 27, ஓலை : 8) வெளிவந்த ஐயா அவர்களின் அட்டைப்பாடல் இது.

170. கட்சி பற்றியும், தமிழ்ப் புலமை பற்றியும், சாதி மதம் பற்றியும் கதைக்கின்றோம் — தமிழின நலம் சிதைக்கின்றோம் என வருந்திப் பாடியது இப்பாடல்.

[இப்பாடல் ஐயா அவர்களின் எழுது அட்டையில் இருந்தது. அவர்களின் மறைவுக்குப்பின் வெளியிடப்பெற்றது.]

# கனிச்சாறு இரண்டாம் தொகுதி

## பொருளடக்கம்


| பாடல் எண் | பாடல் | பக்க எண். |
| --- | --- | --- |
| 1. | போர்ப் பாட்டு! | 1 |
| 2. | நமக்கோர் ஏவல்! | 2 |
| 3. | பாவலர்களுக்கு! | 3 |
| 4. | தமிழ்க்குலமே! | 4 |
| 5. | இருட் பூங்குயிலே! | 6 |
| 6. | அஞ்சாதீர்! | 7 |
| 7. | ஆர்த்திங்கு வம்மினோ! | 8 |
| 8. | உருவொன்று திருவாறு! | 10 |
| 9. | நாடு மறப்பரோ? | 11 |
| 10. | உய்வோம் வாரீர்! | 12 |
| 11. | வானம்பாடி! | 14 |
| 12. | தமிழ்த்திறம் பொறிப்போம்! | 16 |
| 13. | தமிழர் எழுச்சிப் பத்து! | 17 |
| 14. | தமிழா, நீ எங்கே? | 22 |
| 15. | கடலே, சீறாயோ? | 23 |
| 16. | செய்குவீர் இன்றே! | 24 |
| 17. | வாழ்கின்றாரே! | 25 |
| 18. | இனங்கொல்லி! | 26 |
| 19. | எவரோ அவர் தமிழர்! | 26 |
| 20. | இற்றைத் தமிழக நிலை | 27 |
| 21. | நினைவுத் துயர். | 29 |
| 22. | அடிமை வாழ்வு எத்தனை நாள்? | 31 |
| 23. | எழுந்தது மறவர் கூட்டம்! | 32 |
| 24. | தமிழர் விழிப்படைக! | 32 |
| 25. | எழுவாய் நெஞ்சே! | 33 |
| 26. | குரங்கு வாயில்! | 36 |
| 27. | தமிழ்த் தொண்டர்க்கு...! | 38 |
| 28. | தமிழ் காக்க இணைவீர்! | 39 |
| 29. | கண்ணீர் வரி! | 44 |
| 30. | தமிழ் உருவில் தமிழ்ப் பகைவர்! | 47 |
| 31. | துன்பம் தொடர்க! | 48 |
| 32. | பகையே விலகுக! | 52 |
| 33. | அடிமைக் கூட்டம் | 52 |
| 34. | தமிழ் வளர்ப்பார்! | 53 |

| பாடல் எண் | பாடல் | பக்க எண். |
|---|---|---|
| 35. | எழுதிப் பிழைக்கும் இடக்கர்! | 53 |
| 36. | தமிழனுக்கு ஒப்பாரி! | 54 |
| 37. | கவல் கொள்ளாரே! | 58 |
| 38. | பழிபறித்துண்பார்....! | 59 |
| 39. | தமிழா, ஒன்று செய்! | 59 |
| 40. | போலித் தமிழ்த் தொண்டர்! | 60 |
| 41. | ஒரு துளிக் கண்ணீர்! | 63 |
| 42. | பூக்கட்டும் தமிழருளம்! | 69 |
| 43. | ஆர்த்த முரசே அறை! | 71 |
| 44. | மானக்கொடி ஊன்றுக! | 71 |
| 45. | நெஞ்சு இனிக்குமா? | 72 |
| 46. | அரசியல் குழப்பம்! | 72 |
| 47. | என்னென்று சொல்வோம்? | 73 |
| 48. | தானே அழியும் தமிழன்! | 74 |
| 49. | தமிழர் திறம்...! | 75 |
| 50. | பாரதிதாசனுக்குப் பா மடல்! | 76 |
| 51. | ஒற்றுமை பூக்காது! | 79 |
| 52. | தமிழரிடை உணர்வுண்டோ? | 79 |
| 53. | கூற்றை விளித்தனரோ? | 80 |
| 54. | ஓ! திரைப்படக்காரரே! | 81 |
| 55. | திருவள்ளுவர் விழாவா...? | 92 |
| 56. | இறுதிப் போர்! | 93 |
| 57. | பாய்புலியே! எங்கே உன் சீற்றம்! | 94 |
| 58. | புறப்பட்டாய், நீ! | 97 |
| 59. | அன்புத் தமிழனே! | 98 |
| 60. | விடுதலை பிறக்கும்! | 99 |
| 61. | ஓ! தமிழ் மாந்தனே! | 100 |
| 62. | ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே! | 101 |
| 63. | தமிழ்க்குலமே தெளிக! | 102 |
| 64. | செயலுக்கு முன் வருவோம்! | 103 |
| 65. | பொய் சாகும்; மெய் வெல்லும்! | 104 |
| 66. | கருத்தை மாற்றுவீர் புலவர்களே! | 105 |
| 67. | உயர்வடைதல் என்றோ? | 106 |
| 68. | அயல் நாட்டில் வாழ்கின்ற தமிழர்க்கு...! | 106 |
| 69. | .....!!! ......??? | 110 |
| 70. | எம்மோர் அரசமைத்த முரசொலிக்கும்.......! | 111 |
| 71. | வாழ்க தமிழர்கள்! வாழ்க தலைவர்கள்!! | 114 |
| 72. | அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க! | 115 |
| 73. | தமிழ இனமே! தமிழ இனமே! | 117 |

| பாடல் எண் | பாடல் | பக்க எண். |
|---|---|---|
| 74. | என்றைக்கு எழுவாயோ? | 123 |
| 75. | இனியேனும் ஒன்றிணைவீர்! | 125 |
| 76. | இனநலம் பெரிது! | 126 |
| 77. | தமிழ்த் தொண்டர் அறிந்திடுக! | 128 |
| 78. | தமிழர்க்கு விடிவுண்டு! | 131 |
| 79. | எந்தக் கட்சியில் நீ, இருந்தாலும்...! | 133 |
| 80. | சொன்னால் தெரிந்து கொள்வையோ? | 134 |
| 81. | தமிழிளைஞர் வீறுகொள்க! | 135 |
| 82. | சாதிப்புழுக்கள் நெளிந்திடும் சாணித் திரளைகள் நாம்! | 136 |
| 83. | செங்கதிர் புலர்ந்தது செந்தமிழ் வானில்! | 138 |
| 84. | அடிப்படையை விளைவிக்க! | 139 |
| 85. | ஏற்றம் புதுக்கிட வாருங்களே! | 139 |
| 86. | வாழ்வே இலை வீழ்வே என வருவாய் தமிழ் மகனே! | 141 |
| 87. | தொண்டுக்குத் துணையாக வந்தவர்! | 142 |
| 88. | எனக்கென எதுவுமில்லை! | 144 |
| 89. | இருப்பினும் ஒருகை பார்த்திடலாம்! | 145 |
| 90. | தனியேனாய் நின்றாலும் என்கொள்கை மாறேன்! | 146 |
| 91. | ஆயிரம் பேர் சேர்ந்தால் அனைத்தும் நடக்கும்! | 148 |
| 92. | ஆரியர் விழுது! | 150 |
| 93. | நாட்டின் கீழ்நிலைக்குக் கரணியமாவார் எவர்? | 151 |
| 94. | இற்றைத் தமிழனின் இழிநிலை! | 152 |
| 95. | இதுதான் தமிழ்நாடு! இவன்தான் தமிழன்! | 153 |
| 96. | உறவினால் அழிவதை உயர்வெனக் கருதுவேன்! | 154 |
| 97. | தமிழர் முதலில் தம் இனம் காக்கவே! | 155 |
| 98. | கதவு திறந்தது! | 156 |
| 99. | பழந்தமிழ் இனமே! பழந்தமிழ் இனமே! | 157 |
| 100. | சோற்றிடை மானம்! | 158 |
| 101. | எந்த அளவுகோல் கொண்டே அளப்பது? | 159 |
| 102. | இனக்கொலைக் கொடியனை ஏனிங்குப் பெற்றனை? | 160 |
| 103. | எந்தத் தலைமுறை எழுந்து நிற்பானோ? | 161 |
| 104. | என்ன செய்குவது? இவர்களைத் தேர்விரே! | 162 |
| 105. | வழியைப் பற்றி வருவாய்! | 163 |
| 106. | இன்றுள்ள நிலையில் எவ்வகைத் தொண்டும் பயனளிக்காது! | 164 |
| 107. | நலிந்துவரும் தமிழினத்தின் நலங்காப் போமே! | 165 |
| 108. | வெடிக்கின்ற புரட்சிக்கு வித்திடுக! | 166 |
| 109. | வேதியர் கொள்கையை வேரறுக்கு முறை! | 167 |
| 110. | வந்து கூடுவீர் தமிழ் மக்காள்! | 168 |
| 111. | 'இந்து மதம்' எனும் இழிமதம் ஒழிக! | 169 |

| பாடல் எண் | பாடல் | பக்க எண். |
|---|---|---|
| 112. | எரிந்து சாம்பலாகட்டும்! | 171 |
| 113. | கெடுதலை உலகம்! | 172 |
| 114. | புதுமைக் கனவுகள்! | 173 |
| 115. | பற்றி எரியட்டும் தீ! | 174 |
| 116. | செந்தமிழர் இறுதிநிலை! | 176 |
| 117. | மொழி, இனம், நாடு! | 177 |
| 118. | பெரியார் விதைத்தவை நச்சு விதைகள் என்றால், பார்ப்பனர் விதைத்தவை என்ன விதைகள்? | 178 |
| 119. | வீரப்பன் வாயடங்க வேண்டும்! | 183 |
| 120. | வருந்துழல் நெஞ்சமே! | 186 |
| 121. | மெச்சும் பெரும்பணி! | 186 |
| 122. | மூச்சுள்ள வரைக்கும் உலகத் தமிழின முன்னேற்றம் ஒன்றே பேசுவேன்! | 187 |
| 123. | கொடும் வறட்சி உற்றதுவோ நல்லறிவு செயற்கே! | 188 |
| 124. | பெரியாரையும் பாவேந்தரையும் பட்டிமன்றத்திற்கும்—பாட்டரங்கத்திற்கும் மட்டுந்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமா? | 189 |
| 125. | என்னினும் என்ன, இன்று இவர்கள் அடிமைகள்! | 190 |
| 126. | இன்றுதான்—அதுவும்—ஒன்றுதான்! | 192 |
| 127. | ஓச்சுங்கள் தோழரே கைகளை வானில்! | 193 |
| 128. | தமிழ நெஞ்சே! | 194 |
| 129. | என்று நினைப்பாயோ? | 197 |
| 130. | இவர்க்கிடையில் வரும்விளைவு தழைப்ப தென்றோ? | 198 |
| 131. | அரசியலைச் சாராமல் இனவியலால் ஒன்றுபடுக! | 199 |
| 132. | வெற்றிக்குப் பலகோணம் உண்டாம் கண்டீர்! | 200 |
| 133. | நட்பும் பகையும்! | 201 |
| 134. | குற்றச்சாட்டாம், நடவடிக்கைகளாம்! | 202 |
| 135. | உவர்நிலத்து உப்பல்லால் நெல் ஒருபோதும் விளைவு ஆகாதே! | 203 |
| 136. | பாடுகொள நல்லிளைஞர் பாய்வீர் இன்றே! | 204 |
| 137. | வருங்காலம் தமிழர்க்கே! | 205 |
| 138. | உண்மையினை உணருவீரே! | 206 |
| 139. | ஊக்கம் இழக்க வேண்டாம்! | 207 |
| 140. | புதுமைப் புரட்சியை மக்கள் தொடங்குக! | 208 |
| 141. | மொழியுணர்வு தோன்றாமல் இனவுணர்வு முகிழ்ப்பதில்லை! | 209 |
| 142. | வெற்றி காண்போம்! | 210 |
| 143. | சோற்றில் நனைந்தனரே — அட, தொன்மை தமிழ்மக்களே! | 211 |

| பாடல் எண் | பாடல் | பக்க எண். |
| --- | --- | --- |
| 144. | இருப்பவர் கலைஞரே! வடபுயல் சுவர், அவர்! | 212 |
| 145. | புதுமுரசு இனவொலி எழுப்பட்டும்! | 213 |
| 146. | தமிழுணர்வில்லாத பிறவிகளைப் போற்றாதீர்! | 214 |
| 147. | வீரராய் நிமிர்ந்து இனப்பணி ஆற்றுவீர்! | 215 |
| 148. | கட்சியரசியல் ஒழிகவே! | 216 |
| 149. | தூய்தமிழ்க்கும் இனத்திற்கும் தொண்டாற்றும் அன்பரெவர்? | 217 |
| 150. | வீறுற்று எழுவீரே! | 218 |
| 151. | நினைக்கின்றேன்; நினைக்கின்றேன்; நெஞ்சு புண்ணாகின்றேன்! | 219 |
| 152. | அய்யாவே பாவேந்தே! | 220 |
| 153. | விளைவு எங்கே? வீரம் எங்கே? | 221 |
| 154. | இந்தியா என்றால் பார்ப்பனீயமும் முதலாளியமும்! | 223 |
| 155. | சிறை வைப்பதால் ஆட்சியின் குறைகள் சீராகிப் போகுமா? | 224 |
| 156. | ஊக்கம் இழக்கச் செய்யாதீர்! | 226 |
| 157. | அடிமை மீட்குவோம்! | 227 |
| 158. | சட்டிக்குத் தப்பி, நெருப்பில் வீழ்ந்தது தமிழகமே! | 229 |
| 159. | செயலலிதாவே! செயலலிதாவே! | 230 |
| 160. | தமிழ்நாட்டு ஆட்சி! | 231 |
| 161. | நேர்மையராய் நெறிவாழ்வீரே! | 232 |
| 162. | பைந்தமிழ் நாடு! பழம்பெரும் நாடு! | 234 |
| 163. | தமிழினம் விழித்தெழுமே! | 235 |
| 164. | ‘தடா’கை அரக்கியே! | 236 |
| 165. | நிலைப்பதற்கு என்ன செய்துவிட்டோம்? | 237 |
| 166. | வெல்லாத ஆரியர் வென்ற கதை இது! வீரத் தமிழினம் வீழ்ந்த இழிவிதே! | 238 |
| 167. | எந்தமிழ் இனத்திற்கு இறுதி எச்சரிக்கை! | 239 |
| 168. | உய்யுமோ நாடு, இவ் உலுத்தர் ஆட்சியிலே! | 244 |
| 169. | புழுவுற நலிந்து புன்மையுற் றொழிக! | 245 |
| 170. | கதைக்கின்றோம் நலம் சிதைக்கின்றோம்! | 246 |

# இன எழுச்சி
## பாடல் முதல் குறிப்பு அகர வரிசை


| பாடல் | பாடல் எண். |
|---|---|
| அடக்கி ஒடுக்கிடப்பட்ட | 114 |
| அடியெடுத்த ஆரியரால் | 44 |
| அந்த நன்னாள் | 70 |
| அய்யாவே பாவேந்தே | 152 |
| அரசியலைச் சாராமல் | 131 |
| அரசியலைச் சார்ந்தோர்கள் | 149 |
| அரும்பைந்தமிழ் | 40 |
| அழுது அழுது | 167 |
| அன்புத் தோழனே | 59 |
| அன்புள்ள பாவேந்தே | 50 |
| அன்று தொடங்கி | 61 |
| ஆக்கம் இழைக்க | 156 |
| ஆடினை ஆயிரம் | 56 |
| ஆட்சி செய்யும் அரம்பர் கூட்டம் | 168 |
| ஆரங்கே தமிழ்மகனா | 14 |
| ஆரியப் பார்ப்பான் | 72 |
| ஆரியர்க்குப் பாய் விரித்தாய் | 39 |
| ஆர்த்த முரசொடு | 32 |
| ஆயிரத்தின் மேலொரு | 165 |
| ஆளுக்கொரு வண்ணக்கொடி | 170 |
| இதுதான் தமிழ்நாடு | 95 |
| இந்தத் தமிழன் | 103 |
| இந்தத் தலைமுறையில் | 109 |
| இந்திய ஆட்சியென்றால் | 154 |
| இந்து மதமெனும் | 119 |
| இமைமூடி உறங்குகின்ற | 22 |
| இருந்து பார்த்தால்தான் தெரியும் | 155 |
| இளைத்துள்ள தமிழ் நெஞ்சே | 25 |
| இற்றைத் தமிழனின் | 94 |
| இற்றை நாள் தமிழகத்திழிநிலை | 20 |
| இற்றை நாள் தமிழிளைஞர் | 81 |
| இன்றுதான் அதுவும் ஒன்றுதான் | 126 |
| இன்று வந்த இருபது மடல்களுள் | 41 |
| இன்றைக்கே எழாமல் | 74 |
| இன்னமும் எத்தனை யாண்டுகள் | 57 |
| உடல் நரம்பில் தமிழ்க்குருதி | 23 |
| உரிமைக் கிளர்ச்சியால் | 124 |
| உரிமையெனும் மெய்க்கொள்கை | 58 |

| பாடல் | பாடல் எண். |
|---|---|
| உய்வடைந்து தமிழ்மொழியும் | 151 |
| உளந்திரிந்து சொல்திரிந்து | 123 |
| உள்ளங் கொதித் தெழுவீர் | 6 |
| ஊக்கமிழக்க வேண்டாம் | 139 |
| ஊருக்கொன்றாய் | 84 |
| ஊழிபெருகி | 62 |
| எங்குமுள பரம்பொருளை | 63 |
| எங்கும் தமிழர்கள் | 83 |
| எங்குப் பிறப்பினும் | 82 |
| எதனைக் காவாவிடினும் | 97 |
| எதையெதையோ பேசுகின்றார் | 67 |
| எத்தகையார்க் குழைத்தாலும் | 24 |
| எந்தக்கட்சியில் நீ இருந்தாலும் | 79 |
| எந்தமிழர் அரசேற்றார் | 45 |
| எந்தமிழர் மொழி நலத்தை | 77 |
| எந்தமிழ்க்குப் பிறராலே | 18 |
| எல்லாரும் மக்களுக்கு | 101 |
| எனக்குத் தெரியும் | 89 |
| எனக்கென எதுவுமில்லை | 88 |
| என்று நினைப்பாயோ | 129 |
| என்னருந் தலைவர்கள் | 104 |
| ஏழுகோடித் தமிழர்கள் | 71 |
| ஏளனப் படுத்துவர் | 147 |
| ஐயோ தமிழ்மகனே | 36 |
| ஓச்சுங்கள் தோழரே | 127 |
| ஓ! திரைப்படக்காரரே | 54 |
| கதவு திறந்தது | 98 |
| கதைபேசி | 75 |
| கருக்கும் வெயிலினில் | 76 |
| கள்ளச்சாராயம் விற்கும் | 160 |
| காடு புகுந்தவராயினும் | 19 |
| கால மாமுகில் | 8 |
| காலம் மாறியது | 66 |
| குற்றச்சாட்டாம், நடவடிக்கைகளாம் | 134 |
| கூர்த்தமதியுடையார் கூடி | 43 |
| கெடுதலை நிரம்பிய உலகமிது | 113 |
| கையடி காட்டி | 38 |
| கொட்டிடு குப்பை நிறைவதுபோல் | 64 |
| சாதிநிலை வேரறுத்து | 110 |
| சாதிப்பேய் அழிந்துவரும் | 108 |
| செகப்பிரியர் மில்டனெனும் | 69 |
| செந்தமிழை எண்ணிச் செயற்படுக | 116 |
| செந்தமிழ்த் தாயே | 102 |
| செயலலிதாவே செயலலிதாவே உய்யவந்த | 159 |
| செயலலிதாவே செயலலிதாவே மயல்விலை | 169 |

| பாடல் | பாடல் எண். |
|---|---|
| செய்தியிதழ் நடத்துகின்ற | 106 |
| சொன்னால் தெரிந்துகொள்வையோ | 80 |
| 'தடா' எம்மை | 165 |
| தட்டுத் தடுமாறி | 142 |
| தண்டமிழ்த் தாய்பெறும் துன்பத்தினும் | 85 |
| தமிழ இனமே தமிழ இனமே | 73 |
| தமிழும் திரிந்து | 168 |
| தமிழரிற் சிலருடை உள்ளமே | 49 |
| தமிழரே என்றனைத் தாழ்த்தினும் | 96 |
| தமிழர்களே எனைத் தாழ்த்தி | 90 |
| தமிழனைப் பிறர் யாரும் | 48 |
| தமிழினத்தின் ஒருசாரார் | 130 |
| தமிழினத்தீர் | 68 |
| தமிழுணர்வில்லாமல் | 121 |
| தமிழ் உருவில் தமிழ்ப் பகைவர் | 30 |
| தமிழ்த்தாய் பெறும் துயரைவிட | 86 |
| தமிழ்நாட்டினிற் பிறந்தெழுந்து | 161 |
| தமிழ் நாட்டை | 10 |
| தமிழ்ப்பகை ஆயிரம் | 53 |
| தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் | 146 |
| தம்மை முழுமையாய் | 133 |
| தனித்தமிழ் நாட்டினிற்கு | 12 |
| தனித்திருந்த செந்தமிழ்த்தாய் | 15 |
| திரவிடத்தின் மக்கட்கு | 2 |
| திருக்குறள் பிறந்திரண்டாயிரம் | 55 |
| திரைப்படமும் அரசியலும் | 153 |
| துறக்க மென்பார் | 47 |
| துன்பம் இருக்கும் | 87 |
| தெருச்சண்டை போடுகின்ற | 148 |
| நயங்கூர் உரைகள் | 34 |
| நரிமை மனங்கொண்டவர் | 150 |
| நல்ல மனம்பல தேவை | 91 |
| நல்லறிவு செயலாக | 132 |
| நாடென்பார், மொழியென்பார் | 92 |
| நாட்டுக்கு நன்னிலை | 93 |
| நாயடிமை செய்பவராய் | 33 |
| நெடுங்காலம் முன்பே | 137 |
| நெருப்பினில் தமிழினம் | 144 |
| நைந்தவர் உய்வதற்கும் | 11 |
| பழந்தமிழ் இனமே | 99 |
| பழியகல் உளநலம் | 21 |
| பழுதுற நூற்கள் பதித்திடுவாரும் | 35 |
| பற்றி எரியட்டும் தீ | 115 |
| பனியும், மாமழையும் | 128 |
| பாடலில் உரையினில் | 157 |

| பாடல் | பாடல் எண். |
|---|---|
| பாட்டெழுதிக் கைசோர்ந்தோம் | 31 |
| பாதிப்பேர் தமிழினத்தில் | 134 |
| பாப்புனைய வல்லார் | 3 |
| பார்ப்பனர் நால்வர் சேர்ந்தால் | 78 |
| பிடிக்கட்டும் பிடிக்கட்டும் | 163 |
| பூக்கட்டும் தமிழருளம் | 42 |
| பெற்ற தமிழ் நாட்டை | 28 |
| பைந்தமிழ் நாடு | 162 |
| பொய் சாகத்தான் சாகும் | 65 |
| மக்களுடை எழுச்சியெலாம் | 138 |
| மட்டென்று செந்தமிழை எண்ணி | 27 |
| மதத்தைப் போற்றும் | 111 |
| மனுநூல் | 112 |
| முத்துக் கொழித்ததும் | 16 |
| முந்தையொரு பழம்பொழுதில் | 29 |
| முரசே முழங்குக | 1 |
| முழங்கி முழங்கி | 145 |
| முள்மயிர் மூடிய | 118 |
| முற்றும் மதிகெட்ட | 51 |
| முன்னந் தோன்றிய | 125 |
| முன்னம் பிறந்து சொன்முதிர்ந்து | 13 |
| முன்னவை முழக்கி | 5 |
| முன்னர் இருந்தவர் | 4 |
| மூச்சுள்ள வரைக்கும் | 122 |
| மூன்று கடல்களின் | 9 |
| மொழி, இனத்தைக் காவாமல் | 142 |
| மொழி, இனம், நாடு | 117 |
| மொழிக்கும் இனத்திற்கும் | 120 |
| மொழித் தெளிவும் பெறமாட்டீர் | 46 |
| மொழியிலையேல் இனமில்லை | 107 |
| மொழியின்றி இனமில்லை | 136 |
| மொழியுணர்வு தோன்றாமல் | 141 |
| வடவர்க்கும் பார்ப்பனர்க்கும் | 60 |
| வட்டிக்குத் தேம்பி | 158 |
| வம்மின் தமிழ்ப்புலவீர் | 7 |
| வரிமணல் தென்துறை | 26 |
| வருவீர் தமிழரீர் | 100 |
| வானளாவிய செந்தமிழ் | 140 |
| வானும் கதிரும் | 105 |
| வான்முட்டப் பேசுகின்றார் | 52 |
| விழியிருக்கும் இருசுடராய் | 17 |
| வெட்டுகின்ற வெட்டொன்றாய் | 37 |

# இள எழுச்சி

1

# போர்ப் பாட்டு!

முரசே முழங்குக! முரசே முழங்குக;
முரசே முழங்குக, நீ!
அரசே செந்தமிழ் அரசே வாழ்கென,
முரசே முழங்குக, நீ! 1

சங்கே ஊதுக! சங்கே ஊதுக!
சங்கே ஊதுக, நீ!
எங்கோ மூவர் ஏற்றிய தமிழெனச்
சங்கே ஊதுக, நீ! 2

பம்பை பம்புக! பம்பை பம்புக!
பம்பை பம்புக, நீ!
எம்பைந் தமிழர சோச்சுக என்றே
பம்பை பம்புக, நீ! 3

கொம்பே அலறுக! கொம்பே அலறுக!
கொம்பே அலறுக, நீ!
எம்பே ரிசைத் தமிழ் எங்கணும் முழங்கிடக்
கொம்பே அலறுக, நீ! 4

கரடிகை உறுமுக! கரடிகை உறுமுக!
கரடிகை உறுமுக, நீ!
நெருடர் நுழைக்கும் வடமொழி விரட்டிடக்
கரடிகை உறுமுக, நீ! 5

முழவே முரலுக! முழவே முரலுக!
முழவே முரலுக, நீ!
கழலணி மறவர்கள் விறல்பெற நடந்திட
முழவே முரலுக, நீ! 6

பறையே பிறங்குக! பறையே பிறங்குக!
பறையே பிறங்குக, நீ!
பொறையே கொண்டவர் பொங்கிடில் தீதெனப்
பறையே பிறங்குக, நீ! 7

உறும்பே கறங்குக! உறும்பே கறங்குக!
உறும்பே கறங்குக, நீ!
உறும்பே ரிடும்பினும் உணர்வுளோம் யாமென
உறும்பே கறங்குக, நீ!

-1952

## 2 நமக்கோர் ஏவல்!

திரவிடத்தின் மக்கட்குத் தீந்தமிழின்
ஆற்றல்தான் அவர்தம் மூச்சு!
திளைக்காத வெற்றிக்குச் சொல்லேதான்
அவர்கையுள் வாளின் வீச்சு!
கருவிடத்தின் குழந்தையினுக் குடலூற்றில்
விளைத்திடுக தமிழின் ஆவல்!
கனித்தமிழ்க்குத் தொண்டாற்றி மாய்ந்திடுவோம்
என்பதுவே நமக்கோ ரேவல்!

-1951

பாப்புனைய வல்லார்இக் கருத்து தம்மைப்
பதித்திடுக தம்மனத்தில்; கொத்து மாங்காய்த்
தோப்பினிலே காத்திருக்கத் தோகை வந்து
தோள் தழுவும் பாட்டாலும், குரங்கு வந்தே
ஆப்பதனில் மாட்டுகின்ற பாட லாலும்
ஆரிங்குப் பயனடைவார்; தமிழின் நாட்டைக்
காப்பதற்கும், ஏழைமக்கள் சிந்து கின்ற
கண்ணீரைப் போக்கவுநற் பாடல் வேண்டும்!

நங்கையரின் மேன்மையெலாம் நவின்றான் கம்பன்;
நாம் வேண்டாப் பாரதத்தைப் புகன்றான் வில்லி;
வெங்கொடுமைப் போர்பற்றிச் சயங் கொண்டானை
விளித்து விட்டோம்; நஞ்சையுண்டு பிறையைக் கொண்ட
கங்கைமுடி யானுடைய புரட்டுக் கண்டோம்;
காணாத உலகத்தைப் புளுகு நூலில்,
இங்கு கண்டோம்; இவையெல்லாம் நமக்கு வேண்டாம்;
இந்நாட்டை மீட்பதற்கே பாடல் வேண்டும்!

செந்தமிழைக் காப்பதற்குப் பாவல் லார்கள்
சேர்ந்தவராய் உயிர்ப்பாக்கள் இயற்றல் வேண்டும்!
'இந்திவரக் கூடாது; வந்தால் நம்மின்
ஏறுமொழி தாழ்ச்சியுறும்' வகையைப் பாடி
விந்தமுதற் கன்னிவரை பரப்பல் வேண்டும்;
விளைவு நம்மின் வெற்றியதா யிருத்தல் வேண்டும்.
இந்தவகை, பாடுதலே பாவல் லார்க்கிங்
கினியதெனத் தெளிந்துமனங் கொள்ளல் வேண்டும்!

கண்ணிடுக்கி, உடல்வளைந்து கன்னந் தாழ்ந்து,
கடுக்கும் வயிற் றுடனிருக்கும் பஞ்சைப் பெண்கள்,
புண்ணிடுப்பில் அமர்ந்தபடி தோலைச் சப்பும்,
புழுக்களது காட்சியுமக் குடும்பம் வாழும்
விண்ணுடுக்கள் சிரித்திடுமோர் குடிலும், இந்த
வெம்பசிக்குப் புறம்பாகித் தங்க மேனிப்
பெண்ணிடுப்பில் வாழுகின்ற குழந்தை தங்கள்
பெற்றிகளும் நம் பாவிற் காணல் வேண்டும்!

ஊற்றருகில் காணுகின்ற இன்பம், கொல்லன்
உலைத்தீயில் அடைகின்ற துன்பம், தென்றற்
காற்றினிலே உடல்தோயும் இன்பம், ஆலைக்
கனலினிலே தீய்கின்ற துன்பம், கன்னற்
சாற்றினிலே உவக்கின்ற இனிமை, நைந்த
சோற்றுநீர் தருகின்றதீமை, என்னுந்
தோற்றங்கள் ஒவ்வொன்றும் பாவலர்க்குத்
தொலையாத கனவன்றோ! தேற்றங் காண்பீர்!

**-1952**

4

## தமிழ்க் குலமே!

முன்னர் இருந்தவர் முத்தமிழ் நாடென
முழக்கியது இதைத்தானே? — பெரும்
மன்ன ரெலாம், உயிர்மானம் கொண்டே, புகழ்
மணந்ததிந் நிலந் தானே?

கன்னல் இளந்தமிழ், கண்ணெனக் கொண்டவர்
காத்தது இம்மொழி தானே? — பல
இன்னல் வளைத்திட, இன்னல் வளைத்திட
இகழ்வதும் இதைத் தானே?

முன்னை இருந்தவர் முரசெர்லி பனிமலை
முகட்டில் ஒலித்த திலையோ? — இங்கு
முன்னிய மரக்கலம் அணிமணி உலகம்
முழுதும் இறைத்ததிலையோ?

அன்னை ஒருத்தி மறத்தியன்றோ? நமை
ஆர்க்கவள் பெற்றெடுத்தாள்? — இளங்
கன்னி நறுந்தமிழ், கன்னி நறுந்தமிழ்
காத்திடுவீர் மறவீர்!

குன்றினைத் தோளெனக் கொள்கை உயிரெனக்
கூறிய(து) ஆர் தமிழா? — போர்
முன்றிற் புறமுது கிட்ட முகத்தினில்
முகம்பட விழித்தவர் யார்?

"சென்று, வென்றால்வரு வேன்;இலை வாள்வரும்;
சிறுவனுளான் அனுப்பு — அவன்
நின்று பட்டான்எனின் நின்னுயிர் அனுப்"பென
நிகழ்த்தியது ஆர் தமிழா?

கூட்டுக்குள் எத்தனை நாள்உயிர் தங்கிடும்
கூட வருவதெவை காண்! — தமிழ்
நாட்டுக் குழைத்திட, நாட்டுக் குழைத்திட
நாட்டமி லார் எவரே?

வீட்டுக் கோராள்வர, வீட்டுக் கோராள்வர
வேண்டுகின்றோம் மறவீர்! — சிறை
காட்டுக் கென்றும்சுடு காட்டுக்கென்றும், மறக்
கழலணி பெறுவோமே!

அற்றைத் தமிழ்க்குலம்! அற்றைத் தமிழ்க்குலம்!
ஆண்ட தமிழ்க் குலமே! — மொழிப்
பற்றை இழந்தனை! பான்மை இழந்தனை!
பகலில் வெருண்டனையே!

ஒற்றைத் தனியவன் ஆயினும் தமிழ்மகன்
உளங்குன் றிடுவானோ? — தனைப்
பெற்றெடுத் தாள்தமிழ்த் தாயெனின், அவள்படும்
பீழை பொறுப் பானோ?

-1954

முன்னவை முழக்கி முதுதமிழ் மொழிதல்,
முத்தமிழ் நாட்டினிற் குழைத்தல்,
சொன்னவை நடத்திச் செயற்படக் காட்டல்,
சூதொழித்தே ஒழுங் கேற்றல்,
மன்னவை அரசிற் குயர்வெடுத் துரைத்தல்,
மக்களை ஒன்றென மதித்தல்,
இன்னவை என்னவர்க் கேற்றவை என்றே
இயம்புக இருட்பூங் குயிலே!

தூயவை எண்ணல், துணிவன துணிதல்,
தூங்கா தொருவினை முடித்தல்,
தீயவை யொறுத்தல், தெளிவுரை கோடல்,
தெரியார்க் கவையெடுத் துரைத்தல்,
ஏயவை ஈதல், எழுத்தறி வித்தல்,
இகழ்வெனப் படுவதை இழித்தல்,
ஆயவை என்னவர்க் கானவை என்றே
அறைவாய் இருட்பூங் குயிலே!

பிரித்தவை கூட்டல், பெண்ணுயர் வாக்கல்,
பீடுற யாங்கணும் நிற்றல்,
சிரித்தவை சிரித்து, நகைப்பவை நகைத்துச்
சீரிதழ் மலர்வன காட்டல்,
செரித்தவை யுண்ணல், செலவினைக் கட்டல்,
சீரெனில் உயிர்தரல் எனவே.
தெரித்தவை என்னவர்க் குரியவை என்றே
தெளிப்பாய் இருட்பூங் குயிலே!

-1952

எடுப்பு

உள்ளங் கொதித் தெழுவீர் — உணர்வு
ஊற்றுப் பெருக்கினைப் போலப் பெருகியே (உள்.)

தொடுப்பு

பள்ளிக் குழந்தைகள் உள்ளத்திலே — குலப்
பாகுபாட் டெண்ணத்தை ஊன்றிடவே
துள்ளிக் குதித்திடும் மண்டைகளை — நூறு
தூளாகச் செய்வதற் கெண்ணங்கொண்டே (உள்.)

பிள்ளைகளைத் தமிழ்க் கிள்ளைகளை — கொடும்
பேய்மனங் கொண்டவர் முன்தொழிலைக்
கொள்ள விளைப்பது நல்லதுவோ — பூணூற்
கூட்டங்கள் செய்திடுந் தீமைகண்டே (உள்.)

பயிர்த் தொழில் செய்பவர் பிள்ளைகளை — மேலே
படிக்க விடாமலே தடுத்ததன் பின்
உயிர்த் தொழில் மருத்துவர் பிள்ளைகளை — உயர்
வொன்றுமில் லாமற்செய் திட்டங்கண்டே (உள்.)

'நீதி மனு'ப்படி சூத்திரர்தம் — மக்கள்
நீசத் தொழில்களைச் செய்திடவும்
வேதியர் செய்திடுந் தீங்கு கண்டு — மிக
வேதனை யோடொன்று கூடிநின்றே (உள்.)

அச்சமுறுத்துவர் ஆட்கொல்லுவர் — பின்பு
ஆறேழு மாதஞ் சிறை கொடுப்பர்
நச்சுத் தனமான தீமை செய்து — தமிழ்
நாட்டாரை மாடுபோ லாக்குமுன்னே (உள்.)

கள்ளவுள்ளத் தோடு காட்டரசை — எங்கும்
காணாத சட்டம் வீண் திட்டங்களை
தெள்ளத் தெளிவுடன் கண்டுவிட்டோம் — இனித்
தீரமுடன் செய லாற்றிடவே (உள்.)

அஞ்சாதீர் அஞ்சாதீர் தோழர்களே — நம்மை
யாள நினைப்பவர் தாமொரு நாள்
பஞ்சாகித் தூளாகிப் போவதுண்டு — நம்மின்
பாதந் தொழுவது உண்டெனவே! (உள்.)

-1953

## 7 ஆர்த்திங்கு வம்மினோ!

வம்மின் தமிழ்ப்புலவீர்!
மாணவரீர்! வல்லுணர்வீர்!
அம்மையீர்! ஆடவரீர்!
ஆர்த்திங்கு வம்மினோ!
செம்மைசேர் வாழ்வைத்,
துலங்கு மணிச்சுடரை,
நம்மை வளர்த்த
நறுஞ்செவிலித் தாய்மணியை,
மம்மர் அறுக்குமொரு
மாமருந்தைச், செந்தமிழ்த்தாய்
தம்மை, வளர்த்துத்
தழையவழி செய்வோமால்!
மும்முறையுஞ் சூளுரைத்தோம்;
மூச்சறுக்க நாந் துணிந்தோம்;
எம்மையருந் தொண்டிற்
கெருவென்றோம்" என்பீரே!

அற்றைப் புகழ்நலன்கள்
அற்றனவென் ஆமாறு
வெற்றுப் புலவோரும்
வெய்ய கொடுவினையும்
கற்றுப் பயன்கொளுவாக்
கல்வி வறல்முறையுஞ்
சுற்றிச் சுழற்றுகின்ற
சாதிச் சுழல்வளியும்
இற்றைத் தமிழகத்தில்
எங்கணுஞ் சீறியெழும்
புற்றரவம் போலப்
புறப்பட்டுச் சூழ்வனகாண்!

எற்றே இனியே
இவைபோகி யாமடியேம்
நெற்றுப் பயிர்ப்போல்
நினைவு முதிர்வதுவே
சீறி வடமருங்கில்
செந்தமிழை மேயவரும்
ஏறி இறங்கு குரல்
இந்தி எனுமொழியும்
ஆறி யடங்கிநின்ற
ஆரியமும் ஆங்கிலமும்
கூறிட்டுச் சாய்க்குங்
கொழுமைத் தமிழுணர்வை
ஏறிட்டுப் பார்த்தே
எழுந்துயர்ந்த வன்குரலாய்
வீறிட்டுப் போருமிட்டு
வேலியிட்டுக் காவாய்
மாறிட்டு நம்முடைய
மானந் தனைவிட்டுச்
சோறிட்டார் தாம் போற்றிச்
சோர்ந்தழிந்து போவதுவோ!

-1955

காலமாமுகில் கடந்து லாவருங்
கதிரினைத் திருக் குறளினை,
ஏறு மாறிலக் கணமு ரைத்ததொல்
காப்பி யன்திரு நினைவினை
கூல வாணிகன் சாத்த னைஇளங்
கோவினை, ஒரு கம்பனை
மேலு மேலும் நினைந் தி, டில்தமிழ்
மிளர்வ தன்றி மறக்குமோ?

கோல மாமலை சென்று வென்றவன்
கொடியி னைத் தமிழ் நெறியினை
நீல மாக்கடல் கடந்து வாணிகம்
நிகழ்த்திய நெடுஞ் சிறப்பினை
ஞால மெங்கணு மாட்சி யேற்றிய
நந்த மிழ்த்தனி மொழியினை
நூலு ரைப்பதை எண்ணி டில்உளம்
உவப்ப தன்றிம றப்பரோ?

பாவ லர்ப் பெரும் பெயர்க ளைத்தீம்
பரண கபிலர்நக் கீரனை
மேவு செந்தமிழ் ஒளவை யை அவர்
மெய்மை வாழ்வினை ஒழுங்கினைக்
காவ லாற்றிய தகையினைத் தமிழ்க்
கழகம் நாட்டிய அரசரை
ஆவல் சேர நினைத் தவர்தமுச்
சகலுங் காலும றப்பரோ?

ஊன்று செந்தமிழ் ஒழுங்கினை, அதன்
உயர்வு விளங்கிடும் வாழ்வினைச்
சான்று கூறிடும் பாட்டி னைச்சீர்
சாலுந் தொகையினைக் கணக்கினை
ஈன்ற தமிழகப் பேற்றி னைஅவை
எடுத்துப் பேசுமே னாட்டினை
ஆன்ற றறிந்த திறத்தி னாருளம்
ஆழ்வ தன்றிம றப்பரோ?

**-1955 (?)**

## நாடு மறப்பரோ?

மூன்று கடல்களின் நடுவி னில்உயர்
முத்த மிழ்த் தனி நாட்டினில்
ஊன்று நிலவளம் மலைவ ளஞ்சுரந்
தூறும் ஆறுகள் பாய்வளம்
ஆன்ற கனிவளம் கான்வ ளம்இவை
ஆக்கங் காட்டிடும் வளிவளம்
தோன்று சிறப்பினை நினைக்கை யில்தமிழ்த்
தூய்மை நெஞ்சம் உவக்குமே!

இல்லை யென்றுளஞ் சோர்ந்த வர்,நாட்
டுயர்வெ ணாமற் கழிப்பவர்,
சொல்லில் வீண்பொழு திறைப்ப வர்நலஞ்
சூம்பி வாழ்ந்திடு மேழையர்
கல்லை ஒளிவிடு பொன்னெ னச்செயுங்
கதைய டிப்பவர் யாவரும்
ஒல்லை உழைத்திடில் உயர்வ ரேநாடு
உய்ய நினைப்பர் மறப்பரோ?

*-1955 (?)*

தமிழ்நாட்டைத் தமிழ்நா டென்னத் தமிழரில்
மறுப்பார் தம்மீ
துமிழுங்கள் காறி! அன்ன உலுத்தரை
உடனே மாய்ப்பீர்!
தமிழ்மக்கள் குடலை உண்டு தமிழர்க்கே
தீங்கு செய்யும்
தமிழனைத் தமிழன் என்று தவறியும்
கூறா தீர்கள். 1

தென்னாட்டுப் பணத்தைத் தூக்கித் தில்லியார்க்
கனுப்பி விட்டே,
பின்னாட்டம் போடு வாரைப் 'பேடி'யென்
றுரைப்பீர்! இன்னும்
சின்னாட்கள் கழித்தன் னாரின் சீட்டினைக்
கிழிப்பீர்! ஆகி
நன்னாட்டைக் காப்பீர்; காத்து நந்தமிழ்
அரசுண் டாக்கீர்! 2

நாட்டினைப் பிரித்தல் தீதென் றியம்புவார்,
தெலுங்கு பேசும்
நாட்டினிற் குரிமை தந்த ஞாயமென்?
நாமெல் லோரும்
கூட்டமிட் டுரைப்ப தென்ன என்பதற்
கெவரும் காணோம்!
ஏட்டினில் எழுதித் தீர்த்தோம்; ஏனென்று
கேட்பார் இல்லை! 3

இந்தியைக் கற்கக் கட்டுப் பாடில்லை
என்றார்; ஆனால்
இந்தியைப் புகுத்து தற்கே இருந்தநா
ணயத்தை மாற்ற,
'மந்திரி' என்பா ரெல்லாம் மடம்பேசி
நிற்பார்; அன்னார்
தொந்தியை வளர்ப்ப தற்குத் தமிழினை
அடகு வைத்தார்! 4

கடந்துள்ள ஆண்டி லெல்லாம் கணக்கிட்டால்
தமிழ்நாட் டார்க்கு,
நடந்துள்ள கொடுமை மிஞ்சும்! நரிகளின்
அமைச்சால், நாட்டில்
படர்ந்துள்ள தீமை, எண்ணப் படுதற்கொன்
னாதே! இன்னும்
தொடர்ந்துள்ள திட்ட மெல்லாம் உமிமூட்டை;
எவ்வா றுய்வோம்? 5

தனியரசு சேர்போம்! அன்றித் தமிழராய்ப்
பொருது மாள்வோம்!
இனியரசு சாரு வோர்கள் ஏய்த்திடு
வார்கள்! நாமும்
முனியாது நின்றால் மாற்றார் மிதிபட்டே
இறந்து போவோம்;
'குனிதொழில் வேண்டாம்' என்ற கொள்கையில்
உய்வோம் வாரீர்! 6

-1956

நைந்தவர் உய்வ தற்கும்,
நலிந்தவர் களிப்பதற்கும்,
பைந்தமிழ் இசையைக் கூட்டிப்
பாடுக வானம் பாடி!
பைந்தமிழ் இசையைக் கூட்டிப்
பாடுங்கால் தமிழர் வாழ
ஐந்துறை முன்னேற் றங்கள்
அறைகின்றேன்; நெஞ்சில் தோய்ப்பாய்!

உள்ளத்தின் உணர்வில், மூச்சில்,
உழைப்பினில், உருவி லெல்லாம்
வெள்ளத்தின் பெருக்கை யொத்து
வெளிப்பட்டு விரைந்து போகிப்,
பள்ளத்தில் தேங்கல் போலப்
பைந்தமிழ் உணர்வு, நெஞ்சைக்
கொள்ளுதல் ஒன்றாம் என்று
கூறுக வானம் பாடி!

கல்லினைச் செதுக்கிக் காட்டிக்
காக்கின்ற கடவுள் என்னும்
புல்லறி வாளர் தம்மின்
பொய்யுரை மாய்ந்து போகி,
சொல்லினில், செயலில், அன்பு
சேர்ந்திட மாந்தர் வாழும்
நல்லறி விரண்டாம் என்று
நாட்டுக வானம் பாடி!

வேதியன் உயிரும், அன்பு
வேளாளன் உயிரும் வேறென்
றோதிய நூல்கள் மாய்ந்தே
உறுதமிழ் நாட்டில் எங்கும்
சாதியின் வேர றுத்துச்
'சரி நிகர் மாந்தர்' என்னும்
சேதியைக் கொளல் மூன் றென்று
நிகழ்த்துக வானம் பாடி!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

எத்தகை யோரும், நாட்டின்
எப்பணி யேனுஞ் செய்க!
புத்துல காக்கு தற்கும்
புதுமுறை வேளாண் மைகள்
சித்திரம், சிற்பம், கல்வி
சீர்ப்பெருந் தொழில்கள் எல்லாம்
நித்தமும் செயல் நான் கென்று
நீ, பாடாய் வானம் பாடி!

திருந்திய நாட்டில் அற்றைத்
தீந்தமிழ் கற்ற வல்லார்
இருந்தமைச் சேற்று மக்கள்
இன்னலந் தேடுங் காலை
அருந்தொழில் நுணுக்கம் காட்டும்
ஆங்கில வல்லார் நின்று
பெருந்துணை செயல்ஐந் தென்று
பாடுக வானம் பாடி!

-1957

# தமிழ்த் திறம் பொறிப்போம்!

தனித்தமிழ் நாட்டினிற் கினி துழைப்போம் — செந்
தமிழரைக் கூவியெம் முடன் அழைப்போம்!
கனித்தமிழ் காத்தெங்கள் உயிர் பிழைப்போம்! — உளக்
கனிவொடும் அறத்தொடும் குலந் தழைப்போம்!

பிறமொழி புகுத்திடும் வழி மறிப்போம் — இதைப்
பித்தர்கள் எதிர்த்திடில் உடல் முறிப்போம்!
பிறவழி அடிமையின் களை பறிப்போம் — நற்
பீடுடைப் பழந்தமிழ்த் திறம் பொறிப்போம்!

பலபடத் திறம்படுங் கலை படிப்போம் — தமிழ்ப்
பண்சிறக் கும்கூத் தியல் நடிப்போம்!
உலகியல் மொழிப்பயன் யாம் வடிப்போம் — இதற்
கூறுசெய் வார்களின் உயிர் குடிப்போம்!

சொல்லிலும் செயலிலும் ஒழுங் கிணைப்போம்! —வளஞ்
சோர்வுடை யாளரைச் சென் றணைப்போம்!
நல்லமைச் சாளர்கள் அர சமைப்போம் — அவர்
நாட்டங்கள் யாவினும் பயன் சமைப்போம்!

-1959

13

## தமிழர் எழுச்சிப் பத்து!

முன்னம் பிறந்து சொன்முதிர்ந்து,
மூத்தோர் யாத்த முத்துறைக்கும்
முதலா யிருந்து, முக்கழகம்
முரலா நின்ற முத்தமிழைத்,
தென்னங் குரவர் முடியேற்றித்
திசையெல் லாம்போய் இசைத்தவுரை,
திளைத்தோர் விரும்பித் தீந்தமிழின்
தேறல் மாந்த விரைந்திங்குப்
பின்னம் பயின்றே உளமுவந்து
பேரும் ஊருந் தாமாகிப்
பிழைப்போ டுழைப்பும் நல்கியதன்
பெருஞ்சீர் மடுத்தும் விழியாமே,
இன்னந் துயிலிற் கிடக்கின்றாய்!
எழுவாய் தமிழா! எழுகவே!
இளமை முதுமை எண்ணாமல்
இன்றே எழுக! எழுகவே! -1

மண்ணும் அரசும் பிறர்க்கீந்து
மணித்தேர் நிறுத்தி வழிநடந்தான்!
மடவோன் ஒருவன் அணிபோர்வை
மயிலுக் கீந்தான் எனுஞ்செயலை,
எண்ணும் போதில் உடல்சிலிர்க்கும்
இருதோள் விம்மும்! கைபுடைக்கும்!
இவையுன் பெருமை! இளந்தமிழா!
இன்றுன் நிலைமை நினைக்கரிதால்!
உண்ணும் பொருட்கும் கையேந்தி,
உடுக்கும் உடைக்கும் உடல்குனிந்தே,
உறையுள் கெட்டும் வழிகெட்டும்,
உடைமை முற்றும் ஒருங்கிழந்தும்,
கண்ணுங் காதும் பொத்தியிரு
கையுங் காலும் நுடங்கினையால்!
களைவாய் தமிழா நெடுந்துயிலும்;
கனன்றே எழுக, எழுகவே! -2

கொடுக்குங் கையால் இரந்துண்பாய்!
குலையா நெஞ்சில் இருள்கொண்டாய்!
குமரித் துறையின் கரைநின்று
குரலை உயர்த்திப் பெரு வாளை
எடுக்குந் தோள்நின் இரு தோள்கள்!
எதிர்க்கும் மார்புன் மணிமார்பு!
இழந்தாய் முற்றும் இன்றேகாண்;
இனமும் மொழியும் நீமறந்தாய்!
படுக்கும் பாயும் நினதில்லை!
பயிலும் மொழியும் நினதில்லை;
பணிவார்க் கின்று நீ பணிந்தாய்!
பழஞ்சீர் முற்றுங் கனவென்றாய்!
நடுக்குங் குளிரில் துணியின்றி
நனைக்கும் பனியில் துயில்கின்றாய்!
நடவாய் எழுந்தே தமிழா!இந்
நாளே எழுக, எழுகவே! -3

ஆர்க்கும் வல்வாய் வழக்கெங்கே?
அரசாள் முரசின் முழக்கெங்கே?
அயலார் எதிர்ப்பின் கனன்றெழுந்தே
அவரே இரப்பின் மடிநிறைய
வார்க்கும் கைநின் இரு கைகள்!
வாங்கல் உண்டே, பிறர்தலைகள்!
வளமும் குன்றித் திறங்குன்றி
வறியோன் எனவே வாழ்கின்றாய்!
சேர்க்கும் பொருளும் நினதில்லை!
செலுத்தும் திறையும் நினதில்லை!
சிண்டைப் பிறர்கைத் தந்தாய்நீ;
சிறுகைத் தாளத் திணைந்தாய்நீ!
போர்க்கும் போர்வை இழுத்திழுத்தே
புரள்வாய் எழுக எழுகவே!
பொன்னிப் புனலில் உடல்குளிக்கப்
போவாய் எழுக, எழுகவே! -4

அயில்வாய் மதிலும், பெருங்கோயில்
அளையும், வாழுங் கலைமுற்றும்
அயலார் கண்டே வியப்பெய்த
அமைத்தாய் உன்றன் திறமெங்கே?
வெயிலும் மழையும் பாராமல்
வெற்பும் கடலும் பலகடந்து
வெளியார் விரும்பும் வாணிகமும்
விளைத்தாய் உன்றன் விறலெங்கே?
பயிலுங் கல்விப் பயன்முற்றும்
பண்பா டெல்லாந் துறந்தாய்நீ!
பழகுந் தமிழும் மறந்தயலார்
பழிசேர் மொழிக்குந் துணைநின்றாய்!
துயிலும் வருமோ? இளந் தோன்றால்!
துள்ளி எழுக எழுகவே!
துலங்கும் உன்றன் பழஞ்சீர்மை
தோன்ற எழுக, எழுகவே! -5

பூக்கும் வளங்கள் முறுவலிக்கும்,
புனல்பாய் நாடு நின்னாடு!
பொழிலுங் காவுந் தடவயல்கள்
பொதியும் பயனும் நின்செல்வம்
தேக்கும் வெதிரும் வான் கமுகும்
தேய்வை, மகிழும், குலைவாழைத்,
தெங்கும், பனையும், அடர்ந்திருக்கும்
திசைதோய் மலைகள் நின்மலைகள்!
தூக்கும் அலைக்கும் போராடித்
துளைக்கும் நீர்க்குள் புகவாங்கே
துதையும் குவைசேர் சிப்பிக்குள்
தூங்கும் முத்தம் நின்முத்தம்!
காக்குந் திறமும் குன்றியிரு
கண்ணுந் திறவாய் எழுகவே!
கரியும் புலியும் நிகர்க்கின்ற
காளை எழுக, எழுகவே! -6

எத்திப் பறிக்கும் பெருங்கூட்டம்
எதிரில் இமையா விழித்திருக்கும்!
இமயப் பொருப்பில் கொடிநாட்டி
இருந்தாய் இன்னுந் துயில்கின்றாய்!
குத்திக் கிழிப்பார் நினதுதிறம்!
கூறாய்ப் பிரிப்பார் உன்னினத்தை!
கூரை பிரித்தே உள்ளிறங்கிக்
கொள்ளை யிடுவார் ஒருபுறத்தே!
கத்திக் களைப்போன் என்குரலுன்
காதுப் பறையைக் கிழிக்கிலையோ?
கள்ளுண் பித்தன் எனவாகிக்
கடுமைத் துயிலுங் கொண்டாய்நீ!
தித்திப் பதுவோ, வல்லடிமை?
தென்னா! எழுக எழுகவே!
தேடாப் பூட்கை மிகக்கொண்ட
திறலாய் எழுக, எழுகவே! -7

பேச்சுந் தடுத்தார்! நீமணந்த
பிறங்கும் புகழைப் பொய்யென்றார்!
பிழையா அரசில் நீவாழ்ந்த
பெருவர லாற்றைக் கதையென்றார்!
மூச்சுந் தடுப்பார்! உன்னினத்தை
முழுதும் அழிப்பார்! தமிழா,வென்
முழக்கம் நின்றன் முழுச்செவிட்டு
மூளிச் செவியுட் புகவிலையோ?
ஓச்சுங் கைவாள் உடனெடுப்பாய்!
உறைந்த குருதிக்(கு) அனல்காய்வாய்!
உண்டால் உரிமை! அதுவல்லால்
உலையாச் சாவை உடனழைப்பாய்!
ஏச்சுங் கேட்டே உறங்குதியே!
இளமைத் தமிழா எழுகவே!
இறவாப் புகழுக் கிலக்கான
ஏறே! எழுக, எழுகவே! -8

கோட்டுக் களிற்றை முகத்தடக்கிக்
கொடுவாய்ப் புலிக்குப் பல்லெடுத்துக்
குவடுங் காவும் மிதித்தெழுந்த
குலமும் புலமும் நினதன்றே!
காட்டுக் குறத்தி மலைமுகட்டைக்
கயிற்றால் தாவி அடைதேறல்
கையாற் பிழிந்து மகற்களிக்கும்
கதையும் வழக்கும் நினதன்றே!
வேட்டுக் குழற்கே அஞ்சுவதோ?
வெற்பா, மலையா, குறவா,உன்
விளையாட் டெல்லாம் போரன்றோ?
வெற்றி நின்தோள் தொடையன்றோ?
மூட்டுக் கொண்ட என்புநிமிர்!
முறுக்கே றட்டும் நின்கைகள்!
மூவா இளமைத் தமிழ்மகனே!
முனைவாய், எழுக, எழுகவே! -9

கறங்குக முரசம்! வெண்சங்கம்!
கரடிகை பம்பை உறுமுகவே!
காட்டுப் புலியே! நீவளர்த்த
கன்னித் தமிழ்க்குன் உயிர்செகுப்பாய்!
பிறங்குக நின்பேர்! திறம்பூண்க!
பெரிதோ பிறன்கை வெண் சோறு!
பிறந்தாய் அன்றே இறந்தாய்நீ!
பேசா அடிமை வாழ்வதுவோ!
இறங்குக உரிமைத் தனிப்போரில்!
ஏடா! இளமைத் தமிழ்மகனே!
இறப்பினும் சுவையோ இழிவாழ்க்கை?
இருகண் மூடிச் செவிமூடி
உறங்குதல் நன்றோ இதுபோழ்தே!
உணர்வாய் எழுக எழுகவே!
ஒட்டாப் போக்கை உடன்வெட்டி
உகுப்பாய்! எழுக எழுகவே! -10

-1959

ஆரங்கே? தமிழ்மகனா? இங்கே வா, வா!
அன்றிருந்த நின்முன்னோர் தொகுத்தளித்த
பேரெங்கே? ஊரெங்கே? பிழைப்பு மெங்கே?
பேச்செங்கே? மூச்செங்கே? விளங்கி நின்ற
சீரெங்கே! சிறப்பெங்கே? முகம் நாணாத
செந்தமிழ்த்தாய் உலாவர நீ செய்து தந்த
தேரெங்கே? வீறெங்கே? இலக்கியஞ் செய்
திறமெங்கே? உரமுற்றும் போன தெங்கே?

கொடையெங்கே? நடையெங்கே? மறவர் ஊர்ந்த
கொல்களிறு சூழ்ந்துவருந் தூவெண் கொற்றக்
குடையெங்கே? படையெங்கே? ஆரங் கென்று,
குரலுயர்த்தி விரல்நீட்டி அயலார்க் கிட்ட
தடையெங்கே? நின்னாணை தவறி னோரின்
'தலையெங்கே' என்பாயத் தருக்கு மெங்கே?
தொடையெங்கே? பாவலர்தங் கூட்ட மெங்கே?
தொல்பெருமை நின்னைவிட்டுப் போன தெங்கே?

வாய்மையெங்கே? அருளெங்கே? சான்றோர் எங்கே?
வான்தடவி முகில்முட்டுங் கலைகள் எங்கே?
தூய்மையெங்கே? ஒழுங்கெங்கே? கணவற் பேணித்
தொல்மறவக் கூட்டத்தை ஈன்று தந்த
தாய்மையெங்கே? பெண்மையெங்கே? தவறு நேரின்
தம்முயிரை வெறுத்தொதுக்கும் மானமெங்கே?
நோய்மையிலாத் திறமெங்கே? உள்ள மெங்கே?
நொடிக்குநொடி தாழ்ந்தமிழ்ந்து போன தெங்கே?

தந்திறனால் அல்லாமல் உயிர்வா ழாத
தாளெங்கே? ஆண்மையெங்கே? நேர்மை யெங்கே?
செந்தமிழ்த்தீம் பாமணக்கும் வாய்கள் எங்கே?
செழும்பாடல் மகிழ்ந்துண்ணுஞ் செவிகள் எங்கே?
சிந்திசைக்கும் தெருக்களெங்கே? பாணர் எங்கே?
சித்துபயில் துறவோர்தம் மறைகள் எங்கே?
மந்திபயில் சோலைகளும் மலைகள் தாமும்,
மறம்பயிலும் களமாகிப் போன தெங்கே?

அன்றிருந்த அறவல்லார் யாத்துத் தந்த
அறமெங்கே? பொருளெங்கே? இன்ப மெங்கே?
குன்றிருந்த விளக்கெனவே உலகோர்க் கீந்த
குறள்நெறிக்கு நடைமாறாத் தமிழன் எங்கே?
இன்றிருந்த நாகரிகப் போலிப் போக்கின்,
இழிநிலைக்கு முடிவெங்கே? விடிவு மெங்கே?
மன்றிருந்த தமிழெங்கே? அதுபோ மாயின்
மறுநொடியில் நானெங்கே? நீதான் எங்கே?

**-1959**

## 15 கடலே, சீறாயோ?

தனித்திருந்த செந்தமிழ்த்தாய் அரசிருக்க,
தகுவேந்தர் நிழற்கீழ்த் தங்கி,
இனித்திருந்த தமிழகத்தை விழுங்கினையே
இருங்கடலே! எவர்சொன் னாலும்
இனித்திருந்தார்; இழிவகற்றார்; இனியுய்யார்;
எந்தமிழர் இந்த நாளில்!
முனித்தெழுந்து சீறாயோ? மூழ்க்காயோ?
முன்வினைக்குக் கழுவா யென்றே?

**-1959**

'முத்துக் கொழித்ததும் யாங்கள் — கடல்
மீதில் மரக்கலம் விட்டதும் யாங்கள்!
சித்துப் பயின்றவ ரெம்மோர் — பெருஞ்
சீருஞ் சிறப்பொடும் வாழ்ந்தவர் முன்னோர்!
மெத்த இலக்கியங் கண்டோர், — என
மேன்மைப் புகழுரை பற்பல கூறி
எத்தித் திரிந்திடு வோரே — இவ்
வேழை இயம்பிடும் நல்லுரை கேட்பீர்!

தாயை அழுதிட வைத்தீர் — அவள்
தண்டமிழ் நாவிற் றுளைபல செய்தீர்;
பேயை அரியணை வைத்தீர் — அவள்
பேசும் இழிமொழிக் காடவுஞ் செய்தீர்;
காயைக் கனியென்று கொண்டீர் — கருங்
கல்லை மலரென்று நுகரவுஞ் செய்தீர்;
ஆயுந் தமிழ்ப்புல வோரை — நகை
யாடி வருகுவீர் ஏதுரை சொல்வேன்?

புன்மை மொழிபல சொல்வீர் — பல
பொய்மைச் செயல்பல நாளுமே செய்வீர்;
மென்மை உளத்தினை விட்டீர் — அறம்
மேவும் பணிகளின் மேன்மை மறந்தீர்;
வன்மைத் திறங்களு மின்றி — நல்
வாழ்வுப் பயன்களும் உயர்வது மின்றி,
முன்மைத் தமிழுரைப் பற்றி — வாய்
முரசறைந் தேசெயல் முற்றுந் துறந்தீர்!

கற்றவ ருஞ்செய லற்றார் — எனிற்
கல்வியில் லாதவர் விளைவெது காண்பார்?
பெற்றவர் காத்திடாப் பிள்ளை — பிறர்
பேணுவ தால்வளர்ந் தோங்கிடல் இல்லை!
பற்றுக் குறைந்தது நாட்டில் — தமிழ்
பண்டைத் திறத்தினில் சிதைந்தது முற்றும்;
உற்ற புலவரை நாடி — தமிழ்
உய்ந்திடும் வகையினுக் கானவை செய்வீர்!

செந்தமி ழேஉயிர் மூச்சு — அதன்
சிறப்பும் உயர்வுமே நம்பெரும் பேச்சு!
செந்தமி ழேஉயர் வாழ்வு — அது
சிதைந்திடில் நாமெல் லவர்க்குமே தாழ்வு!
முந்தை வளம்பல கூறி — வெறும்
மூங்கைச் செயல்பல கூறிடுவோரே,
எந்தமிழ் காக்கமுன் நிற்பீர்! — அதற்
கேற்ற பணிகளைச் செய்குவீர் இன்றே!

-1959

## 17 வாழ்கின்றாரே!

விழியிருக்கும் இருசுடராய்! விளைவிருக்கும்
தமிழகத்தின் வீழ்விருக்கும்!
மொழியிருக்கும் நிலையினையும் முன்னிருந்த
நிலையினையும் எண்ணில், மாற்றார்
பழியிருக்கும்! தூய்தமிழர் நெஞ்சிலெல்லாம்
பதைப்பிருக்கும்! பாழ்மைநீக்க
வழியிருக்கும்! குனிதொழிலால் வயிற்றிருக்கும்
குடல் நிரப்பி வாழ்கின்றாரே!

-1959

## 18 இனங்கொல்லி!

எந்தமிழ்க்குப் பிறராலே வருந்தீங்கும்
இடர்ப்பாடும் எள்ளூக் கென்றால்,
செந்தமிழர் எனக்கூறிச் செருக்கிடுவார்
செயுந்தீங்கு பறங்கிக் காயாம்!
வெந்தழலில் வெந்ததுவும் நீர்வந்து
விழுங்கியதும் போக, எஞ்சும்
செந்தமிழ்நூற் பெருமையெல்லாம் இவர் விழுங்கிச்
செரிக்கின்றார்! இனங்கொல்வாரே!

-1959

## 19 எவரோ அவர் தமிழர்!

காடு புகுந்தவ ராயினும் பண்டைக் கவின்மறந்திந்
நாடு கடந்தவ ராயினும் இப்பெரு நானிலத்துள்
ஓடி யுறைபவ ராயினும் உண்மைத் தமிழ்க்குருதி
ஓடுவ தென்றே யுரைப்பார் எவரோ அவர்தமிழர்!

-1959

இற்றைநாள் தமிழகத் திழிநிலை நினைக்கின்
எரியெனக் கனன்றிடும் நெஞ்சம்;
அற்றைநாள் நினைந்தே அனல்மெழு காகும்;
'ஐயகோ' 'ஓ'வெனக் கரையும்;
பற்றறத் துறந்து விலங்குவாழ் காடே
பதியென நண்ணினும் நண்ணும்!
குற்றுயிர் உடலிற் குடிபெயர்ந் தோடும்!
கொடுநிலை கூறவும் படுமோ? 1

ஆறலை கள்வர் அரசென அமர்ந்தார்;
அறிவிலார் அமைச்சென வுயர்ந்தார்.
வீறிலா நெஞ்சினர் குடிநலங் காக்கும்
வியப்புறு படைஞரா நின்றார்;
கூறுகூ றாக மக்களைப் பகுத்தார்;
கோடியாய்க் குலங்களை வகுத்தார்;
சோறிலா மிகப்பலர் மாண்டிடச், சிலரோ
சூட்டுணா முப்பொழு துண்பார்! 2

வலையுறு மீன்போல் வாய்ந்ததோ ரியக்கம்
வாழ்வெனுஞ் சிறப்படைந் ததுவே!
குலைவுறு முளத்தார் இருவருங் கூடிக்
குடும்பமென் றமைந்துகொள் வாரே!
மலைவுறு தோற்றத் துயர்விலா வுயிரை
மக்களென் றீன்றெடுத் துவப்பார்!
அலைவுறு நோக்கின் விலைமகள் முயக்கம்
அன்பெனத் திகழ்ந்துயர்ந் ததுவே! 3

இழிதகைக் கூளங் குப்பைகள் எழுந்தே
இலக்கிய மெனவுலா வருமே!
மொழிவுயர் வறியா மூடர்க ளெல்லாம்
மூதறி வாளரென் றுயர்ந்தார்:
பழிமிகு பேதையர் புன்மொழி யெல்லாம்
பாடலா உருவெடுத் தனவே,
கழிமடம் பெருகிய பூரியர் தமிழாய்
கணக்கரென் றார்ப்பரிப் பாரே! 4

கட்குடி யுண்டோர் களிப்பெழக் குதித்தல்
கலையினுங் கூத்தினும் படுமே!
வெட்கமில் பெண்டிர் விதிர்விதிர்ப் புறுதல்
வியன்மிகு ஆடலென் பாரே!
ஒட்பமில் மாந்தர் உடுக்கையும் மிடுக்கும்
உயர்நா கரிகமென் றாகும்!
நுட்பமில் லாதார் புல்லுரை யெல்லாம்
நூல்வடி வெடுத்துயிர் பெறுமே! 5

இரவினில் திருடிப் பகற்பொழு தீதல்
ஈகையென் றேத்தவும் படுமே!
கரவுளம் பொய்ம்மொழி கொடுவினை யாவும்
கவின்மிகு செல்வமா விளையும்!
வரவினுஞ் செலவினுங் கொள்ளைகள் நிகழ்த்தும்
வாணிகர் எங்கணுந் திகழ்வர்!
அரவினுங் கொடியார் திருத்தமி லுரைகள்
அரசியல் கட்சிக ளாமே! 6

வாய்மை யொன்றில்லாப் பொய்ம்மைக ளெல்லாம்
வழக்காய் வார்,உரு வெடுத்த!
தூய்மையில் தோயாப் போலிகள் முற்றுந்
துறவியர் துவருடை பூண்ட;
தாய்மையிங் கில்லை! பெண்மையிங் கில்லை!
தனித்திறல் ஆண்மையிங் கில்லை!
பேய்மைகள் யாவும் மக்களென் பெயராற்
பிறந்திவண் திரிவன கண்டீர்! 7

-1962

## 21 நினைவுத் துயர்.

பழியகல் உளநலம் துயரறு உரைவளம்
பயன்மிகு நறுவினைப் பாடிலர்;
வழியறி கிலர்வரு மிழிவுணர் கிலர்;பல
வனப்பினர்; கனப்பினர்; பீடிலர்;
மொழியுணர் விலர்;கலை விழிப்பிலர்; இருள்வழி
முடிக்கிடும் நடையினர்; வீடிலர்;
கழிமிகு களியினர்; நிலைநினைந் துருகியே
கசிந்துளம் குலைந்துடல் வாடுவேன்! 1

தொழிலுயர் வறிகிலர்; தொலைப்புகழ்ப் புரந்திலர்;
துகளறு உறவிலர்; வீம்பினர்;
எழிலறிந் துயர்கிலர்; இனநலம் புரிகிலர்;
இடலிலர்; படுகிடைச் சோம்பினர்;
இழிவறு மிலக்கிலர்; குறிப்பிலர்; உறுப்பிலா
இனத்தினுங் குறைபடச் சாம்பினர்;
கழிகடைப் புன்லினுங் கொடியவர்; நினைந்துளம்
கழன்றுடல் குலைந்துயிர் தேம்புவேன். 2

அணிபெற முழக்குவர்; அவைவழி நடக்கிலர்;
அறிவினர் துயர்நிலைக் கொதுங்குவர்;
திணிவுறுங் கருத்திலர்; தெளிவுறு மறிவிலர்;
திகைவற மொழிகிலர்; பதுங்குவர்;
பணிவுறு மகளிரைப் பழிசெயத் தயங்கிலர்;
பணிக்கொளிந் திருவிழி பிதுங்குவர்;
துணிவுற வெழுதிலர்; பணங்கொளுங் குறியினர்;
துடிப்புற அவர்க்குளம் வெதும்புவேன்! 3

பொலிவுடல்; ஒளியிடை; நறுவிரை; நெளிகுழல்;
புனை பொடி யடிக்கடி பூசுவர்;
வலிவிலர்; உளமிசை வனைவிலர்; நினைந்திலர்;
வகைவகை உணவுண மூசுவர்;
நலிவுறுங் குடும்பினர்; நரம்புறு மகவினர்;
நறுந்தமிழ் மறந்தயல் பேசுவர்;
ஒலிமிகு நகரினர்; அமைதியின் புணர்கிலர்க்
குலைந்துலைந் துளமுயிர் கூசுவேன்! 4

இலக்கிய விழைவிலர்; இலக்கணம் படிக்கிலர்;
எழுத்திலும் உரையிலும் இழிகுவர்;
கலக்குறு மனத்தினர்; கசிதுயர் கருதிலர்;
களவிலுங் கொலையிலும் அழிகுவர்;
துலக்கமில் மணங்கொளத் துடிப்புறு முளத்தினர்;
தொலைகிலாப் பிரிவினால் ஒழிகுவர்;
வலக்கரம்; கரவுளம்; வனைவிலர்க் கிராப்பகல்
வருந்திநெஞ் சழன்றுயிர் கழிகுவேன்! 5

பயனறு வினைசெயப் பலபடக் கரைந்திழி
பகட்டினில் உளமுயிர் கூடுவர்;
வயின்வயின் இளையவர் மடந்தையர் குழுமுவர்;
வரைதுறை யறநகை யாடுவர்;
மயலுற விழிதகை யுரைதருஞ் சுவடிகள்
மலிகடை புகுந்தவர் தேடுவர்;
வியனுறு தமிழக வினைவழி வுறவுளம்
விசிந்துயிர் விசிந்துடல் வாடுவேன்! 6

அறிவியல் உயர்வறிந் தனரென முழக்குவர்;
அடிப்படை உளவுயர் வழிந்தனர்;
பொறியிய லறிந்தன மெனவுரை தருக்குவர்;
புகுபயன் மறந்தொழுங் கொழிந்தனர்;
நெறிமுறை பிறழ்ந்தனர்; மனையறந் துறந்தனர்!
நிலையினில் நொடிநொடி யிழிந்தனர்;
குறியிலர்; பிடியிலர்; துணிவிலர்; வினையிலர்;
குலைவுறு மவர்க்குளம் அழுங்குவேன்! 7

முதுதமிழ் உலவிய முனைப்பொழு திலங்கிய
முழுவளங் குறைவுற வினைப்பயன்
எதுவென அறிகிலன்; இடர்ப்படும் மனத்தினன்;
இலவென அலைகுவன்; நினைப்பிலன்;
மதுமலர்க் குழலியர் — பகைவரின் மனைவியர்,
மறத்தமிழ் அரசரின் குலைப்பினால்
கொதிபெறும் உளத்தொடு கொடுத்தவெங் கொடுசொலோ,
குலைத்தது குலைத்ததென் றரற்றுவேன்! 8

இயல்பழிந் திழிசெயல் விளைத்தமூ வேந்தரின்
இழிவதோ? மறமதோ? நீங்கிலா
மயல்நினை வுளங்கொள மணித்தமிழ்ப் புலவரை
மதித்திடா வினையிதோ? பாங்கிலாச்
செயலுறத் துணிந்தவர் முறைகெட நடத்திடச்
சினந்தநற் றுறவியர் தாங்கலோ?
அயல்நில வரசரின் துயர்பொறா வுரைகளோ?
அழிநிலைக் கடியென ஏங்குவேன்! 9

சமைவுறாச் சமயநேர் மையறுஞ் செயலினால்
சமணரின் மனங்கொதி வுரைகளோ?
இமையவெண் பொருவரை எதிர்ந்தவர் கடந்துகல்
எடுத்துளங் கடுத்தவர் முறைகளோ?
அமைவுரு உளத்தினால் அடுத்தவர் தலைகளை
அடியுறக் களிறிடர் கறைகளோ?
எமையுமிந் நிலத்தையும் இழிபடச் செயுவினை
இவைகொலோ? எனவுளங் கரைகுவேன்!

-1962

## 22 அடிமை வாழ்வு எத்தனை நாள்?

இமைமூடி உறங்குகின்ற விழிமலர்க!
இளைஞர்தம் உணர்வெழுக! எழுக தோள்கள்!
சுமை சுமையாய் அற்றைநாள் சுமந்த புகழ்
நினைத்திடுக! சூடேற்றிக் கொள்க நெஞ்சு!
நமையழிக்க இற்றைநாள் வரும்பகையை
எண்ணிடுக! செந்தமிழ்த்தாய் நலம்போ மாயின்
அமைகின்ற அடிமைவாழ் வெத்தனைநாள்?
ஆர்த்திடுக, தமிழுரிமை காத்தற் கென்றே!

-1963

## 23 எழுந்தது மறவர் கூட்டம்!

உடல் நரம்பில் தமிழ்க்குருதி ஓடாதார்
ஒதுங்கிடுக; ஒருநாளில் மூவேளைக்கே
குடல் நிரப்பும் தொழிலொன்றே பெரிதென்னும்
கோழையர்கள் வழிவிடுக; மடியர்செல்க!
விடல்அரிதா அடிமைநலம் விரும்பிடுவார்
வெருண்டொதுங்கிக் கொள்க;தமிழ் மானங்காக்கும்
அடல்மறவர் வெங்களிற்றுக் கூட்டமென
அலைந்தெழுந்தார்; அவர்நடைக்குத் தடைசெய்யாமே!

**-1963**

## 24 தமிழர் விழிப்படைக!

எத்தகையார்க் குழைத்தாலும், இடுகவென
ஏந்துகையிற் சோற ளிப்பர்;
அத்தகையார் நமக்கென்றும் அரசரல்லர்!
நாமவர்க்கும் அடிமை யல்லர்!
தொத்துகையால் குரங்குக்கு நீட்டுகழி
தோழனன்று! பிறரிந் நாட்டில்
வித்துகையால் விளைவெல்லாம் அவர்க்கன்று!
விழிப்படைக தமிழர் இன்றே!

**-1963**

## 25 எழுவாய் நெஞ்சே!

இளைத்துள்ள தமிழ்நெஞ்சே! எழுவாய்,நீ!
எதன் பொருட்டா யெண்ணி யெண்ணிக்
களைத்துள்ளாய் வருந்தற்க; களிப்புறவே
ஒருவழியைக் காட்டு கின்றேன்;
முளைத்துள்ள தமிழ்ப்பயிரில் மூண்டெழுந்த
களையனைத்தும் முனைந்து நீக்கி
விளைத்துள்ள பசுந்தமிழை விரிவடையச்
செய்யவினை விரும்பு வாயே! 1

அயர்வுற்ற தமிழ்நெஞ்சே! ஆர்த்தெழு,நீ!
அயர்வறுக்கும் ஆறு சொல்வேன்;
உயர்வுற்ற நறுந்தமிழர் உளச்சிறப்பில்
இழிகின்றார்; உழைப்பி லாது
மயர்வுற்ற சிறுசெயலில் மடிகின்றார்;
அன்னவர்க்கு மலைவு நீக்கிப்
பெயர்பெற்ற தமிழகத்தின் பெருமையெலாம்
உணர்வுபெறப் பேசு வாயே! 2

வருந்துகின்ற தமிழ்நெஞ்சே! வருந்தற்க;
வளப்பமுறு வழியு ரைப்பேன்;
இருந்தழிந்த சிறப்பெல்லாம் எடுத்தவர்க்கே
இயம்பிடுங்கால், இனியிந் நாட்டில்
பொருந்திவரா இழிசாதிப் புகைச்சலெல்லாம்,
சமயஞ்சேர் புரைக ளெல்லாம்
திருந்திவரா விடிலழிவு திகழுமென்று
மனங்கொளவே தெளிவிப் பாயே! 3

புகைசேர்ந்த தமிழ்நெஞ்சே! பொலிவுபெறு!
புகழ் சேர்ந்த தமிழ்நி லத்தில்
பகைசேர்ந்த தாழ்சேர்ந்த பழியெல்லாம்
இழிவெல்லாம் பதைக்கக் கூறித்
தகைசேர்ந்த பண்பெல்லாம் உயர்வெல்லாம்
தமிழ் நிலத்துத் தழைக்க வாழ்த்தித்
தொகை சேர்ந்த தமிழ்க்குழுவைத் திரட்டியொரு
துணையாக்கத் துடிப்பா ர் வாயே! 4

நைகின்ற தமிழ்நெஞ்சே! நலிவகற்று;
நலஞ்சேர்க்கும் நடையு ரைப்பேன்;
மெய்குன்ற, நலங்குன்ற, மேலோர்க்குக்
கீழோர்செய் மிடிமை முற்றும்
பொய்குன்றக் குன்றுமெனப் புகட்டி, அவர்
புன்செயலின் புரையை நீக்கி,
உய்கின்ற திறங்கூறி உணர்ந்தொழுங்கில்
உயர்வுறவே உரைசெய் வாயே! 5

வாடுகின்ற தமிழ்நெஞ்சே வனைந்தெழு,நீ;
வாட்டமிலா வகையு ரைப்பேன்!
கூடுகின்ற மாந்தரெல்லாம் உன்னினத்தார்;
அன்னவரின் கூட்டுக் குள்ளே
ஓடுகின்ற குருதிதமிழ்; உணர்வுதமிழ்;
உயிரெல்லாந் தமிழ்;என் றாலும்
ஆடுகின்ற நாகரிக நிழலாட்டம்
அயலாமென் றறிவிப் பாயே! 6

நொடிகின்ற தமிழ்நெஞ்சே! உயர்ந்தெழு நீ!
நோவகற்றும் உளவு சொல்வேன்;
வடிகின்ற தமிழுணர்வில் உயர்வுளத்தைக்
குளிப்பாட்டி வனைவு செய்து,
படிகின்ற இலக்கியநீர் பருகிவரப்
பைந்தமிழ் நாட் டிருள்ம றைந்து
விடிகின்ற ஒளிக்கதிரை விழிகுளிரக்
காண்பமென விளம்பு வாயே! 7

துடிக்கின்ற தமிழ்நெஞ்சே! துள்ளுக,நீ!
துன்பமில்லாத் தோது சொல்வேன்;
அடிக்கின்ற புயற்காற்றும் தமிழானால்
அதையேற்போம்! அயரா மின்னி
இடிக்கின்ற வல்லிடியும் தமிழானால்
இனியதென ஏந்தும் நெஞ்சு!
குடிக்கின்ற கூழெல்லாம் தமிழாயின்
அமிழ்தென்று கூவு வாயே! 8

தத்தளிக்கும் தமிழ்நெஞ்சே! அயர்வகற்று;
தனித்தமிழ்க்குத் தாழ்விங் கில்லை;
முத்தளிக்கும் முழங்குகடல் முப்புறமும்!
முகில்முட்டுங் குன்றும் காவும்!
செத்தழியும் உளத்தினுக்குஞ் செழிப்பளிக்கும்
சிறப்பழியா இலக்கி யங்கள்!
பித்தளிக்கும் தமிழ்நறவு; பிழைப்பளிக்கும்!
பெற்றியெலாம் பிளிற்று வாயே! 9

தேம்புகின்ற தமிழ்நெஞ்சே! தெளிவடைக!
சீர்பரந்த தமிழ்ம னத்தில்
கூம்புகின்ற மொழிப்பற்றில் ஒளிகாட்டிக்
குறைமதியால், அயலார் தம்மால்
சாம்புகின்ற இனப்பற்றைத் தமிழ்நீரால்
சலித்தெடுத்தே ஒளிரக் காட்டி,
ஓம்புகின்ற அறவாழ்க்கை உயர்வுபெற
உழைத்துழைத்தே உவப்பாய் நீயே! 10

-1963

வரிமணல் தென்துறை கண்டுமீள் வெண்மலை
வானரங்காள்!
நரியனை யார்வந்து தாழ்த்திய செந்தமிழ்
நாட்டினின்று
கரியனை யாரொரு கோடியர் சொன்னதாய்த்
தாய்த்தமிழை
அரியணை ஏற்றுவீர் என்றுரைப் பீர்தில்லி
ஆளுநர்க்கே! 1

இந்திக்கு மேலுடை இட்டணி பூட்டி
இளையவர், முன்
தந்திமி தீமென ஆட்வைத் தீர்;தமிழ்ப்
பாவையட்கே
கந்தைதந் தீர்;இகழ்ந் தீர்; ஒழிந் தீர்;திறங்
காட்டுமுன்னம்
முந்திக்கொள் வீரென ஓதுவீர் தில்லி
முகாமையர்க்கே! 2

மந்தையென் றாநினைத் தீர்தமிழ் மக்களை;
மாண்டமிழ்த்தாய்
தந்தையற் கேபிறந் தோமெனில் இந்தத்
தமிழகத்தைச்
சந்தையென் றேநினைத் திங்குவந் தார்திறஞ்
சாவெடுப்போம்;
சிந்தையொன் றேயெனக் கூறுவீர்; ஆட்சி
செறிப்பவர்க்கே! 3

என்நினைந் தாரவர்; இந்தித் திணிப்பை
யணுவணுவாய்
முன்னினைத் தெந்தமிழ் முற்றுமி லாது
முழுதழித்தே
தன்னினத் தாரர சாண்டிட எந்தமிழ்த்
தாய்பயந்த
தென்னினத் தாரழி வாரெனத் தீக்கனாக்
காண்குநரே! 4

*பார்க்கு மிடந்தொறும் நெல்முதிர் பைம்பயிர்*
*சூழ்வயல்கள்!*
*ஆர்க்குஞ் செழுங்கடல் முப்புறம்! வானில்*
*அகன்மலைகள்!*
*ஈர்க்கும் பிறன்பொருள் வேண்டுவ தில்லை;யிங்(கு)*
*ஈநுழைமோ?*
*ஆர்க்குமிங் கஞ்சுதல் இல்லையென் பீரந்த*
*ஆளுநர்க்கே!* 5

*வல்லன் அமெரிக்க னோபிற னோவரும்*
*வாய்ப்பிருப்பின்*
*வெல்லரி தென்றே விளம்புவர் கோழையர்;*
*வீழ்ச்சியெனின்*
*சொல்லலும் வேண்டுமோ? நீணிலம் முற்றுமே*
*சேர்ந்தொழிமே!*
*அல்லல் விளைப்பவன் தானும் அழிமென்*
*றவர்க்குரைமே!* 6

*ஊரை வளைத்தே உணர்வழித் தான்றோர்*
*உயர்வழித்துச்*
*சீரை யழித்து மொழியை யழித்துச்*
*சிறப்பழித்துப்*
*பேரை யழித்துப் பிழைப்பழித் தேயினம்*
*பின்னழிக்க*
*ஆரை நினைத்திவண் அண்டினர் என்றே*
*அறைகுவிரே!* 7

*இணங்கார் எனின்தமிழ்க் காளையர் தோள்கள்*
*எழுந்தெதிர்க்கும்;*
*வணங்கார் எனின்தமிழ்ப் பெண்டிர் மலர்க்கைகள்*
*வாளெடுக்கும்!*
*நிணங்காண்! தசைகாண்! குருதியின் செந்நிறங்*
*காண்எதிர்த்தார்!*
*பிணங்காண்! எரிகாண்! பொடிகாண்! பின்னெழும்*
*பைந்தமிழே!* 8

ஆர்வலர்! செந்தமிழ் ஆண்மையர்! முன்வரும்
ஆர்படைக்குஞ்
சோர்விலர்! தாழ்விலர்! சோற்றுக்கு மானந்
தனைவிடுக்கார்!
ஏர்வலர்! வாழ்க்கைத் தொழில்வலர்! அன்னார்
எழுந்துவிட்டால்
போர்வலர் ஆயினும் பொன்றுவர்; என்றங்குப்
போயுரைமே! 9

குமரிநீ ராடிக் குளிர்ந்தகுற் றாலப்
புனலருந்தி
இமையப் பொருவரைக் கேகுங் குரங்குகாள்!
எந்தமிழ்நாட்
டமைவினை வேண்டினர் ஆயிர மாயிரஞ்
செந்தமிழர்;
தமைத்தவிர்த் தீர்;தவிர்த் தீர்உயிர்! என்றே
தகவுரைமே! -1963

## 27 தமிழ்த் தொண்டர்க்கு...!

மட்டென்று செந்தமிழை எண்ணி, மதித்திலர்முன்
சட்டென்று தாவுக; தாழ்வைச் சரிசெய்க!
பட்டென்றே உண்மை பகர்ந்திடுக; பாடின்றேல்
வெட்டொன்று துண்டிரண்டாய்ப் பேசி,வெலவெலக்கக்
குட்டொன்று குட்டி, அவர் கூனை நிமிர்த்திடுக!
தட்டொன்றால் உள்ளம் விழிப்பார் தமையணைக்க!
சுட்டொன்றாப் போக்கில் சுழலும் மடவோரை
விட்டகன்று செல்க! விழலுக் கிறையற்க!
எட்டுணையும் ஒப்பா திடும்பை விளைப்பாரைக்
கட்டொன்றாய்க் கட்டிக் கடலில் எறிந்திடுக!
கட்டொன் றழியாத கன்னித் தமிழ்தாங்கும்
முட்டொன்றாய் நிற்க முனைந்து! -1963

பெற்ற தமிழ்நாட்டைப் பேண மறந்தவர்க்கும்,
உற்ற தமிழ்மகர்க்குச் செந்தமிழ்ப்பால் ஊட்டாமல்
இந்தியெனும் நஞ்சை இசைந்தூட்ட எண்ணுவர்க்கும்,
முந்தைச் சிலம்பெடுத்து மொய்ம்புகழைத் தாம்கூறி
'விந்தை'த் தமிழரசு வேண்டுமெனச் சாற்றுவர்க்கும்,
'வந்தித் திரவிடத்தில் வாழ்வெடுத்த ஆரியர்கள்,
வட்டிக் கடையால் தமிழர் வளஞ்சுரண்டிக்
கொட்டிக் கொடுபோகும் கொள்ளைப் பணியாக்கள்,
தம்மை விரட்டித் தனித்த திரவிடத்தை
எம்மைக் கொடுத்தும் இனிமீட்பேன்' — என்றுரைத்தே,
இற்றைத் தமிழ்நாடே வேண்டிடுவேன் என்பார்க்கும்,
அற்றை வரலாற் றழிவால் இனிப்பொருந்தா
வெற்றுத் திரவிடத்தின் வேட்கை மறவாமல்
ஒற்றைத் தனிக்காலால் நின்றே உயிர்செகுத்தே,
இற்றைக்குக் கொள்கை உரத்தை இடையூழ்த்து
'மற்றைப் படியெதுவும் மாறில்லை' என்றுரைக்கும்
செந்தமிழ் நாட்டுப் பெருங்கழகஞ் சேர்வார்க்கும்,
எந்தமிழ்த் தேசியமே யாம்கேட்போம் என்பார்க்கும்,
சாதி, சமயங்கள் சாற்றுகின்ற பொய்க்கூற்றை
ஓதி உணர்த்திப் பகுத்தறிவை ஊட்டுதற்குத்
தன்மதிப்பை நாட்டுந் தனிக்கட்சி கண்டவர்க்கும்,
என்மதிப்புப் பெற்றாலும் ஏழைத் தொழிலாளர்
தாம்மதிப்புக் கொள்நாளே தாமுயரும் நாளென்றே,
ஏமப் பொதுவுடைமை வேண்டிடுவோம் என்பார்க்கும்,
முற்றத் தெளிந்து முடிந்த துணிவுடன்யாம்
உற்ற இறுதிமொழி ஒன்றை உரைத்திடுவோம்!

கற்றுத் தெளிந்தவரே, காணுங் கருத்தறிந்து
சற்றும் பொருத்தமில்லை என்னின் சரிப்படுத்திக்
கூறுவீர் ஆயினுங்கள் கூற்றை உடனேற்று
மாறுவோம்; உங்கள் அருளை மதித்திடுவோம்!

பேரளவில் அல்லால் பெருங்கொள்கை என்றமைந்த
வேரளவில் உங்கட்குள் வேற்றுமைகள் இல்லையென்போம்.

ஒன்றிரண்டு கூறிடினும் உங்கள் வழிமுறையில்—
சென்றுகொண் டுள்ள திசைவழியில் தாமிருக்கும்.
'ஊர்திருத்த வேண்டும்; தமிழர் உய வேண்டும்;
ஏர்திருத்த வேண்டும்; இலரிலையா கல் வேண்டும்;
கூட்டுறவே வேண்டும்; குலமழிய வேண்டுமெனும்
நாட்டுநலம் பேணுகின்ற நல்லபல நோக்கமாஞ்
சீர்திருத்தக் கூற்றில் சிறுதிருத்தங் கூட,இல்லை!
பேர்திருத்திக் கொண்டால் பிறக்கும் பெருங்கட்சி!

செந்தமிழ்த்தாய்க் கென்றும் சிறுமை நினையீர்கள்.
சொந்தத் தமிழ்நாட்டார் சோற்றுக்குத் திண்டாட
வந்தார் வழிப்பறிக்க, வாய்மூட மாட்டீர்கள்!.
நொந்தார் தமிழரெனின் நோகுமுங்கள் உள்ளங்கள்!
மாறா திருக்குமுங்கள் போக்கால், மதியாமல்,
வேறோர் படையெடுப்பின் வேற்றுமைகள் தாமறப்பீர்.

உங்கள் உடலில் உயிரில் தமிழ்க்குருதி
பொங்கி வழியும் புலனறிவோம்! நற்றலைவீர்!
செந்தமிழைப் பேசும் திருவாயும், நேர்நெஞ்சும்
எந்தமிழர் சொத்தென்று யாமறிவோம்; ஆனாலும்
இற்றைக் கிருக்கும் இழிநிலையை எண்ணிடிலோ
வெற்றுப் பெருமைகளாய் நம்பெருமை வீழ்ந்தொழியும்!
கற்றார் உளக்கொதிப்பால் சொல்லைக் கனலாக்கிச்
சற்றே விரிக்கின்றோம்; சால்பின் செவிமடுப்பீர்;

உற்றுற்றுப் பார்த்தாலும் உள்ளம் உவப்பதுபோல்
நெற்றுப் பயிராய் நினைவு முதிர்வதுபோல்
செந்தமிழ் நாட்டில் செழுமை துளியுமில்லை;
எந்தமிழர் முன்னேற்றம் என்பதெல்லாம் வெற்றுரையே!

நெய்யில் பொறித்த நிலாப்போலும் அப்பளத்தைக்
கைதாழத் தூக்கிக் கனமென்று சொல்வதுபோல்
மெய்யாய் உரைக்கின்ற மேலான பொய்யுரையே!
'உய்யாமல் இல்லையா' என்பீரேல், உண்டுண்டு!
பொய்யில், புரட்டிலிழி 'சாதி'ப் பொருமல்களில்,
வெய்ய கொடுமைகளில் கொள்ளை விளைவுண்டு!

மெய்யூட்டம் செய்துகொள, மேனி பளபளக்கக்
கையூட்டு வாங்கும் கணக்கிலே முன்னேற்றம்!
பொல்லார் பெரும்பணத்தால் போராடி வெல்வதல்லால்,
இல்லார்க்கிங் கில்லையறம் என்பதிலே முன்னேற்றம்!

வாரிக் கொடுத்த வரிப்பணத்தால் வாங்கிவைத்த
சார்கருவி, ஊசி, குளிகை, மருந்துகளை
ஏழைகட்குத் தாராமல் இல்லம் எடுத்தேகிக்
கூழைப் பொருள்பறித்துக் கொள்வதிலே முன்னேற்றம்!

பெண்டிரொடு பிள்ளை பிரிந்து வகையின்றி
உண்டிக் கடையில் உடலை அடகுவைக்கும்
போக்கில்லார் தம்வயிற்றுப் போக்கறிந்தும் சுண்ணச்சோ
றாக்கிப் படைக்கும் அற(!)வழியில் முன்னேற்றம்!

பள்ளியிலே போடும் பகலுணவுக் காம்பொருளைக்
கொள்ளையிட்டுப் போகின்ற கூட்டுறவில் முன்னேற்றம்!

காசைப் பறித்திடவே, கண்டபடி பாட்டெழுதி
ஓசைக் கருவிகளின் ஓலங்கள் தம்மிடையில்,
முத்துப்பல் காட்டி, முகங்காட்டி, மெய்காட்டித்
தித்தித்தோம், தித்தித்தோம் என்று தெருக்கூத்தில்
ஆடுதல்போல் பெண்களையும் ஆண்களையும் ஆடவைக்கும்
நாடகத்தில், வண்ணத் திரைப்படத்தில் முன்னேற்றம்!

மேவுகின்ற கல்விப் பெருந்துறையில், மேலாண்மைக்
காவல் துறையில்,தீங் கள்ளமது விற்பனையில்,
மெய்யாய்க் கொழுப்புருக்கி வெண்ணெய் துளிகலந்து
நெய்யென்று கூறிவிற்கும் நேர்மை(!)சேர் வாணிகத்தில்,
நோயின் பெருக்கத்தில், போலி நடப்புகளில்,
கோயில் மடங்களெனும் நற்பெயரால் கொள்ளையிடும்
நல்லதிருக் கூட்டத்தில், நாளும் நடக்கின்ற
வல்லபெருஞ் சொற்பொழிவில், மாய மயக்குகள்சேர்
அங்காடிக் கடையில், அமைச்சவையில் என்றபடி
எங்கெங்குக் கண்டாலும் எந்தமிழர் முன்னேற்றம்!

என்சொல்வோம்! எவ்வா றெடுத்திங் கெழுதிடுவோம்?
புன்மைமிகப் புன்மை! புகலறியாப் புன்மையே!

இற்றை நடவடிக்கை என்னும் கடைத்தெருவை
முற்றும் அறிந்து முடிச்சவிழ்த்து வாழ்பவனே,
முன்னேற்றம் என்ற முழுப்பொய்யை முன்னவிழ்ப்பான்!
இன்ன வழியறியார் எம்போல்வார் துன்புறுவார்!

போனதெல்லாம் போகத் தமிழர் புறம்பழிக்க
ஆன மொழித்துறையில் இற்றை அழல்சேர்த்தார்!
வெந்தயத்தை ஆட்டி விளக்கெண்ணெய் சேர்த்ததுபோல்
இந்தியமாம், பாரதமாம் —என்றார் பொறுத்திருந்தோம்!
செந்தீயால் புண்ணாக்கி வாள்கொண்டு சீண்டுதல்போல்
இந்தியத்தால் சுட்டபுண்ணை 'இந்தி'யினால்
[சீண்டிவிட்டார்!

நீங்கள் அறிந்திருப்பீர்; இந்த நிலவுலகில்
தாங்கற் கரிதான தொல்லை பலவரினும்
தாய்மொழியை மாளவிட்டுத் தாம்வாழ்ந்த மக்களில்லை!
வாய்மொழிபோய் ஏட்டில் வரையும் வழக்கம்போய்ச்
சாக்காடு போன சமற்கிருதத் தைக்கூட
நோக்காடு நீக்கிக் கொணர்ந்ததிறன் நோக்கிடுவீர்!

இஃதிப் படியிருக்க 'இந்திபடி' என்கின்றார்!
எஃதெப் படியெனினும் இந்தி படிப்பதுதான்
முன்னேற்றப் படியின் முதல்படியாம்! சான்றவீர்!
நன்னர் உயர்பண்பால் ஓங்குதமிழ் நங்கைமீர்!
பாலெடுத்தே ஊட்டிப் பருகுங்கால் செந்தமிழ்செய்
நூலெடுத்துக் கற்பித்த அன்னை நெடுங்குலத்தீர்!
மாவெடுத்த வண்டுவிழி கொண்டு தமிழ்மணக்கும்
பாவெடுத்த முத்தமிழைப் பாகாய்ச் செவிபிழியும்,
செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியரே!
இந்திபடி என்கின்றார்! இந்தியத்தை ஆளவந்தார்!
முன்னர் அரசடிமை! இக்கால் மொழியடிமை!
பின்னர் வழியடிமை! என்றும்நாம் பேரடிமை!

எந்தமிழில் இல்லாத — ஆங்கிலத்தால் ஏலாத
எந்தவொரு சொல்லைப், பொருளைஇவ் 'விந்தி'யென்னும்
புன்மைக் கலவை மொழிபுகலும் யாமறியோம்!
வன்மை உரநெஞ்சும் செந்நாவும் கொண்டுரைப்போம்!

ஒற்றைத் தனித்தமிழன் உள்ளவரை, யாம்கற்ற
அற்றைத் தமிழின் அகரமுதல் உள்ளவரை—
தாயின் மடியிறுத்தி ஆகத் தணைத்துவந்து
வாயின் அமிழ்தும், வளர்நெஞ்சில் முத்தமிழும்
ஊட்டியவள் எண்ணம்எம் உள்ளத்தே உள்ளவரை
மூட்டியதோர் நல்லுணர்வெம் மூச்சில் இயங்குவரை—
அன்னைத் தமிழின் அரியணையில் இந்தியெனும்
பின்னை முகடியாம் பேதைக் கிடமளியோம்!

ஓரிரண்டு கொள்கை உடும்புப் பிடியாலே
ஊரிரண்டு பண்ணி ஒருநூறு தோற்றமாய்க்
காட்சிதரும் கட்சித் தலைவர்களே! உங்கட்கும்,
மீட்சியற்றுச் சாகும் தமிழர்க்கும் மீண்டுரைப்போம்;

அன்னை மொழிவீழ்ச்சி அவ்வினத்தின் வீழ்ச்சி;இதை
முன்னை வரலாறு மெய்ப்பிக்கும்; முத்தமிழீர்!
தாய்மொழிக்குக் காப்புரிமை வாங்கத் தகைமையால்
வாய்மொழிக்குப் பூட்டிட்டார் என்னும் வரலாறே
ஈழத்தில் இக்கால் இருக்குநிலை! செந்தமிழீர்!
வாழத்தான் வேண்டுமெனில் நந்தமிழ்க்கு வாழ்வளிப்பீர்!
இன்றேல் தமிழர் இனமழிவ தெஃகுறுதி!
நன்றே அறிகுவீர்! நாளை அழிந்தொழிவீர்!
இந்திமொழிக் கென்றும் இடமளியீர்! நல்மறவீர்!
எந்தமிழைக் காப்பீர்! இணைந்து!

-1963

முந்தையொரு பழம்பொழுதில்
முகிழ்த்தலர்ந்து விரிந்துயர்ந்த
அந்தமிழை உட்பொதிந்துன் ஆவியெனக் காத்தனையே;
அந்தமிழை உட்பொதிந்துன் ஆவியெனக் காத்ததெலாம்,
இந்தியெனும் புலைமொழிக்கே
ஏவல்செயும் இழிதகைக்கோ? 1

திக்கெட்டும் மணங்கமழ்ந்து
தெளியார்க்கிங் கொளியேற்றும்
முக்கழகச் சீர்சுமந்த முதுநூற்கள் யாத்தனையே!
முக்கழகச் சீர்சுமந்த முதுநூற்கள் யாத்ததெலாம்,
புக்கவரும் இந்தியெனும் புன்மொழிக்குக் காவிடவோ? 2

'எமையாவன் அறம்பழித்தான்' என்றவரை வென்றுவர
இமையாவெண் பனிமலைக்கல் இவர்ந்துபுலி நாட்டினையே;
இமையாவெண் பனிமலைக்கல் இவர்ந்துபுலி நாட்டியது,
நமையழிக்கும் வடவர்க்கே நாயடிமை செய்திடவோ? 3

அறம்பிழைத்த மனுநூலை
அழித்தொழித்துத் தவறிழையாத்
திறம்படைத்த திருக்குறளைச் செய்தளித்துப் பேணினையே;
திறம்படைத்த திருக்குறளைச் செய்தளித்துப் பேணியது,
மறம்படைத்த இந்தியெனும் மந்தியின்கைத் தந்திடவோ?

இன்மையினார்க் குள்ளிரங்கி, இரவலரைப் பரிந்தேற்றுப்
புன்மையினார் தமையழிக்கப் போர்போரென்
[றார்த்தனையே;

புன்மையினார் தமையழிக்கப்
போர்போரென் றார்த்ததெலாம்,
வன்மையினால் அரசமைத்த வடவரடி தொழுதிடவோ?

திகழ்ந்தொளிர்ந்த செந்தமிழ்த்தாய்த்
திருவடிக்கீழ் அரசமர்ந்து
புகழழிக்கும் புல்லர்முன் புலியெனநீ பொங்கினையே;
புகழழிக்கும் புல்லர்முன் புலியெனநீ பொங்கினதிங்
கிகழ்சேர்க்கும் இந்தியினுக் கிருந்தடிமை புரிந்திடவோ? 6

*மலைதாழ்ந்து நுண்மணலா மாறிநிலை திரிந்தாலும்,*
*நிலைதாழாச் செம்மலெனத் தமிழா,நீ வாழ்ந்தனையே;*
*நிலைதாழாச் செம்மலெனத் தமிழா,நீ வாழ்ந்ததெலாம்,*
*புலைதாழா வடவரடி பொறிதாழ்ந்து வீழ்ந்திடவோ?* **7**

*(வேறு)*

*கடிமுர சிருந்தெறிந்து, கவின்பெறுங் குடையிருந்து*
*முடியடி பகையரசர் மொய்ம்பழித் திறுத்தினையே!*
*முடியடி பகையரசர் மொய்ம்பழித் திறுத்தியது,*
*குடிகொலும் வடவரடி குளிர்தமிழ் வீழ்த்திடவோ?* **8**

*இழிவென ஆங்கிலரை எழுந்தெதிர்த் தவராட்சி*
*பழிநினை வடவரொடும் படையழிய ஓட்டினையே!*
*பழிநினை வடவரொடும் படையழிய ஓட்டியது,*
*மொழிவழி அடிமைசெயும் முறையிலார்க் கஞ்சிடவோ?*

*(வேறு)*

*வடமொழியை ஆங்கிலத்தை வல்லபிற வற்றால்*
*புடமிடல்போல் செந்தமிழ்க்குப் பொலிவுமிகச் சேர்த்தாய்!*
*புடமிடல்போல் செந்தமிழ்க்குப் பொலிவுமிகச் சேர்த்து,*
*மடமிகுந்த இந்தியின்முன் மண்டியிடச் செய்வதுவோ?*

*நிறைகழகப் புலவோரும், நெடுங்கொடிஆள் வேந்தும்,*
*மறைமலையும் பசுமலையும் மனவிழியால் காத்தார்!*
*மறைமலையும் பசுமலையும் மனவிழியால் காக்கக்*
*குறைமதியால் தமிழ்மகளைக் கொடியவர்கைக்*
*[கொடுப்பதுவோ?*

*இறந்தொழிந்த வடமொழியால் ஏற்றதுயர் ஆறிச்*
*சிறந்துயரும் பொழுதினிலே சீர்மறந்து போனாய்!*
*சிறந்துயரும் பொழுதினிலே சீர்மறந்து போனால்,*
*திறந்தெரிந்த செந்தமிழைத் தெவ்வர்கைப் படுப்பதுவோ!*

*(வேறு)*

*மூப்பார் தேனை, வளக்கொழுந்தை*
*முன்னாள் பிறந்த செந்தமிழை,*
*யாப்பால் பரவி இசைதந்த*
*யாழே! களிறே! உனைவிளிப்பேன்:*

யாப்பால் பரவி இசைதந்த
யாழே! நீயே நினைமறந்தால்,
காப்பார் யாவர் கொழுந்தமிழைக்
கண்ணுள் மணிக்கே இணைவைத்தே? 13

பரப்பார் நிலமும் புகழ்பரப்பிப்
பரவா உளமும் கனல்பரப்பும்.
வரப்பார் நெறிநூல் பலசாற்றி,
வந்தாய்! தமிழா, உனைவிளிப்பேன்:
வரப்பார் நெறிநூல் பலசாற்றி,
வந்தாய்! நீயே நினைமறந்தால்,
புரப்பார் யாரிங் கொளிதமிழை;
பொருள்,மெய், ஆவிக் கிணைவைத்தே? 14

பணையார் தோளும், உணர்நெஞ்சும்
பணிசெய் முனைப்பும் விறல்வேந்தும்,
புணையாய் இருந்தே தமிழ்புரந்த
புலியே! ஒருசொல் உனைவிளிப்பேன்:
புணையாய் இருந்தே தமிழ்புரந்த
புலியே, நீயே நினைமறந்தால்,
துணையார் இனியே தீந்தமிழ்க்கே;
தொலையா வாழ்விற் கிணைவைத்தே? 15

-1963

## 30 தமிழ் உருவில் தமிழ்ப் பகைவர்.

தமிழ் உருவில் தமிழ்ப் பகைவர் இருக்கின்றார் — அவர்
தமிழர்களின் தாலிகளை அறுக்கின்றார்!

உமிழ்ந்ததெல்லாம் நக்கித்தின்னும் நாய்கள் — மேல்
உள்ளவர்க்குக் காட்டிக்கொடுக்கும் பேய்கள்! (தமிழ்)

கற்றவர்போல் நடிக்கும்;பழகும் ஒன்றி — ஒரு
காசுக்காக மலமும் தின்னும் பன்றி!
உற்றவர்போல் பேணி வரினும் பழுதை — நன்றி
உணர்விலாது கெடுக்கப் பார்க்கும் கழுதை! (தமிழ்)

கட்சிபேசும்; தலைமை தாங்கும் தமிழால் — பெருங்
கயவர்களின் கூட்டஞ் சேர்க்கும் தமிழால்!
எச்சிலைக்கு நாக்கை நீட்டிப் படுக்கும் — மேல்
இருப்பவர்க்கே இனத்தைக் காட்டிக் கொடுக்கும்! (தமிழ்)

அழைப்பிலாது நமது வீட்டை நண்ணும் — மெய்
அன்பன்போலச் சுவைக்கச் சுவைக்கத் தின்னும்!
உழைப்பிலாது பிழைக்கப் பார்க்கும் ஓரி — தமிழ்க்(கு)
ஊறுசெய்யும் முன்னை யுள்ளம் மாறி! (தமிழ்)

'மக்கள்போல்வர் கயவர்'என்பர் குறளார்! — அவர்
மாண்பறியார்; கீழ்மை நெஞ்ச இருளார்!
குக்கல்போல வாழ்வார்; கொள்கைக் குள்ளர் — நாளும்
குறும்புபேசித் திரிவர்; பொய்மைக் கள்ளர்! (தமிழ்)

**-1963**

"பாட்டெழுதிக் கைசோர்ந்தோம்;
பண்ணிசைத்து வாய்வலித்தோம்!
ஏட்டில் பலவாறாய் எழுதி முழக்கமிட்டோம்!
கால் நடையாய்ச் சென்று
மணிக்கணக்காய்க் கண்விழித்து
நால்வகையா நம்மவர்க்கே வந்த நலிவெல்லாம்
ஒக்க எடுத்துரைத்தோம்! ஓங்கு மறஞ்சொன்னோம்!
தக்கவே நல்வினைகள் தாழா திவண்புரிந்தோம்!
மேலைத் திருநாட்டின் மேன்மையுறு நற்கலைகள்,
வேலைத் திறங்கள், அறிவாம் வியன் நூற்கள்,
சான்றோர் வரலாற்றுச் சாகா நறுஞ்செயல்கள்,
ஆன்ற அறமொழிகள் முற்றும் அழகுறவே
செந்தமிழிற் செய்து தமிழர் சிறப்பெய்தத்
தந்து பயன்விளையும் தக்கநிலை காத்திருந்தோம்!

அம்மாவோ! ஈங்கிவற்றால் ஆனபயன் ஒன்றுமில்லை!
இம்மியள வேனும், ஓர் எள்ளின்மூக் கத்துணையும்
எந்தமிழர் முன்னேற்றம் எய்தவில்லை என்றறிந்து
நொந்த உளத்தோடும் நொய்ந்த உறுதியொடும்
சாகாமற் சாகின்ற மெய்யோடும் சாய்ந்து விட்டோம்!
வேகாமல் வெந்து மனம்வெம்பி வீழ்ந்துவிட்டோம்!

இன்சொல்லாற் சொன்னோம்!
எரிச்சலொடும் கூறியுள்ளோம்!
புன்சொல்லும் வீசினோம்!
புண்படவும் சொல்லிவிட்டோம்!
என்னவகை சொன்னாலும் எந்தமிழர் மண்ணுடலில்
சின்னதொரு நல்லுணர்வும்
சேர்ந்தபுது மாற்றமொன்றும்
இன்னும் முளைக்கவில்லை; என்றறிந்து யாமயர்ந்தோம்!
மின்னலதும் காணோம்! இடியிடிப்பும் மேற்காணோம்!
கால மழைபார்த்துக்
காத்திருந்து சோர்ந்துவிட்டோம்!
கோல விளைவுக்குக் கூம்பியிருந் தோய்ந்துவிட்டோம்!

ஈங்கிவர்க்குச் செய்துவந்த எல்லையிலா நன்முயல்வும்
தேங்கிநின்ற நல்லுணர்வும் தீதில் அறவினையும்
காட்டு விலங்குகளின் கூட்டத்திற் காட்டினமால்
ஈட்டும் பெரும்பயனிங் கெத்தனையோ கண்டிருப்போம்:

வெம்புலியும் சுற்றிருக்கும்; வல்லரிமா பாட்டெழுதும்!
பம்பும் மலைப்பாம்பும் பண்பாடு பெற்றிருக்கும்!
யானை அரசமைக்கும்; வெங்கரடி யாழிசைக்கும்!
பூனை அறம்பயிற்றும்; புட்களினம் பாட்டிசைக்கும்!
குள்ளநரி ஒற்றாடும்! கோநாய்கள் ஊர்காக்கும்
துள்ளுமிள மான்களினம் தோதாய்க் கலைபயிலும்!
கூன்முயலும் ஆயும்! குரங்கு பொறியியக்கும்!
கானெருமைக் கூட்டமெலாம் கட்சித் தலைமைபெறும்!
ஒட்டக் குதிரை உடல்நலத்தைப் பேண வரும்!
காட்டுக் கழுதையினம் செய்தொழில்கள் கற்றிருக்கும்!
ஒட்டை உழவு செயும்! பன்றி பொருள்விற்கும்!
நெட்டைச் சிவிங்கி நெடுமரத்தில் காயுதிர்க்கும்!
ஆக்கள் அறமுரைக்கும்; ஆடுகளும் பாடுழைக்கும்!
நோக்கம் அறிந்து முதலை படகோட்டும்!

இத்தகைய நல்மாற்றம் ஏற்றமுறப் பார்த்திருப்போம்!
சொத்தை மனங்கொண்ட சோம்பேறி மக்களுக்குப்
பல்வா றுழைத்துப் பயன்காணா தேங்கியிரோம்!
செல்வழியும் எண்ணாச் சிறியோர்க் கழுதிருக்கோம்!
உள்ளுணர்வு பேணா உலுத்தர்க்கு நீரிறைத்தே
எள்ளளவும் நல்விளைவு காணா திளைத்திருக்கோம்!

செந்தமிழும் மாய்ந்ததுகாண்!
செந்தமிழர் செத்துவிட்டார்!
எந்தவகை அன்னவர்தாம் ஈடேறிப் போவாரோ!

தன்முயல்வும் இன்றித் தனிச்சிறப்பும் ஒன்றின்றி
என்வகையும் தேராதார் எப்படித்தான் வாழ்வாரோ?

உள்ளுணர்வும் சாம்பி உயர்கருத்தும் மாய்ந்தொழிந்து
வெள்ளறிவே கொண்டிருப்பார்
வீழ்ந்திறந்து போவாரோ?

கண்ணுருட்டிப் பார்ப்பார்தம்
கால்வருடி நின்றிருப்பார்
எண்வகையாச் செம்பொருளை
எப்படித்தான் காண்பாரோ?

கோலெடுப்பார் தம்முன் குரங்காய் நடமிடுவார்,
நூலெடுத்துக் கற்றறிந்து
நோற்றுயர்வ தெப்பொழுதோ?

வண்டியின்மேல் போவார்க்கே வாய்பொத்திக் கைகூப்பி
மண்டியிட்டு வாழ்வார் மனந்திருந்தல் எப்பொழுதோ?

வீசுகின்ற சோற்றுக்கே வீங்கித் தவங்கிடப்பார்,
மாசகன்ற நல்லறிவால் மாண்புபெறல் எப்பொழுதோ?

நட்டுவைத்த கல்முன் நறும்படையல் வைத்தொடுங்கிக்
குட்டுவைத்துக் கொண்டழுவார்
கூன்கொள்கை மாய்ந்திடுமோ?

மக்களுக்குள் கோடிக் குலம்படைத்து மாண்பழிக்குஞ்
சிக்கல் அவிழ்ந்து சிறப்புவந்து வாய்ந்திடுமோ?

வாய்மொழியும் திக்கி வருமொழிக்கும் பண்பிழப்பார்
தாய்மொழியைப் பேணித்
தரமுயர்தல் நேர்ந்திடுமோ?

கண்ணிமைக்கும் நேரத்தில் கருத்திழக்கும் தீத்திறத்தார்
மண்ணமைக்கும் நல்லமைப்பில்
மாண்புபெறல் காண்குவமா?"

என்றே இடையிடையே எண்ணச்சோர் வுற்றாலும்
வென்ற தமிழிருக்கும் வல்லமையால் வீழ்ோம்யாம்!

என்றேனும் ஓர்நாள் இழிவகன்ற எம்மக்கள்
மன்றேறிக் குந்தி மணித்தமிழை மேலிருத்தி
"எந்தமிழத் தாய்மாரே! தந்தையரே! காளையரே,
இந்த நொடிமுதலா எல்லாரும் ஓரினமே!

வேற்றுமைகள் பேசிடுவார்,
வாணிகத்தில் பொய்யளப்பார்
மாற்று வழக்குரைப்பார், மக்களுக்குத் தீங்கிறுப்பார்
பொய்ச்சமயம் கூறிடுவார், போலிக் கலைபயில்வார்,
கைச்சரக்கைக் கட்டவிழ்ப்பார், மக்கள் கருத்திழிப்பார்,
மாண்பிறந்து வாழ்வார், மருந்தில் புனல்வார்ப்பார்,
வீண்பகட்டுச் செய்திடுவார், விரகர், கொலைசெய்வார்,
மாசுமிகு புல்லுரைகள் மலிந்துவிட நூல்தருவார்,
கூசுகின்ற தீச்செயல்கள் கூசாமற் கூறிடுவார்,
ஊருழைப்பைத் தங்கள் உலையிட் டுடல்வளர்ப்பார்,
பார்புகழ வேண்டிப் பகற்கொள்ளை செய்திடுவார்,
வற்புறுத்தி ஏழையரை வாட்டி வதைத்திடுவார்,
கற்பழிப்பார் யாரும் கழுவேற்றத் தக்கவர்கள்”

என்று பறைசாற்றி ஏற்றமிகு நல்லாட்சி
ஒன்றைச் சமைக்காரோ?
இந்நினைவால் உய்ந்திருப்போம்.
அந்தநாள் நோக்கி அருந்தமிழீர் நாம்நடப்போம்!
எந்த நிலைவரினும் ஏற்றம் தளரோம்யாம்!
சோர்வுற்ற போழ்தில் தமிழை நினைத்தெழுவோம்!

ஆர்வமுறப் பாடி அழிந்துவரும் நல்லுணர்வைத்
தூக்கி நிறுத்திடுவோம்! தோய்துயரைத் தாமறப்போம்!
ஊக்குகின்ற சொற்கள் உகுப்போம்;கண் ணீருகுக்கோம்!
என்ன துயர்வரினும் ஏற்ற பணிமுடிப்போம்!
அன்னைத் தமிழ்மேல் அருஞ்சூள் உரைத்தெழுந்தோம்!
இன்னல், வறுமை, இழப்பு, கொடு நோய்க்கஞ்சோம்!
மின்னல் இடிமழைக்கு மேனி நடுநடுங்கோம்!
வல்சிறைக்கே அஞ்சோம்! பதவிக்கு வால்பிடியோம்!
புல்லியர்தம் பொய்யுரைக்கே
புண்பட்டு யாம்வருந்தோம்!
துன்பம் தொடர்க! துயர்வருக! அத்துயர்மேல்
இன்பம் மலர்க இனி!

-1963

## 32 பகையே விலகுக!

ஆர்த்த முரசொடு கொம்பும் முழங்க
அருந்தமிழர்
சீர்த்தி விளங்க நெடுங்கொடி தூக்கிச்
செறுவிழிவேல்
கூர்த்த மறவர் களிற்றொடும் போந்தார்!
குலைநடுங்கிப்,
போர்த்த இருளே, பகையே, விலகுக
பொக்கெனவே!

-1963

## 33 அடிமைக் கூட்டம்!

நாயடிமை செய்பவராய்த் தமிழரெல்லாம்
நலிகையிலே, அமைச்ச ரெல்லாம்
போயடிமை செய்கின்றார் வடவர்க்கே:
அவர் வாய்ச்சொல் தலைமேற் கொண்டே!
வாயடிமை கொண்ட தமிழ்த் தலைவரெல்லாம்
முழங்கிடுவார்; வளர்ச்சி காணார்!
தாயடிமை யுறக்கண்டும் அவள்மானம்
விலைபோக்கும் தகைமை யோரே!

-1964

## 34 தமிழ் வளர்ப்பார்....!

*நயங்கூர் உரைகள் பலசெய்வார்;*
*நலங்காண் வினைக்கே முழுமனதாய்*
*இயங்கார்; பிறர்ஆங் கெழுந்தியங்கின்*
*இணையார்; ஒருகால் இணைந்துவிடின்*
*வயங்காண் பொழுதில் பொருள்நயப்பால்*
*வழிப்போ வார்க்கே பழிசெயவும்*
*தயங்கார்; இவர்காண் தமிழ்வளர்ப்பார்!*
*தமிழே! இதுநின் தலையெழுத்தே!*

**-1964**

## 35 எழுதிப் பிழைக்கும் இடக்கர்!

பழுதுற நூற்கள் பதித்திடு வாரும்
பதித்தவெல்லாம்
புழுதியென் றாலும் புகழ்ந்துரைப் பாரும்
புகழ்ந்தவற்றைத்
தொழுதுடன் வாங்கிப் படித்திடு வாரும்
தொலைந்துவிட்டால்
எழுதிப் பிழைத்திடு வாரோ இடக்கரும்
இந்நிலத்தே!

**-1964**

ஐயோ தமிழ்மகனே! ஆண்டிருந்த மன்னவனே;
பொய்யோ புதுக்கனவோ? போகா நெடுநினைவோ?
மெய்யாய் நடப்பதுவோ மேனிச் சிலிர்சிலிர்ப்போ?
உய்யாய் எனநினைந்த ஊரார் களிப்புறவே —
வாழாய்நீ என்ற வடவர் மகிழ்வுறவே —
வீழாயோ என்றிருந்த வேறார் உவப்புறவே,
சாய்ந்தாயே! ஆலஞ் சருகாய் விழுந்தாயே!
வாய்ந்த பெருமையெலாம் வாயெடுத்துப் பாடிடுவேன்;
வாய்ந்த பெருமையினை வாயெடுத்துப் பாடிடுங்கால்,
மாய்ந்த உயிரும் மறிக்கவந்து தங்கிடுமா?
மாய்ந்த உயிரும் மறிக்கவந்து தங்குமெனில்
தோய்ந்த நறுந்தமிழில் தோதாகப் பாடேனோ?
கன்னல் தமிழில் கனிவாகப் பாடேனோ?
என்னேர் தமிழில் இசையேறப் பாடேனோ?
சொல்லுக்குச் சொல்லும் சுவையேறப் பாடினமால்
கொல்லவரும் அம்பும் குறிதப்பிப் போகாதோ?
வெல்லவரும் மாற்றாரும் வில்லொடிந்து போகாரோ?
வல்லதடா நின்நினைவும் வாழ்க்கைக் கெருவாகும்!

பாண்டிமன்னன் பெற்ற பழமேனி நின்மேனி!
ஆண்டவனும் நீயே! அரசரெலாம் நின்குடியே!
சோழமன்னன் பெற்ற திருமேனி நின்மேனி,
வாழவந்தாய் நீயே, வடவர் குறிதொடுத்தார்.
சேரமன்னன் பெற்ற சிறப்பெல்லாம் நின்சிறப்பே!
சீரவிந்து போனாய்; சிறப்பிழந்து வீழ்ந்துவிட்டாய்!

தப்பாக் குறிவைத்தார்; தாழாமல் அம்பெடுத்தார்;
எப்பாலும் சூழ்ந்தவரை என்செய்வார் என்றிருந்தாய்.
மாறாக் கவணெடுத்தார்; மாய்க்காமல் மாய்த்துவிட்டார்;
வேறாய் நினைக்கவில்லை; வீணரவர் வீழ்த்திவிட்டார்!

வெல்வாரோ என்றிருந்தாய் வேலியிட நீமறந்தாய்!
கொல்வாரோ என்றே குறிவைக்க நீமறந்தாய்!

முத்தளந்த கையில் — முடியணிந்த நின்தலையில் —
பத்தும் அளந்துதந்து பாமடுத்த நின்செவியில் —

குத்தவரும் வேலின் குறிதடுக்கும் மார்பினிலே —
தொத்தவரும் பைங்கிளிமார் தோய்ந்துறங்கும் தோளினிலே
பார்த்திருந்த நின்பகைவர் பாய்ச்சினரே கூரம்பை!
காத்திருந்த மாற்றார்க்குக் காணுவழி வேறிலையே!

கொல்லன் வடித்தீந்த அம்புக்குக் கூர்பார்க்க
வல்லனே நின்கை வடுப்படுவ தல்லாது —
காந்தள் மலர்க்கைக் கயல்விழியால் கூருகிரால்
ஏந்துகின்ற மார்பில் எடுத்தவடு வல்லாது —
நின்றோள் வடுப்படவும் நேர்ந்த கதையறியேன்;
அன்றோகாண் நின்பெருமை! ஆரே இனியுரைப்பார்?

பூரித்த தோள்கள் பொலிவிழந்து போயினவோ?
ஏரித் தடங்கரையை இங்குவந்து யாருடைத்தார்?
முக்கழகச் சீர்மை முழுதலரும் என்றிருந்தேன்.
முக்கழகச் சீர்மை முழுதலரும் என்றிருக்கத்
தக்கபடி வந்தான் தலையரிந்து கொண்டிருப்பான்;
ஒக்கபடி வந்தான் உடலரிந்து கொண்டிருப்பான்!

முத்தமிழ்க்குக் காப்பாக முன்னிற்பாய் என்றிருந்தேன்!
முத்தமிழ்க்குக் காப்பாக முன்னிற்பாய் என்றிருக்கப்
பித்தனவன் வந்தான் பிணமாக வீழ்த்திவிட்டான்!
எத்தனவன் என்றறியேன்; ஏமம் விளைத்தறியேன்!

பொய்யன்று; தூங்கும் புலியென்று நானிருந்தேன்;
கொய்யென்று நின்தலையைக் கொய்தான்; உறங்கினையே!

ஆளழகு மட்டுமிலை; ஆணரிமா என்றிருந்தேன்!
தோளழகு மாளத் தொடுத்தகணை பாய்ச்சிவிட்டான்.

பில்குதமிழ்த் தேன்பா பிலிற்றும் புலவரொடு,
மல்குதமிழ் வேந்தன் **மறைமலைகள்** காத்திருந்தும்,
பல்குதமிழ் ஆய்ந்துவரும் **பாவாணர்** காத்திருந்தும்,
நல்குதமிழ்ப் **பாவேந்தன்** நாட்டுவிழி பார்த்திருந்தும்,
ஓரா யிரமறவர் ஓச்சியவாள் வீச்சிருந்தும்,
ஆரோ வெறியன் அடிவெட்டி வீழ்த்திவிட்டான்!

செந்தமிழைச் சாய்த்தான்;நின்
சீருடலைச் சாய்த்துவிட்டான்;
முந்திவிட்டான்; நின்னையவன்
மூக்கரிந்து கொண்டுசென்றான்.

பாட்டனவன் வாளும் பரணிருக்கும்; நீ,மறந்தாய்!
நீட்டி யிருப்பின் நினைவிழந்து போயிருப்பான்.
அப்பனவன் வேலும் அருகிற் கிடந்திருக்கும்!
ஒப்புக்குக் காட்டினையேல் ஓடி உயிர்குலைவான்!
வேலொடித்த கையால்
விரலொடித்துப் போட்டிருந்தால்,
ஆலொடிந்து சாய்ந்ததுபோல் ஐயனே நீ,கிடவாய்!
வாய்மொழிக்குத் தானே வரம்பிட்டான் என்றிருந்தாய்!
வாய்மொழிக்குப் பூட்டிட்டே
வல்லுயிரின் தாழ்திறந்தான்!
தாய்மொழிக்குத் தானே
தடைபோட்டான் என்றிருந்தாய்!
தாய்மொழியைத் தான்தடுத்துத்
தன்னுயிர்க்குக் காவலிட்டான்!
தூக்குங் களிற்றுத் துதிக்கைத் தடங்கையனே!
தாக்கும் நரிக்குத் தலைகவிழ்ந்து போனாயே!

என்ன,அடா பாட்டிசைப்பேன்?
என்னென்று சீர்குறிப்பேன்?
என்னெழுதும் நெஞ்சம்? எழுத்தாணிக் கூர்மழுங்கும்!
பொன்னுருக்கி வார்த்துப் புதுத்தகடாய் நீளடித்துப்
பன்மணியால் சொல்லமைத்துப்
பச்சைமணிப் பாட்டமைத்து,
முத்தெடுத்துக் கோத்து முழுப்பாட்டு நின்றெழுதிப்
பித்தேறச் சூழ்ந்து பிழையில்லாப் பாட்டெழுதி,
நின்பெருமை பாட நினைத்திருந்தேன், செந்தமிழா!
நின்பெருமை பாட நினைத்திருக்கும் போழ்தினிலே,
குத்துண்டு போனாய்! குலைநடுங்கிக் கீழ்சாய்ந்தாய்!
கத்துண்ட தொண்டை கரகரக்கும் வேளையிலே,

ஒப்பாரிப் பாட்டோ உனக்கென்று வாய்த்ததுகாண்!
துப்பில்லாப் போனாய்! துகளாகி நீ,சாய்ந்தாய்!

ஆர்நெஞ்சம், திண்கால் அமர்ந்த அரியணையில்
யார்வந் தமருவது? யாராட்சி ஆளுவது?
கூழைக் கரும்பின் குருத்தொடித்து வீசுதல்போல்
மோழை வடவர் முதுகொடிப்பாய் என்றிருந்தேன்!
பாளையினைச் சீவிப் பதநீர் வடிப்பதுபோல்
ஆளின் தலையை அறுத்தெறிவாய் என்றிருந்தேன்!
கோழைக்கு முன்வாளைக் கூர்மழுக்கிக் கொண்டாயே!
வாழை இளந்தண்டாய் வந்துமடி வீழ்ந்தாயே!
வல்லடிமை செய்ய, அவர் வாய்வீச்சு வீசியதும்,
கொல்லுதற்கு நின்னைக் குறிபார்த் திருந்ததுவும்,
இந்தியினைக் கொண்டே எழிற்றமிழைச் சாய்த்ததுவும்,
இந்தியமென் றார்த்தே இசைமயக்கில் ஆழ்த்ததுவும்,
செந்தமிழா நின்னைச் சிறைசெயவே என்றுரைத்தேன்.

எந்தமிழால் சொன்ன எதிர்வறிய மாட்டுகிலை;
கூப்பாடு போட்ட குறிப்புணரக் கூடவில்லை;
நாப்பாடு வேண்டி நயப்பாடு காணவில்லை!
கற்றைக் குடுமியவன் கைக்குப் பிடிகொடுத்தே
இற்றைக் கடிவீழ்ந்தாய்! ஏந்தலே ஏந்துவதார்?
பொன்னார் திருமேனி மண்ணில் புரளுவதோ?
என்னேர் தமிழ்த்திருவை 'இந்தீ' எரிப்பதுவோ?
ஏந்தியவாள் வீச்சுக் கெதிர்வீச்சைக் கண்டிலனே!
காந்தியகண் நோக்கிற் கெதிர்நோக்கைக் கண்டிலனே!

நின்னை எவண்காண்பேன்?
நின்மொழி,யார் வாய்கேட்பேன்?
தன்னேர் உயர்பண்பைச் சாற்றுவதார்? தாளேனே!
எண்ணாத நெஞ்சாய், எழுதாத பாடலாய்,
உண்ணாத தீங்கனியாய், ஊட்டாத தாய்முலையாய்,
பூக்காத மொக்காய்ப் புதுக்காத ஊருணியாய்
நோக்காத நல்விழியாய் இக்கால் நுடங்கினையே!
என்பொறுப்பேன் நின்சாவை?
என்வைப்பேன் வல்லுயிரை?
நின்பிணங்காண் சான்றாகும்; நீளுலகில் தூணாகும்!

தாய்மொழியைப் பேணார் தரைமூடிப் போதற்கே,
வாய்மொழியைக் காவாதார் வாழ்விழந்து போதற்கே—
உன்றன் பிணமே உறுகரியாம்! வல்சான்றாம்!
குன்றுபோல் வீழ்ந்திருக்கும்
கொல்களிறே! நாணுடைத்தே!

-1964

## 37 கவல் கொள்ளாரே!

வெட்டுகின்ற வெட்டொன்றாய்த் துண்டிரண்டாய்
மெய்க்கருத்தை விளங்கப் பேசி
முட்டுகின்ற இடர்மலைக்கும் மூள்கின்ற
பெருஞ்சுழற்கும் துணிந்தார், மூடர்
கட்டுகின்ற பொய்யுரைக்கும் அவிழ்க்கின்ற
புளுகுரைக்கும் கயவர் பாங்கில்
கொட்டுகின்ற வாய்ப்பறைக்கும் செவிகொடுக்கார்;
விடையிறுக்கார்; கவல்கொள் ளாரே!

-1965

## 38 பழிபறித் துண்பார்.....!

கையடி காட்டிக் கரவடி எண்ணிக்
கருத்தழியப்
பொய்நிழ லாட்டிப் புரையுரை கூறிப்
புழுவயிற்றுப்
பைநிறை வாகப் பழிபறித் துண்பார்
பகட்டிலெல்லாம்
மெய்நிறை காணார் உளநலம் முற்றும்
மிளிர்ந்தவரே!

**-1965**

## 39 தமிழா, ஒன்று செய்!

ஆரியர்க்குப் பாய்விரித்தாய்! ஆங்கிலர்க்குக் கற்பிழந்தாய்!
பூரியர்செய் இந்திக்குப் பொற்பிழந்தாய்! — யார்யார்க்குத்
தாள்பிடிக்கக் காத்திருக்கின் றாயோ தமிழ்மகனே,
வாள்பிடிக்குங் கையால் வணங்கியே! — கேளினிமேல்
மீசை மழித்துவிடு; முன்குடுமி வைத்துக்கொள்!
காசைப் பெரிதாய்க் கருத்தில்வை; — கூசுகிலா
மானம் அறக்கழற்று! மாண்பை உதறியெறி!
ஏனோ உனக்கு மனைவிமக்கள்? — ஊனுடலை
நன்றாய் வளர்ப்பதுவே நல்வாழ்க்கை! — நாள்முழுதும்
தின்று கொழுத்துத் திரி!

## போலித் தமிழ்த் தொண்டர்!

அரும்பைந் தமிழ்க்கொரு தொண்டரென்
றார்ப்பார்; அழிபகைவர்
இரும்பைக் குழம்பெனக் காய்ச்சிமே
லூற்றினும் ஏற்பமென்பார்;
துரும்பைப் புரட்டினும் தொண்டெனப் பேசியே
தோள்கலிப்பார்;
குரும்பையர்; வெற்றுக் குடுக்கையர்; சொல்லால்
குழைபவரே! 1

முன்னிவை செய்தனம்; பின்னிவை செய்குவம்;
முத்தமிழ்த்தாய்
தன்னிறை வாகிட ஆவியு டல்பொருள்
தந்தமென்பார்;
சொன்னிறை வல்லால் வினைநிறை வல்லார்;
சோர்ந்தனரால்
எந்நிலை யார்வந் துரைக்கினும் ஏலார்;
எழுகிலரே! 2

மாற்றுவர் சொன்னசொல்; உண்மையின்
சான்றோர் மனங்கசியத்
தூற்றுவர் வேற்றுப் புலத்திடை! ஒன்றைத்
துணிந்துசெயின்
ஏற்றுவர் வெற்றிப் புகழ்க்கொடி; ஏமாற்
றுறுந்தமிழர்
போற்றுவ ராயின் புதுநடை போடுவர்;
பொக்கவரே! 3

தாமுந் துணிகிலார்; தம்மின் துணிந்தவர்
தம்வினையை
ஆமென் றுடன்பட் டயலயல் போகி
அவை தமக்கே
ஏமம் புரிபவர் யாமென் றுரைத்தே
அகமகிழ்வார்;
வாமம் புரிதமிழ்த் தாயினுக் கன்னார்
வளர்களையே! 4

*ஏயும் பொருள்கணக் கிட்டெழு நூறு
முறைநினைப்பார்;
ஆயும் பொருளும் முடிவுந் தெரிகிலார்;
ஆய்ந்தவர்க்கொன்
றீயும் நிலைவரின் காசும் ஈகிலார்;
ஈந்தவற்றை
மாயும் பொழுதினும் தாம்நினை வூட்டி
மகிழுவரே!* 5

*பற்றொன் றிலர்போல் பலபடப் பேசுவர்;
பாழ்ம்பொருட்கே
எற்றென் றிராப்பகல் எண்ணிப் புலம்புவர்;
ஏதிலர்பால்
கற்றொன் றறிந்தவர் போலுரை யாற்றிக்
களிப்புறுவர்!
நெற்றொன் றிடைமறைந் துண்மை கரக்குமோ
நெற்பதரே!* 6

*'கட்டுடை பாரோம்; களிபொருள் தேரோம்'
எனவுரைப்பர்;
வட்டுடை யோர்முழம் சாலுமென் பார்;தனி
வாய்த்திடிலோ
பட்டுடை யென்னினும் கட்டிக் களிப்பார்;
படுந்துயர்க்கே
நெட்டுயிர்ப் போடுவர்; ஈகமென்
றஃதை நிகழ்த்துவரே!* 7

*படைத்திடு சொல்வினை யாவினும் முந்திப்
பணிதொடங்கின்
இடைத்துணி போல இடையிடை யேநெகிழ்
வார்;உரையால்
மிடைத்தருள்சாற்றி அணைக்கினும் மேன்மேல்
மிடிதருவார்;
கடைத்தவர் செய்கை; இனையரால் என்றுங்
கழியிடும்பே!* 8

வேலியர் யாம்தமிழ்ப் பைம்பயிர்க் கென்றே
விதந்துரைப்பார்;
கூலியென் னென்று கணக்கிடு வார்; ஒரு
கொள்குறையின்
காலியர் சிற்சில வோர்தமைக் கூட்டிக்
கலாம் விளைப்பார்;
போலியர்; செந்தமிழ்ப் பொய்ம்மையர் அன்னவர்
போக்கறிமே! 9

உணரின் செயலிலை, செய்யின் உரையிலை,
ஓர்க;உளம்
புணரின் தொடர்பிலை; தோன்றின் முடிவிலை;
போலிவினை
இணரின் பூத்த இலைபோல் கலித்தே
எழுந்தலைக்கும்
புணரி வியன்கரை போலதாம்; மெய்வினை
பூ;நடுவே!

-1965

## 41 ஒரு துளிக் கண்ணீர்!

இன்று வந்த இருபது மடல்களுள்
ஒன்றே என்றன் உளத்தைக் கவர்ந்தது.
மடலை விடுத்தவர் என்னை மதிப்பவர்!

உடலும் உயிருமாய் நானும் தமிழும்
இருப்பதை உணர்ந்தவர்; என்னை அடிக்கடி
விருப்புடன் வந்து பார்ப்பவர்; விளங்கிலாக்
கருத்துகள் பற்பல ஆய்பவர்! கனிவினால்
என்றன் நலம்பல எண்ணிச் செய்பவர்.
ஒன்றே தேர்ந்ததும், தேர்ந்த ஒன்றினைத்
துணிவும் தூய்மையும் துணையும் கொண்டு
பழந்தமிழ்த் தாயும் தமிழரும் நாடும்
இழந்த பெரும்புகழ் எய்திட உழைப்பதும்
என்றன் வாழ்வென மடலை எழுதிய
அன்பர் அறிவார்;

அவரும் பாக்களால்
அன்னைத் தமிழ்க்கே அலங்கல் சார்த்தித்
தன்னைத் தமிழ்க்கே தந்து வாழ்பவர்.
போலிச் செய்கையால் தமிழ்விலை போக்கும்
கூலித் தமிழரின் குறைமதிக் கழல்பவர்;
வேலி யிலாத்தமிழ் விளைபயிர் மேயும்
காலித் தமிழரின் கறையுளம் கடிபவர்;
உரைவளம் இன்றியும் இசையுயர் வின்றியும்
புரையுளம் மிகுத்துப் பண்ணைப் புதைக்கும்
திரைப்படக் கதையையும் பாட்டையும் தீய்க்க
விரைவில் ஒருவழி வேண்டும் என்பவர்;
ஆளுங் கட்சியின் அறமிலாப் போக்கினால்
மாளும் மக்களைக் கண்டுளம் நொந்தவர்;
துவளும் மக்களின் துயர்மேற் கட்டிய
பவள மாளிகை எனும்பல கட்சிகள்
மேடையில் முழக்கிடும் ஆயிரம் பொய்யையும்
கூடையில் மூடும் கொள்கைச் சருகையும்
தேர்தல் நாடகக் காட்சித் திரிபையும்
கூர்ந்த நோக்கொடு எண்ணிக் குமைபவர்;

அப்படிப் பட்டவர் அனுப்பிய மடலில்தான்
இப்படி ஒருகருத் தெழுதி யிருந்தது!

"தமிழகம் தனியாய்ப் பிரிதலே தக்கதென்
றெழுதினீர் ஐயா, இதுதான் முடியுமோ?
இந்திய நாடென இயம்பலும் தகாதெனப்
'பாரதம்' என்றே பறைசாற் றுகிறார்;
இந்தியே ஆள்தற் கேற்ற தென்று
செந்தமிழ் வழக்கைச் சீரழிக் கின்றார்;

தமிழர் யாவரும் தன்மதிப் பின்றித்
தமிழையும் மறந்து பண்பையும் தள்ளி
உருவால் ஆங்கிலர் போலும், உளத்தினால்
திருவிலா வடவர் போலும் திரிகிறார்!
தமிழ்மொழி அறிவியல் கல்வியைத் தருமோ?
தமிழ்மொழி பெரும்பொருள் ஈட்டித் தருமோ?
தனித்தமிழ் தனித்தமிழ் எனமொழிந் தே,வாய்
இனித்திடல் அல்லால் வாழ்க்கை இனிக்குமோ?
ஐந்தி லக்கம் உறுப்பினர் கொண்ட
தி.மு. கழகமும் திரவிடக் கொள்கையை
நீக்கிய தென்றால் நீங்கள் நோற்கும்
நோக்கம் இலாத தனித்தமிழ் நோன்பால்
தமிழகம் பிரிதல் இயல்வதோ சாற்றுமின்?
அமைவிலாக் கொள்கைக்கு ஐயநும் வாழ்வையும்
உள்ளம் கவன்ற தமிழர் ஒருசிலர்
கள்ளமில் லாத கடிய உழைப்பையும்
விழற்குப் பாய்ச்சிய வெள்ளம் போலும்
அழற்குப் போர்த்திய ஆடை போலும்
நிழற்குப் புனைந்த அணிகள் போலும்
சுழற்கு நிறுத்திய சுருட்பாய் போலும்
வறிதே மாய்த்திட வேண்டிலேன்; ஐய!
குறிதேர் வாழ்க்கை கொண்டுயிர் உய்க"

— என்றுஅம் மடலில் எழுதி யிருந்தது.
நண்பர் என்னை நன்றாய் அறிந்தவர்.

ஆதலால் மடலின் ஆழத் திருந்த
தீதிலா அன்பையும், என்றன் வாழ்க்கையில்
அன்னவர் கொண்ட அக்கறை உளத்தையும்
உன்னி மகிழ்ந்தேன்; என்னினும் உண்மையாய்ப்
பெரிதும் வருந்தினேன் என்பதே தக்கது.
வருந்திய தேனெனின் நண்பரென் வாழ்வையும்
திருந்திய கொள்கைத் தெளிவையும், போக்கையும்
உயிராய்க் கருதிய தமிழ்வாழ் உழைப்பையும்
அயரா முயல்வையும், அறிந்தவ ரென்றே
இதுநாள் வரைக்கும் எண்ணி யிருந்தேன்.
அதுபொய் என்றே அறிந்ததும் வருந்தினேன்.
இவர்போல் ஒருசிலர் எண்ணுவர் ஆகையால்
அவருந் தெளிய இதனை அறைகுவேன்:

இந்திய ஆட்சியை வெள்ளையர் ஏற்று
முந்தைய நிலையை முழுவதும் மாற்றினும்
உள்ளத்து மூண்ட உரிமை முழக்கம்
வெள்ளம் போலப் பெருகித் தீயெனக்
கொழுந்து விட்டுக் கொதித்த பின்றான்
எழுந்தது உரிமைசேர் இந்திய ஆட்சி!
வெள்ளையன் தந்த உரிமையால் வடவர்
கொள்ளையர் போலும் நாட்டைக் குலைத்தனர்.

ஒற்றுமை பேசி உரிமையை மாய்க்கவும்
வெற்று நிகரமைக் கொள்கை என்றே
பொருளைக் குவித்து வல்லமைப் புரட்டால்
அருளைக் குலைத்தே அறத்தைக் கொல்லவும்
முந்தி விட்டனர்; மொழிக்கொள் கையென
இந்தி தன்னை அரியணை ஏற்றினர்.

ஆங்கிலந் தன்னால் வெள்ளையன் ஆண்ட
ஓங்குயர் திறம்போல் இன்றி, உயர்விலா
இந்தி மொழியினை இந்திய நாட்டின்
சொந்த மொழியெனச் சாப்பறை கொட்டினர்.
செல்வர் அடித்த கொள்ளைச் செல்வம்
வெல்வகை யுதவ வியப்புற்றுத் தேர்தல்

நாடகம் நடித்துத் தீயரால் அமைத்த
பீடறு ஆட்சியில் பிழைகளே மலிந்தன!

கற்றவர் ஆய்வுரை காற்றில் பறந்தது!
முற்றக் கற்ற முழுமாந் தர்போல்
அமைச்சரின் உளறல் சட்டம் ஆனது!
நமைச்சல் கொண்டவன் நள்ளிராப் பகலெனச்
சொறிதல் போலும் உரைகள் சொரிந்தன.
நெறிமுறை பிறழ்ந்தது: நேர்மை மாய்ந்தது!
ஆட்சித் திறத்தால் மக்களைத் திருத்தும்
மாட்சி யின்றிப் பண்பை மாய்த்தனர்
வாணிகர் கள்ள வாணிகம் பேணினர்;
தூணிகர் வாழ்க்கை துரும்பாய் இளைத்தது.

சமயப் புரட்டுகள், 'சாதி'ச் செருக்குகள்,
சுமை சுமையாய்நம் தோள்களை அழுத்தின!

கல்விச் சுனையை எருமைகள் கலக்கின!
செல்வ முதலைகள் வறியரை விழுங்கின!

மருத்துவ மனைகளைக் கருத்தடை ஆண்டது!
திருத்தமில் உரைகள் தெருத்தொறும் ஒலித்தன!

கலையென் பெயரால் கயமை வளர்ந்தது!
விலைமகள் என்னும் பெயரை விலக்கிக்
கலைமகள் எனும்பெயர் கணிகையர் பூண்டனர்!

நாடகக் கொட்டகை பீடகம் குறைந்தே
ஏடகப் பள்ளிகள் தம்மை வென்றன!

கோவலர் போலும் கோல்கைக் கொண்ட
காவலர் என்பரால் காவல் அழிந்தது!

அறநூல் எல்லாம் அறைநூல் ஆயின!
மறநூல் ஒன்றே மதிக்கப் பெற்றது!

புத்திலக் கில்லா மக்கள் புரைந்ததால்
பத்திலக் கங்கள் ஆட்சியைப் பற்றின.

செய்தித் தாள்களோ பொய்த்துத் தள்ளின.
உய்தி யின்றி மக்கள் உலைந்தனர்.

அகப்புலம் இருண்டும் ஆவி கழன்றும்
புகப்புலம் அறியாப் புல்லுடல் மாக்கள்
அறமல் வழிகளில் பொருளை ஆக்கித்
திறமில் வாழ்க்கைத் தெளிவற் றிழிந்தார்!

இன்னநிலையில் வளர்ந்தன எவையெனின்
மின்னாற் றலினால் மிளிர்ந்திடும் பொறிகள்!
கட்டிட மலைகள்! கயமைச் செயல்கள்!
பட்டினும் மயிரினும் பகட்டிலும் ஆடைகள்!
கொலைசெய் கருவிகள்! கொடுமை உளங்கள்!
கலைவினைக் கூடம்! கயமை மாந்தர்கள்!
வண்டிகள்; ஊர்திகள்; வளமிலா உடல்கள்!
பெண்டிர் மீசைகள்! பிள்ளைப் பேறுகள்!
மேனி மினுக்குகள்! கூனல் முதுகுகள்!
தீனிப் பண்டங்கள்! தெருத்தொறும் குப்பைகள்!
உடல்தெரி உடைகள்! ஊத்தைச் சதைகள்!
குடல்வலி மருந்துகள்! கொண்டைப் புனைவுகள்!
களிகொள் காமக் கதைப்பொத் தகங்கள்!
குளியல் பூச்சுகள்! நீச்சற் குளங்கள்!
பிறந்த மேனியாய்ப் பெண்டிரை ஆட்டும்
திறந்த அரங்குகள்! திக்குவாய் இசைகள்!

ஆண்பெண் உறவை அம்பல மாக்கும்
மாண்பிலாக் கதையின் மலிவிலை நூற்கள்!

வாய்வலி கண்டோன் வறுமொழிப் பாட்டைப்
பேய்இடு கூச்சலாய்ப் பிதற்றிடும் பண்கள்!

இத்தகு நாட்டின் இசைவிலா ஆட்சியால்
எத்தகு விளைவுகள் எதிர்ந்திடு மென்று
நல்லோர் ஒருசிலர் எண்ணி வருந்தி
அல்லும் பகலும் ஆராத் துயரினில்
மூழ்கிக் கிடப்பதை யாவரும் அறிவர்!
மாழ்கிக் கிடக்கும் மயக்கம் உற்றவர்
அறிகிலார் எனினும் அருள்உள் ளத்தால்
அறிஞர் யாவரும் அறிகுவர் அன்றோ!

இழிநடை போடும் இத்தகு நாட்டின்
பழிமிகு வாழ்க்கைப் பாதையை மாற்றி
உயர்வுறு நெறியை உள்ளுவர் உள்ளம்
மயர்வுறு காட்சி காண்ட தாகலின்
அத்தகு நினைவிற் காற்றல் மிகுதி!
எத்தகு விளைவையும் இவர்மனம் விளைக்கும்!
வேரிலா வாழ்க்கை; வினையிலா ஆட்சி!
நேரிலாக் கொள்கை; நிலையிலாப் போக்கு!
உரிமைகொல் சட்டம்; உலைவிலாத் துன்பம்!
நரிகளின் சூழ்வால் நாய்களும் ஆளும்
கோணல் அரசியல் வாழ்க்கையே விரைவில்
மாணப் புரட்சியை விளைக்க வல்லது!
உரிமை யிறந்த வாழ்க்கையை ஒருசிலர்
பெரிதென் றுவப்பினும் சான்றவர் பேணார்!

தமிழ்மொழி தனித்தது; இனித்தது; தாழ்விலாத்
தமிழ்ப்பண் பாடும் தனித்தது; சிறந்தது!
தமிழ்மொழி சிறப்பின் தமிழ்த்திறம் சிறக்கும்!
தமிழ்த்திறம் சிறப்பின் தமிழகம் பிரியும்!

உறுதி யிவ்வுரை உறுதியிக் கொள்கை!
உறுதி யன்றெனின் உண்மை யன்றெனின்
இனிவருந் தமிழகம் என்முகத் துமிழ்க!
இனிவருந் தமிழர் என்பெயர் மறக்க!
இன்றிலை; நாளையும் இல்லையென் றேகினும்
என்றா கிலும்எந் தமிழகம் தனியே
பிரிந்திடல் உண்மை! பிரிந்திடல் உண்மை!
உரிமை பெற்றே உயர்வதும் உண்மை!

அற்றை நாள் நினைந்தே நடையிடுகின்றேன்!
இற்றை நாள் நாமிடும் வித்தே இனிவரும்
வளஞ்சேர் தமிழகம் வளரச் செய்வது!
மணஞ்சேர் தமிழகம் மலரச் செய்வது!
உள்ளத் தனல்பெற இதனை உரைப்பேன்!

கொள்ளத் தகுவார் இவ்வுரை கொள்க!
எள்ளி யுரைப்பார் எள்ளுக! எங்கோள்

பொறியாய் எரியாய்க் கனலாய் அனலாய்க்
குறிபெறச் சிதறுக! புயலுருக் கொள்க!
பொய்ம்மையும் கயமையும் பொடிப்பொடி யாகுக!
மெய்ம்மையே யாண்டும் மேலுறப் பொலிக!
அற்றைத் தமிழக அன்புறு மக்கள்
இற்றைத் தமிழரை நினைந்தே இரங்கிக்
கடைவிழி ஒருதுளிக் கண்ணீர் வடிக்க!
விடையிதே அன்பர் விடுத்தஅம் மடற்கே!

**-1965**

## 42 பூக்கட்டும் தமிழருளம்!

பூக்கட்டும் தமிழருளம்; புதுக்கட்டும் உணர்வே!
பொருந்திவராப் பழமைகளைப் பொசுக்கட்டும்; புதுமை
தேக்கட்டும் தம்மறிவில்; திகழட்டும் பொதுமை!
தீமையெல்லாம் படிப்படியாய் மடியட்டும்! நல்லார்
ஊக்கட்டும் உயரறத்தை; உயிர்க்கட்டும் பண்பே!
உரமுடையார் தம்நெஞ்சில் ஊறட்டும் ஆற்றல்!
காக்கட்டும் செந்தமிழைச் செந்தமிழர் நாட்டை!
கருதட்டும் தன்னுரிமை; கனியட்டும் வாழ்வே; **1**

புலரட்டும் புதுப்பொழுது; பொன்வண்ணம் பாய்ந்து
பொலியட்டும் வானெல்லாம், கடல் மலைகள் எல்லாம்!
உலரட்டும் பழஞ்சோற்றுப் பொய்ச்சகதி யாவும்!
உறங்குகின்ற தமிழரெல்லாம் விழிக்கட்டும்! நெஞ்சில்
அலரட்டும் நல்லுணர்வு, பகுத்தறிவோ டாண்மை!
அயர்ந்திருந்த தோள்களெல்லாம் உயரட்டும்; மானம்
மலரட்டும்; சூழ்பகைமை மடியட்டும்! என்றும்
மங்காமல் ஒளிபெற்றுத் திகழட்டும் வாழ்வே! **2**

மணிவிழியின் இமைதிறந்து மங்கையரீர் வருக!
மாணிக்க இதழ்மலர்ந்து மாணவரீர் வருக!
அணியணியாய் இளைஞரெல்லாம் ஆர்வமிகக் கொண்டே
ஆர்ப்பரிக்கும் மறவரொடு போர்ப்படைக்கே வருக!
பணிபுரியுங் காலமிது; பைந்தமிழர் வாழ்க்கை
பறித்தெறிந்த கைகளையே முறித்தெறியும் காலம்!
துணிவதிர்ந்த தோள்களின்முன் பகைதூள்தூள்அன்றோ?
தோற்றவர லாற்றினை நாம் மாற்றிடுவோம் வாரீர்! 3

(வேறு)

ஏற்றுதற்கு விளக்கிருக்க இருள்சூழ்ந்த மனையுள்ளே
எந்தமிழர் இந்நாளில் வாழ்தலுற்றார்;
தேற்றுதற்கு வழியின்றித் திளைப்பதற்கு வாழ்வின்றித்
தேவையெனக் காலமெல்லாம் தேய்ந்துபோனார்!

ஆற்றுதற்குப் புலனறியாத் தலைவரெலாம் ஆளுக்கொன்
றன்னவர்பால் எடுத்தெடுத்துச் சொல்லலானார்!
மாற்றுதற்கு மனமிலையா? உரமிலையா? வழியிலையா!
மறநெஞ்சே விழித்தெழுவாய்! இன்றே! இன்னே!

-1965

## 43 ஆர்த்த முரசே அறை!

*கூர்த்த மதியுடையார் கூடித்*
*தமிழகமேல்*
*போர்த்த பகைகடியப் பொங்கினார்*
*என்றேநீ*
*சீர்த்த அரிமாப்போல் செங்கட்*
*புலியேபோல்*
*ஆர்த்த முரசாய் அறைவாய்*
*தமிழ்மகனே!*

**-1966**

## 44 மானக்கொடி ஊன்றுக!

*அடியெடுத்த ஆரியரால் ஆங்கிலரால் வடவரினால்*
*அருந்தமிழர் பட்ட தீங்கைப்*
*படியெடுத்தே அளந்தாலும்*
*பெருந்துலையால் நிறுத்தாலும்*
*பாரோர்க்குப் பங்கிட் டாலும்*
*துடிதுடித்த நெஞ்சளவில் துளிதீர்மோ? தமிழினத்தின்*
*துயர்தீர்மோ? விடிவு நேர்மோ?*
*இடியெடுத்த நெஞ்சத்தீர்! மறக்குலத்தீர்! தமிழ்மானம்*
*இலங்குகொடி ஊன்று வீரே!*

**-1966**

## 45 நெஞ்சு இனிக்குமா?

"எந்தமிழர் அரசேற்றார்; எடுத்தவினை
முடித்திட்டார்; இருளைச் சீய்த்தார்;
செந்தமிழை முடிவைத்தார்; செய்தொழிலால்
தமிழ் நிலத்தைச் சிறக்கச் செய்தார்;
தந்தபயன் அளவில்லை; தம்புகழ்க்கும்
வரையில்லை; தகவாம்" என்றே
எந்தநொடிச் செவிமடுப்போம்; இளைத்தவுடல்
பூரிப்போம்; இனிப்போம் நெஞ்சே!

**-1966**

## 46 அரசியல் குழப்பம்!

மொழித்தெளிவும் பெறமாட்டீர்! செய்தித்தாள்
சிறுநூல்கள் எல்லா வற்றும்
பழித்தவுரை வரைகின்றீர்! பண்பிழந்தே
எழுதுகின்றீர்! பணத்தைச் சேர்த்தீர்!
வழித்தெளிவும் கொளமாட்டீர்! அரசியலை
வளர்ப்பதுவாய்க் குழப்பு கின்றீர்!
விழித்தெழவும் விரும்புகிலீர்; என்னபயன்
விளைத்திடுவீர் தமிழ்நாட் டிற்கே!

**-1966**

## 47 என்னென்று சொல்வோம்?

துறக்கமென்பார்; இறைப் பணியென்பார்; அன்பென்பார்;
தொலைசென்று கற்றவர் என்பார் — கண்
உறக்க மிலாதுயிர்த் தொண்டென்பார்; பணியென்பார்
உலகெலாம் ஒன்றென ஆர்ப்பார்!
சிறக்க வுண்பார்; உடுப்பா ரருஞ் செயல்களைச்
சிறப்புறச் செய்தனம் என்பார் — ஆனால்
பறக்கும் பறவைக்கும் விலங்குக்கும் இல்லாத
பல 'சாதி'ப் பிரிவுகள் கொள்வார்! 1

வளியும் எழுசுடர் ஒளியும்ஆய் வார்;கடல்
வண்ணமும் மண்ணையும் ஆய்வார் — புற
வெளியும் உலாவி விண் கோளுக்குஞ் சென்றுயிர்
வீழ்வையும் வென்றனம் என்பார்!
வளியும் மடமை யிலாதெங்கும் ஓட்டியே
தோற்றுவோம் புத்துல கென்பார் — ஆனால்
நெளியும் புழுவுக்கும் பாம்புக்கு மில்லாத
நெடுஞ்'சாதி'ப் பிரிவுகள் கொள்வார்! 2

மருவறப் பேணுக உடலென்பார்; உளமென்பார்!
மற்றுயிர் போற்றுக வென்பார்! — நிலத்
தொருவருக் குணவிலா திருந்திடில் உலகத்தை
ஒழித்திடு வோம்;உண்மை யென்பார்!
தெருவற ஊற்ற நாள்தோறும் கூட்டங்கள்
திட்டங்கள் பற்பல செய்வார் — ஆனால்
கருநிறக் காக்கைக்கும் கழுகுக்கும் இல்லாத
கடுஞ்'சாதி'ப் பிரிவுகள் கொள்வார்! 3

எவர்முகங் கண்டாலும் இழி'சாதி'க் குறிகள்; ஈங்
கெவர்பெயர் பின்னுக்கும் வால்கள் — தெருச்
சுவர்களில் இல்லக் கதவுகள் தம்மிலுஞ்
சூழ்ந்தன இழி'சாதி'ப் பேய்கள்!
அவ்ரவர் குலத்துக்குத் தனித்தனிக் கழகங்கள்!
அவரவர் குலத்துக்குப் பள்ளி — கற்ற
எவரெவர் ஆனாலும், குலவெறித் தீமைக்கே
இழக்குவர்! என்னென்று சொல்வோம்!

-1966

## 48 தானே அழியும் தமிழன்!

தமிழனைப் பிறர் யாரும்
தாழ்த்தவில்லை — அவன்
தம்பியே தாழ்த்துகின்றான்! — இந்தத்
தமிழனைப் பிறர் யாரும்
வீழ்த்தவில்லை — அவன்
தமையனே வீழ்த்துகின்றான்!

தமிழனைப் பிறர் யாரும்
சுரண்டவில்லை — இந்தத்
தமிழனே சுரண்டுகின்றான்! — இங்குத்
தமிழனைப் பிறர் யாரும்
கெடுக்கவில்லை — அவன்
தனயனே கெடுத்து நிற்பான்!

தமிழ்நாட்டைப் பிறர் யாரும்
ஆளவில்லை — இந்தத்
தமிழனே அடிமை தந்தான்! — இன்று
தமிழையும் பிறர் யாரும்
சிதைக்கவில்லை — இந்தத்
தமிழனே சிதைத்து நிற்பான்!

தமிழ்ப் பண்பைப் பிறர் யாரும்
குலைக்கவில்லை — இந்தத்
தமிழனே குலைத்து நிற்பான் — நல்ல
தமிழ்மானம் தனையாரும்
வாங்க வில்லை — இந்தத்
தமிழனே விற்றுவிட்டான்!

தமிழனைப் பிறர் யாரும்
வளைக்க வில்லை! — அட,
தமிழனே குனிந்து கொண்டான்! — இங்குத்
தமிழனைப் பிறர் யாரும்
ஏவவில்லை — இந்தத்
தமிழனே பணிந்து விட்டான்!

**-1967**

## தமிழர் திறம்...!

தமிழரிற் சிலருடை உள்ளமே தனிவகை!
அமிழ்தினும் இனித்திடும் அன்பையும் சொரிகுவார்;
அயர்ந்திடும் பொழுதினில் அகத்துவாள் செருகுவார்!

உயர்ந்திடும் வகையெனில் 'உயிர்'என நெருங்குவார்;
உழைப்பினைத் தருகெனில் ஊடலென் றொளிகுவார்!

அழைப்பினும் தவிர்ப்பினும் 'உரிமை'என் றலப்புவார்;
அகத்தினில் ஒன்றுவைத் தாயிரம் சிலம்புவார்!

முகத்தொடு முகம்படப் புரளினும் புரளுவார்;
முரண்படிற் பலர்வயின் முன்னவை கிளறுவார்!

'பரண்'அள வுயர்ந்ததைப் பாதையில் கிடத்துவார்!
பாதையில் எறிந்ததைப் பார்த்தெடுத் துயர்த்துவார்!

'தாதையும் அன்னையும் தமரும்நீர்' — என்பவர்;
தவறினைக் கடிந்திடில் 'நீவிர்யார்' — என்னுவார்!

உவர்ப்பதும் இனிப்பதும் ஒன்றுதாம் என்பவர்;
உளங்கசந் தோமென உரைதரா தொதுங்குவார்!

குணங்களே காணுவார்; கோணலுற் றொதுங்கிடில்
குறைகளே பரப்பிநற் குணங்கெடத் தூற்றுவார்!

"அறைகுவோம்; —மக்களுக் கடிமை,யாம்; தொண்டினுக்
காவியோ டுடல்பொருள் ஆக்குவோம்" — எனப்பல

கூவுவார்; அரற்றுவார்; குவிபொருள் வாய்த்திடில்
தூவுவார் பழியுரை; தூற்றுவார்! அவர்திறம்
நாவினால் உரைக்கவும் உளம்,உயிர் நடுங்குமே!

-1967

அன்புள்ள பாவேந்தே! வணக்கம். இங்கே
அனைவருமே நலமெனினும், ஐயா, நீங்கள்
தென்புதுவைத் திருமண்ணை — தமிழகத்தைத்
தீந்தமிழர் தமைப் பிரிந்த நாளி னின்று
தென்பில்லை உளத்தினிலே! ஊக்க மில்லை;
திருவளர்ந்த தமிழகத்தில் செழிப்பு மில்லை;
அன்பில்லை தமிழர்க்குள்; ஆர்வ மில்லை;
அனைத்துலக வாழ்க்கையிலும் அமைதி இல்லை! 1

முன்பிருந்த நிலையறிவீர்; தமிழர் அன்றே
மூளிகளாய் நின்றதுவும் தெரிந்தி ருப்பீர்;
என்பிருந்த தோல் உருவாய்ச் சதை, நார் இன்றி
எள்ளளவும் மானமின்றிச் சுரணைஇன்றித்
தன்பிறந்த நாடு, மொழி, மக்கள் என்ற
தன்னுணர்வு சிறிதுமின்றித் தமிழர்வாழும்
துன்பிருந்த சூழ்நிலையை அறிந்தி ருப்பீர்!
துளியேதும் மாற்றமில்லை; நிலைஅவ் வாறே! 2

சோற்றுக்கு மடிவிரிக்கும் புலவர் கூட்டம்!
சுரண்டுகின்ற வாணிகர்கள்! அடிக்கும் மென்மைக்
காற்றுக்கும் தாங்காத குடில்வாழ் மக்கள்!
கண்ணீர்க்குப் பஞ்சமில்லை; பழம் விளக்கு
மாற்றுக்குக் குஞ்சமெனப் பதவி, பட்டம்!
பகற்கொள்ளை! கலைக்கொலைகள்! பெருகும் மக்கட்
பேற்றுக்குக் குறைவில்லை; சவலை, நோஞ்சற்
பிள்ளைகளோ கணக்கில்லை! உணவுப் பஞ்சம்! 3

உண்மைக்கு மதிப்பில்லை; பொய்யு ரைக்கும்
உலுத்தஅர சியல்வாழ்க்கை; நீங்கள் மெச்சும்
பெண்மைக்குச் சிறப்பில்லை; பிறழ்ந்த தாண்மை!
பேயாக அலைந்துபணந் திரட்டும் கீழ்மை!
திண்மையில்லை உள்ளத்தில்! தொண்டிங் கில்லை;
திறமுமில்லை; கல்வியிலும் ஆழ மில்லை.
அண்மையிலே அமைச்சரவை மாறிற் றிங்கே!
அதன் விளைவை அடிக்கடிநான் அறிவிக் கின்றேன். 4

வரிமேன்மேல் பெருகிற்று; நலத்தைக் காணோம்.
வாய்நிறையப் பேசுகின்றார்; செயலைக் காணோம்.
செரிமானக் குறைவுமுண்டு செல்வர் பாங்கில்!
சிக்கனஞ்செய் வார்பெண்கள் ஆடை தன்னில்!
அரிமாப்போல் முழங்கினிரே 'இந்தி'க்காக!
அந்நிலைதான் இன்றுவரை ஆனால் ஐயா,
வரிமாப் போர்; களிற்றுப்போர்! இரண்டாண் டின்முன்
வாய்த்ததொரு மாணவப்போர்! தமிழ்மொ ழிப்போர்! 5

'தமிழியக்கம்' தந்தவரே! தமிழைக் காக்கத்
தமிழகத்து மாணவர்கள் எழுந்த காட்சி
சிமிழ்க்காத பெருமுனைப்பு! அடடா! அற்றைச்
சேரர்சோ ழப்படையோ பாண்டி நாட்டின்
குமிழ்த்தெழுந்த போர்முழக்கோ என்னு மாறு
கூடியதும் அலைத்ததுவும் தமிழைக் காக்க
அமிழ்தான உயிரிழந்த மாட்சிதானும்
அழியாத வரலாறு! சலியாக் காதை! 6

வெடிக்கின்ற துயராகத் தமிழ கத்தின்
வீழ்ச்சிபல இருந்தாலும், இக்கா லத்தும்
படிக்கின்ற மாணவர்க்குத் தமிழ்மேல் நாட்டம்
படிப்படியாய் மிகுந்துவரக் காண்கின் றேன்,நான்!
துடிக்கின்ற இளமையிலே அறிவு மேய்ச்சல்
தொடங்கிவிட்டால், செந்தமிழ்ப்பால் அருந்திவிட்டால்
அடிக்கின்ற புயல்காற்றும் ஒடுங்கிப் போகும்!
அடுத்துவரும் தலைமுறையும் நிமிர்ந்து நிற்கும்! 7

மெய்யாக உரைக்கின்றேன்; ஐயா, உங்கள்
மேனாளின் பேருழைப்பு — தமிழ்வே ளாண்மை
பொய்யாகப் போகாது; முளைத்துக் காய்த்துப்
புடைதிரண்டு கனிந்துபயன் தருதல் உண்மை!
உய்யாமல் நின்றிருந்த தமிழர் கூட்டம்
உணர்ந்தெழுந்து சிறப்பதுவும், இதுநாள் மட்டும்
எய்யாமல் இருந்தபெரும் புகழ்அ னைத்தும்
எய்திடவாழ்ந் திருப்பதுவும் பெருத்த உண்மை! 8

இக்காலத் தமிழகத்தில் இருக்கும் தீமை
எதிர்காலத் தமிழகத்தில் இருக்கா தென்பேன்!
திக்காலுக் கோரிருவர் என்றில் லாமல்
திரண்டிருப்பார் தமிழ்த்தலைவர்! தமிழர் கூட்டம்
தக்காரின் மொழி கேட்கும்; தகவே செய்யும்!
தம்கடமை அறமுடிக்கும்; தமிழைக் காக்கும்!
அக்காலிற் குலப்பிரிவு, சமயக் கூச்சல்,
அடிதடிகள் அருவருப்பு அறவே நீங்கும்! **9**

தமிழ்ப் பண்பு தலையெடுக்கும்; ஒடுங்கும் கீழ்மை!
தண்டமிழில் பெருங்கலைகள் ஊற்றெ டுக்கும்.
உமிழ்தக்க தீயவரும் பிழைஉ ணர்ந்தே
உயர்ந்தோரும் பாராட்டத் திருந்து வார்கள்!
கமழ்பெருக்கும் தமிழ்மனமிவ் வுலக மெல்லாம்!
கன்னியர்க்கும் இளையோர்க்கும் மெய்ம்மைக் காதல்
அமிழ்தூற்றுப் போல்பெருகும்; பெருகும் வாய்மை!
அனைத்துலகும் ஒன்றென்னும் நினைவுண் டாகும். **10**

பொருள் மேய்ச்சல் விலகிப்போம்; பொய்செத்துப்போம்;
புத்துலகத் தொடர்புவரும்; அறிவு வீறும்!
இருள் விலகும்; ஒளிபிறக்கும் தமிழர் வாழ்வில்!
ஏமாற்று வெறும்பேச்சு தொலைந்து போகும்.
அருள் மலரும்; அன்பூறும் செயலில் பேச்சில்!
அனைவருமிங் கொருநிறையென் றறம்பி றக்கும்.
மருள்வாழ்க்கை போயொடுங்கும். வறுமை மாயும்.
மாளாத இலக்கியங்கள் சுரப்பெ டுக்கும்! **11**

முடிவாக ஒருசெய்தி! தமிழர் வாழ
முழுவாழ்வும் உழைத்தீர்கள்; மனைவி மக்கள்
விடிவாக ஒருநலமும் தேட வில்லை;
விளைவின்றி அவரின்று வாடு கின்றார்.
அடிவாழைக் கன்றுக்கிங் காக்க மில்லை!
அவர்க்காகக் கண்ணீர்விட் டழுகின் றேன்நான்.
மடியாத தமிழுணர்வே! மலையா நெஞ்சே!
மாளாத புகழ்க்குன்றே! வணங்கு கின்றேன்! **-1967**

## 51 ஒற்றுமை பூக்காது!

முற்றும் மதிகெட்ட மூட வடபுலத்தீர்!
குற்றுமியை மேன்மேலுங் குத்திச் சலிப்பதுபோல்
ஒற்றுமை என்றும், ஒருமைப்பா டென்றுமே
வெற்றுரை பேசிடுவீர்; வீணே செயல்புரிவீர்;
செற்றுச் சிதைத்திடவே சட்டங்கள் செய்திடுவீர்.
பற்றின்(றி) இதனைப் பகர்கின்றேன்; பார்ப்பானின்
வெற்றுடலில் பூணூல் விளங்குவரை, அந்நெஞ்சில்
முற்றியுள "சாதிமத" முட்காடிங் குள்ளவரை,
அற்றை "மனுநூல்" அழியுவரை - இந்நிலத்தே
ஒற்றுமையும் பூக்கா(து); ஒருமையுளம் காய்க்காது;
மற்றிந்த மக்கள் மனங்கனிய மாட்டாது;
கற்றறிந்தும் மீட்சியில்லை; காண்!"

-1967

## 52 தமிழரிடை உணர்வுண்டோ?

வான்முட்டப் பேசுகின்றார்; கைதேய எழுதுகின்றார்;
பாடுகின்றார்; வருவாய் என்றால்
தேன்சொட்டுக் கங்காந்த
சிறுநரிபோல் கொள்கையெல்லாம்
தீயிலிட்டுப் பொசுக்கி விட்டுக்
கூன்தட்டக் குனிகின்றார்; குடும்பமெனக் கூறுகின்றார்;
காரணங்கள் கோடி சொல்வார்!
ஊன்கெட்ட தமிழரிடை
உணர்வுண்டோ? குருதியுண்டோ?
சூடுண்டோ? ஊர்த்தொண் டுக்கே!

-1968

## கூற்றை விளித்தனரோ?

தமிழ்ப்பகை ஆயிரம் சேர்வதுண்டோ? தமிழ்த்
தாயை மறுப்பதுண்டோ? — அவள்
தலையை அறுப்பதுண்டோ? — உடன்
சிமிழ்த்தெழுவாய் தமிழா! நறுந் தாய் துயர்
சேயும் பொறுப்பதுண்டோ? — இட
நேரம் நிறுப்பதுண்டோ?

எத்தனை ஆயிரம் காலமடா தமிழ்க்
கின்னல் விளைத்திருப்பார்? — தடை
பண்ண முளைத்திருப்பார்? — எறும்
பத்தனையே அவர் சேர்ந்திடினும், களி
றேற்றை வளைத்தனரோ? — பெருங்
கூற்றை விளித்தனரோ?

ஒத்திருப்பார் ; பிழைப்பார்; எனஎண்ணினை!
ஊறு நினைந்துவிட்டார் — சின
ஊற்றில் நனைந்துவிட்டார்! — இனிச்
செத்துவிட்டார்; பிழையார்; என எண்ணிடு;
சீறி இணைந்துவிட்டால் — ஒரு
சேர முனைந்து விட்டால்!

-1968

ஓ!
திரைப்படக் காரரே!
திரைப்படக் காரரே!
புரைசெயும் குமுகாயப்
புழுக்களே! ஓ!ஓ!
கறைசெயும் மன்பதைக் கைகளே! இருளில்
மறைந்திருந் தென்றும் மக்களை உறிஞ்சிக்
கொழு கொழு வென்றே கொழுத்துத் திரியும்
தொழுநோய்ப் புழுக்களே! திரைப்படக் காரரே!

கதை — எனும் பெயரால் காமக் கழிசடைப்
புதையினுள் மூழ்கிப் புரண்டபட் டறிவால் —
கற்பனை என்னும் கசிகின்ற சீழை
ஓட்டைத் தூவலில் ஊற்றிக் கொண்டு
பெங்களூர் உதகை குற்றாலம் எனப்போய்த்
தங்கி யிருந்தே 'தறுதலை' மொழியில்
உளறிக் கொட்டி ஊர்கெடுப் போரே!
களரில் முளைத்த கள்ளிச் செடிகளே!

பாட்டு — எனும் பெயரால் படுக்கை யறையினில்
காட்டுக் கழுதைபோல் கட்டிப் புரண்ட
நிகழ்ச்சியை எல்லாம் நீட்டி முழக்கி
இகழ்ச்சி சேர்க்கும் இழிதகை யோரே!

இசை — எனும் பெயரால் கெக்கலி இரைச்சலைப்
பிசைந்து திரட்டி குரல்தின வடக்க
'ஏஏ' என்றும் 'ஓஓ' என்றும்
கோவேறு கழுதைக் குரலில் ஒலித்து
வீட்டுக்கு வீடு விளங்குவா னொலியில்
காட்டுக் கூச்சலைக் காது புளிக்க
அளித்திடும் கயவரே! அரைகுறை மாந்தரே!
புளித்திடும் கழுநீர்ப் பானைவீழ் வோரே!

கொள்ளை யிடுபணம் கோடிக் கோடியாய்
மொள்ளைத் திரைப்படப் பிடிப்பினில் மூழ்க்க,
அவலுக்குப் பொக்கையன் அலைவது போல

இவளுக்கும் அவளுக்கும் இராப்பகல் அலைந்து
கட்டிலில் கண்டு காலைப் பிடித்துக்
கொட்டிக் கொடுத்துக் குமுகா யத்தைச்
சிதற அடிக்கும் முதலாளி மாரே!

நடிப்பெனும் பெயரால் — நள்ளிராப் பகல்,படப்
பிடிப்பெனும் பெயரால் — பேய்மகள் ஒருத்திக்குத்
தொய்ந்திடு மார்பகம் தூக்கிக் கட்டிக்
கொய்த இளமை எய்த உடுத்தித்
துவண்ட இடையினைத் துவளா நிறுத்தி
அவல விழிக்கு மையிட் டெழுதி
குழிந்த கன்னத்து மண்குழை அப்பி
இழிந்த தோற்றத்தை எடுப்பாய்ப் புனைந்து

கெக்கலி செய்யும் கோணையன் ஒருவனோ
டொக்க நிறுத்தி "ஊஊ" வென்றே
ஊதற் காற்றில் உடல்நடுங் கிடல்போல்
மோதச் செய்வதும், முகத்தொடு முகத்தைத்
தேய்க்கச் செய்வதும், தேக்கிய நீரில்
பாயச் செய்வதும் அமெரிக்கப் பாணியில்
ஆடச் செய்வது மாக, — ஊர் கெடுக்கும்
பேடியர் பெற்ற பேடன் மாரே!
இயக்குநர் என்னும் வயக்கொடி யோரே!

தாயெனும் பெயரால் தகவிலா ஒருத்தி,
சேயெனும் பெயரால் பெற்றுப் போடக்
கன்னிப் பெண்ணாய்க் கனிந்த காலை,
சென்னைத் தெருக்களில் தன்னை விற்றுத்
திரைப்படப் பிடிப்பகம் கறைபட நுழைந்து
உரை, செயல், முதலா உடல்பொய்த் தொழுகி
செல்வம் புரளும் கைகளில் உருண்டே
அல்லும் பகலும் அரங்கம் ஏறி
மைவிழி சுழற்றி எழுதுஇமை நெரித்துப்
பொய்யின் புனைந்த மெய்படக் காட்டிக்
கணக்கிலாக் கயவோர் பிணைய உடன்பட்டு
மணங்கொள் பெண்டிர் மயக்குற ஆடிப்

பண்பெனும் நெறிமுறை புண்படச் செய்த
நடிகை யோரே! நடிகை யோரே!
பெண்ணாய்ப் பிறந்த பெறலருஞ் சிறப்பை
மண்ணாய்ச் செய்யும் நடிகை யோரே!

'நடிப்பெனும் பெயரால் நண்டுவாய்க் காலியின்
கொடுக்குள் போலக் காலையும் கையையும்
நீட்டி மடக்கலும் நெடுங்கூத் தாடலும்
மேட்டிலும் பள்ளத்தும் மேனி உருள்வதும்

குழையக் குழையத் தெருநாய் போல
இளைய பெண்டிரை வளைய வருவதும்
பஞ்சுப் பொதிபோல் படுத்துப் புரள்வதும்
சினைத்த பன்றிபோல் உறுமித் திரிவதும்
கனத்த குரலில் காட்டுக் கத்தலாய்
ஓலம் இடுவதும், புழுப்போல் உடலை
நெளிப்பதும் சுழிப்பதும் நெட்டுயிர்ப் புறுவதும்
நாண மின்றிக் குரங்குக் குட்டிபோல்
கோணங்கித் தனங்கள் செய்வது மாக
இளையோர் மனத்தை அலையச் செய்யும்
நடிகன் மாரே! நடிகன் மாரே!
வடியா இழிமொழி மலவாய் பிலிற்றும்
விடியாத் தமிழக நடிகன் மாரே!

கலை — எனும் பெயரால் காட்டும் திரைப்படக்
கொலைக்களம் போகிப் பொழுதினைக் கொல்லும்
திரைப்படப் பித்தரே! திரைப்படப் பித்தரே!
சிறைப்படும் உள்ளமும் உயிரும் சிதைத்தே
கழிசடை நடிகையின் காமத்தோற் றத்தைப்
பழியிலா ஓவியம் எனவே வாங்கிச்
சுவரிலும், கதவிலும், சுவடிக் கிடையிலும்
உவப்புறச் சட்டைப் பையிலும் வைத்து
நாளும் அழுகிடும் உள்ள நைவினால்
மேலும் மேலும் சிதைந்தழி கின்ற
திரைப்படப் பித்தரே! திரைப்படப் பித்தரே!
மறைவிலாக் கொட்டிய மலக்குவி யல்களே!

யாவரும் கேட்க இதைஉரைக் கின்றேன்:
(மேவன செய்கலால் தேவரும் கயவரே!)

உங்களை நீங்களே ஒழித்துக் கொள்ளும்
கங்குல் உலகமே திரைப்பட உலகம்!

நீங்களும் உங்கள் திரைப்படப் பெண்டிரும்
யாங்ஙன மேனும் கட்டிப் புரளுக!
ஒப்புதல் இல்லா ஒழுங்கினால் நீவிர்
எப்படி யேனும் புழுத்துச் சாகுக!

ஆனால் உங்கள் அறைகளில் நடப்பதை
ஏனோ மக்க ளிடையிலும் காட்டி
இளையோர் மனத்திலும் தீயுணர் வெழுப்பிக்,
களைகளாம் எண்ணம் கனிய ஊன்றினிர்?
காசுகள் பறிக்கக் கயமையைக் காட்டி
மாசுகள் வளர்த்து மனங்குளிர் கின்றீர்!

காம நினைவினை எழுப்பலோ கலைகள்?
தீமையை விளைப்பதோ திரைப்படக் கூத்து?
குயிலொப்பப் பாடும் குரலினுள் ஒருத்தியை
நயமிலாது அலப்பச் செய்வதோ இன்னிசை?
சென்னைச் சேரியில் மொழிவதோ செந்தமிழ்?
என்ன பயன்களை இவற்றால் செய்குதிர்?
மலத்தினால் சந்தன மணம்கூட் டுவதோ?
நிலத்தினால் மழைநீர் நிறந்திரி யாதோ?

நாணம் அறுந்த நங்கையைக் கொண்டு
மானம் இன்றி மார்புக் கச்சையை
இறுக்கக் கட்டி எடுப்பாய்க் காட்டினால்
முறுக்கடை இளைஞரின் மனம்முறி யாதோ?

கடைகெட்ட சிறுக்கியர் காம உணர்வினால்
தொடையைக் காட்டினால் மனம்துவ ளாரோ?

அமெரிக்க நாட்டில் அப்படிச் செய்தால்
எந்தமிழ் நாட்டிலும் இப்படிச் செய்வதோ?

சாய்க்கடை நீருக்குச் சருக்கரை இடுவதால்
போய்க்குடித் துவக்கும் புல்லரும் யாவரோ?

பண்புள்ள நாட்டைப் பாழ்செயப் பிறந்தீர்!
கண்படைத் திருந்தும் கால்மலம் மிதித்தீர்!
திரைக்குள் நடப்பது தெருவில் வருவதா?
புரைசெயும் மண்டையுள் புதைந்தது சாணியா?
ஆண்கள் என்ன உலா வருகின்றீர்!
மாண்பு தவிர்த்தீர்! மக்களைக் குழப்பினீர்!

திரைப்பட நாற்றம் தெருவெலாம் வீசும்!
நரைத்த கிழவரும் நல்லிளை யோரும்
குரைக்கும் நாய்களும் கூட்டத்துப் பன்றியும்
திரைப்படப் பாட்டையே பாடுவ தன்றி
வேறொரு பாட்டை விளம்பக் கேட்டிலமே!
கூறு கூறாகத் தீமையைக் கொட்டினீர்!
வாருதற் கெத்தனை அறிஞர் வந் திடினும்
சேர்ந்துள குப்பையைக் கூட்டுதல் ஒல்லுமோ?

‘டப்பாங்’ குத்துப் பாடலைத் தவிர
ஒப்புங் கருத்திலோர் பாடலை யேனும்
திரைப்படப் பாவலன் என்னுமோர் தீயன்
உரைப்பக் கேட்டமா? உலகம் பொறுக்குமா?
பாட்டுக்கு ‘ஆயிரம்’ பறிப்ப தல்லால்
நாட்டுக்கு வந்த நன்மை என்ன?
உலகம் உருப்பட உயர்ந்த கருத்தில்
இலவயப் பாடல் எழுதும் பாவலர்
அருந்தமி ழகத்தில் ஆயிரம் இருக்க
அருந்துங் குடிமயக் குற்ற உளறலைப்
பாட்டென வாங்கிப் பசுமை மனங்களில்
கேட்டை வளர்க்கும் கேடரே! கேட்க;

உங்கள் மனைவியும் மகளும் ஒழுங்கிலா
தெங்கணும் நாய்போல் இழிந்து திரிவதை
ஒப்புமோ உள்ளம்? ஊர்ப்பெண்டிர் வேறோ?
தப்புமோ தரையினை அறைந்தவன் தன்கை?’

தெருத்தொறும் எங்கும் திரைப்பட விளம்பரம்!
பருத்துள மார்பகம்! பாதிமே லாடை!
இடைத்துணி நழுவிட இளிக்கும் பெண்களின்
தொடைதெரி வதுபோல் பெருஞ்சுவ ரொட்டிகள்!

துவண்டபெண் ஒருத்தியைத் தோள்மேல் தூக்கல்போல்
கவண்போல் இரண்டு கால்களை விரித்து
நீட்டிப் படுத்துள நிலையினில் ஒருத்தி —
ஏட்டில் இயம்பொணா இழிந்த காட்சிகள்!

திரைப்படச் செய்திகள் வெளியிடும் இதழ்களோ
சிரைத்த மயிர்த்திரள்! சேற்றில் மலக்குழை!
அட்டைப் படமுதல் அடுக்கடுக் காக
ஒட்டடைப் படைபோல் ஒவ்வொரு பக்கமும்
திரைப்பட நடிகையின் அரையுடைத் தோற்றம்!
உரைகளே — அவர்தம் உணவுகள், உடைகள்,
புனைவுகள், திருமணப் புனைந்துரை, வாழ்க்கை,
கனவு நினைவுகள், கருக்கொண்ட செய்திகள்
இன்னும் பலப்பல இழிவுபற் றியன!
இன்ன செய்தியால் விளைகின்ற தென்ன?
மக்கள் பெறுகின்ற மனஇழிவு எத்தனை?
தக்கவோர் மன்பதை உருவா கிடுமா?

இன்ன கழிசடை இதழ்களை நடத்துவோர்
அன்ன செய்தியால் பயன்பெறல் அல்லால் —
விளம்பரப் பயனால் நடிக நடிகையர்
வளம்படல் அல்லால், வருகின்ற பயன்ஓர்
எள்மூக் கத்துணை — எறும்புமூக் கத்துணை
மக்களுக் காகிலும் நாட்டுக் காகிலும்
தொக்கக் கிடைக்குமா? துயரன்றோ மிச்சம்!
திரைப்படத் துறையே கறைப்பணத் தொட்டி!
வரைபடத் திருத்துதல் கடினம் என்பதால்
குறைகளை மலையாய்க் குவிய விடுவதா?
கறைகளைக் கலையெனப் போற்றிக் காப்பதா?

வெள்ளிப் பணத்தை வீசுவ தாலே
குள்ளச் செய்கைக்கு யாவரும் குனிவர்
என்பதற் காகப் பண்பை இழப்பதா?

அன்புதான் எதற்கு?மற் றறிவுதான் எதற்கு?
பண்புதான் என்ன? பணமே பயனா?
பெண்மை திரிந்திடில் ஆண்மை பிழைக்குமா?

காதல் என்றொரு தூய உணர்வினை
ஓதல் நல்லதோ? உணர்தல் நல்லதோ?
இடையிலும் மார்பிலும் இணைவதோ காதல்?
தொடையிலும் வயிற்றிலும் தெரிவதோ காதல்?
கற்பனை இல்லாக் கயவோர் தம்கதை
விற்பனை யாகிடச் செய்யும் விரகிது!

“கோப்பையில் குடிபுகும்” கூவத்துப் பாவலன்
ஏப்பம் விட்ட வாடையில் எழுதும்
ஒற்றை வரிக்கே ஒருநூறு என்றால்
அற்றைப் புலவரின் அழியா இலக்கியப்
பாடலுக் கெத்தனைக் கோடி படைப்பது?
ஊடலும் கூடலும் அவற்றில் இல்லையா?

புதுவைப் புலவன், புரட்சிப் பாவலன்
எதனைப் பற்றி எழுதிட வில்லை?
காதலைப் பற்றி உரையாக் கருத்தெது?
தீதாய் ஒருவரி தேர முடியுமோ?

பெண்மையின் மறைவைப் பிட்டுக் காட்டுதல்
பெண்மையின் சிறப்பை மண்ணிட்டுப் புதைக்கும்!
காமப் புனலுள் நீச்சல் கற்றவன்
ஏமக் காதலை விளம்புதல் எப்படி?
தெருக்கூத்துக் கோமாளி திரைப்படம் நுழைந்தால்
ஒருகூத்துக் கொருகூத்து ஒப்பாரி! ஆலோலம்!

‘சுசீலா’ என்றொரு குயிலிசைக் குரலியை
மசாலைப் பாடல்கள் பாடச் செய்வது
குழலினால் மலத்தைக் குழைப்பது போலாம்!

பழகு தமிழிசைப் பாடலைப் பாடினால்
எத்தனைத் தமிழ் உளம் இன்பத்தில் மிதக்கும்?
எத்தனைத் தாழ்வுளம் இதனால் உயரும்?
'தமிழுக்கும் அமுதென்று பேர்' எனும் பாடலைக்
கமழக் கமழக் கேளாத செவிஎது?

"சௌந்தர ராசனை" திரைப்பட இழிஞர்
எந்தப் பாடலைப் பாடச் செய்வது?
இழுப்பு வந்தவன் இசைபோல் இழுத்திடும்
மழுக்குடைப் பாட்டையா பாடச் செய்வது?
பணம் வரும் என்று, இப்பாடகர் தாமும்
பிணவுநாய் ஊளைபோல் முக்கித் தீர்ப்பதா?

'எலந்தப் பயம்' எனும் பாடலைப், பெண்மை
நலந்தவிர் ஒருத்தி நடுத்தெரு வினிலே
பாடியும் ஆடியும் பழம்விற் பதுபோல்
ஓடும் திரைப்படக் காட்சி ஒன்றிலே
வெறுப்புற — பெண்கள் வெட்க முறும்படி
உறுப்புகள் காட்டி அருவருப் பாகத்
தோன்றிய தன்மையில் வெளிநாடு தோற்றது!
கான்றுமிழ் கின்ற அக் காட்சிக் காகவும்
பண்பி லாஅப் பாட்டிற் காகவும்
எண்ணிலா இளையோர் பன்முறை பார்த்தனர்!
பெண்டிரைத் தாழ்த்திடும் பண்பிலாக் காட்சியால்
மண்டிய செல்வம் சுரண்டிடும் கயமை
நாளுக்கு நாளாய் நந்தமி ழகத்தில்
வாளுக்கு நஞ்சுபோல் வளர்ந்திட லானதே!

பார்க்க வருகிறார் என்பதால் பண்பினைத்
தூர்க்க முயல்வதோ? தொலைக்க முனைவதோ?
"பார்க்க விழைகின்றார்" என்பதும் பழுதுரை!
ஆர்த்த பழங்காலத் திரைப்பட இசைகளைக்
கேட்டு மகிழாத செவிகள் இருக்குமா?
ஆட்டமும் கூத்தும் அவற்றில் இல்லையா?
கதைகள் இல்லையா? காட்சிகள் கொஞ்சமா?
புதைந்த கருத்துகள் எத்தனை? எத்தனை?

நடிப்புகள் சோடையா? பிடிப்பினில் குறையா?
உடுப்புகள் எத்தனை ஒழுங்கொடு திகழ்ந்தன?

தியாக ராசப் பாடகர் முன்னம்,
வயங்கு கண்ணாம்பா, சின்னப்பா எதிரில்,
நகைச்சுவை யரசர் கிருட்டிணன் பக்கம்,
பகை கொளும் நடிப்பில் பாலையா தம்முடன்
இற்றைத் திரைப்பட நடிகரில் ஒருவர்
நிற்றல் இயலுமா? நிலைக்குமா இவர்புகழ்?
ஆடிய அன்றையத் திரைப்படக் கதைகள்
ஓடிய மாதங்கள், ஆண்டுகள் எத்தனை?
இந்நாள் படங்களோர் மாதம் இருக்குமா?
அந்நாள் மக்களுக் கறிவு குறைச்சலா?

உண்மை என்ன! உணர்கின் றீர்களா?
நன்மை தருவதே மக்கள் நாடுவர்!
பொழுதைப் போக்கவோ திரைப்படம் வந்தது?
பொழுதைப் போக்கவே என்று கொண் டாலும்
பழுதுற நடந்தா பொழுதைக் கொல்வது?
ஒழுக்கம் குலைவுற நடப்பதா ஓய்வு?
மனத்தைச் சிதைப்பதா மனம்பெறும் மகிழ்ச்சி?
தன்னை அழிப்பதா தான்பெறும் வாழ்க்கை?

திரைப்படக் காரர் ஒருநூறு பேர்கள்
மறைப்புற நடத்தும் ஒழுக்கக் கேடே
கலைகள், இசைகள், காட்சிகள் என்றால்
நிலைகுலைந் திடட்டும் நெடியஇவ் வுலகம்!
மலைகளும் கடலும் குமுறி எழட்டும்!

விலைமதிப் பற்ற உயிர்க்குலம் விழட்டும்!
ஒருசிறு கூட்டம் உலகைச் சிதைப்பதா?
பெருகிய மக்கள் பேச்சற் றிருப்பதா?
குடியரும் களியரும் கூத்தரும் காமரும்
தடியரும் கயவரும் தரங்கெட வாழ்வரும்
அமைத்துக் காட்டிடும் அமைப்பே கலையெனில்
எமைப் பாட் டுணர்வினால் எழுப்பிச் சிதர்த்திடும்

முங்குபே ராற்றலின் முனைப்புக் கென்பெயர்?
தங்குபே ருலகின் ஒழுங்கிற் கென்பெயர்?

அழுக்கிலா ஒன்று தூய்மையா வதுபோல்
ஒழுக்கம் என்பதன் உருவமே கலைகள்!
சிதறிய தூசுகள் தூய்மையா காப்போல்
சிதறிய ஒழுக்கமும் கலைகள் ஆகா!
ஒருதுறை நேரிய உணர்வுக் குவியலே
ஒருதுறைச் சிறப்பினை வளர்க்க உதவும்!
விலைமகள் நடத்தை கலைகளும் ஆகா!
குலைவுறும் மனத்தை வளப்பமும் செய்யா?
உள்ளத்தைக் ‘கல்’வது கலையென உரைக்க!
உளத்தைக் ‘கொல்’வது ‘கொலை’யா? ‘கலை’யா?

திரைப்படக் கருவியால் எத்தனை செய்யலாம்?
உரைப்பதைக் காட்டிலும் உணர்வதைக் காட்டிலும்
காட்சியால் ஒருவனின் கண்களைத் திறந்து
மீட்சி கொண்டிடத் திரைப்படம் மேலதே!
எத்தனை நாடுகள்! எத்தனை மக்கள்!
எத்தனைக் காட்சிகள்! எத்தனை மாட்சிகள்!
அத்தனை யும்போய்ப் படத்தினில் கொணர்ந்து
எத்தனை மக்களின் விழிகளைத் திறக்கலாம்!

நம்நாடு என்ன? பல்கலைக் கழகமா?
செம்புது வெள்ளமாய்க் கல்விபாய் கின்றதா?
எத்தனைக் காலமாய் இழிந்ததிந் நாடு?
பித்தெனும் சாதிப் பேய்களி னாலும்
சமயச் சாய்க்கடைக் குப்பைக ளாலும்
அமைந்த இழிவினை அகற்றவே இன்னும்
நூறுநூ றாண்டுகள் செல்லினும் செல்லுமே!
வேறு தீமைகள் விளம்பலும் வேண்டுமோ?
பார்ப்பன நஞ்சு பரப்பிய கொடுமையின்
ஆர்ப்பரிப் பின்னும் அடங்க வில்லையே!

தாளிகைத் துறையில் தான்தோன் றிகள்சில
தூளி பரப்பித் தொலைத்தன தமிழை!

‘கூவ’ நீரினைக் குவளை குவளையாய்த்
தூவலில் ஊற்றி எழுதத் தொடங்கின!
இந்தத் தீமையைத் தொலைப்பதும் என்றோ?
கந்தல், உள்ளக் கழிசடை வாழ்க்கை
அங்கிங் கென்று நாட்டைஆட் கொண்டது!
இங்கிங் கெல்லாம் நினைவுகள் எழுவதால்
திரைப்படத் துறையைத் தீண்டுவ தில்லென
வரைப்பட நின்றோம்! வருந்தி இருந்தோம்!
நின்றவன் எழுமுன் எழுந்தவன் நடந்தான்
என்ற கதையாய் இழிந்தது திரைப்படம்!

ஆகவே, ஓ!ஓ! திரைப்படக் காரரே!
வாகாய்த் திருந்தி வருங் காலத்தில்
நல்ல கதைகளில் நாட்டஞ் செலுத்துக!
நல்ல பாடல்கள் நாட்டுக்குத் தருக!
நடிகர் நல்ல நடிப்பினை நாட்டுக!
நடிகையர் பெண்மையை நங்கையர்க் குணர்த்துக!
படப்பிடிப் பாளர் பண்பைக் காட்டுக!
படத்தின் இயக்குநர் பாடறிந் தொழுகுக!
நாட்டைத் திருத்திடும் நல்ல தொண்டினில்
நாட்டங் கொள்க நானிலம் சிறக்கவே!

-1968

# 55 திருவள்ளுவர் விழாவா.....?

திருக்குறள் பிறந்திரண் டாயிர மாண்டுகள்
சென்றன; எனினும் செந் தமிழா,
இருக்குமுன் நிலையினில் இமிஉயர்ந் தனையா?
இழிவிலை யா?உடல் சிமிழா?

பிறப்பினில் உயர்வுதாழ் வொழிந்ததா?அட,ஓய்!
பேசினை எழுதினை விறைப்பாய்!
மறப்பிலை தம்பி,உன் மடத்தனம், கயமை
மற்றெதற் கோ விழா, சிறப்பாய்?

பசியொழித் தனையா? பிணியொழித் தனையா?
பகைப்புலம் வேரறுத் தனையா?
வசிக்கவும் குடிலிலா வாடுவோர் தமக்கே
வாழ்விலை! உயிரென்ன தினையா?

ஏய்ப்பவர் ஒருபால்; மேய்ப்பவர் ஒருபால்;
ஏழையர் துடித்தனர் அவர்பால்!
காய்ப்பதிங் கொருபால்! கனிவதிங் கொருபால்!
காய்பவர் பெறுவதிங் கெவர்பால்?

சொல்லுதல் எளிது; செய்தலே உயர்வெனச்
சொல்லிற் றடா, நம் முப்பால்!
வெல்லுநாள் அன்றோ விழாக்கொண் டாட்டம்!
வினையடா, விளைவடா இப்பால்!

-1968

ஆடினை ஆயிரம்! பாடினை ஆயிரம்!
ஆர்ப்புற யாத்தனை விடுதலைப் பாயிரம்!
அசைத்ததா பகைவரை உன்றனின் வாயுரம்?
தமிழா! அட,தமிழா — நீ
அழன்றெழு! அரிமா நடையிடு! வினைமுடி!
அதுதான் செந்தமிழ்த் தாயுரம்!

வீசினை கைகளை; விளைத்தனை சொற்களை;
விலக்கினை யா,குல மதமெனும் புற்களை?
விளைத்திட டா,தனித் தமிழெனும் நெற்களை!
தமிழா! அட, தமிழா நீ
விரைந்தெழு! வரிப்புலி நடையிடு; துணிவொடு!
வீழ்த்திடு வாய்,பகைப் பற்களை!

உன்னுடன் பிறந்தவன் உனையெதிர்க் கின்றான்;
உன்பகைக் கே,செருப் பாய்உழைக் கின்றான்;
உங்களை இரண்டாக்கி ஆரியன் வென்றான்!
தமிழா, அட,தமிழா — நீ
உடன்விழி! களிறென நடையிடு; முனைவொடு!
உயிர்ப்பிலா விடில், அவன் கொன்றான்!

ஆரியப் பார்ப்பனன் திருந்தினான் என்றே
ஆருனக் குரைத்தனர்? அவன்குணம் ஒன்றே!
அவனுடற் பூணூலும் உரைதரும் நன்றே!
தமிழா, அட,தமிழா — நீ
ஆர்த்தெழு! ஏறென நடையிடு! வலிவொடு
அகப்பகை விலக்குக இன்றே!

எத்தனை ஆண்டுகள் புரிந்தனை போரே!
இற்றதா ஆரியப் பார்ப்பனர் வேரே!
இன்னுமுன் கட்டாரிக் குண்டடா கூரே!
தமிழா! அட, தமிழா — நீ
இணைந்தெழு, இடியென முழுங்கிடு! நூறிடு!
இலையெனில் தொலைந்ததுன் பேரே!

-1969

## 57 பாய்புலியே! எங்கே உன் சீற்றம்?

இன்னமும் எத்தனை யாண்டுகள் தமிழா
இங்ஙனே உணர்வற்றிருப்பாய்? — நீ
இங்ஙனே உணர்வற்றிருப்பாய்?

1. தின்னும் இனப்பகை உன்றனை மாய்த்தது;
தீராத மடமைநின் இனத்தையே சாய்த்தது;
மன்னும் அடிமையா வாழ்வென வாய்த்தது?
மாளாத துயரையா உன்மரம் காய்த்தது? (இன்)

2. வள்ளுவர் பிறந்தும்ஈ ராயிரம் ஆண்டுகள்
வந்தன; போயின; எத்தனைத் தாண்டுகள்?
கொள்ளுமுட் பகைகளே அடிமையின் கூண்டுகள்;
கூடினை யாயின்உன் பகைவரோ பூண்டுகள்! (இன்)

3. எத்தனை எத்தனை விடுதலைப் பாட்டுகள்!
இற்றன வோஉன்றன் கல்மனப் பூட்டுகள்!
ஒத்தெழுந் தனையெனில் என்செயும் வேட்டுகள்?
உடைந்துதூள் ஆகாவோ பகைவர்கால் மூட்டுகள்?

4. குலப்பிரி வின்னமும் உனைவிட்ட தில்லையே!
கூறுகூ றாய்ப்பிரிந் திருப்பதால் தொல்லையே!
மலப்புழுப் போலேனும் நெளிந்தாயா? இல்லையே!
மனத்துவை; மறவாதே! உனக்கிது எல்லையே! (இன்)

5. மாந்தரின் இனத்துளே முதலவன் நீதான்!
மற்றிந்நாள் உலகினில் கடையவன் நீதான்!
வேந்தனாம் அன்றுநீ எனின், இன்றோர் ஈதான்,
வெட்கிலை யாமனம்? பிறர்க்கு நீ 'சீ' தான்! (இன்)

6. பிறர்க்கிலா இலக்கிய இலக்கணங் கொண்டனை!
பின்வரும் உலகுக்கும் அறம்முன்பே விண்டனை!
மறக்கிலா ஒளிவாழ்வும் முன்பேநீ கண்டனை!
மற்றதற் கோஇந்நாள் அடிமையாந் தண்டனை? (இன்)

7. பொய்ம்மையே பட்டெனப் போர்த்திக்கொண் டாயா?
புளித்ததும் நுரைத்ததும் தின்னநீ நாயா?
மெய்ம்மையே அறமென்ற செந்தமிழ்ச் சேயா?
மேய்வதே வாழ்வெனச் சொல்வதுன் வாயா? (இன்)

8. அரசியல் வாழ்வெனிற் புளுகுதல் அறமா?
அயலவர் முன்னர்உன் சொற்சோர்வு மறமா?
முரசறைந் தரசோச்சல் நீ கல்லாத் திறமா?
முக்கால எல்லைக்கும் நீ பீற்றல் முறமா? (இன்)

9. தமிழனைத் தமிழனே தாழ்த்துகின் றானே!
தமைமீட்க எழுவோரைப் புறம்வீழ்த்து வானே!
சிமிழ்க்காத போரெனில் இவன்நீந்தும் மீனே!
சிற்சில காலமாய் அழிகின்றான் தானே? (இன்)

10. எத்தனை எத்தனைப் பேர்வந்து சொல்வது?
இழுத்திழுத் தேதுயின் றால்என்று வெல்வது?
சொத்தெலாம் போனபின் எவர்வழிச் செல்வது?
சோம்பலை முறியென்றால் எனையாநீ கொல்வது? (இன்)

11. மனைவிக்கும் பிள்ளைக்கும் வாழ்ந்தாய் முன்நாளை!
மற்றவர் தமைமறந் தெழுவாய்இந் நாளை
எனையொப்ப விலையெனில் அவரையும் வாளை
ஏந்தச்செய் திட்டுவா! பார் பகைத் தூளை! (இன்)

12. ஆரியர் இடுவலை அவிழ்க்க ஒண்ணாதே!
அவர்திறம் அறிவென மயங்கி எண்ணாதே!
நேரியர் அவரென நினைந்து பண்ணாதே!
நேயரெ னில்மெய்ப்பூ ணூலும் ஒண்ணாதே! (இன்)

13. தமிழர்க்குத் தமிழ்மொழிப் பற்றடை யாளம்!
தமிழ்ப்பற்றில் லாதவர் செயலோமாய் மாலம்!
உமிழ்தகுந் தன்மையோர் போடுவார் கோலம்!
ஒன்றிணைந் தெழின்கேட் பாய்பகை ஓலம்! (இன்)

14. அயலவர் சூழ்ச்சி,நீ அறியாத கலையா?
அடிமைக்கு வாய்ச்சோறு நீபெறும் விலையா?
புயல்போலும் பகைசீறின் உனக்கது மலையா?
போவார்க்கும் வருவார்க்கும் நீவாழைக் குலையா? (இன்)

15. எந்தமிழ் மொழிபேணி வருகநீ யாண்டும்,
இழந்தநின் பேராற்றல் எழ,அது தூண்டும்!
வெந்திறல் ஆண்மையொடு நீஎழல் வேண்டும்!
வீழ்கின்ற பகையோடு அடிமையுனைத் தாண்டும்! (இன்)

16. வடவர்க்குத் தமிழ்நாடு வாழும்பட் டயமா?
வல்லதோ ரடிமைக்கு வேண்டுதல் நயமா?
மடமைக்குத் தமிழ்நாடு மீன்மேயும் கயமா?
மறந்தரும் விறல்தெய்வம் என்றுமவர் வயமா? (இன்)

17. ஏழைக்குப் பாற்சோறும் எறும்புக்கு விண்ணே!
எழமுடி யாதவர்க்கு விடுதலை மண்ணே!
கோழைக்குத் துணிவேற்றல் முயற்கோடாம் அண்ணே!
கும்பிகாய்ந் தாலன்றோ விடுதலைப் பண்ணே! (இன்)

18. நம்மைநாம் வீழ்த்துமோர் நாய்த்தன்மை போலே,
நாம்கண்ட தில்லையிங் கிந்நில மேலே!
தம்மையுந் தாழ்த்தித்தம் இனத்தையும் கீழே
தள்ளுமவ் விழிசெயல் திருத்தாநாய் வாலே! (இன்)

19. மொழிநலம் இனநலம் பேணுதல் அன்றோ
முழுநலம் பெறுவழி! நாம்பெறல் என்றோ?
விழியுண்டு, வழியுண்டு! விரைகிலம்; நன்றோ?
வீணாக அமர்ந்துண்ண நாம்தென்னங் கன்றோ? (இன்)

20. உரிமைக்கு வித்தெல்லாம் உணர்வெல்லாம் மொழியே!
ஊமையன் நெடும்போக்குக் குண்டோநல் வழியே!
நரிமைக்கு நாய்மையோ நாட்டாண்மைக் கழியே!
நயன்மைக்கும் இயன்மைக்கும் உண்டோஓர் பழியே!

21. விடுதலைப் பயிர்க்கெரு மொழியின்முன் னேற்றம்!
வீணர்க்கும் சோம்பர்க்கும் விளைவுண்டோ மாற்றம்?
படுதலைப் பட்டாயிற் றேன்தடு மாற்றம்?
பாய்கின்ற புலியேறே! எங்கேஉன் சீற்றம்? (இன்)

-1969

உரிமையெனும் மெய்க்கொள்கை
தமிழர்க்கென்றும்
உயிர்க்கொள்கை; உயிரைவிட
உயர்ந்த கொள்கை!
நரிமையினும் கீழ்மையராம்
வடவர்,உன்னை
நாய்மையினும் கீழெனவே
நடத்திவிட்டார்!

எரிமொய்த்துள் இருந்ததுபோல்
இதுநாள்மட்டும்
இருந்துவிட்டாய்; உயர்மானம்
இழந்துவிட்டாய்!
கரிமையினும் கருமையுற்றாய்;
கடுகாய்த் தேய்ந்தாய்;
கனித்தமிழால் விழித்தெழுந்தாய்!
கனல்வாய் இன்றே!

புத்துணர்வு பெற்றுவிட்டாய்!
உடலுக்குள்ளே
புதுக்குருதி சுரந்ததின்று!
புறப்பட்டாய்,நீ!
பித்துணர்வால் அடிமைநலம்
பேசிவந்த
பெருவாயால் உரிமைநலம்
முழக்குகின்றாய்!

ஒத்துணர்வால் பகைப்புலத்தின்
வேரறுப்பாய்!
உட்பகையாம் பார்ப்பனர்தம்
உயிரைச் சீய்ப்பாய்!
கத்துணர்வால் பயனிலைகாண்!
களிற்றுக் கூட்டம்
கனன்றெழுந்து விட்டதினிக்
கடுகல் நன்றே!

அன்புத் தமிழனே! அடிமைப் பிறவியே!
என்பு நெகிழ இதைஉரைக் கின்றேன்;
சற்றே உன்செவி சாய்த்துக் கேட்பாய்,
முற்றும் எண்ணுவாய்; முடிவொன்று காண்பாய்!

எத்தனைக் காலம் நீ இழிந்து கிடப்பது?
புத்தனைக் கண்டாய்; ஏசுவைப் பற்றினாய்!
சிவனியம் புகுந்தாய்; மாலியந் தழுவினாய்!
மொட்டைத் தலைக்கொரு மூடு கவிழ்த்து
முகமதி யன்என முழுப்பெயர் மாற்றினாய்!
ஊர்விட் டோடினாய்; உலகெலாம் பரந்தாய்;
மலையமும் இலங்கையும் நிலையிலா தோடினாய்!
அலையா யலைந்தாய்; ஆக்கமுந் தேடினாய்.

ஆயினும் நீயோர் ஆரிய அடிமையே!
நாயினும் புழுவினும் நலியும் பிறவியே!
முழுமையாய் நீஒரு மூடக் களஞ்சியம்.
பழமைச் சடங்கின் குப்பைக் குழி நீ!

வெள்ளைக் காரனின் விளங்கிய அறிவு
கொள்ளை கொள்ளையாய்க் குவிதலைக் கண்டும் —
மண்ணிலும் விண்ணிலும் மற்றைய துறையிலும்
திண்ணிய ஆய்வினில் தேர்ந்ததை அறிந்தும்
உன்னை ஒருபடி உயர்த்திக் கொள்ள
எண்ணம் இன்றி இருக்கின் றாயே!

இன்னமும் பார்ப்பான் எழுதிய பொய்யையும்
பின்னி யுரைத்த புராணப் புளுகையும்
உண்மை என்றே உளமார நம்பிப்
பொன்னையும் பொருளையும் கொட்டிக் கொடுப்பாய்!
பார்ப்பான் காலில் பதவிக்கு விழுவாய்;
ஊர்க்குள் அவனையே உயர்த்தி என்கிறாய்!
குலச்செருக் கின்னும் குலைந்திட வில்லை.
பலவேறு சமயமும் உனைப்பாழ் படுத்திடும்.
உள்ளத் திறைவனை ஒப்பாது, பார்ப்பான்
கள்ளத்துத் தோற்றிய கயவருக் கெல்லாம்

படிவம் சமைத்து, விழாப்பல வெடுப்பாய்!
விடிவிலா இருளுள் விழுந்து கிடப்பாய்!
இனமும் மொழியும் வழியும் கெட்டு
மனமும் கெட்டு மழுங்கினாய் தமிழா!

இனியா கிலும்விழி; இழிவை அகற்று!
பனியும் மழையும் வெயிலும் பாராது
கடமையைச் செய்நீ! மடமையை உதறு!
உடைமையை நீபெறும் நாளுமொன் றுண்டே!

-1969

## 60 விடுதலை பிறக்கும்!

வடவர்க்கும் பார்ப்பனர்க்கும் வால்பிடித்தே
வாழுகின்ற நிலையைப் பெற்றே
படநிற்கும் நெடுமரம்போல் பாயிழந்த
மரக்கலம்போல் பற்றி ழந்தே
கெடநிற்கும் தமிழா,உன் கீழ்மையினை
இன்றுணர்ந்து கிளர்வா யானால்
தொடநிற்கும் பெருந்துயரும் தூளாகும்
விடுதலையும் தோன்றும் அன்றே!

-1969

அன்று தொடங்கி இன்றைய நாள்வரை
அடிமைத் தமிழனே! நீ, துயில் எழுந்திட
நின்று கதறிய தொண்டைகள் எத்தனை?
நினைத்துப் புழுங்கிய நெஞ்சமும் எத்தனை?
ஒன்றும் பயனிலை; ஒருசிறு மாற்றமும்
உணர்விலும் அறிவிலும் உருப்பெற வில்லைகாண்!
என்று விடியுமோ, இணையிலா விடுதலை
ஏதுங் கெட்ட,யிவ் விருள்நிறை நாட்டிலே?

நேற்றுப் பிறந்தவர் நிலைநின் றெழுந்து,இந்
நீணிலம் முழுவதும் நிறுத்தினர் ஆட்சியே!
ஆற்றுப் படுகையில் அமர்ந்திருந் தார்பலர்
அக்கரை ஏறினர்; அவர்நடை தொடங்கையில்
வேற்றுப் புலத்திடை வெற்றிகள் குவித்த, நீ—
விண்ணிலும் மண்ணிலும் விழாப்பல வெடுத்த, நீ
சோற்றுப் பருக்கையிற் சுவைநலங் காண்பதோ?
சூம்பிய மறத்தனம் சூடுறல் என்றையோ?

ஓட்டைக் குடில்களும் உயர்ந்தன மாடமாய்!
உன்னை இரந்தவர் உரிமையைப் பறித்தனர்!
கோட்டை விடுத்தனை; கொள்கையைத் துறந்தனை!
குரலொலி குறைந்தது; குலைந்ததுன் குடிநலம்!
நாட்டை, மொழியினை, மக்களை நலஞ்செயும்
நாட்டமும் கொள்கிலை; நடுத்தெரு நின்றனை!
ஈட்டும் விடுதலை எண்ணமும் இன்றி, நீ
இருந்தனை யேல்,உனை இழப்பதும் உறுதியே!

பட்டம், பதவிகள் பாடழித் தன,உனை!
பார்ப்பனப் பதடிகள் பழிசெயுந் துணிவுடன்
கொட்டம் அடித்தன, துறைதொறும் துறைதொறும்!
கூற்றை விளிப்பதோ அவர்துணை கூடியே?
மட்டந் தட்டுவர்; ஓ!தமிழ் மாந்தனே!
மற்றுநின் நிலையிலோர் மாற்றமும் காண்கிலேன்!
திட்டங் கொள்ளடா, விடுதலைத் தீர்ப்புநாள்
தெரிந்தது பார்;அதன் திகழ்ஒளி மூழ்கவே!

-1970

*ஊழி பெருகி உலகம் புரண்டாலும்*
*உளந்திருந்த மாட்டீர்கள், ஓ!ஓ!ஓ! பார்ப்பனரே!*
*வாழிநும் உள்ளம்!வாழி இன்வுணர்வு!*
*வாயார வாழ்த்துகின்றேன்; ஆனாலும் ஒன்றுரைப்பேன்!*
*"ஆழி உலகமெலாம் ஆண்டிருந்த செந்தமிழர்*
*ஆற்றல் குறைந்தார்; அணுவாய்ச் சிதைந்துவிட்டார்;*
*பூழி மணலில் புதையுண்டார்" — என்றே, நீர்*
*பொய்க்கனவு கண்டிருந்தீர்; பொங்கிவிட்டார்; திந்திமிதீம்!*

*ஒன்றன்று; மூவா யிரமாண்டாய் எம்வரலாற்*
*றுண்மை மறைத்திருந்தீர், ஓ!ஓ!ஓ! பார்ப்பனரே!*
*கொன்றன்றே, ஆழக் குழிவெட்டி மூடிவிட்டீர்;*
*குலங்கோடி செய்தீர்; மதப்புரட்டு கோடிசெய்தீர்!*
*'நன்றன்று நன்றி மறப்ப'தென்று கற்றிருப்பீர்.*
*நடந்த திருட்காலம்; நண்ணிற்று பேரொளியும்!*
*இன்றன்று; நாளையன்று; என்றேனும் எந்தமிழர்*
*இழந்தபுகழ் மீண்டுமிங்கே ஏற்றுவர்காண்! திந்திமிதீம்!*

*ஊற்றுப் பெருக்காய் உணர்வெடுத்துப் பாய்ந்ததுகாண்!*
*உளந்திருந்திக் கொள்ளுங்கள், ஓ!ஓ!ஓ! பார்ப்பனரே!*
*கூற்றுக் கொதிப்புப்போல் கொப்பறையின்*
[நெய்க்கொதிபோல்
*கொம்பூதிச் சங்கூதிக் கொண்டு கிளம்பிவிட்டார்!*
*ஆற்றல் பெரிதுகாண்; எள்ளற்க ஆரியமே!*
*அனைத்துலகும் இணைந்தெழுமுன் அகந்தை அகற்றுவிரே!*
*மாற்றம் பெறுங்கள்;இலை மாற்றப் படுவீர்கள்!*
*மாந்தரொடு மாந்தரென வாழ்ந்திருங்கள்; திந்திமிதீம்!*

**-1970**

## தமிழ்க்குலமே தெளிக!

எங்குமுள பரம்பொருளைக் கோவிலுக்குள் —
கருவறைக்குள் இருத்தியதாய் எண்ணியங்கே
தங்குமொரு சொறிபிடித்த பார்ப்பானை —
ஆரியனைத் தரகனெனக் குந்த வைத்து
முங்கியடித் தவன்முன்னே பழந்தேங்காய்த்
தட்டெடுத்து நீட்டி அவன் முணுமு ணுக்கும்
வெங்காய மந்திரத்தை விரும்பியதா
லன்றோ,நாம் இன்றுவரை வீழ்த்தப் பட்டோம்!

கோவிலினைச் சமைத்தவர்நாம்! படிமமொன்றை
நட்டவர்நாம்; பொன்மணிகள் கோடிக்கோடி
மேவலுற இழைத்தவர்நாம்; ஆண்டு தோறும்
விழாப் பலவும் எடுத்தவர்நாம்; மெய்த்தொண் டென்றே
காவலராய் அமர்ந்தவர்நாம்; சேர்ப்பவர்நாம்;
காப்பவர்நாம்! கடைகெட்ட பார்ப்பான் மட்டும்
தேவனென உட்புகுந்து தின்பதுவோ?
தெறிப்பதுவோ? தமிழ்க்குலமே, தெளிவாய் இன்றே!

-1971

கொட்டிடு குப்பை நிறைவது போல், அலங்
கோல எழுத்தாளர் விஞ்சிவிட்டார்!
வெட்டிமுறிப்பவர் போல்,பலர் மேடையில்
வீணுரை யாற்ற முன் வந்து விட்டார்!
கட்டிய கோட்டை முழுவதிலும் வெறும்
கற்பனைப் பூண்டை, நிரப்புவதோ?
எட்டி நடையிடு வீர்?தமிழ் மாந்தரீர்,
ஏற்ற வினைகளைச் செய்திடவே!

உழைப்பைச் சிறிதென எண்ணிடும் மாந்தரிங்(கு)
ஊர்வலம் போகவே கூடிவிட்டார்!
பிழைப்பைப் பெரிதென எண்ணி விட்டார்; சிலர்
பேச்சையே மூச்செனப் பேசிடுவார்!
தழைப்பது வோ, தமிழ்ச் செம்பயிர் பேச்சினில்?
தன்மானங் கொண்டவர் முன்னெழுவீர்!
உழைப்பைப் பெரிதெனப் போற்றிடுவீர்! செயல்
ஒன்றே உயர்வென நாமுழைப்போம்!

-1971

## 65 பொய் சாகும்; மெய் வெல்லும்!

பொய் சாகத் தான் சாகும்;
புரட்டழியத் தான் அழியும்;
மெய் பூத்துக் காய்த்துக் குலை தள்ளும்—அது
மேன்மேலும் கனிந்து பகை வெல்லும்!

இருள் போகத் தான் போகும்;
இழிவகலத் தான் அகலும்;
மருள்மாய உரைகள் அடி சாயும்—ஆர
வாரத்தின் கொழுமை முடி காயும்!

வயிறெரியத் தான் எரியும்;
வாய் நோகத் தான் நோகும்;
கயிறுதிரிப் போர்க்கு நமைக் கண்டால்!—ஒரு
காலம் வரும்; போற்றுவர் பூச் செண்டால்!

துயர்சேரத் தான் சேரும்;
துணை வருந்தத் தான் வருந்தும்;
அயர்வுறுதல் மறவர்க் கழ கன்றே!—பேர்
ஆண்மையன்றோ பொறுத்தல்; குணக் குன்றே!

உளம் நோகத்தான் நோகும்;
உயிர் சோரத் தான் சோரும்;
விளங்கட்டும் தமிழர் குழு காயம்!—உயிர்
வெல்லமில்லை; உரிக்கும்வெங் காயம்!

உடல் வாடத் தான் வாடும்;
உயிர் போகத் தான் போகும்;
கெடல் வந்த போதில்அறங் காக்கும்!—மெய்
கிளைகிளையாய்த் துளிர் விட்டுப் பூக்கும்!

-1971

## 66 கருத்தை மாற்றுவீர் புலவர்களே!

காலம் மாறியது, காட்சி மாறியது;
கருத்தை மாற்றுவீர் புலவர்களே! — தமிழ்ப்
புலவர்களே! — புதுக்
கோலம் புனைந்ததிவ் வுலகம்! ஆகவே
கொள்கை புதுக்குவீர் புலவர்களே!

இராமா யணத்தையும் வில்லிபா ரதத்தையும்
எத்தனை யாண்டுகள் எடுத்தரைப்பீர்? — நலம்
தடுத்துரைப்பீர்? — உயர்(வு)
இராமல் நசிந்திடும் தமிழின மக்களுக்
கென்றுமுன் னேற்றத்தைத் தொடுத்துரைப்பீர்?

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாகவே
ஆரியம் — தமிழ் — எனக் கலந்துரைத்தீர் — மொழி
நலங்குறைத்தீர் — இன்று
பாயிரம் பாடினோம் தனித்தமிழ்க் கே!நல்ல
பாவியம் பாடியே வளங்குவிப்பீர்!

புதுப்புது இலக்கியம் செய்தளிப் பீர்;பழம்
பூழ்க்கை இலக்கியம் கைவிடுவீர்! — இனி
மெய்நடுவீர்! — ஒரு
பொதுப்படை யானநல் லுலகம் மலர்ந்தது;
பொதுமை இலக்கியம் செய்திடுவீர்!

அரசர் கதைகளும் அழகியர் கதைகளும்
அறிவையும் உயர்வையும் வீழ்த்தினவாம்! — நமைத்
தாழ்த்தினவாம்! — புது
முரசறை விப்பீர் தமிழ்ப்புல வீர்! இனி
முகிழ்த்திடும் அறிவியல் வாழ்த்திடவே!

குலமும் சமயமும் கொண்டு பிளந்திடும்
குழுகா யத்தினை மாற்றிடுவோம்! — பொது
நாற்றிடுவோம்! — உயிர்
நலமும் வாழ்க்கையும் மாந்தரெல் லார்க்கும்
நடுவெனும் நயன்முறை சாற்றிடுவோம்!

-1971

## 67 உயர்வடைதல் என்றோ?

எதையெதையோ பேசுகின்றார்; செய்கின்றார்! நாட்டின்
இருண்டநிலை மறையவில்லை; தாழ்வகல வில்லை!
புதைகுழிகள்; ஏமாற்றுப் புனைவுகள்;பூ சல்கள்!
பூத்துவரும் முன்னேற்றம் தின்கின்ற நாய்கள்!
கதையெழுதி இழிவெழுதிக் கயமைவிளைக் கின்ற
கழிசடைகள்! மலக்குழிகள்! பணந் தின்னும் பேய்கள்!
—பதைபதைக்கும் நெஞ்சோடு நாட்டைநினைக் கின்றேன்.
பைந்தமிழர் வாழ்வுநிலை உயர்வடைதல் என்றோ?

நாகரிகம் எனும் பெயரால் நசித்துவரும் உள்ளம்!
நரிக்கூட்டம் ஆடுகின்ற அரசியல்கூத் தாட்டம்!
வேகின்ற வறுமையிலே சாகின்ற உயிர்கள்!
வெறித்தனங்கள்! அதிகாரம், பதவிக்கொண் டாட்டம்!
வாகுபோ கற்றநிலை! வழவழப்புப் பேச்சு!
வழிவழியாய் அரித்துவரும் குலசமயக் கூச்சல்!
—நோகின்ற நெஞ்சோடு நாட்டைநினைக் கின்றேன்,
நொந்துவரும் எந்தமிழர் உயர்வடைதல் என்றோ?

**-1971**

## 68 அயல் நாட்டில் வாழ்கின்ற தமிழர்க்கு....!

தமிழினத்தீர்! உலகெங்கும் சிதர்ந்தோடி னாலும்
தம்நிலத்தை, தம் இனத்தை மறவாமல் என்றும்
அமிழாது வாழ்கின்ற தாய்க்குலத்தீர்! நீங்கள்
அயல் நாட்டில் — அயலினத்தில் — அயல்மொழிகட்
[கிடையில்
சிமிழாது நிலைநின்று, தமிழ்மொழியைப் பேணிச்
சிறப்புறவே காத்துவரும் பெருமையினை நோக்கின்
கமழாத உளத்திலெல்லாம் கற்பூரம் நாறும்!
களிப்பிலா நெஞ்சிலெல்லாம் மயிலாடிக் கொஞ்சும்! 1

கடலோடி னாலுமன்னைத் தமிழ் ஓடா நெஞ்சும்,
காசு பணம் சேர்த்தாலும் பழிசேர்க்கா வாழ்வும்,
உடலாடிச் சாய்ந்தாலும் சாயாநற் பண்பும்,
உயிராடிக் குலைந்தாலும் நிலைகுலையா உரனும்,
குடலோடும் நீருக்கும் சோற்றுக்கும் என்றே
குரலோட்டம் மாறாத மாண்பும் உடை யீர் — என்
மடலோடும் உணர்வோடும் பாட்டோடும் உங்கள்
மனத்தோடும் உள்ளுணர்வில் குளித்தாடு கின்றேன்! 2

அயல்நாட்டில் வாழ்கின்ற தமிழினத்தீர்! உங்கள்
அடிபணிந்து வேண்டுகின்றேன்; என்றும், எக் காலும்
கயல் நாட்டை பாண்டியனின் கன்னித்தமிழ் நாட்டை,
கழனிமிகும் சோழனது புலியுலவும் நாட்டை,
புயல் நாட்டை — கருமுகில்கள் மலைசூழ்ந்து நிற்கப்
புனக்குறவன் வில்லெடுக்கும் சேரனது நாட்டை,
வயல் நாட்டை — தமிழ்நிலத்தை மறவாதீர்! நாமும்
வாழ்ந்துகெட்ட வரலாற்றை நொடியும்மற வாதீர்! 3

செந்தமிழை மறவாதீர்! மறவாதீர்!! உள்ளம்
சிலிர்த்தாடும் தமிழினத்தை மறவாதீர் என்றும்!
நொந்தவுளத் தோடுங்கட் குரைக்கின்றேன் இதனை!
நொடிந்தவினம் தமிழினம்போல் விரியுலகில் இல்லை.
சொந்தமொழி, சொந்தஇனம் தமைப்பார்த்துத் தமிழன்
சொத்தை மொழி — செத்தவினம் எனப்பேசு கின்றான்!
வந்தமொழி, வந்தவினம் தமக்கடிமை செய்வான்;
வாழையடி வாழையென அடிமைநலங் கண்டான்! 4

தன்னுணர்வைக் கட்டவிழ்த்தான்! தன்மானம் விட்டான்!
தாழ்ச்சியிலாப் பெருமொழியை வீழ்ச்சியுற வைத்தான்;
முன்னுணர்வைத் தானிழந்தான்; மொய்ம்புகழைக்
[கொன்றான்;
முக்கழகச் சீர் மறந்தான்; பேர்மறந்தான்; இக்கால்

தின்னுமொரு கைச்சோற்றைப் பெரிதென்றே எண்ணித்
தீய்க்கின்றான் தமிழ்நலத்தை; சாய்க்கின்றான் குடியை!
இன்னுமெவ்வா றெடுத்துரைப்பேன்? அம்மாவோ! அடடா!
எடுத்தெறியும் எச்சிலைக்கே இனங்காட்டித் தந்தான்! 5

இப்படியாய்க் கீழ்ப்படியில் இருந்தபடி வாழும்
இந்நாட்டுத் தமிழினத்தை விட்டயல்நா டேகி
அப்படியே பழந்தமிழ்வாழ் தமிழர்களாய் வாழ்வீர்!
அடிவயிறுங் குளிர்ந்ததுகாண் உமையெண்ண எண்ண!
முப்படியாய் உயர்ந்து விட்டீர் உடன்பிறப்பீர்! நாங்கள்
முதுகாட்டின் பழம்பிணமாய் அழுகுகின்ற போழ்தில்
கொப்படியில் முளைவிட்டுத் துளிர்க்கின்ற செடிபோல்
கொழுந்துவிட்டே இலைவிட்டுப் பூவிட்டுக் காய்த்தீர்! 6

காய்த்தகுலை கிளைகனக்கக் கனிந்துவர லானீர்;
கண்குளிரக் காண்கின்றேன்; உம் வளர்ச்சி கோடி!
சாய்த்ததலை நிமிரவில்லை தமிழ்நாட்டில் தமிழன்.
சாகடித்தே இழுத்தெறியக் குறிபார்ப்பார் பகைவர்;
ஏய்த்தநிலை மாறி,அவர்க் கேறுநிலை இன்றே!
எந்தமிழர் தம்கணக்கோ என்னவென்று பார்த்தால்,
வாய்த்தகுலை கோடி; அதில் அழுகல்அரைக் கோடி!
வாகாகப் பழுப்பதெல்லாம் பத்திலக்கத் தொன்றே! 7

தமிழ்நாட்டைத் தமிழமைச்சன் தான் ஆளு கின்றான்;
தமிழமைச்சர் தாம்,அரசை வழிநடத்திப் போவார்!
தமிழ்நாட்டின் பெயர்மாற்றம் செய்ததுதான் மிச்சம்!
தமிழ்மொழியின் வளர்ச்சியிலோ அப்படியப் படியே!
தமிழ்நாட்டுத் தாளிகைகள் தமிழ் மொழியைக் கொல்லும்!
தமிழ் எழுத்தில் அச்சுவரும்; நரகல்நடைப் பேச்சு!
தமிழ்நாட்டில் தமிழரில்லை; இருந்(து) அவர்வாய் திறந்தால்
தமிழ்மணப்ப தில்லை;ஐயோ! பிறமொழித்தீ நாற்றம்! 8

ஊர்களெல்லாம் **'சீரங்கம்'** **'விருத்தாஜ லந்'**தான்!
உடைகளெல்லாம் 'மினிஸ்கர்ட்டும்,' 'கவுனும்', 'டைட்'
['பேண்ட்'டும்!

பேர்களெல்லாம் 'நடராஜா' 'ஜெயலலிதா' 'ஸ்வாகத்'!
பெயர்ப்பலகை '**அமெரிக்கா**' '**இலண்டனை**'ப்போல் மின்னும்!
சீர்திருத்தப் பேச்செல்லாம் '**வெங்காய**' மணந்தான்!
சிண்டர்களின் வளர்ச்சி — '**ஸுப்ர பாதம்**' '**ஸத் சங்கம்**'!
தேர் திருவி ழாக்களிலோ நின்றவெலாம் ஓடும்!
தெருச்சுவரில் '**தமில் வால்க!**' '**எம்ஜீயார் வால்க!**' 9

உண்ணுகின்ற விடுதிகளின் '**பலகாரம்**', சுவையில் —
உருவத்தில் பழையவைதாம்; பெயர்ப்புதுமை அடடா!
வெண்ணெயில்லை; '**பட்டர்**' உண்டு! '**பொட்டொட்டோ**' [பொரியல்!
வெங்காயத் தோசையில்லை '**ஆனியன்**'தோ சைதான்!
உண்ணுதற்குச் சோறில்லை; '**ராரைசு**' '**கீ**' தான்!
'**பப்பட்**' '**ஆனியன் புளவர்**' கூட்டாம்! '**லைம் பிக்கிள்**'!
தண்ணீர்இல் லை; '**வாட்டர்**'! '**டொமொட்டோ சூப்**'; '**கர்டு**'!
தாழ்ந்துவிட்ட தமிழ் மொழியின் வீழ்ந்தநிலை காணீர்!

வானொலியில் '**அம்மாமி**' '**அத்திம்பேர்**' கொட்டம்!
வாழ்க்கையிலே பாதியினை விழுங்கிவரு கின்ற
பா நெளியும் திரைப்படத்தில் '**பம்மலக்கிடி கும்மா**'!
படுக்கையறை, குளியலறை, நீச்சலுடைக் காட்சி!
தேனொலிபோல் பாவேந்தர் பாட்டெங்கோ வந்தால்
திரும்புகின்ற பல முகங்கள்; கசமுசப்புப் பேச்சு!
கூனலுடல் ஆனாலும் '**கவர்ச்சி**'க்கிலை கேடு!
—குலைந்து வரும் தமிழகத்தின் கொடுமைநிலை காணீர்!

கல்விநலந் தேடுகின்ற மாணவர்கள் தம்மைக்
கவலையொடு நினைக்கின்றேன்! என்னநிலை ஆமோ?
செல்வநலம் மிக்கவர்கள் மேன்மேலும் வாழ்வார்;
செத்தழியும் வெறும் வயிறார் தொகைபெருகிப் போனார்!
வெல்வதினி எக்காலம், எந்தமிழர் நாட்டை?
விளைந்து வரும் கொடுமைகளை ஒழிப்பதினி எந்நாள்?
சொல்வதிலே பொய்யில்லை; அயல்நாடு சென்றீர்!
சொந்தநிலந் திரும்பாமல் நினைந்துமகிழ் வீரே!

-1971

செகப்பிரியர் மில்டனெனும் ஆங்கிலத்துச் சிறந்துயர்ந்த
இலக்கியங்கள் பற்பலவும் தேர்ந்துநாடி
மிகப்படித்து முன்னேறிப் பதவிபெற்று மேனாடும்
கீழ்நாடும் வரவேற்க மேவலுற்றுத்
தகப்பலவும் சீர்பெற்று வாழ்ந்திடினும், திருக்குறளைத்
தீண்டாத — உணராத — தமிழனைப்போய்
மிகப்பெரியன் என்பதிலோர்
பெருமையுண்டோ? மகிழ்ச்சியுண்டோ?
தமிழ்க்குலத்திற் கெள்ளளவும் மேன்மையுண்டோ?

கல்லாத துறையெல்லாம், அறிவியலின் கூறெல்லாம்
கணித்தறிந்து, பட்டம்பெற்று, யார்க்கும் எங்கும்
இல்லாத பெருமையெலாம் புகழெல்லாம் இணைந்துவர
வாழ்ந்திடினும், எந்தமிழின் மெய்ம்மை சான்ற
சொல்லாலும் செயலாலும் தமிழ்ப்பண்பு மேவானை—
விரும்பானை — ஒழுங்கழிந்த தமிழனைப்போய்
வல்லானென் றெவ்வாறு வாய்கூசா துரைத்திடுவேன்?
வாழ்த்திடுவேன்? வாழையடி வாழையென்பேன்?

ஏவலர்கள் கைகட்டி வாய்பொத்தி வரிசையுற
நின்று,வருஞ் சொற்களெல்லாந் தலைமேல்தாங்கி
மேவலுறும் படி,பதவி வாய்த்திடினும் செந்தமிழ்த்தாய்ப்
புரந்திடுவார் தமையறிந்து, மேன்மை செய்யும்
ஆவலிலான் — மனக்கசண்டை
அகற்றலிலான் — ஆன்றதிறம்
அறிதலிலான் ஒருவனைப்போய் அறநூல் ஆய்ந்த
காவலனென் றெங்ஙனம்யான்
கழறிடுவேன்? போற்றிடுவேன்?
கனித்தமிழால் வாழ்த்தியுளங் களிக்குவேனே?

-1971

அந்தநன்னாள் விரைவில்வரும்; விரைவில்வரும்! எம்மோர்
ஆரியத்தால் உருக்குலைக்கப் பட்டநிலை சாகும்!
சொந்தநலன் மீண்டுவரும்; செந்தமிழர் யாரும்
சூடுகண்ட வேங்கையென விழித்தெழுந்து கொள்வார்!
விந்தமுதல் தென்குமரி எல்லைமட்டும் அன்றி
வியனுலகம் யாவையுமே எந்தமிழ்த்தாய் ஆண்ட
முந்தைவர லாற்றினுண்மை முழங்கும்உல கெல்லாம்;
மூத்ததமிழ் யாத்தநலன் பயின்றிடுவார் கோடி! 1

முக்கழகம் மெய்யாகும்; மூங்கையரும் சொல்வார்;
முன்பிருந்த குமரிநிலம், பஃறுளியாற் றுண்மை
தக்கபடி யாய்ந்துலகம் ஏந்திவர வேற்கும்;
தமிழெழுந்து நிலன்முழுதும் உலாவப்புறப் பட்டே
ஒக்கபடி திரவிடமாய், ஆரியமாய், கிரேக்க
இலத்தினுமாய், சாக்சனிய, பழம்பார சிகமாய்,
மிக்கவுரு மாறியொரு சமற்கிருதந் தோற்றி
மீண்டுவந்த செய்தியெல்லாம் பேருலகம் ஏற்கும்! 2

மறைந்திருந்த வரலாறு இருள்சீழ்க்குங் கதிராய்
மாணிக்க ஒளிவீசித் திகழ்கின்ற போழ்தில்,
உறைந்திருந்த தமிழ்க்குருதி உருகிவிரைந் தோடும்!
ஊமையராய் வாழ்ந்திருந்த தமிழரின்நா ஆர்க்கும்!
குறைந்திருந்த மறவுணர்வு குமிழியிட்டுப் பாயும்!
குரங்கென்றும், அடிமையென்றும் 'இதிகாசம்' பேசும்
கறைந்தபழம் புழுக்குரைகள் தீக்கிரையாய் மாயும்!
காய்கதிர்முன் பனிப்போலும் பகைசுவறிப் போகும்! 3

வல்லடிமை தோய்ந்தவராய் ஆயிரநூற் றாண்டாய்,
வந்தேறி யுட்புகுந்த நன்றியிலார் நாவின்
சொல்லடிமைப் பட்டவராய்ச் சுருண்டிருந்த மக்கள்
சூடுற்றுப் பீடுற்றுப் பாய்ந்திடும்அப் போழ்தில்,
புல்லடியின் கீழ்வேராய்ப் புழுதியொடு மண்ணாய்ப்
புதைந்திருக்கும் பார்ப்பனரின்
கொட்டமெல்லாம் வேங்கை
வல்லடியின் தாக்குதல்முன் வாலறுந்த நரியின்
வக்கணைபோல் —வெள்ளெலும்புச் சுக்கலெனப் போகும்!

பொய்யெடுத்துப் புளுகலென்னும்
சீழ்க்குழம்பில் தோய்த்துப்
புராணமெனும் பேரெழுதிப், " 'பிரம'னெனும் பார்ப்பான்
செய்தெடுத்துப் போட்டவன், நீ; செத்தவுடன் நேராய்ச்
சிவவுலகம் போகுவன், நீ; செய்தவினை தீரக்
கையெடுத்துக் கும்பி"டென்றோர் கல்லெடுத்து நட்டுக்
கருவறைசூழ் சுவரெடுத்துக் 'கோயில்' என்று சொல்லி
மெய்யெடுத்துக் கூறிடுவான் போல், பார்ப்பான் கூறி,
மேலுலகக் காவலன்போல் மேலமர்ந்து கொண்டான்! 5

மேலமர்ந்து கொண்டவனின் மேற்பூச்சும் நூலும்
மேய்தவளைக் கூச்சலதும், தமிழினத்தை வீழ்த்திக்
காலமரக் கையமரச் செய்தனகாண்! இக்கால்
கருத்தெழுந்து பெரும்புரட்சி செய்ததுகாண்! செய்தே
வேலமர்ந்த தோளினராய், விறலமர்ந்த கையுள்
விசையமர்ந்து விட்டதனால், விரகமர்ந்த பார்ப்பான்
தோலமர்ந்த என்பினனாய்ந் தொடைநடுங்கிப் போனான்!
தொகைதொகையாய் எந்தமிழர்
தோள்கள்எழக் கண்டான்! 6

குலங்களெலாம் மதங்களெலாங் குப்பைக்கா டென்றும்
கூட்டிவைத்த நூல்களெலாம் அடிமைவிர கென்றும்,
கலங்கலுற்ற தமிழன்மனந் தெளிந்துணர லானான்!
கவணுருவுங் கற்களென விரைந்துவர லானான்!
நிலங்குமுறும்; நீர்குமுறும்; வான்குமுறும் அன்றோ?
நீளடிமைத் துயில்களைந்தால் உலகதிரும் அன்றோ?
புலங்குவிந்த 'சாதி'மதம் பொடிந்துபுகை யாகும்!
பூண்தெறித்து வானிடையில் மின்னலிடி தோன்றும்! 7

குடுமியெலாந் தீப்பறக்கும்! நூல்கழுத்தைச் சுற்றும்!
குந்தாணித் தொந்தியெல்லாங் கலக்கமுற்றுச் சாயும்!
கொடுமைவிளை 'வேதமொடு மநு' நூற்கள் எல்லாம்
கொழுந்துவிட்டுப் பாய்ந்தெரியும்!
புராணங்கள், வேகும்!

கொடுமையெலாம் வாயரற்றும்! கீழ்ப்பாய்ச்சி கட்டும்
'கிறுக்கெல்லாம் உருக்குலையும்! செருக்கடங்கிப் போகும்!
நெடுமைநெடுங் காலமெலாம் ஆரியத்தின் கையால்
நெஞ்சொடிக்கப் பட்டகதை மாறிநடந் தேறும்! 8

மறத்தமிழன் ஆண்டகதை உடல்சிலிர்க்கக் கேட்கும்!
மானம்விழிப் புண்டகதை உலகமெல்லாம் பேசும்!
அறத்தமிழன் வாழ்ந்தபுகழ் ஆழ்கடலும் பாடும்!
அற்றையவன் வீழ்ந்தகதை மலைப்புழைகள் சொல்லும்!
செறுத்தெழுந்தே ஆரியத்தைத் தீய்த்தகதை வானில்
செங்கதிராய் விண்மீனாய்ப் புடவியெல்லாம் காய்ச்சும்!
புறத்தெழுந்த புதுப்பாட்டாய்ப் பொய்யழிந்த செய்தி
புதுப்பண்ணின் இசையோடு யாழ்நரம்பில் ஓடும்! 9

அந்த நன்னாள் விரைவில்வரும்! விரைவில்வரும்;
[எம்மோர்
அரசமைத்த செய்திதனை முரசொலித்துக் காட்டும்!
மந்தநடை போட்டதமிழ் மக்களெலாம் சேர்ந்து
மறக்களிற்று வெற்றிநடை போடும்ஒலி கேட்கும்!
சொந்தமொழி, சொந்தநிலம், சொந்தப்பண் பாட்டின்
சுவைநலன்கள் யாவையுமே விருந்தயரும் ஞாலம்!
தந்தனதோம்! தந்தனதோம்!
யாமெழுந்தோம்! தோம்! தோம்!
தமிழரெலாம் ஒன்றிணைந்தோம்!
ஒன்றிணைந்தோம்! தோம்! தோம்! 10

-1971

## 71 வாழ்க தமிழர்கள்! வாழ்க தலைவர்கள்!!

ஏழு கோடித் தமிழர்கள் இருந்தால்
ஏழு கோடி நினைவுகள் இருக்கும்!
ஏழு கோடி நினைவுகள் எழுந்தால்
எண்பது கோடிப் போக்குகள் தோன்றும்!
வாழும் வகைகளும் ஆளுக் கொன்று;
தாழும் நிலைகளும் நாளுக் கொன்று!
ஏற்றம் என்பது கட்சிஎண் ணிக்கை!
மாற்றம் என்பது மனநிலைத் திரிபுகள்!

அனைத்துத் தமிழரும் அறிஞர்கள் என்க!
அனைத்துத் தமிழரும் தலைவர்கள் என்க!
தொண்டர் என்பவர் துண்டுக் கலைபவர்!
துண்டுகள் நாலைந்து விழுந்ததும் தலைவரே!
நாலைந்து துண்டுகள் விழுவதற் குள்ளே
காலையும் கையையும் அசைப்பது தொண்டு!
தொண்டு வாழ்க! தொண்டு வாழ்க!
துண்டுக் கலையும் தொண்டு வாழ்க!

தமிழர் வாழ்க! தமிழும் வாழ்க!
சிமிழா விழிகளும் திறந்த செவிகளும்
அங்காந்த வாயும் அலைகின்ற கையுமாய்
எங்கே எங்கே எங்கே என்றே
இரவும் பகலும் எந்நே ரத்தும்
வரவும் செலவுமாய் வாழ்கின்ற தமிழர்கள்
அனைவரும் வாழ்க! அனைத்துத் தலைவரும்
இனைய தமிழரால் என்றும் வாழ்கவே!

-1972

## 72 அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க!

ஆரியப் பார்ப்பான் அன்றைய தமிழனின்
வேரினை வெட்டி வீழ்த்திய நாள் முதல்
தமிழரின் ஆட்சியைத் தமிழரே நடத்துதல்
அமிழ்ந்த மலையை அகழும் அருஞ் செயல்!

தப்பித் தவறியோர் தமிழன் எழுந்தே
அப்படி இப்படி ஆட்சியைப் பற்றினால்
இன்னொரு தமிழனே எதிர்ப்பதும், அவனின்
பின்னங் காலைப் பிடித்தே இழுப்பதும்,
அடிக்குழி பறித்தே ஆளைச் சாய்ப்பதும்
வடித்து வைத்த வரலாற்றுச் செய்தி!

தமிழனைக் கொண்டே தமிழனைச் சாய்ப்பதில்
சிமிழா விழியோடு ஆரியன் செய்யும்
தந்திர மந்திரம் தமிழர்க்குப் பழங்கதை!
முந்தை இரணியன் கதையினை எண்ணுக!

இற்றைத் தமிழனின் ஆட்சியை எதிர்த்தே
ஒற்றை நடிகன் உறுமலும், அவனைப்
பற்றிக் கொண்ட பார்ப்பனர் தூண்டலும்,
வெற்றி காண விளம்பரப் படுத்தலும்,
திரவிடச் சோழனைத் திரவிடச் சேரன்
கரவடங் கொண்டு கழுத்தறுப் பதுவே!

கலைஞர் ஆட்சியைக் காசுக்கு வாங்கிய
விலைஞரைக் கொண்டு வீழ்த்தும் கொடுமையை
உண்மைத் தமிழர் ஒருநாளும் பொறுக்கார்!
கண்மயிர் போலும் கருதுவர் உயிரை!

ஓரேஒரு கல்லில் இருகனி உதிர்க்கும்
இராசாசி எற்றிய இறுதிக் கல்லிது!
கலைஞரை வீழ்த்திக் காமராசரின்
நிலையினை உயர்த்துவேன் என்பர், இராசாசி!

காம ராசரின் கைகள் உயர்ந்தால்
"காம ராசரோ கருப்புக் காக்கை;
கருப்புக் காக்கையை இருப்புலக் கையினால்
வெருட்டுக, வெருட்டுக" என்பர், இராசாசி!

இராசாசி உள்ளம் தமிழர்க்குப் பள்ளம்!
இராசாசி நினைப்பதோ என்றைக்கும் என்னெனில்,
"இன்றோ நாளையோ எப்படி யோ,ஓர்
ஒன்றிப் பார்ப்பான் உயர ஏறித்
தன்கீழ்க் காலடித் தமிழரைக் கிடத்தி
முன்போல் 'மனுநெறி' மூளவி டானோ!"
என்பதே என்க! என்றும் தமிழர்க்குத்
தின்பதே வாழ்வெனில் அதுவும் திகழ்வதே!
நூற்பா ஒன்றினை நினைவினிற் கொள்ளுக!
"பார்ப்பான் நண்பன் தமிழர்க்குப் பகைவன்"

ஆகவே, கலைஞர் ஆட்சியைக் காக்க!
சாகவே நேரினும் தமிழரால் சாக!
பொருட்செல்வம் மானப் பொருட்டன்று! தமிழரே,
அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க!

-1972

## 73 தமிழ இனமே! தமிழ இனமே!

தமிழ இனமே! தமிழ இனமே!
கமழக் கமழக் கழகக் காலத்து
ஓங்கிய வாழ்க்கை தாங்கி யிருந்து,
நீங்குதல் அறியா அடிமை நிலைபெறத்
தாழ்ந்து கிடக்கும் தமிழ இனமே!
வாழ்ந்து கிடந்த வரலாற்றைப் புதுக்குவாய்!

உனைவிழிப் பிக்கவும் உனைவாழ் விக்கவும்
உனையிவ் வுலகத்துள் உரிமை இனமெனப்
பட்டயங் கட்டிப் பழம்புகழ் மீட்கவும்
கொட்டிய முரசம் எத்தனை தெரியுமா?
கூக்குர லிட்டவர் எவர்எவர் அறிவையா?
ஏக்கமுற் றுன்னை எழுக எழுகென
எழுதிக் குவித்த கைகள் எத்தனை?
தொழுது வேண்டிய வாய்கள் எத்தனை?

தோளை உலுக்கித் தூக்கி நிறுத்தி
'வாளைச் சுழற்றடா' என்றுனை வாழ்த்திய
பாட்டின் வேந்தன் பாரதி தாசற்கு
நீட்டி முழக்கி விழாநிகழ்த் தினையே!
என்ன பொருளில் இவ்விழா வெடுத்தாய்?
சொன்னவன் பாட்டின் சொற் பொருள் என்ன?
என்ன சொன்னான்? எவர்க்கவன் சொன்னான்?
இன்ன விளக்கங்கள் எல்லாம் அறிவையா?

குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கும்
முட்டாள் தமிழனே! மூடப் பிறவியே!
ஒன்றுகேள்; நீயோர் ஊமைய னல்லன்;
தொன்றுதொட் டடிமைத் தொழும்பனு மல்லன்!
அன்றுன் தமிழ்க்கொடி பனிமலை ஆண்டது.
இன்றுன் தமிழ்த்தலை இந்திக்குத் தாழ்ந்தது.
வடவரின் தொடர்பால் மானமும் வறண்டது!
தொடவும் கூசித் தோளைச் சிலிர்த்தவன்
திட்டத் திட்டப் பல்லொளி தெறிக்க,
தொட்டுத் தொட்டுச் சிரித்துப் பழகுவாய்!

நீயோர் அடிமை என்பதை நினையாய்!
பாயோ தரையோ படுத்துத் தூங்குவாய்!
படைத்ததை உண்ணப் பழகிக் கொண்டனை!
கிடைத்ததில் உள்ளக் கிறக்கம் கண்டனை!

உரிமை வேண்டிக் கேளடா என்றால்
உரிமைக்குப் பொருளென்ன என்று கேட்கிறாய்!
உரிமைக்குப் பொருளே உரிமை என்பதை
நரியும் நாயும் நன்றாய் உணருமே!
கட்டிய நாய்க்குக் கழுத்து முட்டக்
கொட்டி வளர்க்கினும் குரைத்துக் குரைத்துத்
தன்னுரி மையினைத் தவறாது முழக்குமே!
உன்னுரி மைக்கோ உளவு கேட்கிறாய்?
உலக இனத்துள் உன்னினம் ஒன்றுதான்
பலநெடுங் காலமாய் அடிமைப் பட்டது!
குடிமை தளர்ந்தது; பண்பு குலைந்தது;
மிடிமை சான்றது; மேல்வர மறந்தது!

தமிழனே இதுகேள்! உன்னினம் தாயினம்!
அமிழ்தெனும் உன்மொழி அனைத்தினும் தாய்மொழி
உன்நா கரிகம், உன்பண் பாடே
எந்நா கரிகத் தினுஞ்சிறந் திருந்தது!
உன்றன் பண்போ ஒருதனிப் பண்பாம்!
உன்றன் அறமும் அரசியல் அமைப்பும்
என்றும் பொருந்திப் பொதுமை இயல்வது;
ஒன்றும் பொதுமை புதிய தில்லையே!
காரல் மார்க்சு கண்ட பொதுமையைப்
பாருக் குரைத்தது பழம்பெருந் தமிழே!
இந்தப் பொதுநிலை கழகநூல் உரைக்கும்!
அந்த வரலாறு அடியொடு மாறியே
இன்றைய அடிமை இனவர லாறாய்க்
குன்றிக் குலைந்து கொடுமைப் பட்டதே!

உரைக்கக் கேளிதை; உன்னினம் இன்றோ
அரைக்காணி நிலத்தையே அளப்பருஞ் சொத்தாய்க்
கருதிக் கொண்டு கவலாது கிடக்கும்!

பெருநிலம் உனக்குச் சொந்தம் என்பதோ,
மொழிவழி உன்றன் முன்னோர் அதனையே
வழிவழித் தாயமாய் வைத்தனர் என்பதோ,
அடிமையாய்ப் போனபின் அறிந்திலை நீயே!
தடிமையாய்ப் போனதுன் தோலும் மானமும்!
விடியாத் தமிழனாய் வீழ்ந்து கிடப்பாய்!
படியாய்ப் போனதுன் முதுகு, பாரடா!

ஆரியன் வந்தான்; அரசைக் குலைத்தான்!
ஊரிலே புகுந்துன் உறவைக் கெடுத்தான்!
தமிழனாய் வாழ்ந்தவன் தலைத்தலைப் பிரிந்தே
உமிழத் தக்க ஒருநூறு குலமாய்ப்
பிரிந்து தன்பழம் பெயரையும் மறந்தான்!
உரிந்து தள்ளினான், ஊனைப் பார்ப்பான்!
குலத்தைக் காட்டி குனி, நீ என்றான்;
நிலத்தைக் காட்டி நிமிர்,உழை என்றான்!
குனிந்தாய் நிமிர்ந்தாய்; குடுமியன் சொற்குப்
பணிந்தாய்; படுத்தாய்; பற்பல கதைகளைச்
சொல்லிக் கிடந்தான்; சொக்கிப் போனாய்!
கல்லி எடுத்தான் மூளையை! கவன்றிலை!

சொல்லில் செயலில் வல்ல நீ, அதன்பின்
பல்லி சொல்லுக்குப் பயன்கேட்டு நின்றாய்!
கல்லை நிமிர்த்திக் கடவுள் என்றாய்!
பொல்லாப் பழங்கதை புழக்கத்தில் வரவும்
கொள்ளை போனதுன் பழந்தமிழ்க் கொடிமரம்!
மொள்ளைகள் பற்பல வந்து முளைத்தன!
வேதியர் வேதம் விண்ணையும் ஆண்டது!
சாதிச் சண்டைகள், சமயச் சழக்குகள்,
கல்வியில் வீழ்ச்சி, கடமையில் தொய்வு,
செல்வத் தாழ்ச்சி, சீரழி வெல்லாம்
படிப்படி யாகப் பழக்கத்தில் வந்தன,
பொடிப்பொடி யாகப் போனதுன் பெருமை!

அதன்பின், களப்பிரன், பல்லவன், மராட்டியன்,
புதிதாய் அரபியன், போர்ச்சுக் கீசியன்,

பிரெஞ்சுக் காரன் யாவரும் முறையே
அரசாண்ட பின்னை ஆங்கிலன் வந்தான்!
அதற்குள் உன்றன் அடிநிலை மறந்தது.
உதைகள் வாங்கி வாங்கி உன்றன்
தோலும் மரத்தது; தோள்கள் சூம்பின!
காலும் மடிந்தது; கைகளும் ஓய்ந்தன!
ஆகவே கிண்ணிச் சோற்றுக் கலைந்தாய்!
சாகக் கிடந்தவன் உன்றனைச் சாகாது
காத்ததும், கல்விக் கண்ணைத் திறந்ததும்,
மீத்த தடயத்தால் பழம்வர லாறு
காட்டி, மொழித்திறன் கணித்ததும், உயிர்ப்பினை
மீட்டுக் கொடுத்ததும், பார்ப்பன மேட்டிமை
வீழ்த்தி உனக்கு விலக்குக் கொடுத்ததும்,
தாழ்த்திய உன்றன் தலையை நிமிர்த்ததும்
ஆங்கி லேயனே!

ஆயினும் வடவன்
தூங்கிய உன்றன் தொடையிலே கயிற்றை
நன்றாய்த் திரித்தான்; நாடு பெறுகையில்
'ஒன்றே யாமென' உன்னையும் இணைத்துப்
பொன்றா உன்றனிப் போக்கைத் தடுத்துத்
தமிழ அம்மியை வடக்குக் குழவியால்
திமிறத் திமிற அரைத்துத் தேய்க்கிறான்!
அம்மி தேய்ந்தபின் முதுகிலும் அரைப்பான்!
உம்மென நீதான் ஊங்கொட் டுவையே!

இத்தகு போக்கில் மொழியையும் இழந்து
மொத்தமாய் உன்றன் மூளையும் இழந்து,
சொத்தெலாம் இழப்பாய் என்றே சொன்னால்,
[1]செத்தையும் [2]சருகும் [3]செருப்பும் போல
ஒத்துழைப் பதுவே ஒற்றுமை என்பாய்!
மெத்தவும் உன்றன் மேனி தடித்தது!

---

1. செத்தை — குளிர் காய்பவனுக்கு உதவுவது.
2. சருகு — எருவாட்டி தட்டுவோனுக்கு உதவுவது.
3. செருப்பு — மிதிப்போனுக்கு உதவுவது.

இனித்தமிழ் நாடே இந்தியத் தினின்று
தனித்துப் போவது தக்கதாம் என்றால்,
அரசியல் அடிப்படை என்னென ஆய்ந்தே
உரசிக் கேட்பாய்; உண்மை உணர்கிலை.
பொருளியல் அடிப்படை புகலுக என்கிறாய்!
மருளுமுன் மனத்தினை என்னென மதிப்பேன்?

தமிழகம் பிரியா திருப்பது தவறெனற்
கமிழாக் கரணியம் பத்தென அறைக!

ஒன்றே, தமிழ்மொழி உயர்நிலை கெடுமே!
இரண்டே, இந்தி என்றையும் புகுமே!

மூன்றே, சமயமும் குலமும் மூட்டிய
ஆன்ற புரட்டினை அகற்றலும் அரிதே!

நான்கே, பார்ப்பனன் நச்சுத் தன்மையால்
தீங்குறும் இனத்தினைத் தேற்றலும் அரிதே!

ஐந்தே, தமிழ்ப்பண் பாடகன் றொழிமே!

ஆறே, தமிழ்மொழி இலக்கிய இலக்கணம்
வேறு வேறாய் விலகி யழியுமே!

ஏழே, சமசுக் கிருதம் எழுந்து
பாழெனத் தமிழரை அடிமைப் படுத்துமே!

எட்டே, தமிழினம் இனியும் சிதறிக்
கெட்டுப் படிப்படிக் கீழ்மையுற் றழிமே!

ஒன்பதே, பொதுநிலை யுடைமை நிரம்பிய
மன்பதை இங்கு மலர்த்துதல் அரிதே!

பத்தே, அரசியல் அதிகார நிறைவே
எத்தானும் எய்தல் இயல்வதா காதே.

இத்தகு வியலாமை என்றும் இருந்திட
ஒத்ததுன் உளமெனில் ஒற்றுமை பேசலாம்!
இத்தளை நீக்கி எதிர்கா லத்துப்
புத்துணர் வெய்திடும் புதுக்குமு காயம்,

தோற்றிட வேண்டும் என்பையேல் அரசினை
மாற்றிட வேண்டும்! இந்நிலை மறுத்தே
ஒற்றுமை ஒற்றுமை என்றே உரைப்பது
வெற்றுரை மட்டு மன்றே; வீணுரை!

ஒன்றை மட்டும் நினைவில் ஊன்றுக.
என்றைக் கென்னினும் எவரிடத் தென்னினும்
அரசியல் நலன்கள் ஆயிரம் வரினும்
பொருளியல் நலன்கள் பூத்துக் குலுங்கினும்
உரிமை யில்லாத் தமிழகம் தமிழர்க்குக்
கருவில் லாத கழிநிலை மலடி!

'துறக்கமே எனக்குச் சிறையாக வாய்ப்பினும்
இறப்பத் தாண்டிக் குதிக்கவே விரும்புவேன்'
எனுமோர் அறிஞன் இயம்புதல் தெளிவாய்!
பினுமுன் பேதைமை பேசுவ தொழிவாய்!

ஆகவே தமிழனே! அழைக்கின் றேன்,உனை!
சாகவே என்னினும், விடுதலைச் சாவே!
இன்றைத் தமிழகம் அடிமைவிட் டெழுந்தால்
பின்றைத் தமிழகம் பெரும்பயன் எய்தும்!

உன்னை விடுதலைக் கொப்புவித் திடுக!
அன்னை நாட்டினை விடுதலை செய்க!
முன்னைப் பெரும்புகழ் உலகெலாம் முழக்குக!
"என்னைக்கும் என்னை இனத்திற்கும் என்னைப்
பின்னைக்கும் யானே பெரும்புகழாம் நின்றே"னென்
றன்னைக்கும் சொல்லி அத்தனுக்கும்சொல்லி,
உன்னைக்கும் உன்னின் உழைக்கும் உறவுக்கும்
பன்னி யுரைத்துப் பலவா றெடுத்துரைத்து
மின்னிப் புறப்படுக மேனிலையை
உன்னி நடத்திடுக, உறுபயன் விளையவே!

-1972

இன்றைக்கே எழாமல், நீ என்றைக்குத்
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
என்றைக்குக் காலமினி ஏற்றபடி
கனிந்துவரும், இந்நாள் போல?
குன்றைத்தூள் செய்கின்ற வல்லுணர்வை
உன்நெஞ்சில் குவிக்கும் வண்ணம்
என்றைக்குப் பாவேந்தன் இனியொருகால்
எழுந்துவந்தே எழுதித் தீர்ப்பான்?

இப்பொழுதே எழாமல், நீ எப்பொழுது
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
எப்பொழுதும் பெரியார்போல் இராப்பொழுதும்
பகற்பொழுதும் இளைப்பா றாமல்
முப்பொழுதும் முதுமையிலும் ஊரூராய்த்
தெருத்தெருவாய் முழங்கு கின்ற
ஒப்பரிய இன்னொருவர் இனிவந்தா
உனக்கென்று பேசித் தீர்ப்பார்?

இந்நொடியே எழாமல், நீ எந்நொடியில்
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
எந்நொடியும் செந்தமிழை வீழ்த்துதற்கே
எதிர்பார்க்கும் ஆரி யத்தை
அந்நொடியே இடுப்பொடிக்கும் மொழிவல்லார்
தேவநேயப் பாவா ணர்போல்
இந்நிலத்து வேறொருவர் இனிவந்தா
ஆய்ந்துண்மை எடுத்துச் சொல்வார்?

இக்காலே எழாமல், நீ எக்காலை
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
எக்காலும், இனியொருகால் இந்நிலத்தை
இருவிழிபோல் காப்ப தற்கே
தக்கார் அண் ணாத்துரைபோல் எவர்வருவார்?
தமிழகத்தின் மேடை தோறும்
முக்காலும் தமிழ்காக்க எவர் முழக்கம்
செய்திடுவார், முனைந்து நின்றே!

இதுநேரம் எழாமல்,நீ எதுநேரந்
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
எதுநேரம் எந்தமிழர் ஆட்சியினை
இருட்டடிக்க — என்றே பார்ப்பான்
அதுநேரம் பார்த்திருக்க, அயர்வின்றி
உழைக்கின்ற அருட்செல் வர்போல்
எதுநேரும் என்றாலும் இளைக்காத
நெஞ்சொன்றா இனிமேல் கிட்டும்?

இன்றைக்கே நீ யெழுதல் இல்லையெனில்
இனியடுத்து வரப்போ கின்ற
என்றைக்கும் தமிழா, நீ எழப்போதல்
இல்லையென எண்ணிக் கொள்வாய்!
அன்றைக்குப் போனதடா நின்னுரிமை;
நின்பெருமை; அனைத்து வாழ்வும்!
என்றைக்குச் சிறப்பாயோ? நந்தமிழ்த்தாய்க்
குலகநிலை ஏற்று வாயோ?

-1973

கதைபேசி, இலக்கியங்கள் சலிக்கப் பேசிக்
கற்பனையாம் பொய், புளுகில், கலைகள் தம்மில்
புதைபட்டீர்; காலமெல்லாம் போக்கி விட்டீர்!
புரைபட்டீர்; சிறைப்பட்டீர்; பார்ப்பான் காலில்
உதைபட்டீர்; வதைபட்டீர்; அடிமைப் பட்டீர்!
ஓடோடித் துயர்ப்பட்டீர்! உருப்பட் டீரா?
சிதைபட்டீர், தமிழர்களே! இனிமே லேனும்
சேர்ந்திணைந்து செயல்பட்டே இனங்காப் பீரே!

மண்சுமந்தீர்; கல்சுமந்தீர்; வானை முட்டும்
மாளிகைகள், கோபுரங்கள், கட்டி வைத்தீர்!
விண்சுமந்த முகில்தடவும் காட்டை யெல்லாம்
வெட்டி நல்ல நகராக்கி, வெளிநா டேகிக்
கண்சுமந்த நீர்சுமந்து, கையற் றேங்கிக்
கால் நடையாய்த் துயர்சுமந்து, நெஞ்ச மெல்லாம்
புண்சுமந்தீர் தமிழர்களே! உருப்பட் டீரா?
பொறைசுமந்தே இனியேனும் இனங்காப் பீரே!

புகழ்படைத்த வரலாற்றைப் பொய்யாய்த் தள்ளிப்
புளுகுக்குப் ‘புராணங்கள்’ எனும்பே ரிட்டுத்
திகழ்கின்ற பெருமையுடன் அவற்றை யெல்லாம்
தெருத்தெருவாய்ப் போய்ச்சொல்லி, பெருமை யோடு
நிகழ்கின்ற விழாக்களிலே ஆரி யத்தை
நிலைநிறுத்தி, அதற்குக்கீழ் நீங்கள் நின்றே
இகழ்தேடும் தமிழர்களே! உருப்பட் டீரா?
இனியேனும் ஒன்றிணைந்தே இனங்காப் பீரே!

கட்டிவைத்த கோயிலுக்குள் — கருவ றைக்குள்
கல்லைவைத்துக் கடவுளெனும் பெரும்பேர் சொல்லி
எட்டிநின்று கும்பிடென்பான்; இளித்த வாயோ
டிலைவிரித்துப் படைத்திட்டு, விழுந்து, முன்னால்
முட்டிதேய் கின்றவரை கும்பிட் டீர்கள்!
மூடர்களே, தமிழர்களே! உருப்பட் டீரா?
அட்டியிலை அவனுயர்ந்தான்! இனிமே லேனும்
அனைவீரும் ஒருங்கிணைந்தே இனங்காப் பீரே!

உடன்பிறப்பை மேல்கீழென் றொதுக்கி விட்டீர்!
ஒண்டவந்த ஆரியனைத் தேவன் என்றீர்!
கடன்பெற்ற வடமொழிக்குக் காவல் செய்தீர்!
கருத்துயர்ந்த தாய்மொழியை எள்ளல் செய்வீர்!
மடன்பெற்ற மூங்கையவன் குருட்டுப் பெண்ணை
மணங்கொண்டு முடமொன்றைப் பெற்ற வாறாய்,
இடமின்றி உரிமையின்றி அடிமைப் பட்டீர்!
இனியேனும் மனம் ஒன்றி இனங்காப் பீரே!

**-1973**

## 76 இனநலம் பெரிது!

கருக்கும் வெயிலினில் கருகெனக் காயினும்,
காவிரி வற்றி வாய்க் கால்வழி ஓடினும்,
நெருக்கும் வறுமையில் நல்லுயிர் துவளினும்,
நீடிய கோடையில் பயிர்வளங் குன்றினும்,
இருக்கும் நலன்களில் இனநலம் பெரிதென
எந்தமிழ் நல்லினம் நினைந்திடல் வேண்டும்;
செருக்கும் பொறாமையும் சிறுமைச் செயல்களும்
சிதைத்திடும் சிதைத்திடும் இனத்தினை, ஆதலால்!

வெறுக்கும் படியொரு புன்மை விளையினும்,
வீணர் பலரிகழ்ந் தலர்மொழி யுரைக்கினும்,
மறுக்கும் படியிலாக் குறைசில நேரினும்,
மாற்றவர் அவற்றையே மனஞ்சுடச் சுட்டினும்,
பொறுக்கும் நிலைக்கெலாம் இனநலம் பெரிதெனப்
பொறைதமிழ் நல்லினம் நினைந்திடல் வேண்டும்;
குறுக்கில் நுழைதலும் குப்புறக் கவிழ்த்தலும்
குலைத்திடும் குலைத்திடும் இனத்தினை, ஆதலால்!

தப்பித் தவறியோர் தலைவனிங் கெழுந்து முன்
தடங்கெட நடக்குநந் தமிழரைக் கூட்டியே
வெப்பினும் மழையினும் நமக்கென நடக்கையில்
வெறுக்கலி லாமன வேட்கையில் பிழைசில
திப்பியைப் போலவே தெரியினும் தேன்பெறுந்
தேவையால் இனநலங் காத்திடல் வேண்டும்;
துப்பலும் தூறலும் அடியறத் துணித்தலும்
தொலைத்திடும் தொலைத்திடும் இனத்தினை, ஆதலால்!

முத்தினை எடுக்கையில் சிப்பியைத் தவிர்த்தல்போல்,
மொந்தையை வடித்ததன் கள்ளினை யருந்தல்போல்,
மத்துநெய் வழிக்கையில் மற்றது விடுத்தல்போல்,
மண்டிஎள நீரினில் மட்டையை நீக்கல்போல்,
ஒத்துளங் கொண்டிடும் நிலைகளில் இனநலம்
உயர்வெனத் தமிழினம் நினைந்திடல் வேண்டும்;
குத்தலும் குடைதலும் குறும்புசேர் உரைகளும்
கொன்றிடும் கொன்றிடும் இனத்தினை, ஆதலால்!

நூறுநூ றாண்டுகள் நொடிந்திடு மோரினம்
நொண்டியின் நடைநடந் திளநடை பயில்கையில்
ஏறென முன்நடப் போன்மன ஏழ்மையால்
ஏஎதோ ஓரிரு பிழைசெயல் உண்மையால்
வேறெனக் கருதிடா தின நலம் பெரிதென
விறல்தமிழ் மறலினம் நினைந்திடல் வேண்டும்;
காறலும் கனைத்தலும் கயமைகள் விளைத்தலும்
கவிழ்த்திடும் கவிழ்த்திடும் இனத்தினை, ஆதலால்!

-1973

## 77 தமிழ்த் தொண்டர் அறிந்திடுக!

எந்தமிழர் மொழிநலத்தைக் காக்கின்றார்
எவரவரே எமக்கிங் காசான்;
எந்தமிழர் இனநலத்தைப் பேணுகின்றார்
எவரவரே எமக்குத் தோழர்;
எந்தமிழர் உரிமைபெற உழைக்கின்றார்
எவரவரெந் தலைவர்; என்றும்
எந்தமிழர் பழம்பெருமை மீட்கின்றார்
எவரவர்க்கே தொண்டர் யாமே!

தமிழர்ஒரு தவறு செய்தால், தமைப்பெரிதாய்
எண்ணியதைத் தமுக்க டிப்போர்
நமிலிருப்பர்; நாமவரை இனங்கண்டு
நகல்வேண்டும்! நன்மை எண்ணி
உமிமலையில் ஓரரிசி கண்டாலும்
அதைப்பொறுக்கி உயர்வு செய்யும்
அமிழ்தமனங் கொண்டவரே இனங்காப்பார்;
அவரையும்நாம் அறிதல் வேண்டும்!

தக்காரும் தகவிலரும் தம்செயலால்
தமில்தாமே உயர்வர்; தாழ்வர்!
பொக்காரும் சிற்சிலகால் மணியார்போல்
பொலிவிப்பர்; உணர்தல் வேண்டும்!
முக்காலும் முழுப்பொய்யை வாய்ச்சரக்கால்
மூடுவதும் முடியா தன்றோ?
எக்காலுங் குறையாத கொள்கை,வினை
எவர்க்குண்டோ அவரே எம்மோர்!

நந்தமிழர் நலம்பேணும் நாட்டமவர்க்
குண்டாயின் நாத்த டிந்து
செந்தமிழின் நலங்காப்பார் தமையொருவர்
சிறுமைசெய எண்ணு வாரோ?
வெந்தழியும் உள்ளத்தால் பிறருயர்வை
வியக்காமல் வெயர்ப்பார் தம்மை
எந்தமொழி யாலுயர்த்த—எந்தமொழி
யால்திருத்த — எண்ணு வோமே?

சொல்லெவர்க்கும் கைக்கு வரும்; மைக்குவரும்!
ஆனாலும் சொல்லுஞ் சொற்கள்
வல்லவரைக் காட்டிடுமோ, வினையல்லால்?
வருங்காலம் சமைக்கும் பாங்கில்
வெல்லவரும் பெரும்படையும் விரிசலுறின்
பகைக்கிங்கே வேறென் வேண்டும்?
நல்லவற்றைப் போற்றுங்கள்; அல்லவையோ
அவைதாமே நலிந்து போகும்!

செந்தமிழ்க்குத் தொண்டுசெய்ய வருவார்க்கொன்
றுரைத்திடுவேன்! "சிறப்போ தாழ்வோ
எந்தமுடி வானாலும் ஒருமுடிவோ
டிறுதிவரை இளைக்கா நெஞ்சும் —
சொந்தமுனைப் பில்லாமல் அயல்நிலத்தில்
விளைத்தறுக்கா மானச் சூடும் —
வந்தவிளை வெஃதெனினும் உவந்தேற்கும்
மனவலிவும் — வளர்தல் வேண்டும்!"

வினைவல்லார் இருப்பரெனின் அவர்திறத்தால்
தமிழ்காக்கும் வினையைச் செய்க!
புனைவல்ல சொல்திறமை உண்டென்று
பொய்புளுகு புனைதல் வேண்டா!
பனைவல்ல பெருந்திறலும் தினைப்பகையால்
பயனற்றுப் போதல் நன்றோ?
நினைவில்லை; பேச்சில்லை; செயலன்றோ
நெடுங்காலம் நிகழ்த்தல் வேண்டும்!

ஒருவினைக்கே நமக்கொருவர் ஒத்துவர
வில்லையெனில் ஒதுங்கிச் செய்க!
தெருமுனையார் பரிமாறும் சிறுசொல்லால்
மற்றவரைத் திட்டித் தீர்த்தல்
எருவினிலே நஞ்சுகலக் கின்றசெயல்!
எழுந்துபயிர் விளைதல் எங்கே?
பெருமுனைப்பால் பிறர்விளைவை எள்ளாதீர்!
பேருழைப்பே பெருமை சேர்க்கும்!

தீட்டுகின்ற மரத்தினிலே கத்தியின்கூர்
தேர்ந்திடுஞ்செய் நன்றி யின்மை
கூட்டுணர்வைக் குலைத்துவிடும்; இரண்டகத்தைக்
குருத்தவிழ்க்கும்; கூம்பச் செய்யும்!
காட்டுகின்ற நன்றியள வாமுயர்வு;
நன்றியற்றார் உய்தல் இல்லை.
பூட்டுகின்ற வாயினராய் அவரவர்தம்
புலமையினைப் பொலியச் செய்க!

எக்காலும் எல்லாரும் ஒன்றிணைதல்
எனுங்கொள்கை இயற்கை யில்லை;
திக்காலுக் கொன்றிரண்டாய்த் திரிபவரை
இணைக்குங்கால் தெரியும் உண்மை!
சுக்காலும் மிளகாலும் காரங்கள்
தனித்தனியாம்; சுள்ளி வேறாம்!
முக்காலோ அரைக்காலோ முடிந்தமட்டும்
இணைந்தவரை முனையச் செய்க!

நமக்கொருகால் வாய்ப்புளதென் றொருமுதுகில்
நாட்டியவாள் நம்மோர் வாங்கித்
தமக்கெருவாய் நம்முதுகில் தைக்கின்ற
நாள்வரவும் தயங்கி டாது!
கமுக்கமொடு செயுந்தீங்கும் வெளிப்படுதல்
காலத்தால் கனியுஞ் செய்கை!
நமக்குள்நாம் புறம்பேசித் தாழ்ந்திழியின்
இனப்பகைதான் நலிவ தெங்கே?

குன்றியள வெண்ணியதும் குன்றளவாய்ச்
செய்தவர்போல் கூறு வாரும்,
நன்றியறி வின்றித்தாம் ஏறிவந்த
அடிமரத்தை நறுக்கு வாரும்,
மன்றினிலே நிமிர்ந்துரைக்கத் திறனின்றி
மறைவினிலே மழுப்பு வாரும்,
இன்றினியும் தமிழினத்தில் லிருக்குமட்டும்
எந்தமிழர்க் கேற்றம் இல்லை.

-1973

*பார்ப்பனர் நால்வர் சேர்ந்தால்*
*பகை,பூசல், பொறாமை மற்றும்*
*ஆர்ப்பரிப் பெதுவு மின்றி,*
*அவரின வேர்க்குள் நீரை*
*வார்ப்பதெப் படி? என் னென்ன*
*வழிவகை? தமிழி னத்தைத்*
*தூர்ப்பதெப் படி? — என் றெல்லாம்*
*எண்ணுவார்; துணையும் காண்பார்!*

*அந்தோ! இவ்வுலகில் உள்ள*
*அனைவர்க்கும் மூத்த தாம் நம்*
*செந்தமிழ் இனத்தில் நால்வர்*
*சேர்ந்திடில், தமக்குள் தாமே*
*கொந்துதல், குடைதல், குத்தல்,*
*குழிபறித் திடுதல் — எல்லாம்*
*சந்தையில் நடப்ப தைப்போல்*
*சடுதியில் நடந்து போகும்!*

*ஒருவனை ஒருவன் ஏய்ப்பான்;*
*ஒருவனை ஒருவன் சாய்ப்பான்;*
*உருவாகித் திரளும் போழ்தில்*
*ஒருவனை ஒருவன் மாய்ப்பான்!*
*குருவினை முதுகில் குத்தி*
*மாணவன் குடைந்து பார்ப்பான்!*
*எருவெனப் பயனா கின்ற*
*ஒருவனை இணைந்தெ திர்ப்பான்!*

*தமிழின இளைஞர் கூட்டம்—*
*(தப்பில்லை நானு ரைத்தல்)*
*உமியினம்! பயனே யின்றி*
*ஊர்சுற்றும்; தெருக்கள் சுற்றும்!*
*திமிலெனத் தோற்றம்! ஆனால்*
*தென்பில்லை; ஊற்ற மில்லை!*
*இமியள வேனும் நம்மின்*
*இனம்பற்றிக் கவலை யில்லை!*

தூக்கிய கழுத்துப் பட்டை!
துவளாத சட்டை! காலைப்
போக்கிய இறுகல் காற்பை!
இடுப்பெனும் துடைப்பக் குச்சி!
(தாக்கிய சொற்கள் அல்ல;
தாங்கொணாத் துயரத் தாலே—
ஊக்கிடும் நோக்கத் தோடே—
உலராத கண்ணீர்ச் சொற்கள்!)

அடடா! எம் இளைஞர்க் கந்நாள்
ஆற்றலும் துணிவும் மீண்டால்.......!
இடமென்ன, காலமென்ன,
எந்தமிழ் இனத்தை மீட்க?
தடமார்பு! குன்றத் தோள்கள்!
தழல்விழி! அரிமாச் சீற்றம்
முடமாகும் ஆரி யங்கள்!
முண்டமாய்ச் சரிந்து போகும்!

நேற்றில்லை; என்றோ சாய்ந்த
வரலாறு நிமிர்ந்து நிற்கும்!
கூற்றில்லை; மந்திரச் சொல்!
குலைவுற்ற தமிழர் நெஞ்சில்
காற்றில்லை; கனப்பு மில்லை!
ஆதலால் காய்ப்பு மில்லை!
ஏற்றதோர் பொழுது நேரும்;
இந்தியா மூளி யாகும்!

அழலுண்டு தமிழர் நெஞ்சில்
அஃதோர்நாள் கனத்த லுண்டு!
எழலுண்டு, தமிழர் கூட்டம்!
இருபது நூற்றாண் டாக—
நிழலுண்டு; பழம்பால் உண்டு;
நெய்யுண்ட 'மிலேச்சர்' கூட்டம்
விழலுண்டு! தமிழர்க் கந்தாள்
விடிவுண்டு; விளைவும் உண்டே!

-1973

## 79 எந்தக் கட்சியில் நீ, இருந்தாலும்....!

எந்தக் கட்சியில் நீ இருந்தாலும்
இனத்தை மறந்திடாதே! — தமிழா!
இனத்தை மறந்திடாதே! — உன்
சொந்தக் குடும்பம் தனைப்பல கருத்தால்
சுட்டுப் பொசுக்கி டாதே! — தமிழா,
சுட்டுப் பொசுக்கி டாதே!

எந்தத் திசையில் நீ இருந்தாலும்
ஏற்றந் துறந்திடாதே! — தமிழின்
எழிலைத் துறந்திடாதே! — பழங்
கந்தலை யுடுத்துக் கஞ்சியை யருந்தினும்
கனிவை யிழந்தி டாதே! — இனக்
கருத்தை யழித்தி டாதே!

எந்த நிலத்தினில் நீ இருந்தாலும்
இயல்பை மாற்றிடாதே! — இனத்தின்
இணைப்பை யறுத்திடாதே! — உன்
முந்தையர் வாழ்ந்த முதுதமிழ் நாட்டின்
மொழியை மறந்திடாதே — உணர்வை
மூளி யாக்கிடாதே!

எந்தப் படையினில் நீ இருந்தாலும்
இனத்தை எதிர்த்திடாதே! — தமிழா,
எதிரிக் குழைத்திடாதே! — உன்
சொந்தத் தமையனைத் தம்பியைக் கொல்லவே
சூழ்ச்சி நினைந்திடாதே! — பகைவன்
சோற்றில் நனைந்திடாதே!

-1973

சொன்னால் தெரிந்து கொள்வையோ? — இல்லை
தன்னால் அறிந்து கொள்வையோ? — அட,
தமிழ்மகனே!—உன்—வினைக்கடனே—நீ (சொன்னால்)

முன்னாள் தொடங்கி, அவர்—இந்நாள் வரையும், உன்றன்
மண்ணாள் உரிமை நலந் தன்னால் பிழைக்கும் கதை
(சொன்னால்)

விண்ணோர் என உரைத்துன்
முன்னோர் தமை அடிமை—செய்தார்!
பயன்—கொய்தார்!
இழிவு—செய்தார்!—அந்த
ஒன்னார் ஆள் கின்றவரை
என்னாம் தமிழர் நலம்?—தீதே!
செய்வர்—சூதே!
—எனும் இதனைச்.. (சொன்னால்)

கன்னிக் குமரி நிலம்
பின்னிப் படர்ந்துயர்ந்து—ஓங்கி,
விறல்—தாங்கி
நலந்—தேங்கி—புகழ்
மன்னும் தமிழ் எழிலைத்
தின்னும் வடமொழியைப்—பின்னும்
உயர்த்த, அவர்—இன்னும்
— முயல் வதனைச்.... (சொன்னால்)

காட்டைத் திருத்தித் தமிழ்
நாட்டை வளம் பெருக்கி—நின்றோம்;
துயர்—கொன்றோம்;
உலகு—வென்றோம்!—அவர்
மாட்டைத் தொடர்ந்து, புல்லின்
மேட்டை யறிந்து நாடி—வந்தார்!
துயர்—தந்தார்!
—கதை யிதனைச்...... (சொன்னால்)

*கொண்ட வடவரின்பால்*
*கண்ட பயன் அடிமை—யல்லால்,*
*உரைப்பது வோ—சொல்லால்?*
*மென்றோம் பல்லால்!—இனி*
*பண்டைப் பெருமைநிலை*
*உண்டே உரிமைபெற—வாரீர்!*
*ஒன்று—சேரீர்!*
*—விடுதலையைச்...... (சொன்னால்)*

**-1973**

## தமிழிளைஞர் வீறுகொள்க!

*இற்றைநாள் தமிழிளைஞர் எழில்புனைந்து*
*குறுந் துணியை இறுக்க மாட்டிக்*
*கற்றைமுடி பின்தொங்கப் பாவையர்போல்*
*கடைசுற்றக் காணும் போது*
*மற்றைநலம் நினைக்கின்ற நினைவெழுமோ?*
*மறவுணர்வு மதர்ந்து தோன்ற*
*அற்றைநாள் நலன்மீட்கும் ஆர்வமெல்லாம்*
*அலைந்தெழுமோ? அழிந்தி டாதோ?*

*பழியாகும் பாழ்வழியை நம்மிளைஞர்*
*உடன்விடுத்துப் பதைப தைத்து,*
*மொழியாலும் இனத்தாலும் நாட்டாலும்*
*பொருளாலும் பண்பாட் டாலும்*
*விழியாமற் கிடக்கின்ற தமிழினத்தை*
*விடுவிக்க வீறு கொண்டால்,*
*பொழியாதோ பொதுமைமழை; பூக்காதோ*
*புதுமைநலம்; பூட்கை யோர்க்கே!*

**-1974**

## 82

## சாதிப் புழுக்கள் நெளிந்திடும்
## சாணித் திரளைகள் நாம்!

எங்குப் பிறப்பினும் வாழினும் என்னினம்
ஏற்றமுற் றுய்யவே வேண்டுவேன்! — ஒரு
தங்கச் சிலையினைக் காப்பதுபோல் தமிழ்த்
தாயினைக் காக்கவே தூண்டுவேன்!
வங்கக் கடலினைத் தாண்டினும் மேற்றிசை
வானைக் கடந்துநாம் வாழினும் — புகழ்
மங்கச் செயுங்குலத் தாழ்ச்சியை என்னினம்
மண்ணிற் புதைத்திடக் கேட்குவேன்!

செந்தமிழ்த் தாய்பெற்ற பிள்ளைகள் நாம்;ஒரு
சேரப் பழுத்த பழக்குலை! — இதில்
எந்தப் பழத்தை உயர்வென்று சொல்வது?
எதனை இழிவெனக் கொள்வது?
முந்தப் பெறும்பல பேரினங்கள் இந்த
முதுமை நிலத்தினில் வாழ்கையில் — நாம்
கொந்திப் பிடுங்கிடும் தாழ்ச்சி யுயர்ச்சியால்
குலங்குல மாய்மனங் காய்வதோ?

வேற்றுப் புலத்திடை வாழவந் தோம்;உயர்
விண்ணை — கடல்களை நீந்தினோம்! — நிலந்
தூற்றப் பெறுங்குலத் தாழ்ச்சி உயர்ச்சியின்
தொல்லைகள் நீந்தத் தயங்குவோம்!
மாற்றப்பெறும் புதுத் தோற்றங்கள் பார்க்கிறோம்;
மற்றும் பொதுமைகள் காண்கிறோம்! — உயிர்
ஊற்றை — உடலினைத் தாழ்வுசொலும், இழி
வுள்ளச் சிறுமைகள் சேர்க்கிறோம்!

வானென ஓங்கிடும் கட்டிடங் கள்,பல
வாழ்க்கைப் புதுமைகள் செய்கிறோம்! — விண்
மீனெனப் பூத்த உயிர்களி டையே;கீழ்
மேலென வேற்றுமை பெய்கிறோம்!
தானுயர் வென்றிடும் சாதிகளும் ஒன்றிற்
றாழ்ந்த நிலைக்கொன்று தாழ்கையில் — தாழ்(வு)
ஏனெனக் கேட்க நடுங்கிடு வோம்;அறி
வூக்கமி லாதவோர் தன்மையால்!

சேர்க்கின்ற வேற்றுமை பற்பல; நம்மினம்
செய்த கொடுமைகள் பற்பல! — தீமை
வேர்க்கின்ற உள்ளங்கள் பற்பல! கூசிடும்
வெட்டிப் பொறாமைகள் பற்பல!
ஆர்க்கின்ற நூல்களால் என்னபயன்? கோடி
அறங்கள் முழக்கிடும் நூல்களேன்? — நாம்
யார்க்கவை சொல்லத் துடித்திடுவோம்? நம்மை
யாருக்கிங் கே,விலை போக்குவோம்?

'சாதி'ப் புழுக்கள் நெளிந்திடு மோர்மொத்தைச்
சாணித் திரளையாய் வாழ்கையில் — நாம்
ஓதி யுணர்ந்திட்ட மக்களைப் போல்;உல
கோருக் குரைக்கத் துடிக்கிறோம்!
காதுயிர்ப் பற்றசெ விடர்களாய், இரு
கண்களி லாத குருடராய் — நில
வீதி யுலாவரப் பார்த்திடு வோம்! என்ன
வேட்கையில் இங்ஙனம் செய்குவோம்?

முன்னம் பிறந்தவர் என்பதனால் உயர்
மூதுரை சொல்லத் துடிக்கிறோம் — எனில்
சின்னஞ் சிறியராய் வாழ்ந்திடு வோம்;மனச்
சிறுமையி னால்புழு வாகிறோம்!
இன்னும் நினைக்க மறுத்திடு வோம்;உல
கேசும் படிபல பேசுவோம்! — நறுங்
கன்னல் மொழித்தமிழ்த் தாயினமே, சாதிக்
காற்றில் கரைந்துயிர் சாய்வதோ?

-1974

## 83 செங்கதிர் புலர்ந்தது செந்தமிழ் வானில்!

எங்கும் தமிழர்கள் ஒன்றாய் இணைந்தனர்!
இன்னுயிர் உடல் — என நன்றாய்ப் பிணைந்தனர்!
'பொங்கும் உணர்வினால் மொழியையும் இனத்தையும்
புதுக்கினர்' — என்றே கொட்டடா முரசம்!
பூத்தது வாழ்வெனக் கொட்டடா முரசம்!

உண்மைத் தமிழர்கள் உலகெலாம் பரந்தனர்!
ஒண்டமிழ்த் தாயினை உலாவர விட்டனர்!
திண்மை உளத்தொடு தீந்தமிழ் பரப்பினர்!
தீமைகள் அகன்றவென் றூதடா சங்கம்!
தீய்ந்தது மடமையென் றூதடா சங்கம்!

முன்னைத் தமிழர்கள் மொய்த்தனர் நாடெல்லாம்;
முங்கிய பழமைகள் முகிழ்த்தன புதுமையாய்!
அன்னைத் தமிழ்மொழி உலகெலாம் ஆர்ந்திட
அலர்ந்தது பொழுதென — அறையடா முழவம்!
அகன்றது பகையென — அறையடா முழவம்!

கீழ்த்திசை நாடுகள் கிளர்ந்தன தமிழால்!
கிளைத்தது தமிழ்க்குலம்; தீய்ந்தது கீழ்மை!
வாழ்த்திசை அளாவி எழுந்தது வானில்;
வளர்ந்தது தமிழென — மிழற்றடா யாழை!
வாழ்ந்தது நிலமென — மிழற்றடா யாழை!

செங்கதிர் புலர்ந்தது செந்தமிழ் வானில்!
செறிந்தனர் உலகெலாம் சேரபாண் டியனார்
எங்கணும் சோழனின் இனம்படை கொண்டது!
எந்தமிழ் வாழ்ந்ததென் றியம்படா குழலில்!
ஏர்ந்தனர் தமிழரென் றியம்படா குழலில்!

-1974

## 84 அடிப்படையை விளைவிக்க!

ஊருக்கொன் றாய்ச்சிலையை ஊன்றுதலால்,
விழாக்களினால், உலகம்காணத்
தேருக்குள் அமர்ந்த வண்ணத் தோரணங்கள்
தலையிடிக்குந் தெருவலத்தால்,
ஆருக்கிங் கென்னபயன்? எத்தனையாண்
டவைநிற்கும்? ஆக்கங்காணும்
வேருக்குள் அன்றோநீர் விடல்வேண்டும்!
அடிப்படையை விளைத்தல் வேண்டும்!

பார்ப்பனரைக் குறைகூறிப் பயனில்லை;
நம்மவர்கள் பரந்து செய்யும்
ஆர்ப்பாட்டம் மிகப்பெரிதே! அளப்புகளோ
இனும்பெரிதே! அறியா மைக்குள்
போர்ப்பாட்டும் புகழ்ப்பாட்டும் பாடுவதால்
பயன்வருமோ? பொதுமை நாடும்
ஊர்ப்பாட்டுக் காரரெல்லாம் உளப்பாட்டோ
டுண்மையராய் உழைத்தல் வேண்டும்!

**-1974**

## 85 ஏற்றம் புதுக்கிட வாருங்களே!

தண்டமிழ்த் தாய்பெறும் துன்பத்தினும், பெற்ற
தாயின் துயரம் மிகப்பெரிதோ? — நில
மண்டில மெங்கணும் வாழ்ந்தவள்தான் — இன்று
வாழ்க்கை மெலிந்துடல் சோர்ந்துவிட்டாள்!

அமிழ்தமெ னுந்தமிழ் வாய்மொழி யைவிட
அன்னையின் வாய்ச்சொல் இனிப்பதுண்டோ? — செங்
குமுதஇ தழ்த்தமிழ் வாய்திறந்தால் — ஒரு
கோடி நரம்பும் சிலிர்க்காவோ?

ஓங்குத மிழ்ப்புகழ் நல்லினத்தை விட
உற்றார் தொகையும் மிகப்பெரிதோ? — துயர்
தேங்கு மனத்துடன் நீணிலம் யாங்கணும்
தேடிப் பிறர்நிலம் ஓடிவிட்டார்!

பீடுநி றைதமிழ் நாட்டை விட, நம்மைப்
பெற்றவர் ஆளும், மனைபெரிதோ? — பெருங்
காடும்,ம லையும் நி லங்களும் பூமலர்க்
காவும் விளங்கிடக் காண்கிலிரோ?

மாகுன்றத் தோளால் தமிழ்நலங் காத்தலின்
மனைவியின் நல்லுற(வு) ஆங்கினிதோ? — போரில்
போகின்ற நல்லுயிர் செந்தமிழ் நூலொன்றைப்
புரந்ததெனில் இன்பம்வேறும் உண்டோ?

கொல்லிம லைதரு தேன்தமிழ் இன்பினும்
குழந்தைகள் இன்பம் மிகப்பெரிதோ? — ஒரு
சொல்லில் தொடரில் இயங்கிடும் பாக்களில்
சொக்கும் இன்பம் மக்கள் பாலுளதோ?

வீரத்த மிழினம் மாய்ந்தகதை யெண்ணி
வெம்புகிறேன்; உயிர் மங்குகிறேன்? — ஒரு
சேரத்த மிழர்எ ழுந்துவிட்டால் — பழஞ்
செந்தமிழ்த் தாய்நலங் காண்கிலளோ?

தோய்துயர் தூவிய கொத்தடிமை யின்னுந்
தொலையாப் பெரும்பகை யாவையுமே — தமிழ்த்
தாய்தரும் பிள்ளைகள் தோள்களன்றோ, வந்து
தாங்கி யழித்திடல் வேண்டுமிங்கே!

வீரம்சி லிர்த்திடும் தோளெழுவீர்; பெரும்
வெற்பு மலைந்திடும் போர் புரிவீர்! — தமிழ்
ஈரம்க சிந்திடும் நெஞ்சங்களே! பண்டை
ஏற்றம் புதுக்கிட வாருங்களே!

-1975

## 86 வாழ்வே இலை வீழ்வே என
## வருவாய் தமிழ் மகனே!

தமிழ்த்தாய் பெறுந் துயரைவிடத்
தாயின் துயர் பெரிதோ — நம்
தாயின் துயர் பெரிதோ — நிலை
பெரிதோ — அவள்
அமிழ்தாம் தமிழ் மொழியைவிட
அன்னை உரை இனிதோ — நம்
அன்னை உரை இனிதோ — பொருள்
இனிதோ? (தமிழ்த்)

உயர்வாம் தமிழ் இனத்தைவிட
உற்றார் தொகை பெரிதோ — நம்
உற்றார் தொகை பெரிதோ — நலம்
பெரிதோ? — அவர்
பெயர் மேவிய நாட்டைவிடப்
பெற்றோர் நலம் பெரிதோ — நம்
பெற்றோர் நலம் பெரிதோ — மிகப்
பெரிதோ? (தமிழ்த்)

மலையாத் தமிழ்ப் போரைவிட
மனையாள் உற வினிதோ — நம்
மனையாள் உற வினிதோ — இதழ்
இனிதோ — அதன்
குலையாப் பெரும் புகழைவிடக்
குழந்தை நலம் பெரிதோ — நம்
குழந்தை நலம் பெரிதோ — நகை
பெரிதோ? (தமிழ்த்)

துயர் தூவிய அடிமைத்தனம்
தொலையாப் பெரும் பகைமை — என்றுந்
தொலையாப் பெரும் பகைமை — நெடும்
பகைமை — தமை
அயர்வே தவிர்த் தழிக்கா விடில்
அடடா, தொலைந் தனையே — அட,
அடடா, தொலைந் தனையே — அழிந்
தனையே! (தமிழ்த்)

வாழ்வே இலை வீழ்வே என
வருவாய் தமிழ் மகனே — உடன்
வருவாய் தமிழ் மகனே — தலை
மகனே! — வரும்
தாழ்வே தவிர் இனப்போர்புரி!
தமிழே பெறும் நலமே — செந்
தமிழே பெறும் நலமே — பெரு
நலமே! (தமிழ்த்)

-1975

## 87 தொண்டுக்குத் துணையாக வந்தவர்!

"துன்பம் இருக்கும்;
துணையிருக் காது!
இன்பம் என்பதோ
என்றும் கனவுதான்!
அன்பெனப தெல்லாம்
அளிக்கின்ற வரையில்!
தென்பெது தெரியுமா,
தேயாத தமிழ்தான்!
— என்ன சொல்கிறீர்?" என்றே, என்னொடும்
தொண்டு செய்திடத் துணிந்துமுன் வந்த
அன்பர் ஒருவர்க்கு அமைதியாய்ச் சொன்னேன்;
"நன்றே வாழ்க,உம் தொண்டு" — எனவாழ்த்தி
நின்றுகொண்டி ருந்தவர் நீட்டினார்! நடையே!

"உழைப்பே இருக்கும்;
உறக்கம் இராது!
மழைக்கும் வெயிற்கும்
மனந்தயங் காமல்
அழைக்கும் பணிக்குள்
அமிழ்ந்திடல் வேண்டும்!
பிழைப்பெலாம் செந்தமிழ்ப்
பிழைப்புதான்!" — என்றே,
"என்தமிழ் நாட்டிற்கும் இனத்திற்கும் மொழிக்கும்
என்னுயிர் உடல்பொருள் ஈவேன்" என்று,என்
முன்வந்த ஒருவர்க்கு முழுதும் விளக்கினேன்!
மின்வந்த கண்ணினால் மேல்கீழ் நோக்கியே,
பின்வந்து பார்ப்பதாய்ப் பேசிச்சென் றாரே!

"இகழ்ச்சிகள் இருக்கும்;
ஏச்சுகள் வருத்தும்'
புகழ்ச்சி வாய் உரைதான்!
புல்லியர் இடர்க்கு
நெகிழ்ச்சி, கூடாது!
நிலைத்திடல் அரிது!
மகிழ்ச்சி என்பதே
தமிழின் மலர்ச்சிதான்!"

— என்று வருகிறீர்?" என்றே என்தமிழ்த்
தொண்டுக்குத் துணையாய்த் துணிந்துவந் தவர்க்கு
நன்று விளக்கினேன்; "நல்லதென் மனைவிபாற்
சென்று கலந்து வருவேன்" — எனச் சென்றவர்
இன்று வரையிலும் எதிர்வர வில்லையே!

-1975

*எனக்கென எதுவுமில்லை — இந்த*
*இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர! — இவன்*
*தனக்கொரு நினைவிலனாய் — மிகத்*
*தாழ்வுற வாழ்வதைத் தவிர்க்கிலனே — எனச்*
*சினக்கவும் இயல்வதில்லை! — ஒரு*
*சிரிப்பினில் இகழவும் முடிவதில்லை! — பிற*
*மனக்குறை எதுவுமில்லை — தமிழ்*
*மானத்தை மீட்கின்ற நாள்வரையில் — இங்கு*
*எனக்கென எதுவுமில்லை — இந்த*
*இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர!*

*எண்ணவும் திறனிலனாய் — பிறர்*
*எடுத்துரைத் திடினுமோர் உணர்விலனாய் — மிகத்*
*திண்ணமாய் உரைத்திடினும் — ஒரு*
*செயலுக்கு முன்வரும் துணிவிலனாய் — பல*
*வண்ணமாய் வாழுகின்றான்! — இவ்*
*வாட்டமே யன்றிவே றெதுவுமில்லை! — தமிழ்*
*மண்ணிடைத் தோன்றிவிட்டேன்! — பொது*
*மனத்துடன் எதனையும் நினைத்துவிட்டேன்! — மற்று*
*எனக்கென எதுவுமில்லை! — இந்த*
*இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர!*

*உண்மையில் லாதவனாய் — தான்*
*உண்ணவும் உடுக்கவும் பிறரிடம்போய் — மனத்*
*திண்மையி ழந்துவிட்டான்! — ஒன்று*
*தேறவும் செய்யவும் வாய்ப்பிலனாய் — இழி*
*பெண்மையின் நடிப்பினனாய் — ஒரு*
*பேடியைப் போல்இவன் வாழுகின்றான் — என*
*எண்ணியே வருந்துகின்றேன்! — வேறு*
*எதனையும் பெரிதென நினைப்பதில்லை! — இங்கு*
*எனக்கென எதுவுமில்லை — இந்த*
*இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர!*

மொழியினை இழந்துவிட்டான்; — பல
மூடப்ப ழக்கங்கள் கொண்டுவிட்டான்; — வந்த
வழியினைத் துறந்துவிட்டான் — தான்
வாழ்ந்திட அடிமையாய்த் துணிந்துவிட்டான் — எனும்
பழியினை நினைத்து விட்டேன் — இப்
பாழ்மனம் எனைநொடி விடுவதில்லை — இந்த
இழிவினைத் துடைப்பதற்கே — எனை
இராப்பகல் தூண்டியே அலைக்கழிக்கும்! — வேறு
எனக்கென எதுவுமில்லை! — இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர!

**-1975**

## 89 இருப்பினும் ஒரு கை பார்த்திடலாம்!

எனக்குத் தெரியும், 'இந்தத் தமிழன்
என்றைக்கும் உருப்பட மாட்டான்' என்பது!
தனக்கும் உதவான்; தமிழ்க்கும் உதவான்!
தன்னின நன்மைக்கும் நாட்டுக்கும் உதவான்!
திருப்பம் இலாமல் சென்ற திசையிலே
தேடியும் ஓடியும் தேம்பியுந் திரிவான்!
இருப்பினும் ஒருகை பார்த்திடலாம்; — மன
எழுச்சியை அவன்பால் சேர்த்திடலாம்!

எனக்குத் தெரியும், 'இந்தத் தமிழன்
என்றைக்கும் திருந்திட மாட்டான்' என்பது!
மினுக்கத் தெரிந்துளான் மெலுக்காய்த் திரிவான்!
மெப்புக்கே உழைப்பான்; உப்புக்கும் அலைவான்;
காயினும் காய்வான்; நனையினும் நனைவான்!
கடுமையாய் உதைப்பார்க்கு அடிமையாய்க் கிடப்பான்
ஆயினும் ஒருகை பார்த்திடலாம்; — அவன்
அடிமைக் குழியைத் தூர்த்திடலாம்!

எனக்குத் தெரியும், 'இந்தத் தமிழன்
என்றைக்கும் உரிமையை மீட்கான்' என்பது!
மனக்குழப் பத்தினால் மாளினும் மாள்வான்!
மற்றவர் முயற்சியை நம்பவும் மாட்டான்!
தன்னினம் பேணான்; தாய்மொழி பேசான்;
தன்னையே விற்றுத் தன்குடல் வளர்ப்பான்!
என்னினும் ஒருகை பார்த்திடலாம்! — அவன்
ஏற்றத்தில் நறுநீர் வார்த்திடலாம்!

எனக்குத் தெரியும், 'இந்தத் தமிழன்
இம்மியும் உணர்ந்திட மாட்டான்' என்பது!
இனக்கொலை புரிவதில் இவன்பெரும் எத்தன்!
இருப்புக் கோடரிக் காம்புக்குக் கொம்பன்!
நின்றாலும் நிற்பான்; நெடுங்கிடை வீழ்ந்தால்
நெருப்புப் பிடித்தாலும் நெகிழாத வம்பன்!
என்றாலும் ஒருகை பார்த்திடலாம்! — அவன்
இழிவினில் ஒருதுளி தீர்த்திடலாம்!

**-1975**

## 90 தனியேனாய் நின்றாலும் என் கொள்கை மாறேன்!

தமிழர்களே எனைத் தாழ்த்தி வீழ்த்திடினும் அந்தத்
தமிழர்களுக் குழைப்பதுமே எனதுபெருங் கொள்கை!
தமிழரினால் செத்தாலும் தமிழ்க்குச்செத் தாலும்
தகுபொருளும் ஒன்றேதான் தாழ்ச்சியதில் இல்லை!
அமிழாத உணர்வாலே மொழி, இனத்தைக் காப்போன்
அயலாரால் வீழ்வதுவும் தாழ்வதுவும் நன்றோ?
உமிழாத தமிழர்களும் உமிழட்டும் காறி;
"உனக்கேனோ எமைக்காக்கும் வீண்வேலை" — என்றே!

நோய்முற்றிக் கிடக்கின்ற நோயாளி போல,
நொடிகின்ற என்னினத்தைக் காத்திடற்குப் போவேன்,
வாய்முற்றிப் பேசிடினும் அடித்தாலும் அதனை
வருந்தட்டும் எனவிட்டுப் புறம்போகு வேனோ?
தாய்நெற்றிச் சாகின்ற குஞ்சுகளும் உண்டோ?
தனிக்குஞ்சே ஆனாலும் தமிழ்க்குஞ்சாம் அன்றோ?
காய்முற்றிப் பழமாகும் காலமிது காலம்!
கயவர்க்கும் புல்லர்க்கும் கவலாதென் நெஞ்சே! 2

பேச்சுக்கும் ஏச்சுக்கும் பொருளில்லை, என்பால்!
பிறழ்கின்ற போக்குக்கும் மதிப்பில்லை, என்பால்!
பூச்சுக்கும் புனைவுக்கும் மயங்கிவிடேன் என்றும்!
புகழுக்கும் இகழுக்கும் பொருளொன்றே கொண்டேன்!
நீச்சுக்கும் நடப்புக்கும் இடத்தாலே பெருமை!
நிழலுக்கும் வெயிலுக்கும் காலத்தால் பெருமை!
மூச்சுக்கும் வாழ்வுக்கும் தமிழென்று கொண்டேன்,
முகத்துக்கும் வயிற்றுக்கும் பிறரைப்பார்ப் பேனோ? 3

எதைப்பற்றி வாழ்ந்தாலும் தமிழருமிந் நாளில்
எந்தமிழைப் பற்றிக்கொண் டிருந்தால்தான் தம்மில்
சிதைப்பற்று வாழ்ந்திடலாம்; உய்ந்திடலாம்! அல்லால்
சிறுமைக்கும் அழிவுக்கும் உடன்படுதல் வேண்டும்!
கதைப்பதுவும் நடிப்பதுவும் காதுக்கும் விழிக்கும்
களிப்பூட்டும்; ஆனாலும் அடிமைநீக் காவாம்!
பதைப்புற்றுத் துடிப்புற்றுத் தமிழரெலாம் இன்றே
பழிநீக்கும் உரிமைக்குப் பாடுபடல் நன்றே! 4

வாழ்ந்தாலும் தமிழுக்கும் தமிழர்க்கும் வாழ்வேன்!
வளைந்தாலும் நெளிந்தாலும் தமிழ்ப்பொருட்டே ஆவேன்!
தாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் தமிழ்மேல்தான் வீழ்வேன்!
தனியேனாய் நின்றாலும் என்கொள்கை மாறேன்!
சூழ்ந்தாலும் தமிழ்ச்சுற்றம் சூழ்ந்துரிமை கேட்பேன்;
சூழ்ச்சியினால் பிரித்தென்றன் உடலையிரு கூறாய்ப்
போழ்ந்தாலும் சிதைத்தாலும் முடிவந்த முடிவே!
புதைத்தாலும் எரித்தாலும் அணுக்களெல்லாம் அதுவே!

-1975

## 91 ஆயிரம் பேர் சேர்ந்தால் அனைத்தும் நடக்கும்!

நல்ல மனம்பல தேவை! — இந்த 1
நாலரைக் கோடித் தமிழரைக் காக்க!
சொல்லும் செயலும் பொருந்தும் — பல
சோர்வற்ற உள்ளங்கள் பற்பல வேண்டும்!

அல்லும் பகலும் நினைக்கும் — பலஆர்வங்கொள் 2
நெஞ்சங்கள் ஒருங்குறச் சேர்ந்து
வெல்லும் வினைகளைத் தேடும் — உயிர்
வேட்கை முனைப்புள்ள வேங்கைகள் தேவை!

தன்னல நாட்டமும் இன்றி — ஒரு 3
தலைமைத் துடிப்பும் பொறாமையும் இன்றிக்
கன்னல் தமிழ்நலம் காக்கும் — உயர்
காதல் இளைஞர்கள் இளைஞைகள் தேவை!

ஒப்பிய கொள்கையில் ஒன்றி — உடல் 4
உயிரைத் தருகின்ற வீர உணர்ச்சி,
செப்பிய கட்டளை யேற்றே — உடன்
செய்கின்ற ஆர்வத் துடிப்புடை யோர்கள்,

முப்பது பேர்கள்ஓர் ஊர்க்கு — வந்து 5
மூளுவ ராயின்இங் காளுவர் காதில்
எப்புதுக் கொள்கையும் ஏறும்! — அதை
ஏற்றில ராயிடின் ஆட்சியும் மாறும்!

ஆங்கிலம் பிழைபடப் பேசில் — பலர் 6
அருவருப் படைகுவர்; ஆயின்செந் தமிழில்,
தீங்குளங் கொண்டவர் சில்லோர் — பிழை
சேர்ப்பதை நமில்சிலர் மார்தட்டிக் கேட்டால்,

பாங்குறும் செந்தமிழ் தாழ்ந்து — பல 7
பட்டடைப் பழங்கடைக் குப்பையைப் போல
நீங்கிலா இழிவுகள் சேர்மோ? — இன்று
நின்றேனும் தமிழ்நலங் காத்திடல் வேண்டும்!

தமிழுக்குக் கேடுகள் செய்யும் — இழி 8
தாள்களை நூல்களைத் தடைசெயக் கேட்போம்!
அமைவுடன் ஒப்பில ராயின் — உள்ள
அனைத்தையும் வாரி நெருப்பினில் தீய்ப்போம்!

விளம்பரப் பலகையில் காணும் — பல 9
வேற்று மொழியினை மாற்றிநந் தமிழில்
வளம்பட எழுதிடக் கேட்போம்! — ஒத்து
வரவில்லை என்றாலோ புறம்பெயர்த் தெறிவோம்!

வானொலி யில்தமிழ் வீழ்ச்சி — பல 10
வாண்டுகள் தொடர்ச்சியாய்ச் செய்திடும் சூழ்ச்சி,
ஏனென முன்சென்று கேட்கும் — வீர
இளைஞர்கள் சிலர்வரின் அப்போதே தோற்கும்!

தப்புகள் ஊழல்கள் கேட்போம் — நல்ல 11
தரங்கெட்ட வாணிகம் புறங்கெடச் செய்வோம்!
துப்புகள் அரசுக்குத் தருவோம்! — உயர்
தோதுகள் செய்திட ஏதுகள் சொல்வோம்!

தீமையை முன்னின்று தீய்ப்போம்! — ஊர்த் 12
திருடர்கள் பலரஞ்சும் படி, தட்டிக் கேட்போம்!
ஊமைகள் ஏழையர்க் கண்டே — பல
உண்மைகள் கூறி உயர்ந்திட வைப்போம்!

கட்சிகள் சாதிகள் இன்றி — நல்ல 13
கருத்தொடு பொதுநலம் கருதி நடக்கும்
அச்சமில் லாதஉள் ளங்கள் — ஓர்
ஆயிரம் இருந்திடில் அனைத்தும் நடக்கும்!

புத்தமிழ் நாடுகாண் போரே! — ஒரு 14
புரட்சிசெய் தேநலம் புதுக்கிடு வீரே!
தத்திரி கிடதமி தோம்தோம் — தமி
தாந்திமி கிடதிமி தரிகிட தோம்தோம்!

-1975

நாடென்பார்; மொழியென்பார்; தமிழர்க் கெல்லாம்
நலிவென்பார்; இழிவென்பார்; பிறநாட் டாரால்
கேடென்பார்; மக்களெலாம் திரள்க வென்பார்;
கிளர்ந்தெழுமோர் வல்லுணர்வை எழுதிக் காட்டும்
ஏடென்பார்; எழுத்தென்பார்; இலக்கி யத்தின்
ஏற்றமெலாம் பலவாறாய் எடுத்துக் காட்டிப்
பாடென்பார்; ஆனாலும் தமிழர்க் குற்ற
பழிபோக்க வழிகாட்டார்! பதுங்கு வாரே!

மூச்சென்பார்; தமிழ்மொழியை! ஆள வந்தார்
முதுகெலும்பை முறித்திடுமோர் உயர்ந்த மேடைப்
பேச்சென்பார்! உரைநடையும் பாட்டுஞ் சேர்ந்த
பேருயர்ந்த நாடகத்தை நடித்து விட்டால்,
ஆச்சென்பார்! ஆயிரம்பேர் பட்டம் பெற்ற
அணியென்பார்; முன்னேற்ற நடைகாட் டுங்கை
வீச்சென்பார்! ஆனாலும் ஆரியத்தை
வீழ்த்துதற்கு வழிகாட்டார்! வீழ்கின் றாரே!

'எழும்பரிதிக் கதிரேயாம்' என்பார்; போர்த்த
இருள்நீக்க எழுந்ததிந்தக் கூட்டம் என்பார்!
தழும்பெல்லாம் போராட்டத் தழும்பே என்பார்,
தனித்துயர்ந்த திரவிடக்கூட் டாட்சி என்றே
பழம்புகழ்ச்சி பேசிடுவார்; ஆனால் நாட்டுப்
பாழ்நிலைதீர் வழிகாட்டார்; காட்டு வோர்க்கும்
விழும்பகைமை காட்டுகின்றார்; ஆரி யர்க்கே
விழுதாக நிற்கின்றார்! வீட ணோரே!

-1976

## 93 நாட்டின் கீழ்நிலைக்குக் கரணியமாவார் எவர்?

*நாட்டுக்கு நன்னிலை வாய்த்திட வில்லையா?*
*நாளுக்கு நாள், அது தாழ்வதும் உண்மையா?*
*கேட்டுக்குக் கரணியம் எவர்?—என்று கேளுங்கள்!*
*கீழ்நிலை வாழ்கின்ற மக்களா? இல்லையே!*
*கூட்டுக்குள் உயிரொடு கூழுக்கிங் கலைந்திடுங்*
*கூன்செறி மக்களோ, நல்லவர்! நல்லவர்!*
*பூட்டுக்குக் காவலாய்ப் பூனைக்குத் தோழனாய்ப்*
*பொய்யுரைத் திளிக்கின்ற அரசியல் புரட்டரே!*

*தப்பாமல் திட்டங்கள் சட்டங்கள் செய்யினும்*
*தாழ்ச்சியும் வீழ்ச்சியும் தவிர்ந்திட வில்லையா?*
*எப்போதும் இந்நிலைக்(கு) ஏது, எவர் தெரியுமா?*
*ஏழ்மையில் மிதக்கின்ற மக்களா? இல்லையே!*
*முப்போதும் உழைத்தாலும் முழத்துணிக் கலைகின்ற*
*மூங்கைவாய் மக்களோ, நல்லவர்! நல்லவர்!*
*ஒப்போலை பெற்றபின் ஊர்தியில் உலாவந்(து)*
*ஊரை உறிஞ்சிடும் அரசியல் உலுத்தரே!*

*கோடிபல் கோடியாய் வரிகளைத் தண்டியும்*
*கொடுமையும் கடுமையும் மறைந்திட வில்லையா?*
*மூடி மறைக்காமல் கேளுங்கள், கரணியம்!*
*முன்னேறத் தெரியாத மக்களா? இல்லையே!*
*வாடி வதங்கிடும் கள்ளமில்—கவடுமில்—*
*வாய்மைசேர் மக்களோ, நல்லவர்! நல்லவர்!*
*கூடியே நல்லுரை கூறி, அம் மக்களைக்*
*கொள்ளை யடித்திடும் அரசியல் கொடியரே!*

*பாலமும் அணைகளும் பன்னூறு கட்டியும்*
*பாழ்மையும் ஏழ்மையும் அழிந்திட வில்லையா?*
*ஓலமும் அழுகையும் ஏன்? — என உணருங்கள்!*
*உழைக்கின்ற கூட்டமா, கரணியம்? இல்லையே!*
*காலமும் ஏழ்மையில் கண்ணீர் வடித்திடும்*
*கல்லாத மக்களோ, நல்லவர்! நல்லவர்!*
*மூலமும் முடிவுமாய் வெற்றுரை பேசியே*
*முகமன் விரும்பிடும் அரசியல் எத்தரே!*

**-1977**

## 94 இற்றைத் தமிழனின் இழிநிலை!

இற்றைத் தமிழனின் இழிநிலை, எனக்கு
மற்றைத் துயரினும் மாணப் பெரியது!

மொழியினில் இவனொரு தாய்தவிர் மூங்கை!
முன்னோர் மொய்ம்பினை அறிகிலா மூடம்!
இனத்தை எதிர்ப்பதில் நாயினும் இழிந்தோன்!
எவர்க்கும் அடிமைசெய் இழிநிலைத் தரகன்!
நாட்டுப் பற்றினில் காட்டுக் குரங்கிவன்;
நாணமும் மானமும் நழுவிய தசைத்திரள்!
அரசியல் அரங்கிலோர் அடியிலா ஏனம்!
அயலார்க் குழைப்பதில் மயல்படாக் கழுதை!

குட்டக் குட்டக் குனிவுறும் கூனன்!
கோபுரப் பெருமையைக் குப்பையில் சாய்த்தோன்!
பொருள்செய் முயற்சியில் இருள்தோய் பூச்சி!
போக்கிலா துழலுமோர் நோக்கிலா ஏதிலி!
சமயச் சேற்றினில் அமையப் புதைந்தவன்!
சாதிச் சாய்க்கடை நெளிந்திடும் புழு, இவன்!
ஏற்றமும் மாற்றமும் நினையா இழி மகன்!
எதிரிக் குழைத்திடும் இனியநல் ஏவலன்!

தன்மதிப் பிழந்த தக்கைக் கொழுந்து!
தாழ்ச்சிக் குட்டையின் மீட்சியில் தவளை!
கொடுத்த கை முறிக்கும் நன்றிக் கொலைவன்!
குலத்தைப் பிளந்திடும் கோடரிக் காம்பு!
கள்ளமும் கயமையும் காய்த்திடும் முள் மரம்!
காட்டிக் கொடுத்திடும் கழிசடைப் பிறவி!
தலைமையின் முதுகில் தைக்குறுங் கைவாள்!
தன்னலம் கணக்கிடும் தந்திரக் குறு நரி!

ஆய இப்'பெருமைகள்' அனைத்தும் குறைவற
ஏய விளங்கிடும் 'தமிழனை' எண்ணியே,
மூளையும் உருகி முழுநலங் கருகி
வேளையும் பொழுதும் நாளும் வெம்பிச்
சுழலும் என்னுயிர் சுருக்கெனக்
கழலும் நாளைக் கணக்கிட் டிருப்பனே!

-1977

## 95 இதுதான் தமிழ்நாடு! இவன்தான் தமிழன்!

இதுதான் தமிழ்நாடு; இவன்தான் தமிழன்!
என்றென் றைக்கும் இவன் மாறான்!
எறும்புமுன் னேறி யானையை வீழ்த்தும்;
ஏணிவைத் தேற்றினும் இவன் ஏறான்!
வெதுவெதுப் பாக — நாக்கடிப் பாக —
வெற்றுரை ஆர்ப்பான்; வினை காணான்!
வீணரைப் புரப்பான்; கால்களில் வீழ்வான்;
வெறுங்கை வீசுவான்; பழி நாணான்!

எண்ணிக் கொள்ளுங்கள்; இவன்தான் தமிழன்!
எவர்உணர்ந் தாலும் இவன் உணரான்!
எத்தனை நூறோ டாயிரம் ஆண்டுகள்
ஏகினும் விரற்கடை இவன் வளரான்!
பண்ணிக் கொள்ளுங்கள், மனத்தினில் உறுதி!
பல்லிளிப் புக்கும் வழி நிற்பான்!
பாசம் பிடித்து மொழுக்கெனத் தேய்ந்தஓர்
பழங்கா சுக்கும் தனை விற்பான்!

எழுதிக் கொள்ளுங்கள்; இவன்தான் தமிழன்!
எந்தநாட் டிலுமே இவன் கிடப்பான்!
எச்சில்உண் டிக்கும் கழிகந் தலுக்கும்
எவன்பின் னாலும் இவன் நடப்பான்!
புழுதியிற் கிடப்பான், புன்மைகள் நினையான்;
பொய்மைக்கும் போலிக்கும் விலை தருவான்!
புதுமைகள் பூக்கும்; புரட்சிகள் மலரும்;
புதுவாழ் வமைத்திட இவன் விரும்பான்!

-1977

தமிழரே என்றனைத் தாழ்த்தினும் வீழ்த்தினும்
தமிழருக் குழைப்பதே என்பெரு வேலையாம்!
உமிழாத கொள்கையேன்; பகைவரால் அன்றி, என்
உறவினால் அழிவதை உயர்வெனக் கருதுவேன்!
அமிழாத நந்தமிழ் அன்றைய பெருநிலை
அடைந்திடப் போரிடும் அயர்விலாப் பணிக்கிடைச்
சிமிழா என் விழிகளும் தோள்களும் கால்களும்
செயலிழந் தயர்ந்தன என்பதென் சிறப்புமாம்!

சொல்லெடுத் திழிக்கினும் சோர்விலாச் செவியொடும்
சுழலிடைத் தள்ளினும் மயல்படா விழியொடும்
கல்லெடுத் தெற்றினும் வீழ்வுறா மெய்யொடும்
காலெடுத் துதைப்பினும் கலக்கமில் நெஞ்சொடும்
வல்லெடுத் துணர்வொடும் வண்டமிழ் வாழ்ந்திட
வல்லமைக் களிறென நடையிடும் போதிலே
புல்லெடுத் தெறிந்துயர் போக்கைத் தடுப்பவர்
புன்செயல் என்செயும் என்றனைப் புறத்திலே!

நோய்மிக முற்றியே நொடிந்திடும் ஒருவரை
நுண்ணுணர் வால், பரிந் துள்ளுயிர் ஒளிபெறத்
தாயெனப் பேணிடப் புகுந்தநல் மருத்துவர்
தந்நலம், தந்துயர் கருதிடில் தக்கரோ?
தாய்மொழி தம்மினம் தம்நிலம் யாவையும்
தாழ்த்தியும் வீழ்த்தியும் தம்மையும் இழக்குமிந்
நோய்மிகு தமிழரை நொடிதொறும் எண்ணிடும்
நோயினும் பிறிதொரு நோய்எனை வருத்துமோ?

தம்மையே நலப்படுத் தும்ஒரு நோக்கிலே
தமிழையும் நலப்படுத் திடுவதாய்ச் சொல்பவர்
எம்மையிங் கிழிப்பதும் அடிக்குழி பறிப்பதும்
இரங்கிடத் தக்கது! மிகஇழி வானது!
செம்மைசேர் உள்ளமும் செயலுற ஊக்கமும்
சிதர்வுறா மெய்யறி வூற்றமும் மிக்க, என்
வெம்மைதோய் உணர்வினை என்செய முடிந்திடும்?
வீணருக் கிரங்கிடு வீர், கவல் நண்பரீர்!

தாய்மொழி, இன, நிலம் காத்திடும் கொள்கையில்
தடுக்கியும் வீழ்ந்திடற் கில்லை, காண் தமிழர்கள்!
வாய்மையும் தூய்மையும் வளைவுறா நேர்மையும்
வன்மையும் தொய்விலா முயற்சியும் தோய்தலால்,
நோய்மையும் பொய்ம்மையும் வஞ்சகச் செயல்களும்
நூறுநூ றாயிரம் வாய்ப்பறை முழக்கமும்
பேய்மையும் காழ்ப்புறும் உட்பகைக் கீழ்மையும்
பித்தரின் தூற்றலும் சித்தரைக் குலைக்குமோ?

-1977

## 97 தமிழர் முதலில் தம் இனம் காக்கவே!

எதனைக் காவா விடினும் தமிழர்
எந்தமிழ் மொழியையும் மரபையும் காக்க!
அதுதான் தமிழினம் அழியாது காக்கும்!
அதுதான் தமிழகம் இழியாது தேக்கும்!
புதிதாய்ப் பிறந்தவர் அனைவரும் உலகில்
புல்லிய தம்மொழி, இனநலம் காக்கையில்
எதுதான் தோன்றிய காலம்என் றறியா
எந்தமிழ் இனநலம் காப்பது தவறா?

அவரவர் மொழிதான் அவரவர் இனத்தை
அழியாமற் காக்கும் ஆணிவேர் ஆகும்;
அவரவர் மொழியை அவரவர் இனத்தை
அழியாமற் காக்கத் தமிழை அழிப்பதா?
எவரெவர் மொழியும் இனமும் வாழ
எருவாய் உழைத்தே தமிழினம் வீழ்வதா?
தவறாது தமிழர் தம்மொழி பேணுக!
தாழாமல் முதலில் தம்இனம் காக்கவே!

-1977

## கதவு திறந்தது!

கதவு திறந்தது;
கதிர்வான் எழுந்தது;
கால் நடை கொண்டது, கடும்பணிக்கே!
உதவும் உளங்கள் ஒன்றின; மீண்டும்
உயிர்த்தேன் தமிழெனும் கண்மணிக்கே!

பழஞ்சுவர் இடிந்தது;
பாதை தெரிந்தது;
பம்பரக் கால்களும் சுழல் தொடங்கும்!
இழந்தபல் காட்சிகள் இறவா நினைவுகள்
இயங்கின; பகையோ போய் முடங்கும்!

கம்பிகள் தெறித்தன;
விலங்குகள் கழன்றன!
காவல் நெருக்குகள் எனைவிலகும்!
தும்பிகள் வந்தன; துந்துபி முழங்கின!
தோலா முயற்சிகள் நடைஉலவும்!

வானம் அசைந்தது;
மரங்கள் எதிர்ந்தன;
வழிசுழன் றது;ஓ! நடக்கின்றேன்!
மானம் நிமிர்ந்தது; மார்பும் விரிந்தது!
மலை, வயல் வெளி; ஆறு கடக்கின்றேன்!

கண்கள் மலர்ந்தன!
கைகள் அசைந்தன!
கருத்து மிதந்தன காற்றினிலே!
பண்களுந் தமிழே! பாடலுந் தமிழே!
பயில்நா டகம்உயிர் ஊற்றினிலே!

ஆண்டா நடந்தது?
அணுச்சிதை வில்லை!
அடடா, உயிர், உளம் உடலினிலே!
பூண்டஎன் கோள்நலம்! புதுமைத் தோள் நலம்!
புதுப்புது விளைவுகள் நடையினிலே!

-1977

## 99 பழந்தமிழ் இனமே! பழந்தமிழ் இனமே!

பழந்தமிழ் இனமே! பழந்தமிழ் இனமே!
விழுந்து கிடந்த வெறித்துயில் நீங்கி,
இழந்த பெருமையை இனிமே லாகிலும்
உழந்து தேடி ஒருநிலைப் படுத்த
எழுந்துலாப் போந்த பழந்தமிழ் இனமே!

கொழுந்துவிட் டெறிந்தவுன் அறிவுக் கூர்மையும்
செழுந்தண் மொழியும் செறிந்த சிறப்பும்
உழுந்தள வாகி உருக்குலைந் திட்டே
அழுந்திப் போன அவல வாழ்க்கையில்,
முழந்துணி யின்றி மூங்கைப் பட்டும் —
ஒருபுகல் இன்றி உலகம் ஓடியும் —
தெருவுறு நாயென அடிமை தேடியும் —

இன்னும் — உன்றன் இனந்தனைக் காட்டித்
தின்னும் வழக்கம் தீர்ந்தனை இலையே!
— இன்னும் உன்றன் இழிந்த சாதியை
உன்னும் மனச்செருக் கொழிந்தனை இலையே!
— இன்னும் உன்றன் தாய்மொழித் தமிழ்மேல்
மன்னும் பெருமை மதித்தனை இலையே!
— இன்னும் உன்றன் மதஇழி வுகளைப்
பின்னும் மடமைப் பிணிஒழிந் திலையே!

— அன்ன வாறே அழுந்தி, நீ இருந்தே
என்ன வாறாய் இழந்த பெருமையை
மீட்டிடப் போந்தனை? தமிழின மேன்மை
ஈட்டிடப் போந்தனை? எண்ணுக நன்றே!

-1977

வருவீர் தமிழரீர்! வருவீர் தமிழரீர்!
திருவீறும் நந்தமிழ் தெருத்தமிழ் ஆகி
ஒருவர் வாயினும் உயிர்ப்பின்றி ஒலிக்குமால்!
ஒருவர் வாயினும் உயிர்ப்பின்றி ஒலிக்குமேல்
கருவழிந்து போகாதோ? ஆகலின் காத்தற்கு
வருவீர் தமிழரீர் வருவீர் தமிழரீர்!

வம்மின் புலவரீர்! வம்மின் புலவரீர்!
செம்மாந் தெழுந்தநம் செந்தமிழ் செழிப்பின்றி
விம்ம லூற்றழ வீதிவாய்க் கிடக்குமால்!
விம்ம லூற்றழ வீதிவாய்க் கிடக்குமேல்
நம்மவர் உய்வரோ? ஆகலின் நயத்தற்கு
வம்மின் புலவரீர்! வம்மின் புலவரீர்!

எழுவீர் இளைஞரீர்! எழுவீர் இளைஞரீர்!
தொழுதகை நந்தமிழ் தூய்தகை யிழந்தே
இழிதகைப் பட்டாங்கு எழில்கெடச் சிதையுமால்!
இழிதகைப் பட்டாங்கு எழில்கெடச் சிதையுமேல்
அழிவும் நமக்கன்றோ? ஆகலின் அதுபேண
எழுவீர் இளைஞரீர்! எழுவீர் இளைஞரீர்!

கூடுக மகளிரீர்! கூடுக மகளிரீர்!
பீடுறு நந்தமிழ் பிழைப்டச் சாம்பியே
ஆடுகள மகள்போல் அரணழிந் திழியுமால்!
ஆடுகள மகள்போல் அரணழிந் திழியுமேல்
நாடுவ தெதனையோ? ஆகலின் நலந்தரக்
கூடுக மகளிரீர்! கூடுக மகளிரீர்!

செந்தமிழ் இனமே! செந்தமிழ் இனமே!
முந்துயிர்த் தெழுந்த, நஞ் செந்தமிழ் இனமே!
எந்த நடையதும் ஏற்றிடத் துணிவதோ?
எந்த நடையதும் ஏற்றிடத் துணிந்தவர்
சொந்த நடையதும் மறந்தது காணிரோ?
சோற்றிடை மானம் அழிந்ததும் காணிரோ?

-1977

## 101 எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?

எல்லாரும் மக்களுக் குழைக்கிறோம் என்கிறார்!
எல்லாரும் உண்மையர் யாமே என்கிறார்!
எல்லாரும் பிறரையே ஏய்ப்பவர் என்கிறார்!
எல்லாரும் தம்தொண்டே மெய்த்தொண்டு என்கிறார்!
எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
எவரதை அளந்தே எவருக் குரைப்பது?

அனைவரும் தம்மையே அறிஞர் என்கிறார்!
அனைவரும் தம்மையே ஆய்வாளர் என்கிறார்!
அனைவரும் தம்மையே நேர்மையர் என்கிறார்!
அனைவரும் தம்மையே அழுக்கிலார் என்கிறார்!
எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
எவரதை அளந்தே எவருக் குரைப்பது?

தம்கட்சி ஒன்றையே தங்கம்என் றுரைப்பார்!
தம்கொள்கை ஒன்றையே தகுந்ததென் றளப்பார்!
தங்களை மட்டுமே தவமுனி என்பார்!
இங்குளார் யாவரும் இழிந்தவர் என்பார்!
எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
எவரதை அளந்தே எவருக் குரைப்பது!

மொட்டையும் தன்னையே முழுமரம் என்றிடும்!
குட்டையும் தன்னையே குரைகடல் என்றிடும்!
மட்டையும் தன்னையே 'மதிமிகு' வென்றிடும்!
பட்டையும் பழித்துப் பஞ்சுலா வந்திடும்!
எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
எவரதை அளந்தே எவருக் குரைப்பது?

திருட்டில் வலுத்தவன் திருட்டை ஆய்கிறான்;
குருட்டுக் கண்ணனே குருடா என்கிறான்;
புரட்டனே பிறரைப் புளுகர் என்கிறான்;
அரட்டை அடிப்பவன் அறிஞனாய்த் திரிகிறான்;
எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
எவரதை அளந்தே எவருக் குரைப்பது?

-1978

102

## இனக்கொலைக் கொடியனை ஏனிங்குப் பெற்றனை ?

செந்தமிழ்த் தாயே! செந்தமிழ்த் தாயே!
சேய்எனக் குரைசெய், செந்தமிழ்த் தாயே!
எந்தமிழ் மண்ணில் இருப்பவர் பலருள்
ஏற்றமில் லாமல் இருப்பவன் தமிழன்!
சொந்தநன் மொழிநலச் சுரணையும் இல்லான்;
சொந்த, தன் இனத்தையே சுரண்டலும் செய்வான்!
இந்தவோர் இழிமன இனக்கொலைக் கொடியனை
ஏனிங்குப் பெற்றனை, இன்தமிழ்த் தாயே?

புட்களும் விலங்கும் போக்கை மறந்தில;
புன்மைத் தமிழனோ புலத்தையே மறந்தான்!
துட்கவும் இல்லான்; துணுக்குறு கில்லான்;
தூசள வும்இனப் பாசமும் இல்லான்!
மட்கிய குப்பையன்; மல்லார்ந்த ஆமையன்!
மானமும் நாணமும் மாண்புடன் மறந்து
வெட்கங் கெட்ட விலைமகன் இவனை
வீணில் பெற்றதேன், வியன்தமிழ்த் தாயே?

கண்டவை எழுதிக் கயமையை வித்திக்
காசையும் மாசையும் கவினுறக் குவித்துப்
பெண்டையும் பிள்ளையும் பிணையலாய் வைத்துப்
பீற்றற் பதவியும் பட்டமும் பெற்றுத்
துண்டையும் துணுக்கையும் தொடர்பிலா துரைத்துத்
தொலையாச் சொற்பொழி வாளனாய்த் திரியும் —
முண்டையும் பெறாத — மூங்கையன் இவனை
முனைந்தேன் பெற்றனை, முத்தமிழ்த் தாயே!

முன்னையும் பின்னையும் மூடர்கள் தொடர,
மூளைச் சலவையர் முன்னடி விழுந்தெழப்
பொன்னையும் பொருளையும் பொங்கித் தின்றிடப்
பூச்சியாய்ப் புழுவாய்ப் புன்மைக் கொப்பியே
தன்னையும் தன்னுடைத் தந்தை தாயையும்
தாழ்ச்சிச் சந்தையில் தமுக்கடித் திழப்பவன்
என்னையிங் குயர்வினை எய்துவான் என்று, நீ
ஈன்று மகிழ்ந்தனை எந்தமிழ்த் தாயே!

பழமையும் பேணான்; புதுமையும் காணான்;
பரத்தைவாய் உரத்துடன் தரத்தையும் மிகுப்பான்!
வழமையீ தென்பான்; வாழ்விதென் றுரைப்பான்;
வானத்து மீனுக்கு வடிவெலாம் புனைவான்!
கிழமையும் புரவான்; கிளைமையும் தழுவான்;
கீழ்மை யென்பதே குணமெனக் கிளத்துவான்!
உழல்மெய் உறுப்பெலாம் அடிமையோன் இவனை
உலவஏன் விட்டனை ஒண்டமிழ்த் தாயே!

-1979

## 103 எந்தத் தலைமுறை எழுந்துநிற் பானோ?

இந்தத் தமிழன் ஏமாளித் தமிழன்;
இன்னுஞ் சொன்னால் கோமாளித் தமிழன்!
சொந்தத் தமிழையும் படியான்; தன்னின்
சொந்த இனத்தையும் மதியான்; இவனொரு
மந்தத் தன்மையன்; மழுங்கல் மதியன்;
மானமும் நாணமும் அழுகிக் கிடப்பவன்;
எந்தத் தலைமுறை எழுந்துநிற் பானோ?
எவன்வந்து சொல்லி இவனைமீட் பானோ?

இந்தத் தமிழன் இளித்தவாய்த் தமிழன்;
இன்னுஞ் சொன்னால் புளித்தவாய்த் தமிழன்!
சந்துக்குச் சந்து தன்கொள்கை மாறுவான்!
சடுதியில் ஒப்பியே பின்னதை மீறுவான்!
குந்தித் தின்னும் வாய்ப்புக் கிடைத்தால்
குடும்பம் முழுதுமே அடிமையாய் விற்பான்!
எந்தத் தலைமுறை எழுந்துநிற் பானோ?
எவன்வந்து சொல்லி இவனைமீட் பானோ?

-1979

## 104 என்ன செய்குவது? இவர்களைத் தேர்விரே!

என்னருந் தலைவர்கள் இதுவரை மேடையில்
சொன்ன சொற்களில் சோர்வுகள் தோன்றின;
அன்னவர் செயல்களில் அயர்வுகள் தெரிந்தன;
முன்னம் ஈங்கவர் ஆண்ட முறைகளில்
இன்னல் இழிவுகள் எனப்பல விளங்கின;
பின்னரும் இவர்கள் அப் பிழைகளே செய்யலாம்!
என்னினும் தமிழரே,எதிர்வருந் தேர்தலில்
என்ன செய்குவ திவர்களைத் தேர்விரே!

இன்றைய நாளினில் அரசியல் என்ப(து),ஓர்
ஒன்றித் தனியனின் உழைப்பினில் நடக்குமோ?
அன்றியும் தேர்தலில் அனைவரை வீழ்த்தியே
வென்றி பெறுவதும் சூழ்ச்சியின் றாகுமோ?
நன்றி கொன்றவர், நடுநிலை பிறழ்ந்தவர்,
என்றும் இருந்திடும் பழியினர், ஆயினும்
ஒன்றுகூறுவேன் தமிழ்நல உண்மையால்
தென்றமிழ்த் திரவிடர் தேர்ந்து கொள்வீரே!

**-1979**

வானும் கதிரும் நிலைதிரிந்தே — ஒரு
வன்மை நெருப்பாய் நிலம் உமிழ்ந்து
கானும் கடலும் உருவாகிப் — பெருங்
கல்லும் பொடிந்து மண்ணாகி,
ஊனும் உயிரும் தோன்றுகையில் — ஓர்
ஒற்றைத் தமிழா நீ பிறந்தாய்!
கூனும் நிமிர்ந்தாய்! மொழிவிளர்ந்தாய் — பெருங்
குன்றும் காவும் நடை கடந்தாய்!

மனமும் கண்டாய்! ஒளிகண்டாய்! — இம்
மண்ணும் விண்ணும் நீயளந்தாய்!
இனமும் பெருகி மொழி பல்கி — உல
கெல்லாம் திரிந்தாய்! நீ விரிந்தாய்!
புனமும் புலமும் உழவெடுத்தாய் — பெரும்
புலமை இலக்கியத் திறம்பெற்றாய்!
கனமும் இரும்பும் நீகண்டாய்! — வினைக்
கருவிகள் செய்தாய்; வாழ்ந்திருந்தாய்!

முறைகள் கண்டாய்; நெறிகண்டாய் — வளம்
மூத்தாய்; வாழ்க்கை அறங்கண்டாய்!
குறைகள் தெளிந்தாய்; அறிவுயர்ந்தாய் — கலைக்
கூறுகள் கண்டாய்; மகிழ்கொண்டாய்!
மறைகள் உணர்ந்தாய்; புலனுயர்ந்தாய் — இம்
மண்ணும் விண்ணும் தொடர்பறிந்தாய்!
இறைமை தேர்ந்தாய்; பொறிகழன்றாய் — உள
ஏற்றம் பெற்றாய்! உள்ளறிந்தாய்!

ஏற்றம் பெற்றும் அறிவுயர்ந்தும் — நிலை
இழிந்தும் தாழ்ந்தும் கிடக்கின்றாய்!
தோற்றம் சிறந்தும் உயர்விருந்தும் — உன்
தொன்மை மறந்தே உழல்கின்றாய்!
வேற்றினம் உன்னை இழித்ததுகாண்! — பெரும்
வெற்றிக் குவிப்பை அழித்ததுகாண்!
மாற்றம் பெறவும் விரும்புகிலாய் — தமிழ்
மகனே! விழிப்பாய்! எழுந்துயர்வாய்!

மொழியைச் சிதைத்தாய் விழியிழந்தாய்! — நலம்
முழுதும் அழிந்தாய் பண்பிழந்தாய்!
பழியைச் சுமந்தாய்; அரசிழந்தாய்! — பெரும்
பகட்டில் திரிந்தாய்; புகழிழந்தாய்!
குழியைக் குன்றெனக் கால்வைத்தாய்! — உயர்
கொள்கை தவிர்த்தாய்!குழிவிழுந்தாய்!
வழியைப் பற்றி வருவாயோ? — நல்
வாழ்வும் பெற்றே உயர்வாயோ?

**-1980**

## 106 இன்றுள்ள நிலையில் எவ்வகைத் தொண்டும் பயனளிக்காது!

செய்தியிதழ் நடத்துகின்ற திருகுதா ளக்காரர்
செந்தமிழைத் தீய்க்கும் மட்டும் —
பொய்தெறிக்கப் பேசுகின்ற அரசியல் எத்தர்களின்
புரட்டுகள் ஒழியும் மட்டும் —
எய்திவரும் பொதுமைநலன் சீர்திருத்த மேம்பாடும்
இற்றிற்று வீழ்வ தல்லால்,
உய்தியில்லை செந்தமிழ்க்கே! உருவாகும் தமிழர்நலம்
உருப்படப் போவ திலையே!

சோற்றுக்கும் காசுக்கும் சொல்மாறி அறிஞர்குழாம்
சொந்தநலன் பேணும் வரைக்கும் —
கூற்றுக்கும் கொடியவராய்த் தலைவர்களின் கோமாளிக்
கொடுவினைகள் தீரும் வரைக்கும் —
ஆற்றிவரும் தமிழ்த்தொண்டில் ஆகிவரும் சிறப்பியல்கள்
அற்றற்று வீழ்வ தல்லால்,
மாற்றமில்லை தமிழ்நாட்டில்! மதிப்பில்லை செந்தமிழ்க்கு;
மக்கள் நலம் சேர்வ திலையே!

**-1980**

## 107 நலிந்துவரும் தமிழினத்தின் நலங்காப் போமே!

மொழியிலையேல் இனமில்லை; இனமிலையேல் நிலமில்லை;
முழுவுண்மை; இஃதறியா மூட் ரெல்லாம்
விழியிலர்போல், அடிமைகள்போல், தமிழினத்தை விடிவிக்க
வைப்பவர்போல் பற்பலவும் விதந்து கூறி,
வழியறியா வழிகளிலே மக்களினைப் பலகூறாய்ப்
பல்குழுவாய்ப் பலகொடிக்கீழ் வகுத்துக் கொண்டு
பழிமலிய அரசியலை நடத்துகின்றார்; பொருளியலைப்
பெருக்குகின்றார்! தமிழ்நாட்டைப் பாழ்செய் வாரே!

செந்தமிழைச் செந்தமிழர் பேரினத்தைச் செந்தமிழ்நன்
னாட்டை, இவர் போட்டியிட்டுச் சீரழித்தே,
இந்திக்கும் வடவர்க்கும் தில்லியரின் ஆட்சிக்கும்
என்றென்றும் அடிமையென ஈடு வைத்தே,
தந்தம்நலம், பதவி, அதி காரமிவை தாம்பெறவும்
தமக்குப்பின் தம்மக்கள் பெறவும் செய்யும்
தந்திரத்தை அரசியலென் றுரைக்கின்றார்; எழுதுகின்றார்!
தமிழினமே! தாயினமே! விழிப்புக் கொள்க!

வடமொழியை ஆங்கிலத்தை இந்தியினைத் தாய்தமிழில்
வளவளென முலமுலெனக் கலந்து பேசும்
முடமொழியைத் தமிழென்று முழங்குகின்றார்! இவர்தாமோ
முத்தமிழ்க்கும் இனத்திற்கும் காவல் செய்வார்?
படமொழியில் பேச்சாளர் படுகொச்சை எழுத்தாளர்.,
பச்சைமொழிப் பாவலர்கள் வாழும் நாளில்
நடமிடுவோம் தமிழகத்தில்! நாம்செய்த வினையறியோம்!
நலிந்துவரும் தமிழினத்தின் நலங்காப் போமே!

**-1980**

சாதிப் பேய் அழிந்துவரும் இந்நாளில் 'பார்த்த
சாரதியார்' தினமணிசெய் கதிரிதழை ஒவ்வோர்
சாதிக்கும் சிறப்பிதழாய்க் கொணர்கின்றார்; இங்கே
சரிந்துவரும் உணர்வுகளை நிலைநிறுத்து கின்றார்!
'மோதிக்கொண் டழியட்டும் தமிழரினம்' என்றே
முழுசூழ்ச்சிப் பார்ப்பனர்க்குக் கரவான எண்ணம்!
ஏ! திக்கெட் டும்ஓடி அடிமையுறுந் தமிழா!
ஏமாற்றுக் கொள்கையினை நீயுணர்தல் வேண்டும்!

படிக்கின்ற இளைஞரிடை, பெண்களிடைச் சாதி
பரவிவரும் இழிநிலையைக் — கேடுகெட்ட போக்கை —
இடிக்கின்ற வகையினிலே தமிழுணர்வைப் பாய்ச்சி
எந்தமிழர் பேரினத்தை ஓரினமாய்ச் செய்க!
துடிக்கின்ற மாணவர்க்குப் பொதுமைநலம் சொல்க!
துவளாத நல்லிளைஞர் மதர்மதர்க்கும் நெஞ்சில்
வெடிக்கின்ற புரட்சிக்கு வித்திடுக! அக்கால்
வீணர்களின் முயற்சியெலாம் தூள்தூளாய்ப் போகும்!

**-1980**

## 109 வேதியர் கொள்கையை வேரறுக்கும் முறை!

இந்தத் தலைமுறையில்
ஏதோ ஒருவழியில்
முந்தைத் தமிழினத்தை
முன்னேற்ற வேண்டும், நாம்
சொந்தத் திருமொழியும்
தொன்மைப் பெருநாடும்
சிந்துப் பகைவரினால்
சீரழியும் என்பதனால்!

மோதல் தமிழினத்துள்
முற்றும் தவிர்த்திடுக!
காதல் தமிழ்மொழிமேல்
கற்றவர்கள் கொண்டிடுக!
சாதி யொழிப்பும்
தூய தமிழ் வழக்கும்
வேதியர் கொள்கையினை
வேரறுக்கும் என்பதனால்!

-1980

சாதிநிலை வேரறுத்துச் சமயநிலை சீர்திருத்திச்
சமவுடைமைப் பொதுவுணர்வுக் கொள்கை செய்து,
பாதியிலே மொழியிழந்து, படிப்படியாய்த் தாழ்வுற்றுப்
பார்ப்பனியக் கோட்பாட்டுக் கடிமை யுற்றுப்
பூழ்தியிலே நெளிபுழுவாய்ப் புன்மைநிலைத் தேரையதாய்ப்
புலங்கிடக்கும் தமிழனிடைப் புழுங்கக் கூறி,
'வாழ்தியடா தமிழா, நீ' என வாழ்த்துப் பாடுகின்ற
நாளொன்றை வரவழைப்போம்; வருவீர் மக்காள்!

விழிப்பற்ற தூக்கத்தில் விலகலிலா மயக்கத்தில்
விழுந்துருளும் தமிழனிடை விழிப்புண் டாக்கி,
மொழிப்பற்றை உளம்புகுத்தி மூதறிவைப் புலம்பதித்து
முழுவெழுச்சி கொளச்செய்து முன்னேற் றத்தின்
வழிப் பற்றில் நடையூன்றி வாழ்க்கையிலே கைவிளங்கி
வளங்கொழிக்கும் விடிவுலகம் வருவாய் என்றே
கொழிப்புற்ற செந்தமிழில் குரல்கொடுப்போம்!
[விறல்எடுப்போம்!
குலைவின்றித் தமிழ் மக்காள் கூடுவீரே!

**-1980**

## 111 'இந்து மதம்' எனும் இழி மதம் ஒழிக!

மதத்தைப் போற்றும் மடமை மக்களே!
மக்களைத் தாழ்த்தும் மதம் உயர்ந் ததுவா?
மதத்தைத் தவிர்க்கும் மக்கள் உயர்ந் தவரா?
மக்களுள் பலரைத் தாழ்ந்தவர் என்னும்
மாமதங் கொண்ட மதமும் பெரிதா?

மதத்தைத் தவிர்த்தால் கொதித்திடும் நெஞ்சம்
மலத்தைத் தலையில் சுமந்திட வருமா?
இந்து மதமோ பார்ப்பன இழிமதம்!
சொந்த இனத்தையே சுட்டுப் பொசுக்கி
ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாக
வாயிலா மக்களாய் வாட்டி வதைக்கும்
கொடுமை மதம்அது! கொடியவர் கூடம்!
கடுமைப் படுகுழி! கயமையின் தொகுப்பு
சாதி சாதியாய் மக்களைப் படுத்து
மோதி அழிந்திடச் செய்யும் முள்காடு!

ஒருவன் தாழ்ந்தவன் ஒருவன் உயர்ந்தவன்
ஒருவன் கடவுள் ஒருவன் கீழ்மகன்
என்னும் ஆயிரம் இழிவுகள் செய்யும்
சின்ன மனத்தின் சீழ்உறை புழுக்குளம்!

வாயிலில் பலரை நிறுத்திவழி மறைக்கும்
கோயிலில் உள்ள கடவுள் எல்லாம்
பார்ப்பார்க்கு மட்டும் பாட்டன் உறவா?
ஊர்ப்பிறர்க் கெல்லாம் உதவாப் பகைகளா?
எந்த வாயினால் இந்து மதமெனும்
சொந்தப் பாழ்மதம் உயர்வெனச் சொல்லுவீர்?

எங்கோ ஒருவன் இழிநிலைப் பாவலன்
பெண்டுகள் நக்கும் வண்டு மனத்தவன்
**'அர்த்த முள்ளதே இந்து மதம்'** எனும்
சொத்தைக் கூற்றைச் சொல்லி இளிக்கிறீர்!

அனைவர் முன்னம் அறைகூவு கின்றேன்!
புனைவுரை இல்லை; பொய்யுரை இல்லை!
'அர்த்த' முள்ளதா 'இந்து' எனும் அழிமதம்?
பித்தக் குடியனின் பிதற்றுரை மெய்யா?

ஏற்றமென் போரே 'இந்து' மதமெனும்
நாற்றச் சாய்க்கடை நச்சுப் பொய்கை
மக்கள் வாழ்க்கை நலத்துக் குதவுமா?
ஒக்க அதனுள் இருத்தலும் ஒப்புமா?

'வேதம்' 'புராணம்' 'இதிகா ச'மெனும்
தீதுரைத் தொகுப்புகள் தீண்டாமை நீங்க
வழிவகை செய்யுமா? வாழ்வை உயர்த்துமா?
இழிவகை உரைகள் இனியும் பொருந்துமா?

ஓரினம் பிழைக்கவே உதவும்அந் நூல்களின்
வேரினி லன்றோ வேற்றுமை முளைத்தது?
மக்களை நூறு பிரிவுக ளாக
ஒக்க வகுத்திடும் நூல்களும் உயர்வோ?

'இந்து மதம்'எனும் இழிமதம் ஒழிக!
தந்தம் முயற்சியால் தனிவாழ்வு பெறுக!
மதமும் சாதியும் மாய்ந்துபோ கட்டும்!
புதுமை அறிவியல் பூத்துக் குலுங்குக!
பொதுமை நிலவுக! புதுக்குக, உலகையே!

-1981

*மனுநூல்,*
*எரிந்து சாம்ப லாகட்டும்! — நம்*
*இன இழிவு நீங்கட்டும்! — இங்கு*
*எல்லாரும் சமமெனும் நிலை*
*இறுதி ஆகட்டும்! — ஆழ்ந்த*
*இருள் போகட்டும்!* (மனு)

*உரிந்து போன தோல்களுமாய்*
*உடைந்து போன எலும்புமாய் — நெஞ்சம்*
*கரிந்து போன தமிழர் வாழ்வு*
*கசடு நீங்கிப் பொலியட்டும்!* (மனு)

*தெரிந்து செய்யும் கொடுமைகளால்*
*தீமை சேர்க்கும் கயமையால் — வாழ்வு*
*சரிந்து போன தமிழரினம்*
*சம உரிமை ஏற்கட்டும்!* (மனு)

*தாழ்ச்சி நீங்கி, மாட்சி ஓங்கத்*
*தமிழர் ஒன்று சேரட்டும்! — பகை*
*வீழ்ச்சி பெற்று மாய்ந்து போக*
*விளைச்சல் உறுதி ஆகட்டும்!* (மனு)

*வேதம் ஒழிக! புராணம் ஒழிக!*
*வேற்றுமைகள் நீங்குக! — இழி*
*சாதி ஒழிக! மதமும் ஒழிக!*
*சமன்மை பொதுமை ஓங்குக!*

**-1981**

## கெடுதலை உலகம்!

கெடுதலை நிரம்பிய உலகமிது — அதன்
கீழ்மையை வேரறுப்போம் — மக்கள்
விடுதலை பெற்றுய்ய வேண்டுமன்றோ — மூட
வழக்கத்தை நாருரிப்போம்!

மடுவும் மலைகளும் மக்கள் நிலையினில்
மண்டிக் கிடப்பதுவோ — நலங்
கெடவும் உயிர்க்குலம் இங்கொரு மூலையில்
கிடந்து துடிப்பதுவோ? (கெடுதலை)

வானுயர் கூடங்கள் மாடங்கள் ஓர்புறம்!
வாழ்க்கை நலன்கள் பல — அட!
ஊனுடல் நாறும் எலும்புகள் ஓர்புறம்!
உப்பும் புளியும் இல! (கெடுதலை)

சாதி மதங்களும் சாத்திரப் பேய்களும்
சழக்கர்கள் சூழ்ச்சிகளாம்! — தலை
மோதி உடைவதும் மேன்மை குலைவதும்
செந்தமிழ் வீழ்ச்சிகளாம்! (கெடுதலை)

ஆண்டிட வந்தவர் மக்கட் பயிர்களை
அழுகிடச் செய்தனரே! — பலர்
மாண்டிடத் தாம்வளம் பூண்டனர்; ஏழையர்
வாழ்க்கையைக் கொய்தனரே! (கெடுதலை)

மேன்மைதருந் தொழிலாளர் இனங்களை
வேறுபடுத்தினரே! — கொடுங்
கோன்மை புகுத்தி உரிமை எழுச்சியின்
குரலை நெரித்தனரே! (கெடுதலை)

**-1981**

அடக்கி ஒடுக்கிடப் பட்டநந் தமிழினம்
ஆட்சி அமைத்திடுமா — இனி
மீட்சி கிடைத்திடுமா — முன்
முடக்கிக் கிடந்திடும் வாழ்வின் உரிமைகள்
மீண்டும் முளைத்திடுமா — இனி
மேலுங் கிளைத்திடுமா?

தொடக்கப் பெருமைகள் சீர்மைகள் வந்துநம்
தொன்மை சிறந்திடுமா — உள
வன்மை பிறந்திடுமா — பெருந்
தடக்குன்றத் தோள்கள் எழுந்துநின்றே நம்மின்
தாழ்ச்சி விலக்கிடுமா — பகை
சூழ்ச்சி துலக்கிடுமா?

ஒடுங்கிக் கிடந்திடும் செந்தமிழ்த் தாயினம்
ஒற்றுமை யுற்றிடுமா — தனி
ஊராண்மை பெற்றிடுமா — உயிர்
நடுங்கிக் குலைந்திடும் வாழ்க்கை நலன்களும்
நன்கு வளர்ந்திடுமா — புகழ்
நாடிக் கிளர்ந்திடுமா?

ஓங்கிப் பெருகிடும் மேன்மைச் சிறப்புகள்
உள்ளம் மலர்ந்திடுமா — மனக்
கள்ளம் உலர்ந்திடுமா?
தேங்கிக் குமிழ்த்திடும் அறிவுமுன் னேற்றங்கள்
தேவை நிறைத்திடுமா — இனத்
தீமை மறைத்திடுமா?

**-1981**

## பற்றி எரியட்டும் தீ.

### எடுப்பு

*பற்றி எரியட்டும் தீ கொடும்*
*பார்ப்பனர் நஞ்சைப் பரப்பிய நூல்களில்*
*பற்றி எரியட்டும் தீ!*

### தொடுப்பு

*சுற்றி எரியட்டும்! சூழ்ந்தே எரியட்டும்!*
*சூழ்ச்சிகள் வஞ்சங்கள் தாழ்ச்சியின் நூல்களில் (பற்றி)*

### முடிப்பு

*மக்களை வேறு பிரித்தனவாம், அவை*
*மடமை வளர்த்தனவாம் — ஒரு*
*திக்குத் தெரியாமல் மூடமுட் காட்டிலே*
*திரிய வைத்தனவாம்அதனால் (பற்றி)*

*சிந்தனை கொன்றன வாம்;உயர் வாழ்வினைச்*
*சீர ழித்தனவாம் — ஒரு*
*மந்த நினைவினை மயக்க உணர்வினை*
*மனத்தில் வளர்த்தன வாம்! — அதனால் (பற்றி)*

*மெய்ம்மையைத் தின்றன வாம்;நல்ல வாழ்க்கையின்*
*மேன்மை யழித்தனவாம்! — பெரும்*
*பொய்மை பரப்பின வாம்; தமிழ் மக்களின்*
*பூண்டை அறுத்தனவாம்! — அதனால் (பற்றி)*

*பண்பை உறிஞ்சின வாம்;நமை யே, இழி*
*பள்ளத்தில் தள்ளினவாம் — நறுந்*
*தண்புகழ் சேரும் இலக்கிய நூல்களைத்*
*தாவி யழித்தனவாம்! — அதனால், (பற்றி)*

*ஆட்சியைச் சாய்த்தன வாம்;தமி ழர்களின்*
*ஆளுமை போக்கினவாம் — மொழி*
*மாட்சியை நீக்கி வடமொழி ஊக்கி, நம்*
*மானத்தை வாங்கினவாம்! — அதனால், (பற்றி)*

நாடு சிதைத்தன வாம்;நமை யேபெரும்
நாயகம் செய்தனவாம் — தமிழ்ப்
பீடு குலைத்திழி சூத்திரர் என்றொரு
பெயரைத் தந்தனவாம்! — அதனால், (பற்றி)

பெண்களைத் தாழ்த்தின வாம்;அருந் தாய்த்தமிழ்ப்
பேற்றை யிழித்தன வாம்! — இரு
கண்களை யும்குரு டாக்கி அறியாமைக்
கங்குலில் வீழ்த்தின வாம்! — அதனால், (பற்றி)

வேதம் மனுஇதி காசபு ராணங்கள்
மேவும்பல நூல்கள்என
வேதியர் ஓதின யாவுமே தீமைகள்!
வெம்மைக் கொடுந் தேள்கள்! — அதனால், (பற்றி)

-1981

## செந்தமிழர் இறுதிநிலை!

செந்தமிழை எண்ணிச் செயற்படுக!
செந்தமிழர்
வந்தவர லாறெண்ணி வந்திணைக!
வந்தவர்கள்
சொந்தநலம் தாம்துறக்க! சோர்வின்றிச்
சூழ்ந்தியங்கி
நொந்தநிலை நீக்கிடுக, நோன்று!

நாட்டுநிலை சிந்திக்க! நந்தமிழ்க்கு
வந்துற்ற
கேட்டுநிலை போக்கக் கிளர்ந்தெழுக!
கேண்மையினால்
ஏட்டுநிலை பேச்சு நிலை எல்லாம்
துலக்கிடுக!
வேட்டுநிலை வேண்டெனினும் வேட்டு!

ஈதுகாண் செந்தமிழர்க் கேய்ந்த
இறுதி நிலை!
தீதுகாண் பின்னைத் தேறோமேல்!
தேறுவமேல்
சூதுகாண் நீங்கும்! சொந்தநில
வாழ்வெஞ்சும்!
ஏதுகாண் மற்றிங் கினம்!

-1982

117

# மொழி, இனம், நாடு!

மொழி, இனம், நாடு — உயர்
முன்னேற்றம் தேடு! — பெரும்
பழியறியாத் தமிழர் புகழ்
பண்ணமைத்துப் பாடு! (மொழி)

அழிவு செய்யும் தீமைகளை
ஆழப்புதைப் போமே! — நன்மை
குழவிதைப் போமே!

இழிவு கூறும் சாதிமத
இன்னல் அழிப்போமே! — சூழும்
இடர்கள் ஒழிப்போமே! (மொழி)

பொதுமை நலம் பூத்திட — ஓர்
புரட்சி காணுவோமே! — பெரும்
புதுமை பூணுவோமே!

புதுமை வளம் அறிவு பெருக
போக்கை மாற்றுவோமே! — சம
நோக்கை ஏற்றுவோமே! (மொழி)

நலிவு சேர்க்கும் மடமைகளை
நடுவில் வைத்துக் கொளுத்துவோம் — நல்
லறிவை நாளும் வழுத்துவோம்!

வலிவுதேக்கும் தாய்மைத்தமிழை
வாழ வைத்துப் போற்றுவோம்! — நம்
வாழ்வில் ஒளியை ஏற்றுவோம்! (மொழி)

**-1982**

## 118 பெரியார் விதைத்தவை நச்சு விதைகள் என்றால், பார்ப்பனர் விதைத்தவை என்ன விதைகள்?

முள்மயிர் மூடிய முக்காட்டுத் தலையும்,
கொள்கோல் கமண்டலம் கொண்ட கைகளும்
நீறு மண்டிய நெற்றியும், பார்ப்பனத்
தூரு மண்டிய உள்ளமும் கொண்டு —
கரவுச் சிரிப்பொடு காவி உடையில்
துறவியாய் உலாவரும் **பார்ப்பனத் தொழும்பு —**
**காஞ்சி காம கோடி மடத்தின்**
**மூஞ்சி ஒன்று — சின்ன பெரியவாள் —**
என்னும் பெயருடன், இந்தியா வெங்கும்
மன்னிய சிற்றூர் பேரூர் எல்லாம்
கால்நடைச் செலவாய்ப் —'பாதயாத் திரை'யாய் —
நீள்நடை யிட்டே 'ஆரிய' 'நியம'த்தை
நாள் தொறும் பரப்பிடும் நாடகம் அறிவோம்!

அந்த'மூஞ்சி'தான், அண்மையில் —துணிந்து —
வெந்ததும் வேகா ததுமாய்ஓர் —கருத்தைத் —
திருவாய் மலர்ந்து —திக்கி யுள்ளது!
**பெரியார் அண்ணா ஆகியோர் நம்மிடம்**
**மூச்சுக் காற்றாய் முழங்கிச் சென்ற**
**பேச்சுகள் எழுத்துகள் நச்சு விதைகளாம்!**
**நாட்டில் அந்த நச்சுகள் பரவிக்**
**கேட்டைத் தந்தவாம்! கெடுத்துவிட் டனவாம்!**
சின்ன பெரியவாள் சிந்திய முத்து, இது!
பொன்னால் பொறித்த 'வேதப்' பொழிவிது!
கேட்டுக் கொண்டுதான் உள்ளோம்! கேட்டதும்
மாட்டிக் கொண்டு மடிந்திட வில்லை!

அல்லது, அத்தகு அன்புரை கூறிய
நல்ல 'பிறவி'யின் நாக்கை அறுத்துத்
தங்கத் தகட்டால் உறைசெய்து மாட்டிப்
பொங்கு பூசைகள் புகைத்திட வில்லை.
ஏன்தான் பிறந்தோம்? எதற்கு வாழ்கிறோம்?
வீணான பிறவிநாம்! விழல்களாய் இருக்கிறோம்!
கருகிப்போய்க் கிடந்தஇந் நாட்டிடை வந்தே
உருகி உருகி உயிரைத் தேய்த்தே

ஒளியைப் பரப்பிய ஊழித் தலைவராம்
அளிசேர் எங்கள் **அருமைப் பெரியார்**
பேசிய பேச்சுகள் நச்சுகள் என்றால் —
ஊசிய கருத்தை உரைத்த புராணங்கள்,
வேத அழுக்குகள், பொய்ம்மை விளக்கங்கள் —
ஊதை உளுத்தைகள் நச்சிலா உரைகளா?

ஆரிய மாயையில்அழுந்திக் கிடந்த
வீரியம் குறைந்த திரவிடர் விலாவில்
செந்தமிழ் மறத்தைப் பாய்ச்சிட இராப்பகல்
அந்தமிழ் பேசிய — எழுதிய — **அண்ணா**
பரப்பிய கருத்துகள் நச்சுகள் என்றால் —
சுரப்புடைப் பார்ப்பனர் சொன்னவை எல்லாம்
நச்சிலா உரைகளா? நன்மைதந் தவையா?
கச்சி 'உருவம்' கதைத்தது சரியா?
என்னஇக் கொடுமை? என்னஇக் கூற்று?
**சின்ன பெரியவாள்** செருக்குதான் என்ன?

சேற்றில் புழுக்களாய் — சிற்றுயிர் இனங்களாய் —
மாற்றிட இயலா மந்தை ஆடுகளாய் —
வழிவழிப் பார்ப்பனர் வந்து புகுத்திய
இழிவினை உணரா இழிபிற விகளாய் —
ஆரியக் கொடுநச் சரவம் கொத்திச்
சீரிய மொழியையும், சிறந்தநல் லறிவையும்,
ஆயிரம் ஆயிரம் அறிவுநூல் தொகையையும்,
ஏயுநல் லிலக்கிய இலக்கண இயல்பையும்,
நாகரி கத்தையும் நல்லபண் பாட்டையும்,
ஆகிய அரசையும் ஆட்சி நலத்தையும்,

ஒருங்கே அழித்துக் கொண்டஓர் இனத்தைப்
பெருங்கொள் கையினால் பிழைக்க வைத்த —
தன்மான ஊற்றினைத் தகைமைத் தலைவனை,
மண்மானங் காத்த மாபெரும் மீட்பனை,
அரியாருள் எல்லாம் அருஞ்செயல் ஆற்றிய
**பெரியார்** என்னும் பெரும்பே ரரசனை—
இழிப்புரை சொல்வதா? சொல்லியிங் கிருப்பதா?
பழிப்புரை வந்துநம் செவிகளிற் பாய்வதா?

நச்சு விதைகளா, நயந்து அவர் சொன்னவை?
பச்சிலை மருந்தன்றோ, எமக்கவர் பகர்ந்தவை?

பார்ப்பனப் பதடிகள் எம்மைப் படுத்திய
ஆர்ப்பொலி அடங்கியது அவரினால் அன்றோ?

ஆரியக் குறும்பர்கள் ஆக்கிய கொடுமையின்
வேரினைத் தீய்த்தது அவர்வினை யன்றோ?

மக்களுள் மக்களை வேறு பிரித்துத்
தக்க அவர் அறிவுக் கண்களை அடைத்து,
மடமைச் சகதியில் — மடிமை இருளினுள்—
கடமை தவிர்த்த கரவுச் சேற்றினுள்
புதைத்த பார்ப்பனர் புன்மையைத் தடுத்துச்
சிதைத்தவர் அல்லரோ ஈரோட்டுச் செம்மல்?

அவர்தம் முயற்சியை அடியொற்றி நடந்து
தவறிலாத் தமிழர் ஆளுமை தழைத்திட
உழைத்தவர் அல்லரோ அண்ணா உயர்மகன்?
இழைத்தஇவ் விருவரும் உரைத்தவை நஞ்சா?

இப்படி இங்கோர் 'எருமை' சொன்னால்
எப்படித் தமிழர் இதனைப் பொறுப்பது?

'வீரப் பன்'கள் வேண்டு மானால்
'மாறப்பன்' களாகி மண்ணைக் கவ்வலாம்!

யாரப்பன் என்று தெரியாதா பிறர்க்கு?
சேரப்பன் ஒருவன், 'சினை'யப்பன் ஒருவனா?

பாரப்பா தமிழா பார்ப்பனன் மொழிவதை?
வீரப்பர் போனால் விறலப்பர் இல்லையா?

வேதஆ கமங்கள் — விரிந்தபு ராணங்கள் —
சூதுஇதி காசங்கள் — சூழ்ச்சிசெய் மனுக்கள் —
இன்றைக்குப் பார்ப்பனன் எழுதும் இழிவுகள் —
என்றிவை யாவுமே இனியவை ஆகுமா?

பெரியார் அண்ணா வாய்களில் பிறந்தவை
உரிய மக்களுக் குதவிட வில்லையா?

தமிழர்க்கு அறிவைத் தந்திட வில்லையா?
தமிழர்க்குத் தன்மானம் ஊட்டிட வில்லையா?

தமிழின உணர்வைத் தட்டி யெழுப்பி
அமிழாத இனநலம் ஆக்கிட வில்லையா?

ஆரியர் செய்த அழிம்புகள் யாவையும்
கூரிய உரைகளால் கொன்றிட வில்லையா?

பார்ப்பனச் சூழ்ச்சியைப் பகுத்துக் காட்டி
ஆர்ப்புற் றெழும் உணர் வளித்திட வில்லையா?

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாக
நாயினுங் கேடாய் நந்தமிழ்ப் பேரினம்

நலிக்கப் பட்டும் நசுக்கப் பட்டும்
மெலிக்கப் பட்டும் மேலே றாமல்
கிடந்த கீழ்மையைக் களைந்து காட்டி
அடர்ந்தவர் எழுந்திட அளிதர வில்லையா?

பெரியார் உரைகளும் பெறற்கருந் தொண்டும்
உரிய பொழுதில் உதவிட விலையெனில்
தமிழினம் விழித்திடும் தகைவுநேர்ந் திருக்குமா?
ஆரியச் சேற்றினுள் அழுந்தித் தமிழன்
வீரியம் குன்றி மூச்சு விளர்ந்து
புதைக்கப் பட்டுப் போயிருக் கானா?
சிதைக்கப் பட்டிருக் காதா அவன் இனம்?

இவையெலாம் நேர்ந்திட வில்லையே என்ற
நவையுறு ஏக்க நலிவினால் அன்றோ
காஞ்சிச் சின்னவாள் கதைத்துத் திரிகிறார்?
பூஞ்சையாய்ப் போன புல்லுரை புகல்கிறார்?

பெரியார் ஊன்றிய நச்சு விதைகளால்
அரிய விளைவே அற்றுப் போகி
நாடே கெட்டு விட்டதாய் நவில்கிறார்!
நாடென்ன இவரது பாட்டனின் சொட்டமா?
நாடு கெட்டால் நமக்கிது தகாதென
ஓடிட வேண்டுவ தன்றோ உயர்ந்தது!

நாடு கெட்டதா? பார்ப்பனர் நாட்டிய
கேடு கெட்டதா? எஃது இங்குக் கெட்டது?

ஆரியக் கொட்டங்கள் ஆட்டங் கண்டு, அதன்
பூரியச் செயல்கள் புதைக்கப் பட்டன!

பார்ப்பனப் பூசல்கள் இனிநட வாவெனும்
போர்ப்பண் இங்கே எழுச்சி கொண்டது!
தமிழினம் மீண்டும் பெரியார் தொண்டினால்
இமைவிழி திறந்து எழுந்து கொண்டது!

அந்த எரிச்சலால் ஆரியத் தலைவர்
நொந்து சாகிறார்; நொட்டணை சொல்கிறார்.

பெரியார் விதைத்தது நச்சாம்! காஞ்சிப்
பெரியவர் விதைப்பது மருந்து விதைகளாம்!

ஏமாற்றிக் கொண்டே இருந்திட லாமெனத்
தாமாற்றும் பொய்யையும் புளுகையும் மேலும்
தொடர்ந்து வருகிறார் சின்ன பெரியவாள்!
அடர்ந்து வருமோர் ஆக்கம் அறிகிலார்!

அவருக் கிதன்வழி அறைந்திடு கின்றோம்!
தவறு நடந்தது தனிவர லாறு!
செய்த தவற்றையே மேலும் செய்திட
பொய்செய் பார்ப்பனர் எண்ணுதல் புரையே!

இனநலத் தீங்கை இற்றைத் தமிழர்
உணர்ந்து கொண்டனர்! உறக்கம் கலைந்தனர்!

இன்னும் அவரை இன்னலில் ஆழ்த்திட
எண்ணும் நினைவை பார்ப்பனர் எண்ணினால்
அவர்க்கது சாக்காட்டுத் தீமையை அளித்திடும்!
எவர்க்கும் எங்கும் தீங்கினை எண்ணியே
பழக்கப் பட்ட பார்ப்பன இனத்தினர்
வழக்கத்தை மாற்றி வாழ்வகை காணுக!
நெருப்புத் தமிழர் நிலையறிந்து
இருப்பதற் கேனும் இனிநலம் கருதுக!

-1982

'இந்து மதமெனும் இழிநிலை மதத்தில்
வந்து பிறந்தோமே' — என, நாம் வருந்திக்
கொண்டிருக் கையிலே, கொள்கையில் லாத
'மண்டுகம்' ஒன்று, மனம்மிகக் களித்தே
'இந்துநான்' 'இந்துநான்' — எனக்குரல் எழுப்பிச்
சொந்தம் பேசிப் பார்ப்பன வீழ்சுவர்
முதுகால் தாங்கி முட்டுக் கொடுப்பது
இதுகால் வரையும் இல்லாத வியப்பே!

அந்த 'ஒன்று'தான் அமைச்சுப் பதவியில்
வெந்துகொண் டிருக்கும் 'வீரப்ப' மாண்பு!

'இருபதாம் நூற்றாண்டு எட்டப்பன்' என்னும்
பெருமையைப் பெற்ற பிறவியிப் பிறவி!

மூவாயிர மாண்டு முண்டி யடித்துத்
தாவியும் திமிறியும் தாழ்ச்சியி னின்று
மீண்டுகொண் டிருக்கும் மீளாத் தமிழினம்
ஆண்டுகொண் டிருக்கும் ஆரியப் பிடியில்
மூச்சு முட்டிட முணகிய வாறாய்
ஆச்சுஆச் செனவே அலறிப் பிடித்துத்
தலையைத் தூக்கிப் பார்க்கையில், தலைமேல்
உலையின் சமட்டியால் ஓங்கியடிப் பதுபோல்
வீரப்பன் என்னும் விழல்மகன் பார்ப்பனர்க்(கு)
ஈரப்பன் ஆகித் திராவிட இனத்திற்(கு)
எதிரியாய் முளைத்ததை என்னெனப் புகல்வோம்!
பதரினில் பதராய்ப் போனதப் பாழுரு!

கச்சிச் சின்னவாள் கருத்தை யறிந்து, அவர்
உச்சி குளிர்ந்திட உரைகள் தருவதை
வீரப்பன் தவிர வேறுயார் செய்வார்?
நேரப்பன் ஆகி உரைகள் நிகழ்த்துவார்?

'ஆரிய திராவிடப் பருப்புவே கா'தெனும்
வீரிய உரைத்திறன் யார்வாய் வெளிவரும்?
பார்ப்பன இனத்திற்குப் பரிந்து, முன் வந்தே!
ஆர்ப்பரித் தெழுந்த ஆத்தோல் புலியவர்!

நலத்தை விரும்பி நயவஞ் சகமாய்க்
குலத்தை வீழ்த்திடும் கோடரிக் காம்பு!
அறத்தைப் பேசி ஆரியம் வளர்க்கும்
திறத்தைக் கொண்ட திராவிடப் பிறழ்ச்சி!

அமைச்சுப் பதவியை ஆரியம் காத்திட
நமைச்சல் மனத்தால் நல்விலை போக்கிய
நல்ல 'வீடண' நாயக உருவம்!
'வல்ல' 'சுக்ரிவ' வழிவழி மரபு!

பெரியார் அண்ணா பெயர்களைச் சொல்லியே
உரியவர் கொள்கையை உதைக்கும் பிரகலன்!
மருளைத் தீர்க்கும் மதிதரும் புகழ்திருக்
குறளைப் பழிக்கும் குறளர் கைத்தடி!
ஆரிய நச்சின் அளவறி யாத
சூரியக் கொழுந்து! தமிழ்திரி சுணங்கன்!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாக
வாயுரம் கொண்டும் வஞ்சகம் காட்டியும்
தமிழ்ப்பே ரினத்தைத் தாழ்த்தியும் வீழ்த்தியும்
சமழ்ப்புச் செய்த சாத்திரக் குப்பையை —
புராணப் புளுகை — வேதப் புரட்டினை —
அராவிக் காட்டிய அறிஞரை யெல்லாம்,
தமிழினங் காத்த தலைவரை யெல்லாம்,
அமிழாத அவரின் அறிவுரை யெல்லாம்,
சூறை யாடிய சுழிமகன்! தமிழினக்
கூரைமேல் திரியும் கொள்ளிக் குரங்கு!

பெரியார் அண்ணா பேரினங் காக்க
'உரைத்தவை நச்சுகள்' என்னும் உலுத்தனின்
கழுத்தில் சுற்றிய கருநாகப் பாம்பு!
கொழுத்த நாக்குடை பார்ப்பனக் குறும்பறை!
— அத்தனைப் பெருமைகள் அனைத்தும் படைத்த
சித்தனை — காஞ்சிப் பெரியவாள் 'சீடனை' —
நோக்கி இவ்வுரை நொந்து கூறுவோம்!
போக்கினை மாற்றிக் கொள்ளுக! புதியஓர்

ஆழ்வா ராகி அரற்றிட வேண்டாம்.
வீழ்வாரை வீழாது காத்திடல் வேண்டாம்!

இத்தனைக் காலமாய் இடர்பல பட்டுச்
செத்த தமிழினம் சிந்திக்கத் தொடங்கிப்
பெரியார் என்னும் பெருமகன் தம்மால்
உரிய உரிமைகள் பெற்று, இனி உய்ந்திடும்
அரிய முயற்சியை, அமைச்சதி காரத்தால்
நெரியச் செய்திடல் வேண்டாம்! ஆரிய
நச்சர வத்தை நல்லபால் ஊற்றி
மெச்சி வளர்த்து, மீளவும் நம்மேல்
உசுப்பி விடுதற்கு உழைத்திட வேண்டாம்!
பசப்புரை கூறிப் பதவியைக் காத்தற்குப்
பார்ப்பனர் பாதம் பற்றிட வேண்டாம்!

போர்ப்பண் முழக்கிது! புறக்கணிக் காமல்
வீரப்பன் வாயடங்க வேண்டும், இனியேனும்
சீரப்பன் ஆகித் திகழ்ந்து சிறக்கவே!

-1982

## 120 வருந்துழல் நெஞ்சமே!

மொழிக்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் — என
முழுமையாய்ச் செய்திடப் பலநூறு இருக்கையில்,
பழிக்கும் பேச்சுக்கும் சூளுரைக்கும் — எனப்
பாழாய்க் காலத்தை வீணடிக் கின்றனர்!
ஒழிக்கும் முனைப்பில் ஒருவருக் கொருவர்
ஒவ்வொரு நொடியிலும் தாழ்ந்திழி கின்றனர்!
அழிக்கும் பகைவரோ தமிழினம் சிதைவதை
அன்றன்றும் மகிழ்ச்சியோ டெதிர்பார்த் திருப்பரே!

இருந்த பேரின இழப்பை மீட்பதா?
எதிரியின் சூழ்ச்சிக்கே இருகண் விழிப்பதா?
மருந்துரை தந்தெம்மின் மக்களைக் காப்பதா?
மற்றெந் தலைவரை மனந்தெருட் டுவதா?
திருந்துமா செந்தமிழ்ப் பேரினம்? முந்தைநாள்
திசையெட்டும் சிதைந்தவர் வந்துகூ டுவரோ?
வருந்துழல் நெஞ்சமே! வழியொன்று சொல்வையோ?
வாழ்நாள் முழுதுமே முயற்சியில் கழிப்பையோ?

**-1982**

## 121 மெச்சும் பெரும்பணி!

தமிழுணர்வில்லாமல் தமிழரை இணைப்பது
உமியைப் பிசைந்தே உருண்டை பிடிப்பது!
தமிழரை இணைக்காமல் தமிழர்முன் னேற்றம்
அமையா தென்பதை அனைவரும் உணர்க!
இனத்தை ஒன்றாய் இணைப்பதே இங்குள
அனைத்துத் தமிழர்க்கும் அமைந்த பெரும்பணி!
மனத்தைப் பிளப்பன மதங்களும் சாதியும்!
இனத்தைச் சிதைப்பன இங்குள கட்சிகள்!
கட்சிகள், மதங்கள், சாதிகள் கழன்ற
மெச்சிடும் நிலையே தமிழர்க்கு மேன்மையாம்!

**-1982**

## 122 மூச்சுள்ள வரைக்கும் உலகத் தமிழின முன்னேற்றம் ஒன்றே பேசுவேன்!

*மூச்சுள்ள வரைக்கும் உலகத் தமிழின*
*முன்னேற்றம் ஒன்றே பேசுவேன்! — அதில்*
*ஏச்சுகள் பேச்சுகள் ஆயிரம் வரினும்*
*எதிர்நின் றிருகை வீசுவேன்!*

*காசுள்ள வரைக்கும் கையுள்ள வரைக்கும்*
*கவின்தமிழ் ஒன்றே பரப்புவேன்! — இதை*
*மாசுள்ளம் கொண்டே மதித்திடார் செயல்களை*
*மண்மே டிட்டே நிரப்புவேன்!*

*காலுள்ள வரைக்கும் கருத்துள்ள வரைக்கும்*
*காடுமே டெல்லாம் முழக்குவேன்! — என்*
*மேலுள்ள அன்பால் எனைப்பற்று வோர்க்கும்*
*மேலும்மேல் அவ்வினை பழக்குவேன்!*

*உயிருள்ள வரைக்கும் உடலுள்ள வரைக்கும்*
*ஒவ்வோர் அணுவிலும் தமிழ்மணம்! — அவை*
*அயர்வுற்று மறையினும் ஆழ்வெளி பரவினும்*
*அங்கங்கும் கிளர்ந்தெழும் தமிழினம்!*

**-1982**

## 123 கொடும் வறட்சி உற்றதுவோ நல்லறிவு செயற்கே!

உளந்திரிந்து சொல்திரிந்து
செயல்திரிந்து போன
உலுத்தரிடை மொழிநலமும்
இனநலமும் கூறி
வளந்தெரிந்து பொதுநலத்தைப்
புதுக்கிடுவீர் என்றால்
வருகின்ற அன்பரெலாம்
முகந்திரிந்து செல்வார்!
களந்தெரிந்து முனைந்தாலும்
கடுகுவிளை வில்லை!
காதுபட உரைத்தாலும்
செவிதருவார் இல்லை!
குளந்திரிந்து நீர்வற்றிப்
போனதுபோல் நாட்டில்
கொடும்வறட்சி யுற்றதுவோ
நல்லறிவு செயற்கே!

-1983

# 124 பெரியாரையும் பாவேந்தரையும் பட்டிமன்றத்திற்கும்—பாட்டரங்கத்திற்கும் மட்டுந்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமா?

உரிமைக் கிளர்ச்சியால் ஒன்றுபட் டார்ந்தே
அரிமா முழக்கோடு **'அசாமியர்'** எழுந்தனர்!

குருதி யாறு கொப்புளித் தோடினும்
இறுதி உரிமைக்கு இராப்பகல் போராடி
விடுதலை மூச்சுக்கு விடிவு தேடினர்!

அடுதலைப் போருக்கு அங்கொரு 'பெரியார்'
பிறந்திட வில்லை; பேசிட வில்லை!
இருந்தும் ஆங்கோர் இனப்போர் எழுந்தது!

பாவேந்தர் போலொரு புரட்சிப் பாவலன்
நாவேந்து பாக்களால் நாட்டாமற் போயினும்
**'பஞ்சா பியர்'**கள் பச்சைக் குருதியால்
எஞ்சா மறத்தோடு இனநலம் முழக்கினர்!
உணர்வால் பாவேந்தர் பஞ்சாபியர் உளத்தில்
புணர்ந்து செயல்படும் புரட்சியைக் கண்டோம்!

பெரியார் என்னும் பெற்றிடாப் பேற்றை
உரிய காலத்தில் உவந்துபெற் றிடினும்,
அவரின் உழைப்பை அலித்தமி ழினமோ
கவன மின்மையால் கைநெகிழ்த்து விட்டது!

அதுபோல்,
பாவேந்தர் தமிழர்க்குப் பயன்படும் வகையையும்
ஈவால் அவர்தந்த இனநல உணர்வையும்
எண்ணிப் பார்க்கிறோம்! இழிவு! மிக இழிவு!
பண்ணிப் பண்ணிப் பாவேந்தர் பாடலை
மேடை தோறும் மிடுக்குடன் முழக்கிக்
கூடை கூடையாய்க் கொட்டி அளக்கிறோம்!

பட்டி மன்றமாய்ப் பாட்டரங் குகளாய்
வெட்டிப் பேச்சொடு விலாவலி யெடுக்க
ஆர வாரம் செய்கிறோம்! அவருடை
வீர உளத்தினை விளையாட் டரங்கமாய்
மாற்றி நம்மையும் மாய்த்துக் கொள்கிறோம்!
ஏற்றிப் போற்றியே அறிவை இகழ்கிறோம்!

*பெரியார் உணர்வினைப்பாவேந்தர் பீடினை*
*அறியாத் தமிழராய், ஐயகோ; அழிகிறோம்!*
*தமிழர் இனமே! தாழ்ந்துபோம் இனமே!*
*இமியும் பொறுத்திடற் கில்லை! இனியேனும்*
*அமிழா உணர்வினால் ஆர்ந்துடன் எழுகவே!*

***-1983***

125

## என்னினும் என்ன, இன்று இவர்கள் அடிமைகள்!

*முன்னந் தோன்றிய நிலத்தில் முகிழ்த்தவர்!*
*மூத்த தமிழ்மொழிக் குணர்வின் மூத்தவர்!*
*தென்னன் பாண்டியன் குமரிக் குடிமையர்!*
*திசையெ லாம்பரந் துலகை அளந்தவர்!*
*இன்னரும் இயலிசை நாடகம் யாத்தவர்!*
*இந்திய — நாவலந் தேயத்து இறைமையர்!*
*என்ன வியப்படா? — இவர்கள் தமிழர்கள்!*
*என்னினும் என்ன, இன் றிவர்கள் அடிமைகள்!*

வான்முகில் மலையிடை வாழ்க்கை தொடங்கியர்!
வளந்தரு குறிஞ்சியில் காதலை உணர்ந்தவர்!
தேனுமிழ் முல்லையை மருதம் நெய்தலைத்
தீர ஆய்ந்துநல் இல்லறம் வகுத்தவர்!
கான்தரு பொருளையும் கழனியும் கண்டவர்!
கடலின் பரப்பையும் கடந்தயல் சென்றவர்!
ஏன், தம்பி தெரியுமா? — இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன, இன் றிவர்கள் அடிமைகள்!

கல்லைக் கல்லொடு மோதிய கனப்பினர்!
காய்ச்சி இரும்பினை உருக்கிடக் கற்றவர்!
சொல்லைச் சொல்லொடும் பொருத்தி மொழியெனச்
சுடர்விடும் உணர்வினுக் குருவம் வரைந்தவர்!
வில்லைப் புலியினைக் கயலைக் கொடியினில்
வெள்ளைப் பனிமலைத் தலையில் பொறித்தவர்!
எல்லைப் புகழினர் — இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன, இன் றிவர்கள் அடிமைகள்!

தொன்று தொட்ட பெருமையின் தோன்றல்கள்!
தோல்வி என்பதே தோன்றிடா வீரர்கள்!
கன்று முட்டிய பாலைக் குடிப்பினும்
காதலில், வீரத்தில் எச்சில், கா ணாதவர்!
குன்றையும் மலையையும் கொடையாய் வழங்கியர்!
கோடி இலக்கிய இலக்கணம் கண்டவர்!
என்றோ பிறந்தவர்! — இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன, இன் றிவர்கள் அடிமைகள்!

காற்றையும் கையினிற் பிடித்துப் பழகியர்!
கல்லையும் கூழ்போல் கரைத்துக் குடிப்பவர்!
ஆற்றையும் வளைத்தணை கட்டிப் பாய்ச்சியோர்!
அண்ட வெளிக்கதிர் மண்டிலம் அளந்தவர்!
கூற்றையும் எதிர்த்தவர்! கொள்கை வளர்த்தவர்!
கூர்தல் அறத்தையும் உயிரையும் உணர்ந்தவர்!
ஏற்றமென் சொல்லுவேன்? — இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன, இன் றிவர்கள் அடிமைகள்!

-1983

# இன்றுதான் — அதுவும் — ஒன்றுதான்!

இன்றுதான் — அதுவும் — ஒன்றுதான்—மிக
நன்றுதான் — தமிழ்
இனமுன்னேற்றம் இனமுன்னேற்றம்
என்றே அனைவரும் கொண்டே உழைப்பது!
(இன்றுதான்)

வென்றுதான் தீரவேண்டும் தமிழினம்!
வெல்லாது போனாலோ அனைத்தும் அழிவுறும்!
(இன்றுதான்)

தொன்று தொட்டுதான் வந்ததே தமிழ்மொழி!
தொலைந்ததே அதுவெனில் வருமே பெரும்பழி!
(இன்றுதான்)

அன்று தொட்டுதான் இருந்ததே தமிழினம்!
அனைவரும் பேணிட விலையெனில் அழிவுறும்!
(இன்றுதான்)

தின்று தெவிட்டுவ தொன்றே வாழ்வெனத்
தீர நினைப்பது நன்றோ? தாழ்வு அது!
(இன்றுதான்)

குன்றும் குலையுமே காத்திட விலையெனில்!
கோடி கொடுப்பினும் நன்று அது நிலைபெறல்!
(இன்றுதான்)

என்றும் அழிவதே இவ்வுடற் பிறப்புதான்!
இன நலம் பேணிட அழிவதோ சிறப்புதான்!
(இன்றுதான்)

**-1983**

## 127 ஓச்சுங்கள் தோழரே கைகளை வானில்!

ஓச்சுங்கள் தோழரே! கைகளை வானில்!
உரக்கவே கூவுங்கள் 'தமிழ்வாழ்க' என்று!
மூச்சுங்கள் தொளையினுள் நின்றிடும் முன்னர்
முதுதமிழ் இனம்வாழ உழைங்கள், நன்று!
ஆச்சிந்த நூற்றாண்டுக் குள்ளேநம் தமிழர்
அடைந்திட வேண்டுமே தமிழ்நாட்டுக் குரிமை!
பேச்சென்ன? எழுத்தென்ன? செயலுக்கு வருவீர்!
பின்வீழப் போகின்ற உடல், உயிர் தருவீர்!

கூடுங்கள் தோழரே! அணிஅணி யாக!
குரலெடுத் துரையுங்கள்; முழக்குங்கள்; உரிமை!
பாடுங்கள் விடுதலைப் பண், இசை யோடு!
பரப்புங்கள் கருத்துகள், உணர்வுகள், எங்கும்!
மூடுங்கள் வல்லாண்மைக் கதவினை இழுத்து!
முதுகெலும்பை நொறுக்குங்கள் அதிகாரம் சாக!
தேடுங்கள் வஞ்சரைப் பகைவரைத் தேடித்
தீக்குள்ளே வீசுங்கள் ஆள்வோர்கள் நடுங்க!

மென்முறை பண்பாட்டு மேன்முறை யெல்லாம்
மிகுந்தேறுங் கொடுமைக்குப்பொருந்தாவாம் இன்று!
வன்முறை ஒன்றாலே முதலாண்மைக் கேடர்
வணங்கிடும் நிலையுண்டு முட்புதர் போல!
பன்முறை உரைசொன்னோம்; பாடினோம்; ஏட்டில்
பலவாறாய் எழுதினோம்; பயனேதும் இல்லை!
மின்முறை அதிர்ச்சிசெய் மருத்துவம் போல
மேலேறித் தின்பாரைக் கீழிறக்க வேண்டும்!

**-1984**

பனியும்,மா மழையும், பட்டப்
பகல்,இராப் பொழுதும் ஓடித்
தனியனாய் அலைந்தாய்; சொன்னாய்!
தணல்போல எழுதித் தீர்த்தாய்!
கனியுமா றில்லை; நம்மோர்
கருத்தறி புலனும் இல்லை!
இனியுமா விடியும் என்றே
எண்ணுவாய், தமிழ நெஞ்சே!

மன்னுமாத் தமிழும் வாழ்வும்
மறைந்துள வரலா றெல்லாம்
உன்னுமா றெம்ம வர்க்கே
உணர்த்தினும் கொள்வா ரில்லை!
தின்னுமா றுறங்கு மாறு
திரிகின்ற தமிழர் கூட்டம்
இன்னுமா எழுமென் றிங்கே
இருக்கின்றாய், தமிழ நெஞ்சே!

மாண்ட,மா நாக ரீகம்
மன்னிய பண்பா டெல்லாம்
தூண்டுமா றுணர்வுச் சொல்லால்
துலக்கிடக் கால்நூற் றாண்டாய்
வேண்டுமா றுணர்த்தி விட்டாய்!
விளைவொன்றும் கண்டா யில்லை!
மீண்டுமா உழைப்ப தற்கே
வீறுவாய், தமிழ நெஞ்சே!

ஞாலமா மாந்தர்க் கெல்லாம்
நல்லொளி பரப்பி, ஓசை
மூலமா நின்ற நந்தாய்
மொழிப்புலம் விளங்கக் காட்டி
ஏலுமா றுரைத்தாய்! ஆனால்
ஏற்பதற் காரிங் குள்ளார்?
மேலுமா தொண்டு செய்ய
மீறுவாய், தமிழ நெஞ்சே!

பொதுமுறைக் கொள்கை சாற்றிப்
புலத்தினை மீட்ப தற்குப்
புதுநலக் கருத்தைச் சொன்னாய்!
பொய்ம்மையென் றுனைஉ ரைத்து
முதுகினில் குத்து கின்றார்!
முகத்தினில் உமிழு கின்றார்!
இதன்மேலும் விளைவுக் கென்றோ
ஏங்குவாய், தமிழ நெஞ்சே!

குழைவரும் கூடு வாரும்
கும்பிட்டு வணங்கி அன்பில்
இழைவரு மாகப் பல்லோர்
எதிர்வந்த கால மெல்லாம்
பிழைவரும் என்றெண் ணாமல்
பேசினை! நெகிழ்ந்தார்! இன்னும்
மழைவரும் பொழியும் என்றோ
மயங்குவாய், தமிழ நெஞ்சே!

மனைக்கென மக்கட் கென்ன
மனம்அலை யாமல் முற்றும்
வினைக்கென எழுந்த போது
விலகினார்; வேறாய்ப் போனார்!
நினைக்கவும் செய்ய வும், நீ
ஒருவனே நின்ற போதும்
தினைக்கதிர் பனையாம் என்றே
நினைத்தாயா, தமிழ நெஞ்சே!

அவிகொளும் இரைக்கும், பொன்னின்
அணிகட்கும் மனைக்கும் உள்ளம்
தவிகொளும் அலையும் கூட்டம்
தமிழ்கொளும் உணர்வில் ஒன்றாய்க்
குவிகொளும் கொள்கை கொள்ளும்
கூர்ப்புரை என்றோ ஓர்நாள்
செவிகொளும், எழும் செய்ம் — என்றோ
தேம்புவாய், தமிழ நெஞ்சே!

அரத்தமும் மாறி, எண்ண
ஆழமும் குறைந்து, தக்கை
மரத்தினில் செய்த பாவை
மாந்தரை எழுப்பிப் போக்கு
வரத்தினில் வீர ராக்கும்
மந்திரப் பாடஞ் செய்யும்
உரத்தினில் உழன்று கொண்டா
உயிர்க்கின்றாய், தமிழ நெஞ்சே!

துலங்கட்டும் தமிழும் வாழ்வும்
துய்க்கட்டும் உரிமை என்றே,
குலங்கெட்டு நினைவும் கெட்டுக்
குழிக்குப்போய் மண்ணும் தின்ற
புலங்கெட்ட தமிழ்க்கூட் டத்தைப்
புதுக்கவா இதுநாள் மட்டும்
நலங்கெட்டு வாழ்வும் கெட்டு
நலிகின்றாய், தமிழ நெஞ்சே!

-1985

என்று நினைப்பாயோ? — இன
ஏற்றம் விளைப்பாயோ? — தம்பி
அன்று பிறந்த நம் செந்தமிழ்க் காக்கம்
என்று நினைப்பாயோ? — இன
ஏற்றம் விளைப்பாயோ?

நன்றெண்ணிப் பாரடா தம்பி! — தமிழ்
நாடின்று உலகினில் தாழ்ந்தது வெம்பி!
இன்றதை உயர்த்தாமல் போனாய் — நீ
இருந்ததைக் கதையென்று படிப்பார்கள் வீணாய்! (என்று)

குன்றதும் தாழ்பள்ளம் ஆகும் — பலர்
குழிவெட்டி மண்கொண்டு கல்கொண்டு போனால்!
வென்றவர் தோற்பதோ, இங்கே உன்
வீரமும் விளைவதும் போயின எங்கே? (என்று)

மொழியினை இனத்தினைக் காப்பாய் — நம்
மொய்ம்பினை நாட்டினை இன்றே நீ மீட்பாய்!
விழியினை ஒப்பது மொழியாம் — அது
வீழ்ந்திடில் தாழ்ந்திடில் நமக்கேது வழியாம்! (என்று)

-1985

130

# இவர்க்கிடையில் வரும்விளைவு தழைப்ப தென்றோ?

தமிழினத்தின் ஒருசாரார் பார்ப்பனர்க்கும் வடவர்க்கும்
தமையடகு வைக்கும்தன் மான மற்றோர்;
தமிழினத்தின் னொருசாரார் தமிழரையே அரசியலால்
சுரண்டியுண்ணும் தாய்க்கொலைஞர்; மற்றோர் சாரார்,
தமிழினத்தில் தாம்பிறந்தும் தமிழரையே எதிர்க்கும், இனப்
பற்றில்லா உட்பகைவர்; பிறிதோர் சாரார்,
தமிழினத்தின் முன்னேற்றம் கருதுவரைத் தந்நலத்தால்
புறங்குத்திக் கட்டழிக்கும் தாழ்மை யோரே!

தமிழினத்தின் தாழ்ச்சியினை—வரலாற்றின் வீழ்ச்சியினை—
அவைமீட்கும் மீட்சியினை — எண்ணி டாமல்,
தமிழினத்தின் அறியாமை, மெலிவுள்ளம்—எனுமிவற்றைக்
காசாக்கும் கலைக்கயவர் — இன்னோர் சாரார்!
தமிழினத்தை உள்ளரித்தே உயிர்ப்பழிக்கும் மதக்கேடர்,
சாதிவெறி கொண்டவர்கள் வேறோர் சாரார்!
தமிழினத்தை மீட்டெடுக்கும் உறுதியினார்க் குரமழிக்கும்
இவர்க்கிடையில் வரும்விளைவு தழைப்ப தென்றோ?

**-1985**

131

# அரசியலைச் சாராமல் இனவியலால் ஒன்றுபடுக!

*அரசியலைச் சாராமல் இனவியலை முன்வைத்தே
அனைவரையும் ஒன்று சேர்க்க
முரசறையும் தமிழ்த்தலைவன் ஒருவன்தான் தமிழினத்தை
முழுஅளவில் இணைத்தல் கூடும்!
உரசுதலும் உரப்புதலும் ஒருவரைமற் றொருவரிங்கே
ஒளிப்பதுவும் ஒழிப்ப தும்மே
விரிசலுறச் செயும், இனத்தை! வேண்டாமிக் கூன்கொள்கை!
வெற்றிபெற விரைந்து வாரீர்!*

*மொழியின்றி இனமில்லை; இனமின்றி அரசியலும்
முகிழ்த்தெழுதல் இல்லை, இங்கே!
வழியின்றித் திட்டங்கள் வகுக்கின்றீர்; வாயுரையால்
வல்லமையைக் காட்டு கின்றீர்!
விழியின்றி ஒருகுருடன் நடப்பதுபோல் தடுமாறி
விழுந்துவிழுந் தெழுந்து செல்வீர்!
சுழியின்றிச் சூழ்ச்சியின்றித் தமிழினத்தை ஒருங்கிணைக்கச்
சோர்வின்றி எழுக இன்றே!*

**-1985**

நல்லறிவு செயலாக
மலரும் போது
நாட்டிலுள்ள தீமையெலாம்
ஒன்று சேர்ந்து,
வெல்லுதற்கு நினைத்தாலும்
வெற்றி இல்லை!
வேளாண்மை எப்பொழுதும்
பொய்ப்ப தில்லை!
வல்லதொரு கொள்கையினை
வகுத்துக் கொண்டால்,
வரும்சூழ்ச்சி பலவெனினும்
வெற்றி யுண்டாம்!
வெல்லுவதும் தோற்பதுவும்
வீரர்க் கொன்றே!
வெற்றிக்குப் பலகோணம்
உண்டாம் கண்டீர்!

-1985

## நட்பும் பகையும்!

தம்மை முழுமையாய்த் தமிழ்க்குத் தருபவர்
எம்மவர் ஆயினும் எதிர்ப்பவர் ஆயினும்
எம்மூர் ஆயினும் எவ்வூர் ஆயினும்
அம்மையும் அப்பனும் ஆவார், எமக்கு!
அவரே நல்வழி காட்டியும் நமக்கு!

எதையும் கருதா(து) இனத்திற் குழைப்பவர்
புதியோர் ஆயினும் பழையோர் ஆயினும்
முதியோர் ஆயினும் இளையோர் ஆயினும்
விதையும் எருவும் ஆவார், எமக்கு!
வேந்தரும் தலைவரும் அவரே, நமக்கு!

நலன்கள் நாடாது நாட்டை மீட்டிடப்
புலனும் உழைப்பும் பொழுதும் தருபவர்,
இலவோர் ஆயினும் எளியோர் ஆயினும்
வலவரும் மறவரும் ஆவார், எமக்கு!
வாழ்க்கை நண்பரும் அவரே, நமக்கு!

தமிழ்,இன, நாட்டினைத் தந்நலம் கருதி
இமிழ்பகை கைக்கொள இரண்டகம் செய்வார்
சிமிழ்தகைக் குன்றுடைச் செல்வரே ஆயினும்
உமிழ்தகு புல்லியர் ஆவார், எமக்கு!
ஒழிதகு பகைவரும் அவரே, நமக்கு!

-1986

குற்றச் சாட்டாம்! நடவடிக்கைகளாம்!
குத்திப் பார்க்கிற தரசு! — என்னைக்
குலுக்கிப் பார்க்கிற தாட்சி!
வெற்றுச் சொல்லா, வீணெனும் எழுத்தா
விளைவித் துள்ளேன் நாட்டில்? — பல
வீறுரை சொன்னேன் ஏட்டில்!

தமிழர் இனத்தைத் தமிழன் காக்கத்
தடையென் னடா,ஓய், இங்கே? — மனம்
தயங்கேன்! அதுவென் பங்கே!
உமிழத் தக்கார் பலருளர் எனினும்
உண்டடா மறவரும் என்போல்! — தமிழ்
உறவைக் காப்போம் கண்போல்!

சிறையில் வைத்துச் சிறகை அரிந்து
சீர்குலைத் தாலும் என்கை — வினை
செய்யும் எழுதுமென் பங்கை!
முறையாய்ச் செய்யும் தொண்டுக் கிங்கே
முட்டுக் கட்டைகள் போட்டால் — ஒரு
முடிவும் காண்போம் வேட்டால்!

உரிமை முழக்கம் அதிகா ரத்தால்
ஒழிந்து போவதும் உண்டோ? — உளம்
உடைவதற் கென்ன, கல் துண்டோ?
சரிமை நிகராம் குடியர சாட்சி
சழக்கரின் வீட்டுஉரி நெய்யோ? — பிறர்
சாவதும் வீழ்வதும் பொய்யோ?

-1986

## 135 உவர்நிலத்து, உப்பல்லால், நெல் ஒருபோதும் விளைவு ஆகாதே!

பாதிப்பேர் தமிழி னத்தில்
பகைமைக்குத் துணைபோ வோர்கள்!
சாதிப்போர் கட்சிப் போரின்
சழக்கினில் கால்வா சிப்பேர்!
மீதிப்பே ரில்,பா திப்பேர்
மெலுக்கென வாழ்ந்து சாவோர்!
வீதிப்போ ராட்டத் திற்கோர்
விழுக்காடு வருவ(து) ஐயம்!

தமிழினத் தொண்டர் என்போர்
தமிழாலே பிழைப்பைச் செய்வோர்!
தமிழினத் தலைவர் என்போர்
தமிழின வணிகஞ் செய்வோர்!
இமிழாமல் உழைப்பைத் தந்தே
எந்தமிழ், இனம்,நாட் டிற்கே
அமிழாத உணர்வால் தம்மை
அளிப்பவர் எத்த னைப்பேர்?

இவர்தொகை, மிகமி கத்தான்
எந்தமிழ், இனம், நா டுய்யும்!
அவரவர் நலத்திற் காக
அயலவர்க் கடிமை செய்தே
எவரெவர் வாழ்கின் றாரோ—
இவர்தொகை குறைய வேண்டும்!
உவர்நிலத்(து) உப்பல் லால்,நெல்
ஒருபோதும் விளைவா காதே!

-1986

மொழியின்றி இனமில்லை; இனமின்றி நாடில்லை;
முந்நிலையும் அழிப்பதற்கே முனைந்தார் இன்றே!
விழியின்றி வழியுண்டோ? வித்தின்றி விளைவுண்டோ?
விழுதின்றி ஆலமரம் நிற்றல் உண்டோ?
வழியின்றித் தமிழ்மக்கள் தவிக்கின்றார்; நாட்குநாள்
வாழ்தற்கும் இயலாமல் வணங்கிச் சாவார்!
பழியின்றிக் காப்பதற்குப் பகலின்றி இரவின்றிப்
பாடுகொள நல்லிளைஞர் பாய்வீர் இன்றே!

ஊர்க்கு ஊர் செல்லுங்கள்! உழவர்களை உழைப்பவரை
ஒருங்கிணைத்துக் கூறுங்கள்! உணர்வேற் றுங்கள்!
நேர்க்குநேர் நில்லுங்கள்! நிகழ்வதனைக் கூறுங்கள்!
நெடியவர லாறுகளை நினைவூட் டுங்கள்!
ஆர்க்குஆர் தடையென்னும் அரசியலை விளக்குங்கள்!
அழிந்துவரும் தமிழினத்தின் அழியா நிற்கும்
வேர்க்குவேர் நீரூற்றி எருவிட்டு விளையுங்கள்!
வீணர்களை விலக்குங்கள்! விடிவு தோன்றும்!

தமிழ்நிலத்தை விடுவித்துத் தமிழினத்தைக் கட்டுவித்துத்
தமிழ்மொழியைத் தூய்மையுடன் தழைக்கச் செய்வோம்!
அமிழ்கின்ற வரலாற்றைப் புதுப்பிப்போம்! அறிவியலை
வாழ்வியலுக் கொத்தபடி ஆக்கு விப்போம்!
கமழ்கின்ற பண்பாடு மிளிர்கின்ற கலைகளுடன்
கருத்தழிவும் இழிவுணர்வும் இல்லா வாறாய்க்
குமிழ்நின்ற ஒளிகூட்டும் இனநலத்தைக் கட்டுவிப்போம்!
குமுகாய நலஞ்சேர்ப்போம்! கூடு வீரே!

**-1987**

## 137. வருங்காலம் தமிழர்க்கே!

நெடுங்காலம் முன்பே, நம்
தமிழர்க்கு விழுந்துவிட்ட
இனக்கூனை நிமிர்ப்ப தென்றால்,
கடுங்கால வினைமுயற்சி,
தேவையென மொழி, இன, நாட்
டுரிமையினர் உணர்தல் வேண்டும்!
கெடுங்காலம் இனும் நமக்குப்
போகவில்லை; உட்பகையும்
மறைய வில்லை! எனினும் நன்மை
அடுங்காலம் தொலைவிலில்லை;
அன்றன்றும் அடுத்தடுத்தும்
முயன்றிடுக! முயற்சி வெல்லும்!

பகைவர்க்கு வலிவில்லை;
நம்மைவிட அறிவில்லை;
பரவிவிட்ட நோய்நம் நோயே!
தகைவர்க்குக் குறைவில்லை;
தருமுழைப்பும் கேடில்லை;
தாழ்வெல்லாம் நாம்செய் தாழ்வே!
தொகை நிறைந்த தொண்டர்க்கும்
தொய்வில்லை; துணிவிற்கும்
தாழ்வில்லை; தொன்மை எண்ணி
வகைசெய்து திட்டமிட்டுப்
போரிட்டால் வருங்காலம்
தமிழர்க்கு வாழ்கா லம்மே!

*-1987*

மக்களுடை எழுச்சியெலாம்
வன்முறையென் றடக்குவதால்
மக்களரச சென்பதனின்
மதிப்பென் னாகும்?

தக்க முறை நடவடிக்கை
எடுக்காமல், சட்டமுறை—
படைமுறையைப் பயன்படுத்தின்
தகைவென் னாகும்?

பக்கவிளை வெண்ணாமல்
எதிர்விளைவும் பாராமல்,
பலவாறாய் ஒதுக்கிவிடப்
பதைப்ப தென்ன?

ஒக்கநலம் பேணுகின்ற
முறையன்றோ ஒத்தமுறை!
உண்மையினை எண்ணிப்பார்த்
துணரு வீரே!

*-1987*

ஊக்க மிழக்க வேண்டாம்!—உள்ள
உறுதி குலைய வேண்டாம்!
ஆக்கம் வந்து சேரும்;—நம்
அனைத்துத் துயரும் தீரும்!

உண்மை உணர்ந்த தொண்டர்—உடன்
உழைக்க வருதல் வேண்டும்!
திண்மை யுள்ள பேர்கள்—ஒன்று
திரண்டு கூடல் வேண்டும்!

பத்துப் பேர்கள் ஊர்க்கு—ஒரு
பண்ணை உழவு போல
ஒத்து ழைக்க வந்தால்—விரைந்(து)
ஊரைத் திரட்ட முடியும்!

சந்தை கூடும் நாளில்—நாற்
சாலை கூடும் இடத்தில்
மந்தை மந்தை யாக—ஊர்
மக்கள் திரளும் போதில்,

கருத்தை விளக்கிப் பேசி—நல்ல
காட்சி அமைத்து நடித்துத்
திருத்தும் முயற்சி செய்தால்—மக்கள்
தீமை உணர்ந்து கொள்வார்!

உழைப்பு மிகவும் வேண்டும்!—நம்மை
ஊர்ம திக்க வேண்டும்!
பிழைப்ப தற்குத் தொண்டை—ஒரு
பேறென் றெண்ண லாமோ?

மக்கட் கிழிவு செய்தார்—இம்
மண்ணை ஆள வந்தார்!
ஒக்க அவரை வீழ்த்தி—நலம்
ஊருக் காக்க வந்தோம்!

பாட்டும் உரையும் கூறிப்—பெறும்
பயனை எடுத்துக் காட்டி,
நாட்டும் தொண்டில் மக்கள்—பொது
நலத்தை உணர வைப்போம்!

சாதி இழிவு சொல்லி—மதச்
சழக்கை விளக்கிப் பேசி,
ஓதி உணர்த்த வேண்டும்!—மக்கட்
குண்மை கூற வேண்டும்!

-1987

## 140 புதுமைப் புரட்சியை மக்கள் தொடங்குக!

வான ளாவிய செந்தமிழ் வளர்குலம்
வறுமையும் கீழ்மையும் அடிமையும் உற்றதால்
கூன ளாவியும் குறுகியும் சிதைந்துமோர்
குருட்டுச் செவிடனாய்ப் பெருநடை தளர்ந்ததே!
மான மிலாததாய் மற்றவர் முன்னிலை
மண்டி யிட்டுயிர் வாழவும் துணிந்ததே!
ஆன எழுச்சியோ டொன்றி இயங்கினால்
அற்றைப் பெருமையும் சிறப்பும் ஆகுமே!

பூட்டிய இருப்புத் தொடரி தெறித்திடப்
புதுமைப் புரட்சியை மக்கள் தொடங்கினால்
கூட்டை யுடைத்தரி மாவும் வெளிப்படும்
கொள்கை போலவே உரிமையும் புலப்படும்!
நீட்டிய உறக்கம் களைந்திங் கெழுகவே
நீணிலம் எங்கணும் வாழ்ந்திடு தமிழினம்!
ஈட்டிய பெரும் பொருள் செல்வர் ஈகுக!
இளைஞர் கூட்டமும் எழுந்துலா வருகவே!

-1988

141

# மொழியுணர்வு தோன்றாமல்
# இனவுணர்வு முகிழ்ப்பதில்லை!

மொழியுணர்வு தோன்றாமல் இனவுணர்வு
முகிழ்ப்பதில்லை; வலுப்பதில்லை; இயங்குவதும்
இல்லை என்க!
முன்னோர்தம் வரலாற்றைப் பெருமைகளை
உணராதார் முனைந்தெழுந்து நிற்பதுவும்
முடியா தென்க!
பழியுணர்வு வடவர்களோ தமிழினத்தை
வீழ்த்துதற்குப் படைசேர்த்து நம்வலிவைப்
பாழ்செய் கின்றார்!
பதைப்பில்லை; உணர்வில்லை; தமிழரிடம்!
பங்காளிச் சண்டைகளும் வலுப்பெற்றுப்
பகைகொள் கின்றார்!
விழியுணர்வும் செவியுணர்வும் மனவுணர்வும்
இல்லாத ஏழையர்கள் உரிமைபெற
விழிப்ப தென்றோ?
விழித்தவரோ அடிவருடிப் பிழைக்கின்றார்!
வேற்றுவர்பால் இனங்காட்டிக் கொடுக்கின்ற
வீண ரானார்!
இழிவுணர்வும் கதையுணர்வும் பொழுதுபோக்
கிடும்உணர்வும் எழுந்துநின்றே இனவுணர்வைச்
சிதைக்கும் இங்கே!
ஏமாறும் தமிழரிடை இணக்கவுணர்
வெழுந்துசெயல் தோன்றியினம் போராடிச்
செழிப்ப தெங்கே?

*-1988*

மொழி, இனத்தைக் காவாமல் அரசியலால்
பொருளியலால் தமிழர் நலம் மூள்வதில்லை!
பழிவழியால்—கொள்ளையிடும் பதவிகளால்—
நிலையான இனஉரிமை வாய்ப்பதுண்டா?
வழியறியா ஏழையரை—எளியவரை
வளைக்கின்ற கட்சிகளால் விளைந்ததென்ன?
அழிவதன்முன் தமிழினமே ஒன்றிணைந்தே
அழிம்புகளை எதிர்த்திடவே முனைகுவோமே!

குரல்வளையை நெரிக்கின்ற கொடுங்கறுப்புச்
சட்டங்களை ஆள்வோர்கள் வரைந்துகொண்டு
விரல்நுனியை நீட்டிடினும் வெஞ்சிறையில்
தள்ளுகின்ற வல்லாட்சி காணுகின்றோம்!
வரலின்றி வீண்செலவால் பொருளியலும்
நலிகையிலே வறுமையிங்கு நீங்கிப்போமோ?
நிரல்நிரலாய் எழுச்சியுறு போராட்டம்
ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியிங்கு வெற்றிகாண்போம்!

**-1988**

143

சோற்றில் நனைந்தனரே—அட,
தொன்மைத் தமிழ்மக்களே!

*தட்டுத் தடுமாறி—உயிர்*
*தள்ளாடித் தள்ளாடி*
*எந்தமிழ்த் தாயினை*
*முட்டுக் கொடுத்தேற்றி—மலை*
*முகட்டினில் வைத்திட*
*நாளுந் துடிக்கிறேன்!*
*கட்டுக் குலைந்ததடா—உடல்!*
*கால்களும் கைகளும்*
*சோர்வுற் றிளைத்தன!*
*'துட்டு'க் கலைந்தனரே!—பகைச்*
*சோற்றில் நனைந்தனரே!—அட,*
*தொன்மைத் தமிழ்மக்களே!*

*மறமும் குலைந்தவராய்—தன்*
*மானம் இழந்தவராய்,*
*மதத்தினில் சாதியில்*
*திறமும் குறைந்தவராய்—பல*
*தில்லுகள் முல்லுகள்*
*செய்பவ ராய், நல்ல*
*அறமும் கை விட்டவராய்—இழி*
*ஆடலில் பாடலில்*
*ஆழ்ந்தவ ராய், பல*
*நிறமாறும் ஓந்தியராய்—பகை*
*நெட்டடி வீழ்ந்தனரே—அட,*
*நேயத் தமிழ்மக்களே!*

**-1988**

144

## இருப்பவர் கலைஞரே!
## வடபுயல் சுவர், அவர்!

நெருப்பினில் தமிழினம் வெந்துகொண் டுள்ளது;
நேற்றைய வரலாறு மறைந்துகொண் டுள்ளது!
தெருப்புறம் தமிழர்க்குள் கூச்சலும் குழப்பமும்!
தேர்தலில் வெல்பவர் யார்—எனும் போட்டிகள்!
உருப்பெறும் வகையினில் ஒருவரும் இல்லைதான்!
உண்மையும் நேர்மையும் உலவிடா நிலைமைதான்!
இருப்பினும் கலைஞரே தமிழினம் காப்பவர்!
எரிகின்ற கொள்ளியில் எதிரிக்கு நெருப்பவர்!

அரசியல் விரகரே அனைவரும்; உண்மைதான்!
ஆட்சிக்கு வந்த பின் மாறுவார்! மெய்ம்மைதான்!
உரசிப் பார்த்திடில் ஒருவரும் இல்லைதான்!
ஊரடி கொள்ளையில் உலைவேகும் காட்சிதான்!
வரிசையை அளந்திடில் வாய்பேச்சுக் காரர்தாம்!
வந்தபின் ஆட்சிக்கு வருவாயே கொள்கைதான்!
முரசொலிக் கலைஞரே, இருப்பினும், மேலவர்!
முத்தமிழ் எதிரிக்கு என்றுமே வேல், அவர்!

இனநலம் காப்பதாய் எல்லாரும் சொல்கிறார்!
இனிமைப் பேச்சினில் எல்லாரும் வெல்கிறார்!
மனநலம் இருந்திடில் அல்லவோ மக்களின்
மாண்பினைக் காத்திட எண்ணுவர்! தமிழரின்
முனைநலம் யாவுமே பறிகொண்டு போயினர்!
முன்நிலம் மீட்பதில் எவருமே முனைந்திலர்!
இனநிலை உணர்ந்ததைக் காப்பதற் கெவருளர்?
இருப்பவர் கலைஞரே! வடபுயல் சுவர்—அவர்!

-1988

# புதுமுரசு இனவொலி எழுப்பட்டும்!

முழங்கி முழங்கி முரசு கிழிந்தது!
மூடரின் நெஞ்சோ முன்பே கிழிந்தது!
வழங்கு சொற்களைச் செவிகள் வாங்கில!
வழிவழி மரபுகள் வரட்சி கொண்டன!
பழங்குட் டைகளில் படிந்த பாசிகள்
பாழும் சாதி, மதங்களாய்ப் படர்ந்தன!
எழுங்கதிர் எழுந்த படியே இருக்குமோ?
எழுந்து பகைவரை எரித்துப் பொசுக்குமோ?

திரவிட முரசொலி தமிழாய் முழங்குக!
தேயாத உணர்வினால் இனநலம் வழங்குக!
கருவிடக் குழந்தைக்கு நாட்டுணர் வூட்டுக!
கருதுதல், பேசுதல், எழுதுதல், செய்தலாம்
வருவுணர் வனைத்திலும் விடுதலை வித்துக!
வாய்த்திடின் புரட்சியைக் குருதியில் மலர்த்துக!
ஒருநிலை வரும்; அதற் கொருநாள் ஒதுக்குக!
உரிமைக் கிளர்ச்சியை மக்களால் ஓச்சுக!

கொட்டும் புதுமுரசு இனவொலி எழுப்பட்டும்!
கொள்கை முழங்கித் தமிழர(சு) அமைக்கட்டும்!
முட்டும் பகையினை மோதி முறித்து,இம்
முத்தமிழ்ப் பேரினம் முழுஉரி மைபெற்றே,
எட்டும் கொடுமுடி தமிழினம் எய்தட்டும்!
ஏற்றமும் மாற்றமும் புத்துயிர்ப் பாகட்டும்!
நெட்டும் குறுக்குமாய் உலகில் பரவிய
நேற்றைய தமிழினம் இனிஒன்று சேர்கவே!

-1989

## 146 தமிழுணர்வில்லாத பிறவிகளைப் போற்றாதீர்!

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும்,
தமிழினத்தின் எழுச்சிக்கும்
தமிழ்நிலத்தின் விடுத லைக்கும்,
குமிழ்க்காத வெறுநெஞ்சும்—
கூறாத தோல்வாயும்—
குதித்தெழா மரத்தின் காலும்—
சிமிழ்க்காத புண்கண்ணும்,—
செய்யாத கூன்கையும்
சினக்காத வெற்று ணர்வும்—
இமிழ்கின்ற கடல் நிலத்துள்—
எங்கோவோர் வெற்றிடத்தில்
எவ்வுருவோ டிருக்கு மாயின்,

அவ்வுருவைத் தமிழுருவாய்—
அவ்வுடலைத் தமிழுடலாய்—
அவ்வுயிரைத் தமிழி னுயிராய்—
எவ்வகையும் கொள்ளாதீர்;
எம்மதிப்பும் கொடுக்காதீர்;
எவ்வழியும் இணைசெய் யாதீர்!
ஒவ்வாதீர் அதன்பேச்சை;
உரையாதீர் அதனிடத்தில்;
உறையாதீர் அதனோ டென்றும்!
செவ்வகையிற் பிறந்திருக்கும்
செம்பிறவி என்றதனைச்
சிறிதேனும் போற்றி டாதீர்!

தசைத்திரளை யாய்மதிப்பீர்!
தான்தோன்றி யாய்நினைப்பீர்!
தமிழினத்தில் தவறித் தோன்றி
வசைக்குரிய இழிவுருவாய்
வாய், மூக்கு, கண், காது
வைத்தவெறுஞ் சடலம் என்றே,

இசைத்தெண்ணி அதைத்தவிர்ப்பீர் !
எச்செல்வம் எவ்வறிவோ
டிருந்திடினும் இகழ்ந்து செல்வீர் !
திசைத்துலவும் இவ்வகையில்
தமிழரென்று பலபிறவி
திரிதருமால் தேர்ந்து கொள்வீர் !

*-1989*

## 147 வீரராய் நிமிர்ந்து இனப்பணி ஆற்றுவீர்!

ஏளனப் படுத்துவர்;
இகழுவர்; புண்பட
இழிவுரை பற்பல கூறுவர் !
கேளெனப் படுத்தவர்
கிளைபல மாறுவர்;
கீழ்மைப் பழிகளைச் சுமத்துவர் !
வாளெனக் குடைகுவர்;
வருக வருகென
வரும் பகைக்(கு) அடைத்ததாழ் திறக்குவர் !
தேளெனக் கொட்டுவர் !
திகைப்பிலா(து) இனப்பணி
செய்(து) அருங் கடமையை ஆற்றுவீர் !

கொஞ்சமும் அன்பிலாக்
கொடுமையின் வெதுப்பொடு
கொள்கையைப் புதுவதாய் அலசுவர் !
வஞ்சமும் இரண்டக

வன்மையும் கொண்டராய்
வதைபடப் பழமையும் கிளறுவர்!
நெஞ்சமும் கொதித்திட
நீர்மையும் புகைந்திட
நெருக்கடி பற்பல புகுத்துவர்?
வெஞ்சமர் பொதுவினை!
வீரராய் நிமிர்ந்ததை
நிகழ்த்துவீர்! அவை புறந் தள்ளுவீர்!

**-1989**

## 148 கட்சியரசியல் ஒழிகவே!

தெருச்சண்டை போடுகின்ற அரம்பர்களும்
வம்பர்களும் சட்டமன்றத் துட்பு குந்தே,
கருச்சிதைவைக் கிளறுதல்போல், கழிவறையை
அலசுதல்போல் கயமைச்சொல் புழங்கு கின்றார்!
உருச்சிதைய ஒருவரைமற் றொருவர் அறத்
தாக்கிக்கொண் டாடுகின்றார் ஆட்டம்! ஐயோ!
எருச்செறிவாய் இடவேண்டும் மக்கட்கே;
இல்லையெனில் மாக்களைத்தாம் பெறுவோம் இங்கே!

மக்களினை ஆளவந்தார் மாக்களென
இழிவாக நடப்பதுவோ, மானம் இன்றி?
தக்கபடி கல்வியொடு பண்பாடும்
ஒழுக்கமும்மிக் கோங்கியவர் ஆட்சி ஏற,
ஒக்கபடி நாம்எண்ணி ஒப்போலை
இட வேண்டும்; அல்லாக்கால் தவிர்க்க வேண்டும்!
செக்கடியில் நாய்படுத்தே என்னபயன்?
சிந்திப்பீர்! கட்சியர சியல்ஒ ழிகவே!

**-1989**

# 149 தூய்தமிழ்க்கும் இனத்திற்கும் தொண்டாற்றும் அன்பரெவர்?

அரசியலைச் சார்ந்தோர்கள்
அருந்தமிழ்க்கும் இனத்திற்கும்
ஆக்கம் எண்ணார்;
முரசறைதல் பெரிதாக
இருந்தாலும் பதவிநலம்
முதலாய்க் கொள்வார்!
கரிசனமாய்த் தமிழ்கற்ற
புலவோரும் அறிஞர்களும்
கற்ற வற்றால்
பரிசளிப்பும் பாராட்டும்
பல வெண்ணும் தம்நலமே
பார்த்தி ருப்பார்!

வாணிகர்க்குப் பொருள் நாட்டம்!
வாழ்கலைஞர் எல்லார்க்கும்
வருவாய் நோக்கம்!
காணியுழும் உழவர்க்குக்
கனித்தமிழும் இனநலமும்
கரும்பா? நெல்லா?
ஏணியெனும் பொருளியலால்
ஏற்றம் நினை தொழிலாளர்க்
கினமா கொள்கை?
தூணிகர்க்கும் அன்பரெவர்
தூய்தமிழ்க்கும் இனத்திற்கும்
தொண்டாற் றற்கே?

-1990

நரிமை மனங் கொண்டவர் பால்
நயந்து, நயன் பேசி
உரிமைதரக் காலமெலாம்
உளங்கசிந்து நின்றோம்;
உரிமைதரக் கால மெல்லாம்
உளங்கசிந்து நின்றும்,
சரிமைநிகர் அதிகாரம்
சமவுடைமை காண,
ஒருமை மனங் கொண்டிலரே!
ஊமையரா நாமும்?

ஊமையரா நாமும்? இங்கோர்
உணர்வுமற்றா போனோம்?
ஆமையரா நாமும்? நல்ல
ஆண்மையற்றா போனோம்?
ஆமையராய் நாமும் நல்ல
ஆண்மையற்றுப் போனால்,
ஏமமெனக் காத்துவந்த
இனமழிந்து போக,
தீமைமேலும் மேலும்வந்தே
திசையழிந்து போவோம்!

திசையழிந்து போய்விடுவோம்;
திருவழிந்து போவோம்!
வசைமலிந்து பெருகிவிடும்;
வழிமுறையும் ஏசும்!
வசைமலிந்து பெருகிவிட
வழிமுறையும் ஏச,
அசைவற்றா நாமிருப்ப(து)?
அடடா, ஓ! தமிழீர்!
விசையெழுந்து பாய்ந்ததுபோல்
வீறுற்றெழு வீரே!

-1990

## 151 நினைக்கின்றேன்; நினைக்கின்றேன்; நெஞ்சு புண்ணாகின்றேன்!

உய்வடைந்து தமிழ்மொழியும்
தமிழினமும் நாடும்
உயரட்டும் உய்யட்டும்
என்றே என் உணர்வாய்ப்
பொய்வறியாப் பெருங்கருத்தாய்
புரையில்லாச் செயலாய்ப்
பொழுதெல்லாம் நாளெல்லாம்
மாதம்ஆண் டெல்லாம்
தொய்வறியா உடம்போடும்
உயிரோடும், மக்கள்
தொளைச்செவியில் உள்நுழைத்துத்
துளிர்விடும்நாள் பார்த்தேன்!
செய்வறியா உணர்வினராய்ச்
செயலில்லா தவராய்ச்
சேர்ப்பதிலும் தின்பதிலும்
உயிர்தேய்கின் றாரே!

ஈங்கிவர்தாம் இப்படியென்
றால், இந்த நாட்டில்
இருக்கின்ற தலைவரெல்லாம்
அறிவாளர் எல்லாம்
வீங்குகின்ற நெஞ்சினராய்ப்
பேச்சினராய், மக்கள்
விளங்காமல் போகட்டும்
வீழட்டும் என்றே
தூங்கவைத்துத் தொடையினிலே
கயிறுதிரிக் கின்றார்!
தொன்தமிழர் நலிகின்றார்;
மெலிகின்றார்! அந்தோ!
நீங்கவைத்தித் துன்பத்தை—
நிலைக்கவைக்க இனத்தை—
நினைக்கின்றேன்; நினைக்கின்றேன்;
நெஞ்சுபுண்ணா கின்றேன்!

-1990

—அய்யாவே பாவேந்தே! அன்றைக்கும் உம்மை
ஆதரிக்கவில்லை. இவ் வரசும், இந் நாடும்!
பொய்யாக இன்றைக்கும் நூற்றாண்டு விழாவைப்
புரையோடும் புன்மையொடும் ஆர்ப்பாட்டத் தோடும்
செய்யாத விளம்பரங்கள் வேடிக்கை யோடும்
செய்கின்றார்; மகிழ்கின்றார்! போதாதா உமக்கே?
எய்யாத பெரும்புகழைச் செய்துவிட்டார்; எனினும்
எக்கருத்தைச் சொன்னீர்கள், அதை மறந்து விட்டார்?

தமிழ்வாழச் சொன்னீர்கள்; தமிழால்வாழ் கின்றார்!
தமிழினத்தின் முன்னேற்றம் கருதிடச்சொன் னீர்கள்!
இமிழ்வானம் எட்டும்வரை பொருள்குவித்து விட்டார்!
இந்நாட்டை உயர்த்தத்தான் சொன்னீர்கள்; அதனால்
தமிழ்அரசைத் தில்லியிலே மதிக்கின்ற வாறு
தாளங்கள் மேளங்கள் கொட்டுகின்றார்! இனியும்
எமிலுயர்வு தாழ்வில்லை! வடவர்களும் இங்கே
இருக்கின்ற தமிழர்களும் ஒருமைக்காக் கின்றார்!

இந்தியினை எதிர்த்திடவே சொன்னீர்கள்! தமிழர்
இந்தியினை எதிர்த்தபடி இந்திகற்க லானார்!
செந்தமிழில் கல்விகற்கச் சொன்னீர்கள்! இவரும்
செந்தமிழைக் கற்கின்றார், ஆங்கிலத்திற் கிணையாய்!
'எந்தமிழர் இனமொன்றே; சாதியொழித் திடுக'
என்றீர்கள்! இடவொதுக்கல் சாதியினால் செய்தார்!
'செந்தமிழ்நாட் டைத்தனிநா டாக்குக'என் றீர்கள்!
செய்கின்றார், செய்கின்றார்,செய்துகொண்டே உள்ளார்?

சிலைவைத்தார் உங்களுக்கே! நூற்றாண்டு விழாவைச்
சிறுபள்ளி முதலாகக் கல்லூரி வரைக்கும்,
கலைவிழாக்கள், பாட்டரங்கம், பட்டிமன்றம் என்றே
கணக்கின்றி ஊர்தோறும் நகர்தோறும் நடத்தி
அலையலையாய் மக்களுடன் கொண்டாடி விட்டார்!
ஆகாகா! உங்கள்புகழ் வானுயர்த்தி விட்டார்!
மலையாதீர், பாவேந்தே! அமைச்சர்களும் பிறரும்
மாண்புடனே வாழ்கின்றார்,தமிழ்மாண்பைக் கொன்றே!

-1990

—திரைப்படமும் அரசியலும் மக்களிரு
தினவுகளாய்த் திரட்சி பெற்றே
இரைப்பைக்கும் நெஞ்சுக்கும் ஏற்றஇரு
உணவுகளாய் எந்நே ரத்தும்,
உரைப்பதுவும் எழுதுவதும் உணருவதும்
அவ்வுணர்வாய் உழன்று ழன்றே,
வரைப்பின்றி மதிமயங்கும் மக்களிடைத்
தமிழுணர்வு வளர்ப்ப தெங்கே?

அடிமையராய் அறியாமை மிக்கவராய்
அழிவுமத, சாதிச் சேற்றில்
மிடிமையராய் உள்ளழுந்தி மூழ்குகின்ற
மக்களினை மீட்ப தெங்கே?
குடிமைநலம் பேசியராய் அன்னவரைக்
கொள்ளையிட்டுச் சுரண்டி வாழும்
கொடியவராம் அரசியல்செய் கூத்தாட்டக்
கயவர்களும் குறைவ தெங்கே?

மனநலத்தைச் சிதைக்கின்ற மதிநலத்தைக்
குறைக்கின்ற மலிவுப் பேச்சு!
இனநலத்தை வளர்க்காத, நாட்டுநலம்
பேணாத இழிசெ யல்கள்!
புனைநலத்தை உண்மையென்று, புளுகுரையை
மெய்யென்று, புகழுக் காக
வினைநலத்தைக் கெடுக்கின்ற வீணர்களுக்
கிடையில் இனம் விடிவ தெங்கே?

கிளர்ந்துவரும் கழிகாமத் திரைப்படத்தில்
கலைகளெனும் கயமைச் சேற்றில்
வளர்ந்துவரும் இளைஞரெலாம் மதிமயங்கி,
மனம்கெட்டு, மானம் இன்றித்
தளர்ந்துவரும் தன்மானம் அறக்கழிய
உடல் கெட்டுத் தாழ்ச்சி யுற்றார்!
விளர்ந்துவர வேண்டியநல் உணர்வெல்லாம்
விட்டவர்கள் விழிப்ப தெங்கே?

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்
படர்கின்ற தமிழ்நி லத்தில்
நல்வகையாய் உணர்வெழுதி மறம்பேசி
நல்வினைவை நாட்டு தற்குள்
அல்விளைவே வளர்ந்துவர அவ்விளைவில்
குளிர்காய்ந்தே அறத்தைக் கொன்றே
வல்கரவால் பொருள்செய்து குடல்நிரப்பும்
வன்னெஞ்சர் வீழ்வ தெங்கே?

தொய்யாத நல்லுளமும் வல்லுணர்வும்
கொண்டுவிழி மூடல் இன்றிச்
செய்யாத பெரு முயற்சி செய்தேநம்
செந்தமிழும் இனமும் நாடும்
பொய்யாத முன்னேற்றம் உரிமை நலம்
பொலிந்திடவே உழைக்கும் போது
எய்யாத பழிச்சொல்லும் முதுகம்பும்
எய்பவர்கள் இளைப்ப தெங்கே?

இருந்தாலும் நம்கடமை செயல்வேண்டும்
எந்தமிழை மீட்க வேண்டும்!
திருந்தாத நம்மினத்தைத் தெளிவிக்க
வேண்டும்; அதைத் திருத்தல் வேண்டும்!
வருந்தாத வருத்தங்கள் வந்தாலும்
நம்நிலத்தை மீட்டல் வேண்டும்!
பொருந்தாதார் புறம் பெயர்க! வன்தொண்டர்
புறப்படுக! வீரம் எங்கே?

**-1990**

## 154 இந்தியா என்றால் பார்ப்பனீயமும் முதலாளியமும்!

இந்திய ஆட்சி யென்றால்
இந்திதான் இருக்கும்; இந்திக்
காரன்தான் ஆட்சி செய்வான்!
முந்திய நலன்கள் முற்றும்
பார்ப்பான்தான் நுகர்வான்; மற்றும்
முதலாளி கூட்டுச் சேர்வான்!
பிந்திய வருணத் தார்கள்,
பிற்பட்டோர், தாழ்த்தப் பட்டோர்,
பிறவியில் வறியோர் யாவும்
சிந்திய நலன்க ளைத்தான்
போராடித் தின்னல் வேண்டும்!
சிறுமையால் சாதல் வேண்டும்!

அனைத்திலும் பார்ப்ப னர்தாம்
ஆளுமைத் தலைமை ஏற்பார்!
அவர் இனத் தவரை யேதாம்
வினைத்துணை யாக்கிக் கொள்வார்!
வேற்றினத் தவருள் நல்ல
வீடண ராகப் பார்த்து,
மனைத்துணை வியரைக் கூட
மாண்பும் மா னமும்இ ழந்தே,
மருவிட அவர்க்குத் தந்தே
எனைத்துணைச் செயலென் றாலும்
எளிதாகச் செய்து கொள்வார்!
இமப்பொருள் திரட்டி வாழ்வார்!

பார்ப்பன ரில்,வேங் கட்ட
ராமனென் றாலும், இராசீவ்,
செயலலி தா—என் றாலும்,
ஆர்ப்பரித் தெழுதும் 'துக்ளக்',
'ஆனந்த விகடன்,' 'கல்கி'
'தினமலர்'—'மணி'—என்றாலும்
நேர்ப் பொருள் உரை,பேச் செல்லாம்
செந்தமிழ் மொழி,இ னத்தைச்

சீரழிப் பதுவே! இஃதைக்
கூர்ப்பான பார்வை கொண்ட
கொள்கையர் உணர்வார்! காட்டிக்
கொடுப்பவர் உணரார் என்க!

-1991

## 155 சிறை வைப்பதால் ஆட்சியின் குறைகள் சீராகிப் போகுமா?

இருந்து பார்த்தால்தான் தெரியும்!
இலாவிடில் சிறைத்துன்பம்
எவ்வாறு புரியும்? (இருந்து)

மருந்துக் காகிலும் ஒருநாள், ஒரு பொழுது
மானத்திற் காயினும் ஒருமுறை, ஓர் இரவு
திருந்திடு வார்கள் எனும்நம்பிக் கையில்
திருடரை முரடரை வைக்கின்ற சிறையில் (இருந்து)

மூட்டைப் பூச்சியும் ஈக்களொடு கொசுவும்
முடைநாற்றச் சாய்க்கடை நீரும்,கழி வறையும்
வேட்டை யாடிடும் காவலரும் நிறைந்து
வீணர்கள் குவிந்திடும் சிறைக்குள், ஓர் இரவு (இருந்து)

செயலலி தாவுடைக் கொழுவுடலும் ஒருநாள்
சிறையிருந் தாலுமே உருகிவிடும் மறுநாள்!
கயவரே என்னினும் மாந்தர்கள் அன்றோ?
கனிவோடு நடத்தினால் திருந்துவார் அன்றோ? (இருந்து)

மனநோயில் விழுந்தவர், மற்றவர்க்கே என்றும்
மாறுசெய் வம்பர்கள், கொள்ளையர்கள், கொலையர்,
முனம்பகை வெறியினர்-இவர்களுடன், அரசில்
முரண்படு வோரையும் ஒன்றென எண் ணுவதா? (இருந்து)

அரசியல் பேசுவோர் கொடுமையா ளர்களா?
ஆட்சியில் உள்ளவர் நடுநிலையா ளர்களா?
உரசி டாமலே கருத்தோடு கருத்தை,
'உண்டு காவலர் படை'யெனும் மமதையர் (இருந்து)

சிறையினுள் வைப்பதால் ஆளுமையின் குறைகள்
சீராகிப் போகுமா? ஆளுபவர் நினைக்க!
முறையாகக் கருத்தொடு கருத்தெதிர் வைத்து
முடிவு காண் பதனாலே எவர்க்கென்ன தொல்லை?
(இருந்து)

அவரவர் கருத்தினை ஆய்வுசெய் யாமல்,
ஆள்பவர் கருத்தேதான் சரியென்று கொண்டால்
தவறினைத் தவிர்த்திட இயன்றிடுமோ, சொல்வீர்;
தவறேதான் என்றாலும் சிறைசெய்தல் தீர்வோ? (இருந்து)

அறிவியல் மிகுவளர் காலம் இஃதன்றோ?
ஆள்பவர்க் கெதிர்சொல்வார்க் கிடர்தரல் நன்றோ?
குறிவைத்தே அவர்களைக் கொடுஞ்சிறை தள்ளல்
கொடுமையினும் கொடுமை! அதை அரசுசெவி கொள்க!
(இருந்து)

-1991

## ஊக்கம் இழக்கச் செய்யாதீர்!

ஆக்கம் இழைக்க உதவிலீர் ஆயினும்
ஊக்கம் இழக்கச் செய்யாதீர். எமை
ஊக்கம் இழக்கச் செய்யாதீர்!

தாக்கம் அடைந்தது தமிழினம் அல்லவோ?
தமிழ்நிலம் குலைந்தசீர் எடுத்திங்கு சொல்லவோ?
தேக்கம் அடைந்தனர் தமிழர்கள் அனைத்திலும்!
தீந்தமிழ் மொழி, இனம், தேய்ந்தன வினைத்திறம்! —(ஆக்)

பைந்தமிழ் மொழியினை வளர்த்தல்நம் கடமையே!
பாருக்குள் தமிழரை உயர்த்தல்நம் உரிமையே!
மைந்தரும் அல்லமோ தமிழன்னைக் கின்றையே!
மடமையுள் ஆழ்ந்திடில் நலம்பெறல் என்றையே! —(ஆக்)

மொழி, இனம், நாட்டினுக் குழைத்தல்எம்கொள்கையே!
மூச்சிலும் பேச்சிலும் செயலிலும் வெல்கையே!
பழி, துயர், இடர்க்குயாம் அஞ்சுதல் இல்லையே!
பற்பல தடை செய்தல் வினைக்கொரு தொல்லையே!
—(ஆக்)

இனம்உய்ய உழைப்பாருக் கிடர்செயல் ஞாயமா?
எதிரிகள் தொல்லைஅந் நிலையினில் ஓயுமா?
மனநலம் கொண்டன்றோ துணைவரல் நல்லது!
மக்களின் வலிவன்றோ எதனையும் வெல்வது?

எம்முடைக் கருத்தெடுத் துலகெலாம் பரப்புக!
ஏட்டிலும் உரையிலும் அவற்றையே நிரப்புக!
உம்முடை உழைப்பிலும் செயலிலும் தமிழினம்
உய்வதே குறியென வாழ்வினை நடத்துக! —(ஆக்)

**-1991**

157

## அடிமை மீட்குவோம்!

பாடலில் உரையினில்
பனித்த சொற்களில்
ஈடறும் நறுந்தமிழ்
எடுத்துக் கூறினோம்!
கூடுவ தில்லை, நம்
தமிழினம்; ஆங்கொரு
பீடுறுங் கொள்கையிற்
பிணைவதும் இல்லையே!

நூற்றுக் கணக்கினில்
மேடைகள் அமைத்தே
ஆற்றிய உரைகளுக்
களவுகள் இல்லையே!
ஏற்றமும் கண்டிலர்
எம்மினத் தமிழர்கள்!
மாற்றமும் ஆங்கவர்
மனத்தினில் இல்லையே!

நாற்பான் ஆண்டுகள்
நயத்தொடும் உளத்தொடும்
நோற்பார் போல் நொடி
நுடங்கலு மின்றியே
ஏற்பார் ஏற்பார்—என்
றெதிர்பார்த் திருந்தோம்!
மேற்பார் வையுமிலை;
மேன்மையும் இல்லையே!

இந்திரா இறந்திடில்
இவனும் இறக்கிறான்;
இந்திரா மகன்கொலை
எய்திடில் சாகிறான்;
நந்திறல் அறிகிலான்;
நாயமும் தெரிகிலான்;
நொந்தே மடிகிறான்;
நோய் — கடும் அடிமையே!

ஆயிரம் ஆண்டுகள்
அடிமையாய் உழன்றவன்;
வாயுரம் இழந்தவன்;
வாய்ப்புகள் துறந்தவன்;
நோயிலை; மூடனாய்
நுடங்கிப் போனவன்!
ஆ! இவ னைத்தான்
அடிமை மீட்குவோம்!

-1991

## 158 சட்டிக்குத் தப்பி, நெருப்பில் விழுந்தது தமிழகமே!

வட்டிக்குத் தேம்பி, முதலை
இழந்திடும் வறியர்களாய் —
மட்டித் தனமாய்க் கவர்ச்சியில்
மயங்கிடும் மடித்தமிழர்—
எட்டிக் கொட்டையில் இனிப்பைச்
சுவைத்திட இசைந்து விட்டார்!
சட்டிக்குத் தப்பி நெருப்பில்
விழுந்தது தமிழகமே!

வெட்டிக் கொண்டு செத்திடும்
நரவெறி வீம்பர்களாய் —
கட்டிக் கொண்டு கடலில்
இறங்கிடும் களியர்களாய்—
முட்டிக் கொண்டு முரண்பட்(டு)
அலைந்து முடிவினிலே
தட்டிப் பறிக்கும் தலைமையின்
கால்கீழ்த் தங்கினரே!

‘எதற்கு’ ‘ஏன்’ ‘எதை’ ‘எவ் வாறு’—என
எண்ணும் உணர்விலராய் —
‘முதற்கோள் என்ன’ முடிவுகொள்
என்’னெனும் முனைப்பில்ராய்ச்
சிதற்காட் பட்ட சுவடியாய்ச்
சிற்சிறி தாயழியும்
முதற்றாய்த் தமிழினம் முழுவதும்
அழிவுற முற்பட்டதே!

தப்படித் தாடும் தொம்பருக்
காட்டும் தலைக்குரங்காய்ச்—
செப்படித் தாடும் ஆட்டத்தில்
இழக்கும் சூதர்களாய் —
முப்படித் தாக்கம் நாட்குநாள்
எய்துவர் முழுத்தமிழர்!
எப்படித் தேற்றுவோம்? எவ்வகை
ஆற்றுவோம் இவர்களையே!

-1991

## 159 செயலலிதாவே! செயலலிதாவே!

செயலலி தாவே! செயலலி தாவே!
உய்யவந்த தமிழினத்தை உய்யாது தடுத்து,
நையவைத்து நாளும் நன்கு நலியவைத்துப்
பைய அழித்துவரும் பழிசேர்செய லலிதாவே!

மேல்மேலும் பார்ப்பனர்க்கும் வடவர்க்கும் செல்வர்க்கும்,
கால்மேலும் கைமேலும் வந்துவிழும் கயவர்க்கும்
ஆக்கம் பலசெய்தே அற்றைத் தமிழினத்தைத்
தாக்கமுறச் செய்யும் தருக்குடைய ஆரியையே!

எத்தனைதான் கூறிடினும் எவரெடுத்து விளக்கிடினும்
மொத்தையுன் உடலுக்கு எள் முனையும் உறைக்காது!
தானே தருக்கித் தலைவீங்கிப் போகின்றாய்!
ஆனை உடம்பை அலட்டிக்கொள் ளாமலே
ஊரூராய் வலம்வந்தே ஒன்றும் அறியாத—
கூறில்லா—மக்களையே ஏய்த்துக் குவிக்கின்றாய்!

வெட்கம் துளியுமின்றி வீதியெல்லாம் வெட்டுருவம்
மட்குதிரை நிற்பதுபோல் மலையுயரம் நிறுத்துகிறாய்!
சூடு சுரணையில்லை; சொல்வதிலும் உண்மையில்லை!
ஆடல் மகளே! உன் அழிம்புகட்கும் எல்லையில்லை!
அரசியல் பிழைத்தவரை அறங்கொல்லும் என்பார்கள்!
முரசு கிழியும் உன்றன் முழக்கமென்று நிற்குமோ?
அன்றே, இத் தமிழினமும் அழகுத் தமிழ்நாடும்
நின்று உயிர் பிழைக்குமென நெஞ்சார நினைப்பாயே!

-1992

*கள்ளச்சா ராயம் விற்கும்*
*கயவரைக் கைக்குள் போட்டு,*
*நொள்ளைத் திரைப்ப டத்துத்*
*தொழும்பர்க்குச் சலுகை காட்டி,*
*வெள்ளையாய்க் கொஞ்சம், அட்ட*
*கறுப்பினில் வயிறு மிஞ்சக்*
*கொள்ளைய டிப்பார் செய்யும்*
*கூத்துக்கே ஆட்சி—என்பார்!*

*தொழு(து) உதை காலில் வீழ்ந்தால்*
*முதல்வர் கை தோள்மேல் வீழும்!*
*விழுதையும் மரம்என் பார்கள்,*
*மாண்புகள், விருந்து போட்டால்!*
*பழுதையும் பரிசு வாங்கும்*
*பரிந்துரை முதல்வர் செய்தால்!*
*கழுதையும் 'டாக்டர்' ஆகும்*
*ஆளுநர் கடைக்கண் வைத்தால்!*

*மருள்மன மக்கள் தம்மை*
*மயக்கிடும் தலைவர் கூட்டம்!*
*இருள் பொதி விழா வே டிக்கை!*
*ஏமாற்றும் சட்ட திட்டம்!*
*உருள்கின்ற பதவிச் சண்டை!*
*ஒவ்வொரு நாளும் கோடிப்*
*பொருள்தரும் சுரண்டல் செல்வர்!*
*புரிந்ததா? தமிழ்நாட் டாட்சி!*

**-1992**

## நேர்மையராய் நெறிவாழ்வீரே!

தமிழ்நாட்டிற் பிறந்தெழுந்து, தமிழ்நாட்டுச்
சோறுண்டு, நீரும் உண்டு,
தமிழ்நாட்டில் தமிழ்க்கல்வி கற்றுயர்ந்து,
பணிபெற்று, வாழு கின்ற
தமிழ்நாட்டுப் பார்ப்பனரே! தமிழ்மொழியைத்
தமிழினத்தைத் தாழ்த்து கின்றீர்!
தமிழ்நாட்டைத் தில்லியர்க்கே தலைதாழ்த்தச்
செய்கின்றீர்! நன்றி கெட்டீர்!

சாதிமதம் பார்க்கின்றீர்! தமிழினத்தை
இழிக்கின்றீர்; சழக்குச் செய்வீர்!
ஆதியிலே நும்மவர்கள் அளந்துவைத்த
வேதங்கள், புளுகு நூல்கள்
ஓதியவா றின்னும் ஏ மாற்றுகின்றீர்!
கடவுள்கரு வறையுள் வாழும்
வேதியராய்ப்—புரோகிதராய்—விளங்குகின்றீர்;
பிறர்நலன்கள் விழுங்கு கின்றீர்!

நடுநிலையாய்—நேர்மையனாய்—ஞாயமொன்று
சொல்லுகின்றேன்; நயந்து கேட்பீர்!
பாடுபடும் மக்களெல்லாம் பார்ப்பனர்க்கே
அடிமையெனும் பழிமை நீக்கிக்
கேடுகெட்ட சாதிவுணர் வழித்துவிட்டு,
மடமைசெயும் மதநோய் நீங்கி,
நீடுபுகழ்த் தமிழோடும் தமிழரோடும்
நேர்மையராய் நெறிவாழ் வீரே!

-1992

பைந்தமிழ் நாடு பழம்பெரும் நாடு!
ஐந்திணை ஒழுக்கம், அருமைத் தமிழ்மொழி,
துலங்குநல் இலக்கியம் தோன்றிய நாடு!
நலங்கெட இன்று நலிந்தது! அதனை
மீண்டும் புதுக்கிட — மேலுறச் செய்திட
நீண்ட முயற்சிகள் நிகழ்த்திட வேண்டும்!

மொழிநிலை, இனநிலை, பொருள்நிலை, அரசியல்,
பழிசே ராத பண்பாடு, கல்வி —
எனும்பல நிலைகளில் இளைஞர்கள் உழைத்தே
இனம்மேம் பாடுற இயங்குதல் வேண்டும்.

இற்றை இளைஞர்கள் எதனிலும் ஊன்றாது
வெற்றுச் சருகுகள் வீசிடும் காற்றில்
அலைந்து திரிதல்போல் அல்லல் உறுவர்!
குலைந்து போகும் குமுகாய நிலைகளைச்
சீர்செய் திடவோ சிறப்புறச் செய்யவோ
ஓர்எள் முனையும் உழைத்திட விரும்பிலர்!

கால்நோ காது, கைநோ காது
மேல்உடை அழுக்குப் படியாமல் உழைக்கவே
இளைஞர் விரும்புவர்; இளமை வீ ணாக்குவர்;
விளைவெதும் இல்லை; வீண்ஆர வாரம்!

பெண்களைப் போலப் பீடுஇல் லாமல்
கண்களின் கவர்ச்சியே பெரிதென்று கருதி,
மேனி மினுக்குதல், மின்னுடை உடுத்தல்,
கோணி நடத்தல், கொச்சை பேசுதல்,
ஊர்உலா வருதல், ஓங்கிச் சிரித்தல்,
சேர்ந்துகை கோத்துச் சிறுநடை போடுதல்,
கல்லூரிக் கன்னியர், பள்ளிச் சிறுமியர்
செல்கையில் பின்சென்று சிறுசிறு குறும்புகள்
பண்ணுதல்—இவையெலாம் இளைஞர்கள் பழக்கமாய்
நண்ணி வளர்ந்து நாட்டை நலித்திடும்!

திரைப்படப் பெருக்கம் இளைஞரைத் திருப்பி
உரைகள், பாடல்கள், ஒழுங்கிலா நடத்தைகள்
இவற்றுளே இளைஞரை இழுத்துச் சாய்த்திடும்!
அவற்றுளே மூழ்கி வாழ்க்கையை அழிக்கும்
இளமைச் செல்வரை எப்படி மீட்பது?
வளமையாய் அவர்கள் வாழினும், நாட்டுக்கு
ஒருபயன் இன்றி உலுத்தராய் வீழ்வர்!
வருபயன் பற்பல வராமல் உள்ளன!

உண்மையில் இளைஞரை அரசும் ஊக்காமல்
வெண்மையாய் அவரை விளையாட்டு களிலும்,
கழிசடைத் திரைப்படக் காமச் சேற்றிலும்
அழிவுறும் படியே ஆக்குதல் காண்போம்!

நல்ல சிந்தனை, நறும்பல செயல்கள்
வல்ல இளைஞர்க்கு வரும்படி செய்தால்
நாட்டு மக்களின் நலம்பல பெருகும்;
கேட்டுக் குழிகளில் கீழுறத் தள்ளி
மூடிப் போகவே அரசு விரும்பிடும்!
வாடிப் போய்விடும் வருங்காலம் என்றே
எண்ணி வருந்துவார் எத்தனை யோ, பலர்;
திண்ணிய இளமையைத் தீமை அழிப்பதா?
அருந்தமிழ் இளைஞரே! அருமை மறவரே!
வருந்தமிழ் நாடு வளர்ச்சி பெற்றிட
எண்ணிப் பார்மின்! எண்ணிப் பார்மின்!
மண்ணில் தமிழினம் மாபெரும் பேரினம்!
அத்தகு நல்லினம் அழிந்துகொண் டுள்ளதே!
எத்தகு பெருமைகள் சிறப்புகள் எல்லாம்
இவ்வினம் பெற்றே இருந்ததை அறிவோம்!
செவ்விய வாழ்க்கையின் சீரெங்கு போனது?
இன்றுநிலை என்ன? இழிநிலை அன்றோ!
குன்றுமண் ஆனதாய்க் குன்றிப் போனது!

இளைஞர் உலகம் எழுந்துமுன் வருக!
இளைஞரைக் காக்க! கேடுகள் சாய்க்க!

-1993

# தமிழினம் விழித்தெழுமே!

பிடிக்கட்டும் பிடிக்கட்டும் என்றிருந்தார் — அட
பிடித்தெமை உள்ளேயும் வைத்துவிட்டார்
அடிக்கட்டும் அடிக்கட்டும் என்றிருப்பார் — எமை
அடிக்கவும் செய்குவார் உயிர்சிதைப்பார்!

எம்மினத் தமிழரின் பதைபதைப்போ — என்றும்
இந்நிலை மாறாது! புதுவியப்போ?
அம்மி நகர்ந்தாலும் நகர்ந்துவிடும் — இன
அடிமைகள் என்றென்றும் அசைவதில்லை!

தன்மானம் கெட்டனர்; மதிகெட்டனர் — தம்மின்
தசையாடும் என்பார்கள்! தரங் கெட்டனர்!
என்னானும் ஆகட்டும்! இழப்பாகட்டும் — எமக்(கு)
என்னதனால் வந்ததென் றுடல்வளர்ப்பார்!

தமிழினம் தனித்தனி இனமானது — ஆனால்
தமிழுணர் வென்றுமே வளமானது!
அமிழாது தமிழுணர்வு என்றாகிலும் — முளை
அரும்பாதோ? இனமானம் வளர்ந்திடாதோ?

இருக்கின்ற அத்தனை உருவங்களும் — தமிழ்
இனமில்லை என்றாலும் இருக்கின்றேன் நான்!
உருக்கின்ற உலையினில் என்னையிட்டாலும் — நான்
உருக்குலைந் திடல்என்றும் நேர்வதில்லை!

என்போலும் கோடியர் இலையென்றாலும் — மற்றிங்
கிருப்பவர் ஆயிரம் பேரென்றாலும்,
துன்பேதும் மொழி, இனம் பெறுமென்னிலோ— உள்ளம்
துடிதுடித் தெழுந்திடல் உறுதியன்றோ?

ஆயிரம் இலக்கமும் கோடியாகும் நூறு
ஆண்டுகள் ஆயினும் சளைத்தலில்லை!
வாயுரம் அன்றிது வரலாறன்றோ? எம்
வழிவழித் தமிழினம் விழித்தெழுமே!

-1993

## 'தடா'கை அரக்கியே!

'தடா' எம்மை என்ன செய்யும்,
தடா கை அரக்கியே!
கடா மு டாவென் றாட்சி செய்யும்
கன்ன டப்பார்ப் பனத்தியே! (தடா)

அடா வடிச்சட்டம் போட்டும்
அரக்கத்தன மும் மேலிடப்
படாத பாடு படுத்து கின்றாய்!
தமிழினத்தை அழிக்கின் றாய்!

குதம்பை உடலும் குலுங்கி டாமல்
குண்டு முகம்வா டாமலே
மதம தர்ப்பும் சாதிச் செருக்கும்
மமதை ஆட்சி செய்கின்றாய்!

தமிழை வாழ வைப்ப தாகத்
தருக்கர்க் கீந்து நடிக்கிறாய்!
தமிழி னத்திற் குழைக்கும் தலைவர்
தம்மைத் தடாவில் வாட்டுவாய்!

சூழ்ச்சி, வஞ்சம், தீமை எண்ணம்,
சொல்லில் மயக்கிச் சுரண்டுவாய்!
காழ்ப்பு, கரவு, களவு வெறிகள்,
கருப்புச் சட்டம் கருவிகள்!

தமிழை நசுக்கித் தமிழர் வாழ்வைத்
தகர்ப்ப தற்குக் குறிகொண்டாய்!
திமிர்ந்த பேச்சு! காவல் வளையம்!
தேர்ந்த நடிப்பு நாடகம்!

சுரண்டிச் சுரண்டிக் கொழுக்கும் உடம்பு!
'சொகுசு'ப் போர்வை! சுற்றுலா!
வறண்டு கிடக்கும் மக்கள் வாழ்வை
வாட்டி வதைக்கும் ஊழல்கள்!

ஆட்சி என்னும் பெயரில் நடத்தும்
அழிம்பு செய்யும் அரசியல்!
மீட்சி யின்றி அழியப் போகும்
மினுக்கிக் குலுக்கும் நடிகையே! -1993

## 165 நிலைப்பதற்கு என்ன செய்துவிட்டோம்?

ஆயிரத்தின் மேலொருநூ றாண்டுசென்ற
பின்னர்தான், அறச்செல்வர், அறிவின்மேதை,
வாயுரத்தின் பெரும்புலவர், வற்றாத
அறிவூற்று, உயிர்ப்பாறு, தமிழினத்தின்
பாயிரத்தைப் பாடிவைத்த முதல்தலைவர்
வல்லதிரு வள்ளுவர்என் பேராசான்
ஏயபெயர் மக்களிடைத் தெரிந்ததெனில்
இளம்புலவர் புகழ்தேடி அலைதல் ஏனோ?

என்னெழுதி விட்டோம்நாம்? என்னசெய்து
விட்டோம் நாம்? ஈகமென்ன ஆற்றிவிட்டோம்?
முன்னிருந்த அவர்களெல்லாம் மொழியாத
எக்கருத்தை—எவ்வறிவை—முழங்கிவிட்டோம்?
தின்னுதற்கே அலைகின்றோம்; உடுப்பதற்குப்
பணிகின்றோம்; திரிகின்றோம்; மனைவிமக்கள்
மன்னுதற்குப் பெரும்பொருளைச் சேர்க்கின்றோம்;
மறைந்தபின்னும் நிலைப்பதற்கென் செய்துவிட்டோம்?

சிலநூல்கள் எழுதிப்பே ரறிஞரெனச்
சிலுப்புகின்றோம்; ஆட்சியரை மண்டியிட்டு
நலவளங்கள் துய்க்கின்றோம்; இனம் காட்டிக்
கொடுக்கின்றோம்; உள்ளுக்குள் நாறுகின்றோம்!
குலநலன்கள் மறைமுகமாய்ப் பேசுகின்றோம்;
குழுக்கள்பல சேர்க்கின்றோம்; கொள்ளைகொண்டு
நிலபுலன்கள் வாங்குகின்றோம்; பெருமைபெறத்
துடிக்கின்றோம்! நிலைப்பதற்கென் செய்துவிட்டோம்?

-1993

## 166 வெல்லாத ஆரியர் வென்ற கதைஇது! வீரத் தமிழினம் வீழ்ந்த இழிவிதே!

தமிழும் திரிந்து சமற்கிரு தத்தில்
'திரமிளம்' ஆகித் 'திரவிடம்' நின்றது!
அமிழ்தாம் தமிழை அழித்துத் திராவிடம்
ஆக்கிய ஆரியத் தில்லு முல்லிது!
கமழும் மொழிப்பெயர் இனப்பெயர் அழிந்ததால்
கன்னித் தமிழும் தமிழரும் அழிந்தே
உமிழத் தக்க 'திராவிடர்' ஆயினர்!
உயிர்போய் விட்ட பிணமாய்க் கிடந்தனர்!

'திராவிடர்' எனும்சொ(ல்)லைத் தமிழர் தவிரத்
தெலுங்கரோ, கன்னட ரோ,மலை யாளரோ
பராவுதல் இல்லை; பயில்தலும் இல்லை!
பாழும் தமிழரே பயின்று வந்ததால்
திராவிடர் இருக்கத் தமிழர் அழிந்தனர்!
தமிழர் அழிந்ததால் தமிழுணர் வழிந்தது!
திராவிடர் எனும்சொல் கழகநூல் எதனினும்
தெள்ளிப் பார்க்கினும் தெரியவிய லாதே!

இல்லாத பெயரை இருப்பதாய்ச் சொல்லி
இருந்த பெயரை இழந்தனர் தமிழர்!
பொல்லாத ஆரியச் சூழ்ச்சியை அறியாப்
புழுக்கைத் தமிழரே தமிழரை அழித்தனர்!
எல்லாரும் தெலுங்கர் கன்னடர் மலையராய்
இருந்திடத் தமிழர் இல்லாது போயினர்.
வெல்லாத ஆரியர் வென்ற கதையிது!
வீரத் தமிழினம் வீழ்ந்த இழிவிதே!

-1994

## 167 எந்தமிழ் இனத்திற்கு இறுதி எச்சரிக்கை!

அழுதுஅழுது உள்ளம் அரற்றி அழுது
தொழுது தொழுதுகை கூப்பித் தொழுது
பொன்எனத் திகழ்ந்து புலமெலாம் பரவிய
முன்வர லாற்றையும் முத்தமிழ்த் திறத்தையும்
எடுத்தெடுத் தியம்பி எழுக எழுகென
அடுத்தடுத் துரைத்தும்,எம் அருமைத் தமிழினம்,
படுத்தே கிடப்பது எனும்பாழ் உணர்வினால்
மடுத்த செவியொடும் மங்கிய அறிவொடும்
மூடாத விழியொடும் முணகிய வாயொடும்
ஆடாது அசையாது அரைஉயிர் கழன்று
சாகின்ற பிணம்போல் சாய்ந்து கிடப்பதை
நோகின்ற நெஞ்சொடும் நொடித்த உணர்வொடும்
எண்ணிப் பார்க்கிறோம்! எண்ணிப் பார்க்கிறோம்!
மண்ணில் எம்மினம் மறைகின்ற காலமும்
அதிர நடையிட்டு, ‘அதோ அதோ மலைபோல்
எதிர வந்ததே! இருள்புடை சூழ்ந்ததே!

இனியென் செய்குவோம்? இனியென் செய்குவோம்?
தனியொரு சாக்குரல் தாழ ஒலித்தல்போல்
இறுதிக் கூக்குரல் இறுதிஎச் சரிக்கை
உறுதியாய் உரைக்கிறோம்! ஓலம் இடுகிறோம்!

ஓ!ஓ! தமிழரே! உடன்பிறந் தவர்களே!
கூவும்என் குரலொலி கோடையின் இடிபோல்
உம்செவி முட்டிவந் துறுத்த வில்லையோ?
உம்உளத் துணர்வினை உலுக்க வில்லையோ?

எந்தமிழ் இனத்திற்கு இறுதிஎச் சரிக்கை!
செந்தமிழ் இக்கால் சிறிதுசிறி தாக
அழிந்துகொண்டுள்ளதை அறிவரா, தமிழர்?
கழிந்துகொண் டுளததன் கன்னித் தன்மை?

எந்தமிழ் மொழியை இம்மி இம்மியாய்
இந்தியென் நாய்மொழி இழிவு செய்வதை
அழித்துக் கலைப்பதை அறிய வில்லையா?
பழித்துச் சிதைப்பதைப் பார்க்க வில்லையா?

எத்தனை முறைநாம் எதிர்ப்பது இந்தியை?
அத்தனை முறையும் அடங்கிடு வதுபோல்
காட்சி காட்டிக் கண்மறைந் திருந்தே,
ஆட்சி வடவர் படிப்படி யாக
மீண்டும் மீண்டும் மேலேறி வலிவுடன்
ஆண்ட தமிழை அழித்திடல் காண்கிறோம்!

வடவர் பிடியினில் தமிழகம் வந்ததால்
கெடட்டும் தமிழும் தமிழக மும்என
அன்னவர் சூழ்ச்சியாய் அன்றன் றைக்கும்
கன்னல் தமிழைக் கழிசடை இந்தியால்
சிற்சிறி தாகச் சீரழித் திடுவதை—
பற்பல முறைநாம் பார்த்த தில்லையா?

இன்னும்நாம் இந்தியை எதிர்த்திடல் இயலுமா?
பின்னர்ஏன் இந்தியை எதிர்ப்பதாய்ப் பிதற்றுவோம்?

இந்தியா உளவரை இந்தியும் இருக்கும்
முந்தியே கூறிய முழுவுண்மை இதுவே!
வடவர் ஆள்வது இந்தியை வைத்தே!
முடவன் கொம்புத் தேனுக்கு முனைதல்போல்
இன்னமும் தமிழை ஏற்றமுற் றுயர்த்திட
நன்னருஞ் செயல்களை நாம்நினைத் திருப்போம்!

வடவன் தமிழை வாழவும் வைக்கான்!
மடமொழி இந்தியை மறுக்கவும் மாட்டான்!
தமிழைத் தாழ்த்தினால் தமிழரும் தாழ்வார்!
தமிழர் தாழ்ந்திடில் தமிழ்நில ஆட்சி
இந்தியான் கைகளில் இருக்கவே இருக்கும்!
அந்தத் திட்டந்தான் அவனுடைத் திட்டம்!
இந்த நிலையினில் இந்தியைத் தடுக்க
எந்தக் கொம்ப னாலும்இய லாது!

சொந்தப் பெருமையை, நலன்களைக் காத்திட
தந்திர உத்திதான் இந்தியைத் தடுக்கும்
போராட்டம், மாநாடு, புரட்சிக்கத் தல்கள்!

பாராட்டு, மலர்மாலை, பணமும் திரட்டலாம்!
எனவே, இந்தியை எதிர்த்து விரட்டிடும்
முனைவுஏ தென்னில் தமிழ்நிலம் மீட்பதே!

தமிழ்க்கல்வி இன்னும் தழைத்திட வில்லை!
தமிழில் கற்றால் அரசுபணி தந்திடும்
என்னும் நிலைமை இருந்தால் அன்றோ
முன்வரும் மாணவர் முத்தமிழ் கற்பார்!
இந்தி,ஆங் கிலத்திற்கு இருக்கின்ற சலுகை
முந்தித் தமிழ்க்கு முனையாத நிலை ஏன்?
தமிழ்க்கல்வி இப்படித் தாழ்ந்திடும் போதில்
தமிழர்தம் உரிமைக்கு எத்தனைத் தடைகள்!
தங்கள் உரிமையைத் தட்டிக் கேட்டிடும்
எங்கள் பேச்சுக்கும் எழுத்துக்கும் இடுசிறை!
‘மிசா’ ‘என்-எசு-ஏ’ மீளாத ‘தடாச்’ சிறை!
உசாவல் இல்லாமல் ஓராண்டு; ஈராண்டு!
என்ன கொடுமை! உரிமை இழப்புகள்!
இன்ன நிலையெலாம் எப்படி வந்தன?

பேசுவது ஒற்றுமை? பரப்புவது ஒருமை!
வீசுவது சட்டம்; வெஞ்சிறை; அழிப்புகள்!
அடக்கு முறைக்குமோர் அளவுஇங் கில்லையா?
வடக்கெனில் வாழ்த்து! வரவேற்பு! மாலைகள்!
தெற்கினில் கொடுஞ்சிறை? அழிப்புதான் தீர்ப்பா?
எதற்கிந்த வேற்றுமை? இதுதான் குடிமையா?
ஆட்சி, அதி காரம் அவர்க்கே சொந்தமா?
மீட்சியில் லாத மிடிமை எங்கட்கா?
என்னஇஞ் ஞாயம்? என்னஇந் நேர்மை?
என்ன நடுநிலை? என்னகுடி யரசு?
குடிமகன் ஒருவன் கையூட்டு வாங்கினால்
அடிதடி! வெஞ்சிறை! அதிகாரப் பறிப்பு?
முதல்,தலை—அமைச்சர்கள் ஊழலில் மூழ்கினால்
புதுப்புதுப் பதவிகள்! அதிகாரப் புதுக்கல்!

கலைகளும், தொழில்களும் காணி யாட்சியா?
கலை,பண் பாடெனில் இந்திய, ஆரியமா?

தொலைக்காட்சி வானொலி வடவர்க்கே சொந்தமா?
இலையெச்சில் போல்இரண் டொன்று எங்கட்கா?
மக்கள் வரியில் கால் போக்குக்கும் வரவுக்கும்!
முக்கால் பங்கு முட்டாள் தனத்திற்கு!

அப்பப்பா! எத்தனை ஆடம் பரங்கள்
செப்புக் காசுக்கும் உதவாத செய்திக்கோ
எத்தனை விழாக்கள்! எத்தனை வேடிக்கை!
பித்தளைப் பயனுக்குத் தங்கப் பிதற்றல்கள்!
கட்சிகள், மதங்கள், கடவுள், சாமிகள்,
நச்சு மனங்கட்கு—நாயனம்! மேளங்கள்!

உழவர், தொழிலாளர் ஒட்டிய வயிற்றுடன்
கழிசடை வாழ்க்கை காண்கையில், கொள்ளையில்
உண்டு களித்தே உலாவரும் அமைச்சர்கள்!
பெண்டு பிள்ளைக்குப் பெரும்பெரும் வளங்கள்!

ஓ! இளை ஞர்களே! ஓ! இளை ஞைகளே!
கோயில், குளங்கள், கும்பிடும் சாமிகள்,
அறநிறு வனமெனும் ஆரவா ரங்கள்,
துறவி மடங்கள், தொலையா மதங்கள்,
இன்னின்ன வகைக்கெலாம் இந்திய ஆட்சியில்
பொன்னென்ன! பொருளென்ன! பொழுதுக்கும்
[விழாவென்ன!
மக்கள் என்பார்க்கு மண்ணுதான் உணவு!
தக்க திட்டங்கள் தாள்களில் உரைகளில்!
செயற்பா டெல்லாம் சிக்கல் பிக்கல்கள்!
வயல்விளைவு வான்தொழில் வருவன யாவும்
அமைச்சர் களுக்கும் அதிகாரி களுக்கும்
நமைச்சல் தீரா முதலாளி மார்க்கும்
கள்ள வாணிகர், கயமைசெய் கலைஞர்
குள்ளத் திருடர், கொள்ளையர், கொலைஞர்
ஆக இவர்க்கெலாம் அளந்து கொடுத்தது
போக, மிஞ்சினால் பொதுமக்கள் தமக்கு!
இந்தியா இதுதான்! எம்நாடும் இதுதான்!
சிந்தியது பொறுக்கிச் சிறந்திடல் எப்படி?

கழுதை தேய்ந்து கட்டெறும் பாகி
முழுதும் அதுதேய்ந்து சிற்றெறும் பாகி
இறுதியாய் ஒன்றும் இல்லாமற் போன
உறுதியைப் போல்தான் தமிழ்நாட்டு உருவம்!

ஒருபுறம் வடவர்; உட்புறம் பார்ப்பனர்,
தெருப்புறம் கன்னடர், தெலுங்கர் என்றாகிக்
கொல்லையில் கேரளர், கொடும்பட்டாணியர்
தொல்லைபஞ் சாபியர் சூழ்நிலம் தமிழ்நிலம்!
இன்றிவர்க் கிடையில்தான் எந்தமிழ் மக்கள்
நின்றாலும் படுத்தாலும் வாழ்க்கை நிகழ்த்துவர்!

இந்த நிலையினில் எந்தமிழ் வளருமா?
இந்தச் சூழலில் இனம்முன் னேறுமா?
பொதுமை மலருமா? புதுநலம் பூக்குமா
எதுதவறு, எதுசரி? எண்ணவேண் டாவா?

இவ்வாறே இருந்தால் எந்தமிழ்மொழியும்
ஒவ்வொரு நாளும் உருக்குலை இனமும்
நந்தமி ழகமும் நலிந்து நலிந்தே
இந்த உலகில் இல்லாமற் போகுமே!

ஆகவே, தமிழரே அறுதியாய் உரைப்பேன்!
சாகவே எனினும் ஒருங்குறச் சாவோம்!
உரிமை உரிமை உரிமை முழக்குவோம்!
நரியிடத் திருந்துநாம் நாடுபெறு வோமே!

-1994

ஆட்சி செய்யும் அரம்பர் கூட்டம்
மாட்சி யின்றி மக்களை வருத்திச்
சுரண்டிக் கொழுக்கும் சூழ்ச்சியே, இன்றைய
வரண்ட கையடி வாயடி அரசியல்!

திட்டங்கள் என்னும் திருட்டு நடைமுறைக்
கொட்டங்கள் அடிக்கும் கொள்ளைக் கூட்டம்!

ஏமாற்று, வஞ்சகம், எத்துகள், புரட்டுகள்,
மாமாக்கள் மாமிகள் மயக்கிடும் கலைகள்,
கொண்டாட்டம், கொம்மாளம், குழிபறிப்பு, இரண்டகம்!
திண்டாடும் மக்கட்குத் தெருவோர வாழ்க்கை!

வானத்தை எட்டிடும் வாங்கிடும் விலைகள்!
மானத்தை மறைத்திடும் உடைகளோ மலை விலை!
கூரை பிய்ந்த குடிசைக்கும் பஞ்சம்!
ஊரை ஏமாற்றி உலையில் போட்டிடும்
அமைச்சர்கள் மலிந்த அதிகாரக் கூட்டம்!
நமைச்சல் எடுத்த கையூட்டு நாற்றம்!

பள்ளிகள் எனப்படும் பகற்கொள்ளைக் கூடங்கள்!
பள்ளிப் பிள்ளைகள் பாடவும் ஆடவும்
சீருடை அணிந்து சிறப்புறத் திரண்டு
ஊர்வலம் போகவும் உதவிடும் உதிரிகள்!

உடலை நெளித்தும் உறுப்புகள் குலுக்கியும்
நடலைப் பெண்டிர்கள் நாணமில் லாமல்.
அருவருப் பாக அரைகுறை ஆடையில்
திரைப்படம் நடிக்கும் தெருக்கூத்துக் கலைகள்!

ஐயகோ! இத்துணை அவலத்துக் கிடையில்
உய்யுமோ நாடு, இவ் வுலுத்தர் ஆட்சியிலே!

-1994

## 169 புழுவுற நலிந்து புன்மையுற் றொழிக!

செயலலி தாவே! செயலலி தாவே!
மயல்விலை மகளாய் ம.கோ. இரா.விடம்
கயல்விழி கவினுடல் காட்டி, நெருங்கி
வயப்பட வளைத்(து), அவர் வழிஅர சேறிய
செயலலி தாவே! செயலலி தாவே!

நீயுநின் இனமும் நிலை பெறற்(கு) எம்மினம்
ஏய கெடும்புகள் எய்தல் வேண்டுமென்(று)
ஆளும் வீடண அரம்ப அமைச்சரொடு
நாளொரு பொய்யும் பொழுதொரு புளுகுமாய்
நொந்த வறுமையில் நாளும் நொடிந்திடும்
சிந்தனை யிழந்த சிற்றூர் மக்களை
ஏய்த்துப் பிழைக்கும் ஏமாற்று நடிகையே!
காய்த்துப் பழுத்த கன்னி அழுகலே!

தமிழொடு தமிழினம் தமிழ்நாடு தழைத்திட
அமிழ்க நின் னாட்சி! அறக்கொடி யாள்நின்
கொழுவுடல் உருகிக் கொடுநோய் எய்திப்
புழுவுற நலிந்து புன்மையுற் றொழிக!
பொய்யா நாவிற் புலமையை
எய்யாக் கொடுஞ்சிறை இட்ட நீ, விரைந்தே!

-1995

ஆளுக்கொரு வண்ணக் கொடி!
நாளுக்கொரு புத்தியக்கம்!
தோளுக்கொரு நீளத்துண்டு — எனத்
தேளுக்கதி காரம் பெற
அலைகின்றோம் — சீர்
குலைகின்றோம்!


கூட்டத்திற்கோர் மேடை கட்டி
ஈட்டத்திற்கோர் உண்டில் ஏந்தி
ஆட்டத்திற்கோர் நடிகை காட்டி — மன
நாட்டமெல்லாம் பொருள்மேல் வைத்துப்
பொய்க்கின்றோம் — கரவு
வைக்கின்றோம்!

எதுகைமோனை அடுக்குச் சொற்கள்
முதுமைத் தமிழில் பேசக் கற்று
மதுவை ஊனைக் கிறக்க உண்டு — பெரும்
புதுமை நலன்கள் வளங்கட் காக
நடிக்கின்றோம் — காசு
அடிக்கின்றோம்!

மடமைச் சாதி மதத்தில் வீழ்ந்து
வடவர் பார்ப்பார் வஞ்சம் ஆழ்ந்து
உடைமை பெருக்க உண்மை தவிர்த்து — இனக்
கடமை உணராக் கழுதைகளாகிக்
கதைக்கின்றோம் — நலம்
சிதைக்கின்றோம்!

**-1995**

(இரண்டாம் தொகுதி)



# உள்ளே...

எந்தக் கட்சியில் நீ இருந்தாலும்
இனத்தை மறந்திடாதே! . தமிழா!
இனத்தை மறந்திடாதே! . உன்
சொந்தக் குடும்பம் தனைப்பல கருத்தால்
சுட்டுப் பொசுக்கி டாதே! . தமிழா,
சுட்டுப் பொசுக்கி டாதே!

மொழி, இனம், நாடு . உயர்
முன்னேற்றம் தேடு! . பெரும்
பழியறியாத் தமிழர் புகழ்
பண்ணமைத்துப் பாடு!

செழிக்கின்ற தமிழ்ப்பயிரில் இந்தியெனும்
செந்தீயை மூட்டி விட்டே,
அழிக்கின்றார் தமிழினத்தை! ஆரென்று
கேட்பதற்கோ ராளிங் கில்லை!
மொழிக்கின்று வந்தநிலை தவிர்க்கிலமேல்
தமிழ்நாட்டை அடிமை சூழும்!
ஒழிக்கின்ற சூளுடனே கொல்களிறு
போல்எழுந்து முனைவீர் இன்றே!

தமிழ் உருவில் தமிழ்ப் பகைவர் இருக்கின்றார் . அவர்
தமிழர்களின் தாலிகளை அறுக்கின்றார்! உமிழ்ந்ததெல்லாம்
நக்கித்தின்னும் நாய்கள் . மேல் உள்ளவர்க்குக்
காட்டிக்கொடுக்கும் பேய்கள்!

ஆடினை ஆயிரம்! பாடினை ஆயிரம்!
ஆர்ப்புற யாத்தனை விடுதலைப் பாயிரம்!
அசைத்ததா பகைவன்ரை உன்றனின் வாயுரம்?
தமிழா! அட,தமிழா . நீ
அழன்றெழு! அரிமா நடையிடு! வினைமுடி!
அதுதான் செந்தமிழ்த் தாயுரம்!